(ஆ) தெரிவு செய்யப்பட்ட பல வைத்தியசாலைகளில் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்காக சீன அரசின் கடன் ஊடாக செயற்படுத்தப்பட்ட திட்டத்தின் 2022 ஆம் ஆண்டிற்கான செலவு நிதிக்கூற்றின்படி, 452.26 மில்லியன் ரூபா என்பதுடன், திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தினால் அமைச்சிற்கு அனுப்பப்பட்ட அமைச்சினாலும் உறுதிப்படுத்தப்பட்ட அறிக்கையின்படி அந்த செலவு 1,180.97 மில்லியன் ரூபா ஆகும். மேலும் இந்த திட்டத்திற்குரித்தான 2021 ஆம் ஆண்டின் செலவின நிதிக்கூற்றின்படி 2,103.56 மில்லியன் ரூபா என்பதுடன், வெளிநாட்டு வளங்கள் அமைச்சிற்கு அனுப்பப்பட்ட அமைச்சினால் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களின்படி, அந்த செலவு ரூபா.மில்லியன் 2,375.27 ஆகும்.

(இ) வழிகாட்டலின் பிரிவு 6.1 இன்படி, ''ஒரு குறிப்பிட்ட அறிக்கையிடல் நிறுவனத்திற்கு விஷேட பரிவர்தனைகள் மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் அரசாங்க கணக்கு திணைக்களத்தின் அனுமதியுடன் அந்த தகவல்கள் நிதிக்கூற்றுகளில் உரியவாறு உள்ளிட முடியும் என்பதுடன் அறிக்கையிடலின் கீழ் அந்த விஷேட பரிவர்தனைகளுக்குத் தேவையான வெளிப்படுத்தல்கள் உள்வாங்கப்படல் வேண்டும்.'' ஆனாலும், தரத்தில் தோல்வியுற்ற மருந்துகளுக்கு அரச மருந்தக கூட்டுத்தாபனம், அரச மருந்துகள் உற்பத்திக் கூட்டுத்தாபனம், உள்நாட்டு விநியோகத்தர்கள் மற்றும் உள்நாட்டு உற்பத்தியாளர்களிடம் இருந்து முறையே

ரூ. 2,643,342.117 உம், ரூ. 15,333,176 உம், ரூ.84,866,750 உம் மற்றும் ரூ. 57,699,981 வீதம் 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மொத்தம் ரூ. 2,801,242,024 அறவிடப்பட வேண்டிய நிதி தொடர்பில் உரியவாறு செயற்படுத்தி நிதிக்கூற்றில் உள்வாங்குவதற்கு அல்லது வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) தற்போது இரத்துச் செய்யப்பட்டுள்ள ஒளடதங்கள் உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சினால் மற்றும் மருத்துவ விநியோகப் பிரிவினால் பராமரிக்கப்பட்ட 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மொத்த இருப்பு ரூ. 428,360.657 உம், பணமில்லாத காசோலை இருப்பு ரூ.12,701,968 உம், செலுத்துவதற்கு சமர்ப்பிக்கப்படாத காசோலை இருப்பு ரூ.440,840,025 உம் செயலில் உள்ள 03 வங்கிக் கணக்குகளின் விபரங்கள் மதிப்பாய்வு ஆண்டின் வங்கிக் கணக்குகள் தொடர்பாக நிலை அறிக்கையில் உள்வாங்கப்படவில்லை.

(உ) மருத்துவ விநியோகப் பிரிவிற்குரிய மருத்துவக் களஞ்சியங்களில் 2009 தொடக்கம் 2020 வரையான காலப்பகுதியில் 285 சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட மருந்துகளின் இழப்பு மற்றும் நட்டங்களுக்கு இதுவரை அறவிடுவதற்கு அல்லது வெட்டி நீக்குவதற்கு உள்ள ரூபா.452,275,428 இற்கான இழப்பு நிதிக்கூற்றுகளில் நிகழ்ச்சித் திட்டம் 02 இன் கீழ் நட்டம் மற்றும் கைவிடல் குறித்த கூற்றுகளில் உள்வாங்கப்படவில்லை.

1.6.2 நிதி செயற்திறன் அறிக்கை

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) நிதி ஒழுங்குவிதி 170(3) இன்படி செலுத்திய பணத்திலிருந்து முழு வருடத்திலும் அறவிடப்படும் பணம் மாத்திரம் அதிக கட்டணம் செலுத்தும் கணக்கிற்கு கணக்கு வைக்கப்படல் வேண்டும் என்பதுடன், அதன் பிறகு முழு ஆண்டிலும் அறவிடப்படும் பணம் 8வது வருமான தலைப்பில் வரவு வைத்தல் வேண்டும். இருப்பினும், அதற்கு மாற்றமாக பின்வரும் செலவுகளானது அறவிடுதல் கணக்கில் கணக்கு வைக்கப்பட்டுள்ளதுடன் அதனூடாக மதிப்பாய்வு ஆண்டில் 1204 எனும் ''மருத்துவ விநியோகம்'' செலவின விடயத்தில் உண்மைச் செலவினம் ரூபா 2,007,022,403 இனை குறைத்து கணக்கு வைக்கப்பட்டுள்ளது.

(i) தர தோல்வியுற்ற மருந்துகளுக்காக அரச மருந்தக கூட்டுத்தாபனம், அரச மருந்துகள் உற்பத்தி கூட்டுத்தாபனம் மற்றும் உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து முறையே ரூ. 749,857,174 உம் ரூ. 104,805,792 உம் மற்றும் ரூ. 1,370,400 வீதம் மதிப்பாய்வு ஆண்டினுள் அறவிடப்பட்ட ரூ. 856,033,366 மொத்த தொகையை முந்தைய ஆண்டுகளின் செலவினத்திற்குரிய அறவிடுதல்கள் மதிப்பாய்வு ஆண்டின் அதிக கட்டணம் செலுத்தும் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

(ii) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டினுள் மருத்துவ விநியோப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட உள்நாட்டு கொள்வனவுகளுக்காக செலவிடப்பட்ட மேலதிக செலவு ரூ. 1,150,989,037 இனை மதிப்பாய்வு ஆண்டில் அரச மருந்தக கூட்டுத்தாபனத்தில் இருந்து அறவிடப்பட்டுள்ளதுடன், மதிப்பாய்வு ஆண்டின் அதிக கட்டணம் செலுத்தும் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) மதிப்பாய்வு ஆண்டில் பிற நிறுவனங்களினால் மருத்துவ விநியோப்பிரிவின் மீள்வரும் செலவின விடயங்கள் 3 இற்காக செலவிட்ட தொகை ரூபா 5,657,178,620 ஆனது தலைப்பு இலக்கம் 111 எனும் சுகாதார அமைச்சின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் நிறைவடைந்த வருடத்திற்கான செலவினக்கூற்று (ACA-2(ii) படிவம்) இல் ''நி. ஒ.

208 இன் கீழ் ஏனைய அமைச்சுக்களினால்/திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவினம" என உள்ளிடாமல் சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட செலவு என கருதி கணக்கு வைக்கப்பட்டுள்ளது.

1.6.3 நிதி நிலைமை தொடர்பான கூற்று

1.6.3.1 நடைமுறையில்லா சொத்துக்கள்

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ). 2021 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிதி நிலைமை தொடர்பான கூற்றின்படி திறைசேரியினால் பராமரிக்கப்படும் நடைமுறையில்லா சொத்து கணக்கு அறிக்கைக்கு (SA 82) அமைய, 2021 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நடைமுறையில்லா சொத்துக்களின் பெறுமதி ரூபா மில்லியன் 190,551.72 ஆகும். எனினும் 2022 ஆம் ஆண்டில் திறைசேரியினால் பராமரிக்கப்பட்ட திரட்டப்பட்ட நிதிசாரா சொத்துக்கள் கணக்கு அறிக்கை (SA 82) இற்கு அமைய, 2022 ஜனவரி 01 ஆம் திகதிக்கு நிதிசாரா சொத்துக்களின் பெறுமதி ரூபா மில்லியன் 195,796.28 ஆகும். அதன்படி ரூபா மில்லியன் 5,244.56 இற்கான வித்தியாசம் அவதானிக்கப்பட்டதுடன், இந்த வித்தியாசத்திற்கான காரணங்கள் கணக்காய்வின் போது தெளிவுபடுத்தப்படவில்லை.

(ஆ) 2022 ஆண்டின் நிகழ்ச்சித்திட்டத்தின்படி, செலவினக்கூற்று (ACA-2(i) படிவம்) மற்றும் திறைசேரி அச்சு குறிப்பு SA 10 இன்படி, 2022 ஆம் ஆண்டில் நிதி சார் சொத்துகள் கையகப்படுத்தலுக்கான செலவு ரூபா மில்லியன் 13,761.75 என்ற போதிலும், திறைசேரியினால் பராமரிக்கப்பட்ட திரட்டப்பட்ட நிதிசாரா சொத்துக்கள் கணக்கு அறிக்கை (SA 82) இற்கு அமைய மதிப்பாய்வு ஆண்டில் சொத்துகள் கொள்வனவு செய்தல் ரூபா மில்லியன் 2,338.59 இல் சொத்துகளுக்கான செலவினம் ரூபா மில்லியன் 11,423.16 குறைவாக குறிப்பிடப்பட்டிருந்தது.

(இ) அமைச்சின் நிதிக்கூற்றின்படி, 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நடைமுறையல்லா சொத்துக்களின் செலவினம் ரூபா மில்லியன் 200,118.27 ஆகும். கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த 59 நிறுவனங்களில் 2022 டிசம்பர் 31 ஆம் திகதி காணப்பட்ட நடைமுறையல்லா சொத்துக்கள் பற்றிய தகவல்களைக் காட்டும் கணினிமயமாக்கப்பட்ட மென்பிரதிகளின்படி அன்றைய தினத்திற்கு நடைமுறையல்லா சொத்துக்களின் செலவினம் ரூபா மில்லியன் 202,170.77 ஆகும். அதன்படி ரூபா மில்லியன் 2,052.50 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஈ) கோவிட் 19 அவசர சிகிச்சை மற்றும் சுகாதார அமைப்பை தயார்படுத்தும் திட்டத்தினால் (COVID – 19 Emergency Response and Health System Preparedness Project) 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ரூபா மில்லியன் 6,326.05 இற்கான நடைமுறையில்லா சொத்துகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன், இந்த சொத்துகளின் செலவினம் அமைச்சின் நடைமுறையில்லா சொத்து கணக்கின் கீழ் கணக்கு வைக்கப்படவில்லை.

(உ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட சுகாதார அமைச்சு அதன் கீழுள்ள 59 நிறுவனங்கள் 2022 டிசம்பர் 31 நிலவரப்படி, உள்ள நடைமுறையில்லா சொத்துகள் தொடர்பாக விபரங்களை குறிக்கும் கணினி மென் பிரதிகளின் படி 25 வைத்தியசாலைகள்/நிறுவனங்களின் காணிகள் மற்றும் 05 வைத்தியசாலைகள்/ நிறுவனங்களின் கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஊ) இலங்கை பொலிஸ் திணைக்களத்திற்கு மற்றும் சுற்றுலா மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சிற்கு உரிமம் வழங்கப்பட்ட இரண்டு வாகனங்களின் செலவினம் ரூபா. 11,550,000 இனை 2022 டிசம்பர் 31 வரை சுகாதார அமைச்சின் நிதி கூற்றுகளில் உள்வாங்கப்படவில்லை.

(எ) கடந்த ஐந்து வருடங்களுக்கான (2017 – 2021) வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பு நடத்தல் தொடர்பாக அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள சகல வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய சுகாதார நிறுவனங்களில் இருந்து எனது இலக்கம் MED/B/MH/05/INFO/2021/142 எனும் இலக்கம் கொண்ட 2022 மார்ச் 02 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் விபரங்கள் கோரப்பட்டதுடன், அமைச்சின் கீழுள்ள வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய சுகாதார நிறுவனங்கள், பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பிரிவுகள் 109 காணப்பட்ட போதிலும் 2022 டிசம்பர் 23 வரை வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய சுகாதார நிறுவனங்கள் 20 இனால் மட்டும் கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பித்துள்ளது. கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பித்த அமைச்சின் கீழுள்ள வைத்தியசாலைகள், பிற சுகாதார நிறுவனங்கள், பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பிரிவுகள் 11 இற்கு 2017, 2018, 2019 ஆகிய ஆண்டுகளுக்கான 2,658,522 ரூபா மொத்தம் செலவினம் கொண்ட பொருட்கள் பதுளை மாகாண பொது வைத்தியசாலைக்கு உரிய செலவினத்தை குறிப்பிடாது பொருட்கள் பதிவேட்டிலிருந்து வெட்டி நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் அந்த அழித்தல் செய்யப்பட்ட பொருட்களுக்கான செலவினம் அமைச்சின் நிதிக்கூற்றுகளில் நடைமுறையில்லா சொத்துகளில் உள்வாங்கப்பட்டதா என்பது குறித்தும் மற்றும் அழித்தலின் பின்னர் அந்த மதிப்பு நடைமுறையில்லா சொத்துகளில் இருந்து நீக்கப்பட்டதா என்பது குறித்து கணக்காய்விற்கு தகவல்கள் வழங்கவில்லை. மேலும் 2022 செப்டெம்பர் 09 ஆம் திகதிய இலக்கம் 10/2022 எனும் சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் அரச நிறுவனங்களில் குவிக்கப்பட்டுள்ள உடைந்த பொருட்களை அழிப்பதற்கு துரிதமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்றாலும் கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பித்துள்ள 08 வைத்தியசாலைகள் / நிறுவனங்கள் தொடர்பாக அந்த விதிமுறைகளுக்கு ஏற்ப செயற்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பித்துள்ள 10 வைத்தியசாலைகள் / நிறுவனங்கள் 2018 தொடக்கம் 2021 வரை நியமிக்கப்பட்ட அழித்தல் சபையினால் உரிய அழித்தல் நடவடிக்கைகளை நிறைவு செய்து அந்த பொருட்களின் செலவினத்தை புத்தகத்திலிருந்து வெட்டி நீக்குவதற்கு 2022 டிசம்பர் 21 ஆம் திகதியிலும் தேவையான நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுடன், வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பு சபை அறிக்கை பெறப்பட்டதன் பின்னர் முரண்பாடுகள், பற்றாக்குறைகள் மற்றும் காணாமல் போதல் ஏதாவது இருப்பின் கணக்கிட்டு உத்தியோகத்தரினால் அது குறித்து இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்கு விதிகள் 752 (2) இன்படி செயற்பட வேண்டும் எனினும், 2020 ஆம் ஆண்டு தொடர்பாக இரத்தினபுரி போதனா வைத்தியசாலை, 2018 ஆம் ஆண்டு தொடர்பாக மொனராகல மாவட்ட பொது வைத்தியசாலை மற்றும் 2018 ஆம் ஆண்டு தொடர்பாக மஹரகம வாய் சுகாதார நிறுவனம் தொடர்பாக வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பு தொடர்பான குறைபாடுகள் குறித்து அதன்படி செயற்படுத்தப்படவில்லை.

(ஏ) கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பித்த நிறுவனங்கள்/வைத்தியசாலைகள் மற்றும் பிரிவுகளினால், 31 நிறுவனங்கள்/வைத்தியசாலைகள் மற்றும் பிரிவுகளுக்கு 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் பெறப்பட்ட ரூபா மில்லியன் 2,588.30 மதிப்புள்ள பொருட்கள் மற்றும் 30 நிறுவனங்கள்/ வைத்தியசாலைகள் மற்றும் பிரிவுகளுக்கு 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் 2057 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட பெறுமதி பற்றிய விபரங்கள் சேர்க்கப்படாத பொருட்கள் முறையாக பதிவு செய்யப்பட்டு அமைச்சின் நிதிக்கூற்றுக்கு சேர்த்ததற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை. 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் கோவிட் 19 நோய்ப்

பரவலை தடுத்தல் மற்றும் அதற்காக சுகாதார அமைப்பை தயார் படுத்தும் பொருட்டு பல்வேறு வெளிநாட்டு அரசுகள், உள்நாட்டு வெளிநாட்டு அமைப்புகள்/ நிறுவனங்கள்/ ஊடக நிறுவனங்கள் மற்றும் அரசியல் கட்சிகள்/ அமைப்புகள் ஊடாக அமைச்சிற்கு மற்றும் அதன் கீழுள்ள வைத்தியசாலைகள் மற்றும் பிற சுகாதார நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட பொருட்களின் பெறுமதி இதைவிட அதிக மதிப்புடையது என்பதால் அது குறித்து கூடுதல் அவதானம் செலுத்தி கிடைத்த/ கிடைக்கும் அனைத்து நன்கொடைகளும் முறையாக ஆவணப்படுத்துவதற்கும் அவற்றின் பெறுமதியை மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்கு சேர்ப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுப்பதன் அவசியத்தை சுட்டிக்காட்டுகிறேன்.

(ஐ) பேராதனை போதனா வைத்தியசாலையினால் 2020 ஜூன் 06 ஆம் திகதி இரத்தினபுரி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்ட நோயாளர் காவுகை வண்டியின் பெறுமதி ரூபா. 1,400,000 சிகாஸ் (CIGAS) திட்டத்தில் இருந்து நீக்கப்படவில்லை. மேலும், வைத்தியசாலைக்கு பெறப்பட்ட மொத்தம் ரூபா. 43,887,652 மதிப்புள்ள பயன்படுத்தப்படும் ஒரு கெப் வண்டி, ஒரு லொரி வண்டி மற்றும் 03 நோயாளர் காவுகை வண்டிகள் என்பன சிகாஸ் (CIGAS) கணினி திட்டத்தின் கீழ் சொத்து என கணக்கு வைக்கப்படவில்லை.

(ஒ) 2018 ஆம் ஆண்டின் பின்னர் பேராதனை வைத்தியசாலை வளாகத்தில் சிறுநீரக சிகிச்சை பிரிவொன்றும் மற்றும் பேராதனை பல்கலைக்கழகத்தின் ஒதுக்கீட்டின் கீழ் 03 மாடிகள் கொண்ட சத்திர சிகிச்சை வாட்டுத் தொகுதி நிர்மாணிக்கப்பட்ட போதிலும், அந்த கட்டிடத்தின் பெறுமதியை கண்டறிந்து கணக்கு வைக்கப்படவில்லை.

1.6.3.2 பணி முற்பண கணக்கு

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குரிய 1997 ஆம் ஆண்டு முதல் தீர்க்கப்படாத ரூ. 362,702 பணி முற்பண இருப்பு 2021 ஆம் ஆண்டில் தீர்க்கப்படாத பணி முற்பண இருப்பு என பணி முற்பண கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளதுடன், அந்த இருப்பு மதிப்பாய்வு ஆண்டிலும் தீர்க்கப்படவில்லை.

(ஆ) ஒளடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சின் (தற்போது ரத்துச் செய்யப்பட்ட) செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக தனியார் நிறுவனத்திற்குரிய HQ Colombo கட்டிடத்தின் முதலாம் மாடியின் Rare wing பகுதி மற்றும் 05 வது மாடி குத்தகை அடிப்படையில் பெறப்பட்டுள்ளதுடன், அதற்கான ஒப்பந்தத்தின் பிரகாரம் மீள் செலுத்தல் அடிப்படையில் மற்றும் பாதுகாப்பு வைப்பாக ரூபா. 7,370,493 உம் மற்றும் மின்சார பட்டியல் வைப்பாக ரூபா. 200,000 உம் மொத்தம் ரூபா 7,570,493 இனை உரிய நிறுவனத்திற்கு செலுத்தியுள்ளது. 2016 ஆகஸ்ட் 03 ஆம் திகதி அரச கணக்கு சுற்றறிக்கை இலக்கம் 250/2016(i) இன்படி, அலுவலக கட்டிட வாடகைக்காக வெளித் தரப்பினருக்கு முற்பணம் செலுத்தும் போது செலுத்தப்பட்ட மொத்த வாடகை முற்பணம், வாடகை மற்றும் பணி முற்பண கணக்கு மற்றும் பணி முற்பணம் இருப்பு கணக்கிற்கு உள்வாங்க வேண்டும் எனினும், இந்த ரூபா 7,570,493 முற்பணம் செலுத்ததல் அதற்கு இணங்க கணக்கு வைக்கப்படாத காரணத்தால் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் நிதி சொத்து மற்றும் நிகர் சொத்து அந்த தொகையினால் குறைவாக காட்டப்பட்டுள்ளது.

1.6.4 நிதிப் பாய்ச்சல் கூற்று

நிதிக்கூற்றுடன் சமர்ப்பிக்கப்படும் நிதிப் பாய்ச்சல் அறிக்கையில், முதலீடு செயற்பாடுகள் மூலம் உருவான நிதிப்பாய்ச்சலின் கீழ் பௌதீக சொத்துக்கள் நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் பிற முதலீடுகளை கையகப்படுத்தல்களின் செலவினம் ரூபா மில்லியன் 9,568.2 என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அவற்றின் உண்மை செலவு ரூபா மில்லியன் 3,880.1 என்பதுடன் அதில் மேலதிகமாக காட்டப்பட்டுள்ள செலவினம் ரூபா மில்லியன் 5,688.1 ஆகும். மேலும் இயக்கும் முறைகளின் மூலம் உருவான நிதிப் பாய்ச்சலின் கீழ் தனிநபர் ஊழியம் மற்றும் இயக்கும் செலவினம் ரூபா மில்லியன் 195,134.2 என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அதன் உண்மை செலவு ரூபா மில்லியன் 200,822.3 இல் குறைவாக காட்டப்பட்டுள்ள மதிப்பு ரூபா மில்லியன் 5,688.1 ஆகும்.

1.6.5 கணக்காய்விற்கு ஆதாரங்கள் இல்லாமை

மொத்த செலவினம் ரூபா மில்லியன் 202,170.77 ஆன பல்வேறு சொத்துகள் மற்றும் ரூபா மில்லியன் 119.75 ஆன பல்வேறு செலவுகள் தொடர்பான முறையே விரிவான உப அட்டவணை மற்றும் பல்வேறு தகவல்கள், ரசீதுகள், கட்டணச் சீட்டுகள் மற்றும் உரிய எழுத்துமூல ஆதாரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததால் அந்த மதிப்புகள் திருப்தியாக சரிபார்க்க மற்றும் கவனிக்க முடியாதுள்ளது. அமைச்சில் உள்ள வாகன பயன்பாடு தொடர்பாக செயற்திறன் மதிப்பீட்டுக்காக தேவையான 2021 மற்றும் 2022 ஆகிய இரண்டு வருடங்களுக்கான தகவல்களும் கணக்காய்விற்கு சமர்க்கவில்லை என்பதுடன், இதைத்தவிர பல்வேறு விடயங்கள் தொடர்பாக 31 தகவல் கோரல் கடிதங்கள் மூலம் கணக்காய்விற்குத் தேவையான தகவல்கள் கோரப்பட்ட போதிலும் 2023 ஏப்ரல் 10 ஆம் திகதியிலும் சமர்ப்பிக்காமை மற்றும் முழுமையான தகவல்கள் சமர்ப்பிக்காமை போன்ற காரணங்களினால் உரிய துறைகள் முறைப்படி கணக்காய்வு செய்ய முடியவில்லை. சில தகவல் கோரல் கடிதங்கள் அனுப்பப்பட்டு 19 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்துள்ளது. மேலும் பதவி வெறிதாக்கல் கட்டளை பிறப்பிக்கப்பட்ட 95 மருத்துவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 81.91 மில்லியன் ரூபா இனை அறவிடுவதற்கான முன்னேற்றம் தொடர்பான தகவல்கள், 690 மருத்துவர்களிடமிருந்து அரசாங்கத்திற்கு கிடைக்கவேண்டிய நிதி தொடர்பான தகவல்கள், மேலும் பதவி வெறிதாக்கல் கட்டளை பிறப்பிக்கப்பட்ட 13 நிறைவுகாண் மற்றும் துணை மருத்துவ சேவை உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 2.47 மில்லியன் ரூபா இனை அறவிடுவதற்கான தகவல்கள், மேலும் 576 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை தொடர்பான தகவல்களும், 12 நிறைவுகாண் மற்றும் துணை மருத்துவ மற்றும் பிற சேவைகளில் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் மற்றும் 03 இலங்கை கணக்காளர் சேவையில் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு வழங்கப்பட்ட கொடுப்பனவின் சரியான தன்மையை கணக்காய்விற்கு உறுதிப்படுத்தும் எழுத்துமூல சான்று, "வெளிநாடு சென்ற மருத்துவர்கள் மீண்டும் சேவைக்கு சமூகமளிக்காததால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பு – 2016 ஆம் ஆண்டு" எனும் தலைப்பில் அனுப்பப்பட்ட 2017 செப்டெம்பர் 14 ஆம் திகதிய கணக்காய்வு வினவலில் உள்ள விடயங்கள் தொடர்பாக அமைச்சின் சட்ட பிரிவு மற்றும் அரச கணக்காய்வு பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட 06 பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு, செயற்படுத்த முடியாவிடின் அதற்கான காரணத்தை குறிப்பிடுதல் அல்லது இந்த அபாயத்தை குறைப்பதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு 2017 ஒக்டோபர் 12 ஆம் திகதிய கடிதத்தில் மேலதிக செயலாளர் (மருத்துவ சேவை) இற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அதன்படி அவரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் 2016 டிசம்பர் 31 நிலவரப்படி அறவிடப்பட வேண்டிய ரூபா மில்லியன் 58.36 இனை அறவிடுவதற்கான தற்போதைய முன்னேற்றம் குறித்த தகவல்கள், 2019 ஒக்டோபர் 22 ஆம் திகதி கணக்காய்வு வினவலில் குறிப்பிடப்பட்டுள்ள பயிற்சியை கைவிட்ட தாதி மாணவர்கள் 861 பேரிடமிருந்து அறவிட வேண்டிய தொகையை அறவிடுவதற்கான தற்போதைய

முன்னேற்றம் மற்றும் 2018 முதல் 2021 வரையான காலப்பகுதியில் பயிற்சியை கைவிட்ட தாதி மாணவர்கள் தொடர்பான கோரப்பட்ட தகவல்கள், 2023 ஏப்ரல் 10 ஆம் திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

2.1 செலவு முகாமைத்துவம்

நிதி ஒழுங்குவிதிகள் 50 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின் படி சரியான மற்றும் யதார்த்தமான மதிப்பீடுகள் தயாரிக்கப்படவில்லை என்பதை பின்வரும் அவதானிப்புகளின் படி உறுதிப்படுத்தப்பட்டது.

(அ) 2022 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட வரவு செலவு திட்ட மதிப்பீட்டின் ஊடாக 03 மீண்டுவரும் செலவின விடயங்கள் 6 இற்காக வழங்கப்பட்ட 7.1 மில்லியன் ரூபா மொத்த ஒதுக்கீடு, நிதி ஒழுங்குவிதிகள் 66 மற்றும் 69 இன் ஊடாக வேறு செலவு விடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளது.

(ஆ) 2022 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட வரவு செலவு திட்ட மதிப்பீட்டின் ஊடாக 06 மீண்டுவரும் செலவினங்கள் மற்றும் 04 மூலதன செலவு விடங்களுக்காக தயாரிக்கப்பட்ட 1,620.00 மில்லியன் ரூபா மொத்த ஒதுக்கீட்டில் 70 சதவீதம் முதல் 99 சதவீதம் வரை நிதி ஒழுங்குவிதிகள் 66 மற்றும் 69 இன் ஊடாக வேறு செலவு விடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளது.

(இ) 2022 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட வரவு செலவு திட்ட மதிப்பீட்டின் ஊடாக 04 மீண்டுவரும் செலவினங்கள் மற்றும் 8 மூலதன செலவு விடங்களுக்காக தயாரிக்கப்பட்ட முறையே 159.2 மில்லியன் ரூபா மற்றும் 2,564 மில்லியன் ரூபா தொகையான 2,723.2 மில்லியன் ரூபா மொத்த ஒதுக்கீடு, துணை மதிப்பீடுகள் மூலம் மற்றும் நிதி ஒழுங்குவிதி 66 இன் ஊடாக முறையே 3,320 மில்லியன் ரூபா மற்றும் 1,987 மில்லியன் ரூபாவாக 53 சதவீதத்திலிருந்து 285 சதவீதம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

(ஈ) 4 மூலதன செலவு விடங்களுக்காக தயாரிக்கப்பட்ட மொத்தம் 2,150 மில்லியன் ரூபா அடிப்படை ஒதுக்கீட்டில் 945.7 மில்லியன் ரூபா வேறு விடயங்களுக்கு மாற்றியதன் மூலம் மற்றும் ஒதுக்கீடுகள் ஒதுக்கப்படாத செலவு விடயங்களுக்காக 70.6 மில்லியன் ரூபா செலவு விடயங்கள் வேறு விடயங்களில் இருந்து மாற்றப்பட்ட பின்னர் 1,274.9 மில்லியன் ரூபா மொத்த நிகர ஒதுக்கீடு மீதமாக இருந்தது. மேலும் 2022 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் செலவு விடயங்கள் 33 இற்கு ஒதுக்கப்பட்ட 1,369.3 மில்லியன் ரூபா மொத்த நிகர ஒதுக்கீடு மீதமாக இருந்தது.

(உ) 82 செலவு விடங்களுக்களாக ஒதுக்கப்பட்ட 7,981.9 மில்லியன் ரூபா நிகர ஒதுக்கீட்டில் 6,176.7 மில்லியன் ரூபா பயன்படுத்தப்படவில்லை. அந்த மீதம் நிகர ஒதுக்கீட்டில் 50 சதவீதம் முதல் 99 சதவீதம் வரை இருந்தது.

(ஊ) 2022 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட வரவு செலவு மதிப்பீட்டில் ஒதுக்கீடுகள் ஒதுக்கப்படாத போதிலும், 4 மூலதன செலவு விடங்களுக்கு நிதி ஒழுங்குவிதி 66 மற்றும் துணை மதிப்பீட்டின் ஊடாக 421.6 மில்லியன் ரூபா தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இவ்வாறு ஒதுக்கப்பட்ட மேலதிக ஒதுக்கீடு 399.7 மில்லியன் ரூபா மீதமாக இருந்ததுடன், அந்த மீதமுள்ள தொகையின் சதவீதம் மேலதிக ஒதுக்கீட்டின் 84 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை இருந்தது.

(எ) 2 மூலதன செலவு விடங்களுக்கு துணை மதிப்பீடு மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் 66 இன் ஊடாக தயாரிக்கப்பட்ட 910 மில்லியன் ரூபா மேலதிக ஒதுக்கீட்டில் முழுமையாகவும் மற்றும் ஆரம்ப மதிப்பீட்டின் ஒரு பகுதியும் மீதமாக இருந்தது.

2.2 அதிக செலவு

திறைசேரி விரிவான செலவு அறிக்கையின்படி 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிகர் ஒதுக்கீடு ரூபா மில்லியன் 183,174.55 ஆன 69 செலவு விடயங்களுக்கான உண்மைச் செலவினம் ரூபா. மில்லியன் 187,856.15 என்பதுடன், அந்த செலவு விடயங்களின் கீழ் நிகர ஒதுக்கீட்டுக்கு மேலாக செலவிடப்பட்ட ரூபா.மில்லியன் 5,960.22 இனை அந்த செலவு விடயங்களுக்கு மிகைப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மிகைப்படுத்தப்பட்ட தொகை உண்மை என பிழையை சரி செய்வதற்கு செய்யப்பட்ட மிகைப்படுத்தலா அல்லது அந்த செலவின விடயங்களின் அதிக செலவை மறைப்பதற்கு செய்யப்பட்ட மிகைப்படுத்தலா என்பதை உறுதிப்படுத்துவதற்கு தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

2.3 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள்

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றின்படி, இயற்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு மற்றும் அபிவிருத்தி திட்டங்களுக்காக 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு பொறுப்பு இருப்பு முறையே ரூபா. மில்லியன் 1,405.45 மற்றும் ரூபா. மில்லியன் 2,027.43 ஆக மொத்தம் ரூபா மில்லியன் 3,432.88 என்பதுடன் கடப்பாடு இருப்பு முறையே ரூபா மில்லியன் 6,653.94 மற்றும் ரூபா. மில்லியன் 21,051.10 என மொத்தம் ரூபா. மில்லியன் 27,705.04 ஆகும். அது தொடர்பாக பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 ஏப்ரல் 27 ஆம் திகதி அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 255/2017 இன்படி ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் கொடுப்பனவுகள் தவிர்த்து ஏனைய கொடுப்பனவுகளுக்காக வருடாந்த வரவு செலவு வரம்பிற்குள் முதலில் கடப்பாட்டை இனங்காணப்பட வேண்டும் என்பதுடன், அவ்வாறு இனங்காணப்படும் கடப்பாட்டின் அடிப்படையில் அந்த கடப்பாட்டுகளுக்குரிய பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெறப்பட்ட பின்னர் அதற்காக செலுத்த வேண்டிய பணம் மற்றும் உடன்பாடு எட்டப்பட்ட ஒப்பந்தம் தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்ட பணிகளின் மதிப்பு பொறுப்பு என குறிப்பிடப்படல் வேண்டும். எனினும் அவ்வாறு செய்யவில்லை என்பதுடன், 2022 நிதிக்கூற்றுகளில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான கூற்றில் ஒழுங்குபடுத்தல் திட்டங்களுக்கான ரூபா. மில்லியன் 4.03 வருட இறுதி கடப்பாடு இருப்பு அவ்வாறே வருட இறுதி பொறுப்பு என குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) நிதி ஒழுங்குவிதிகள் 94 (i) இன்படி, வேறு விதமாக விதிமுறைகள் தயாரிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் தவிர்ந்த வருடாந்த மதிப்பீடுகளில் அதற்கான நிதி ஒதுக்கீடுகள் இருப்பின் பிற எந்தவொரு திணைக்களத்தின் ஊடாகவும் பணி, சேவை அல்லது வழங்கல் போன்றவற்றுக்காக எந்தவொரு செலவினம் அல்லது கடப்பாட்டுக்கு கட்டுப்படாதிருக்க வேண்டும் என்பதுடன், செய்த பொறுப்பு மற்றும் செலவினம் ஒருபோதும் நிதி ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகைக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். எனினும் அமைச்சிற்குரிய நிறுவனங்களினால் இயற்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 17 செலவு விடயங்களுக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீட்டின் மீதியை தாண்டி ரூபா. மில்லியன் 2,913.99 உம் மற்றும் அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் 29 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ஒதுக்கீட்டில் மீதியைத் தாண்டி ரூபா. மில்லியன் 677.59 எனவும் மொத்தம் ரூபா மில்லியன் 3,591.58 ஒக்கீட்டுக்கு அப்பால் பொறுப்பிற்கு சேர்க்கப்பட்டுள்ளது.

(இ) வருடாந்த வரவு செலவு மதிப்பீட்டில் உள்ள அல்லது புதிதாக சேர்க்கப்படும் செலவு விடயங்கள் அல்லாத, இயற்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் கீழ் 5 செலவு விடயங்களுக்காக ரூபா மில்லியன் 39.84 பொறுப்பிற்கு கொண்டுவரப்பட்டது.

(ஈ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின் குறிப்பு (iii) படிவத்தில் இயற்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு பொறுப்பு இருப்பு ரூபா மில்லியன் 27,705.04 என்பதுடன், திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட பொறுப்பு இருப்பு ரூபா மில்லியன் 941.47 ஆகும். அதன்படி, திறைசேரியின் அனுமதியின்றி ரூபா மில்லியன் 26,763.57 பொறுப்பிற்கு கொண்டுவரப்பட்டது.

(உ) மதிப்பாய்வு ஆண்டில் நிதிக்கூற்றுகளில் பொறுப்பு தொடர்பான கூற்றின் கீழ் அரச மருந்தக கூட்டுத்தாபனம் (SPC) மற்றும் அரச மருந்துகள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்திடம் (SPMC) இருந்து பெறப்பட்ட மருத்துவ விநியோகங்களுக்காக அந்த நிறுவனங்களுக்கான பொறுப்பு மற்றும் அந்த இரு நிறுவனங்களின் நிதிக்கூற்றின்படி மருத்துவ விநியோகப் பிரிவினால் செலுத்த வேண்டிய தொகையில் முறையே ரூபா மில்லியன் 48,359.49 மற்றும் ரூபா மில்லியன் 1,142.47 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இந்த வேறுபாட்டுக்கான காரணத்தைக் கண்டறிந்து கணக்கை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்காத காரணத்தால் மொத்தம் ரூபா மில்லியன் 49,501.96 ஆன பொறுப்பு நிதிக்கூற்றுகளில் குறைவாக காட்டப்பட்டுள்ளது.

2.4 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் வழங்க வேண்டிய உறுதிப்படுத்தல்

கணக்காய்வாளர் நாயகத்திற்கு தேவையானவாறு உரிய காலத்தினுள் அனைத்து கணக்காய்வு வினவல்களுக்கும் பதில் வழங்கப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதி செய்ய வேண்டும் எனினும், 2023 மார்ச் 15 நிலவரப்படி பதில் பெறப்படாத மொத்த கணக்காய்வு வினவல்கள் 80 என்பதுடன், ஒரு வருட காலம் கடந்தும் பதில் அனுப்பப்படாத வினவல்களின் எண்ணிக்கை 13 ஆகும்.

2.5 சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகள் இணங்காமை

பின்வரும் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகள் பற்றி	இணங்காமை
(அ) 2021 ஆம் ஆண்டு இலக்கம் 09 எனும் பெறுமதிசேர் வரி (திருத்தம்) சட்டத்தின் பிரிவு 8 (1)	2020 மே மாதம் 20 ஆம் திகதி முதல் அமுலுக்குவரும் வகையில் கோவிட் - 19 தொற்று நோய் காலத்தில் செயல்படுவதற்காக சுகாதார சேவைகள் வழங்கல்களுக்கு தேவையான மருத்துவ, சத்திர சிகிச்சை மருத்துவ மற்றும் பல் சத்திர சிகிச்சை உபகரணங்கள் தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் அவற்றின் பாகங்கள் உட்பட இயந்திரங்களும் கருவிகளும், வைத்தியசாலைகளுக்கான தளபாடங்கள் மற்றும் மருந்துகள், இரசாயனப் பொருட்கள் போன்ற பொருட்களுக்கு வட் வரி (VAT) விலக்கப்பட்ட போதிலும் அதன் விதிமுறைகளுக்கு இணங்காமல் 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் சுகாதார அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள 17 வைத்தியசாலைகளினால் கோவிட் தொற்றை

கட்டுப்படுத்துவதற்காக 1550 சந்தர்ப்பங்களில் செய்யப்பட்ட கொள்வனவுகளுக்காக மொத்தம் ரூபா. மில்லியன் 70.12 வட் வரியாக 92 விநியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்கு விதிகள் கோவை

(i) நிதி ஒழுங்குவிதி 104

நட்டம் அல்லது இழப்பு ஏற்பட்ட உடனேயே அதன் அளவு மற்றும் காரணத்தை உறுதி செய்யவதற்கும், அதற்கு பொறுப்பானவர்ளை உறுதிப்படுத்துவதற்கும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனினும், ரூபா மில்லியன் 22.91 மருந்து பற்றாக்குறை மற்றும் ரூபா மில்லியன் 218.04 மருந்து காலாவதியாதல் தொடர்பில் முறையே 05 வருடத்திற்கும் 13 வருடத்திற்கும் இடப்பட்ட மற்றும் 2 வருடத்திற்கும் 13 வருடத்திற்கும் இடைப்பட்ட காலம் எடுத்த போதிலும் கணக்காய்வுத் தினமான 2022 டிசம்பர் 31 ஆம் திகதியிலும் நிதி ஒழுங்குவிதிகளின் பிரகாரம் செயற்படுத்தப்படவில்லை.

மருத்துவ விநியோகப் பிரிவினால் இழப்பு தொடர்பான பதிவேடு முறையாக பராமரிக்கவில்லை.

(ii) நிதி ஒழுங்குவிதி 110 (1)

மருத்துவ விநியோகப் பிரிவின் 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுகளில் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட இழப்பு சேர்க்கப்படவில்லை.

(iii) நிதி ஒழுங்குவிதி 110 (2)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பிணை வைப்பு செய்ய வேண்டிய 14 சுகாதார சாரதிகள் மற்றும் 23 மருந்தாளர்கள் உட்பட 53 உத்தியோகத்தர்களின் பிணை பணத்தை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை

(iv) நிதி ஒழுங்குவிதி 880 மற்றும் அரச அலுவலர்களின் (பிணை) அரசாணை (612 சபை)

(இ) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவை

(i) அத்தியாயம் V இன் பிரிவு 7.1 மற்றும் அரச சேவைகள் ஆணைக் குழு

பதவி விலகியதாக கருதப்படும் உத்தியோகத்தர்களுக்கு அதுபற்றி உடனடியாக பதிவுத்தபால் மூலம் அறிவிப்பதந்கு நடவடிக்கை எடுப்பது நிறுவனத் தலைவரின் பொறுப்பு. எனினும்,

	நடைமுறை விதிமுறைகளின் முதலாவது பிரிவின் 172 வது விதி	அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட லீவு நிறைவடைந்த பின்னர் கடமைக்கு சமூகமளிக்காத மருத்துவ அலுவலர்களுக்கு பதவி வெறிதாக்கல் அறிவிப்புகளை வழங்குவதற்கு 17 வருட காலதாமதம்.
(ii)	அத்தியாயம் XII இன் உப பிரிவு 1.7	கேகாலை பொது வைத்தியசாலையினால் பராமரிக்கப்படும் மருத்துவர்களின் லீவு பதிவேடு முறையாக பராமரிக்கப்படவில்லை என்பதுடன் மருத்துவர்களின் முன்னைய ஆண்டுகளில் பெறப்பட்ட லீவுகள் எடுத்த ஒழுங்கு வரிசையில் பதியப்படவில்லை.
(iii)	அத்தியாயம் XII இன் பிரிவு 23 மற்றும் 23 (1) மற்றும் அத்தியாயம் XV இன் பிரிவு 10.1	தொற்று நோயியல் நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் (பெண்) 29 சந்தர்ப்பங்களில் வெளிநாடு சென்ற போது கடமையின் நிமிர்த்தம் வெளிநாடு சென்றிருப்பின் பிரதமரின் அல்லது தனிப்பட்ட விடயமாக சென்னிறருப்பின் அமைச்சின் செயலாளரின் அனுமதி அல்லது வெளிநாடு செல்வதற்காக பொது 126 வது படிவத்தில் அங்கீகரிக்ப்பட்ட லீவு விண்ணப்பித்தமை தொடர்பாக உறுதி செய்வதற்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை.
(iv)	அத்தியாயம் XIX இன் பிரிவு 4.4 மற்றும் மகளிர் விவகாரம் மற்றும் போதனா வைத்தியசாலையின் 1987 டிசம்பர் 21 ஆம் திகதிய 78/87 எனும் சுற்றறிக்கை	2022 ஆம் ஆண்டில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குரிய உத்தியோகபூர்வ இல்லங்களில் வசித்த திருமணமான 14 தாதி உத்தியோகத்தர்களுக்காக வைத்தியசாலையினால் செலுத்தப்பட்ட ரூ.724,905 மின்சார கட்டணம் அவர்களிடமிருந்து அறவிடப்படவில்லை. மேலும் வீடுகளை வழங்குவதற்கு பொருத்தமானவர்களை தெரிவு செய்வதற்கான ஆலோசணைகள் பெற இல்ல குழுவொன்றை நியமிக்காமல் வைத்தியசாலையின் 103 அறைகள் கொண்ட அரச இல்லங்கள் 09 இனை உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்குவதற்கு வைத்தியசாலை அதிகாரிகளினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.
(v)	அத்தியாயம் XIX இன் பிரிவு 5.8	உத்தியோகபூர்வ இல்லங்களுக்காக வழங்கப்படும் நீர், மின்சாரம் மற்றும் எரிவாயு என்பவற்றுக்காக செலவிடும் கட்டணங்கள் உத்தியோகத்தர் ஏற்கவேண்டும் என்றபோதிலும், சிலாபம் மாவட்ட பொது வைத்தியசாலையின் 17 தாதி உத்தியோகத்தர்கள் அவ்வாறு நீர் மற்றும் மின்சார கட்டணங்களை திருப்பிச் செலுத்தவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.
(ஈ)	2021 டிசம்பர் 24 ஆம் திகதிய 26/2021 எனும் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 0 பந்தி	2022 ஆம் ஆண்டினுள் அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் விஷேட முற்பணம் அதே ஆண்டில் அறவிட்டு முடிக்க வேண்டும் என்றபோதிலும், 2022 மார்ச் 31 நிலவரப்படி 103 உத்தியோகத்தர்களிடம்

இருந்து அறவிப்பட வேண்டிய விஷேட முற்பண நிலுவை 86,250 ரூபா ஆகும்.

(உ) 2018 பெப்ரவரி 20 ஆம் திகதிய 03/2018 எனும் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 3 (III) பத்தி

உத்தியோகத்தர் ஒருவர் ஓய்வு பெற்ற தினத்திற்கு சேவையாற்றிய பதவியை விட குறைந்த சம்பளம் கொண்ட பிரிதொரு பதவிக்கு மீள சேவையில் ஈடுபடுத்தும் போது அவர் அரச சேவையில் இறுதியாக பெற்ற மாதாந்த சம்பளத்திற்கு அல்லது புதிய பதவிக்கான சம்பள விகிதத்திற்கு ஏற்றவாறு சம்பள படி ஆகிய இரண்டில் குறைந்த தொகைக்கு சமமான மாதாந்த கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் எனினும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி ஓய்வு பெற்ற தினத்தில் வகித்த பதவியை விட குறைந்த சம்பள அளவுடைய பிரிதொரு பதவிக்கு மீள சேவையில் அமர்த்தப்பட்ட 22 உத்தியோகத்தர்களுக்கு அவர்கள் ஓய்வுபெறும் போது பெற்ற மாதாந்த சம்பளம் மாதாந்த கொடுப்பனவாக வழங்கப்பட்டுள்ளது.

2.6 பெறப்பட வேண்டிய தொகை

நிதி ஒழுங்குவிதிகள் 170 (3) இன்படி, பொருட்கள் அல்லது இயந்திரங்கள் ஒழுங்காக விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் பணம் செலவிடுதல் என்பதன் கீழ் வருவதில்லை என்பதுடன், அவ்வாறு பெறப்படும் பணம் வரவில் பதியப்பட வேண்டும். எனினும், மருத்துவ விநியோகப் பிரிவினால் பிற அரச நிறுவனங்கள் வைத்தியசாலைகள் மற்றும் வெளி நிறுவனங்களுக்கு இலாபத்துடன் வழங்கப்பட்ட மருத்துவ விநியோகங்களின் மூலம் கிடைக்கப்பெறும் பணம் கணக்கு வைப்பதற்கு வருமான கணக்கு பராமரிக்கப்படவில்லை என்பதுடன், கிடைக்கப்பெறும் பணம் மருத்துவ விநியோகப் பிரிவின் செலவின விடயத்தில் பதியப்பட்டுள்ளது. மதிப்பாய்வு ஆண்டில் மட்டும் மருத்துவ விநியோகப் பிரிவிற்கு அவ்வாறு கிடைத்த ரூபா மில்லியன் 665.74 இனை வருமாக கணக்கில் இடுவதற்கு பதிலாக மருத்துவ விநியோகப் பிரிவின் செலவின விடயத்தில் பதியப்பட்ட காரணத்தால் அந்த செலவின விடயத்தினுள் சரியான செலவுகள் குறித்து விளக்கமற்றதாக இருப்பது அவதானிக்கப்பட்டது. மேலும் PRONTO கணினி அமைப்பில் பெறப்பட்ட தகவல்களின்படி பிற அரச நிறுவனங்களில் உள்ள வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்கள் 33 இற்கு கடன் அடிப்படையில் வழங்கப்பட்ட மருத்துவ விநியோகங்களுக்காக 2022 டிசம்பர் 31 நிலவரப்படி ரூபா மில்லியன் 7,931.87 இனை அறவிடுவதற்கு போதிய நடவடிக்கைகள் எடுக்கவில்லை.

2.7 முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்த்தல்

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 எனும் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் திருத்தப்பட்ட நிதி ஒழுங்குவிதி 371 (5) இன்படி, பணிகளை முடித்து 10 நாட்களுக்குள் பெறப்பட்ட சூழ்நிலை உப பணி முற்பணம் கணக்கை தீர்தல் வேண்டும் என்ற போதிலும், மதிப்பாய்வு ஆண்டில் 229 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட மொத்தம் ரூபா மில்லியன் 7.88 உப பணி முற்பணம் உரிய பணிகளை முடித்த 01 மாதமும் 05 நாட்கள் வரை தாமதித்து தீர்க்கப்பட்டுள்ளது.

(ஆ) 2022 ஆம் ஆண்டில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களுக்காக உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட எரிபொருள் முற்பணம் பணி நிறைவடைந்ததும் உடனே தீர்க்கப்பட வேண்டும் எனினும், மதிப்பாய்வு ஆண்டினுள் 22 சந்தர்ப்பங்களுக்கான ரூபா 338,453 இனை தீர்ப்பதற்கு 02 - 07 மாதங்கள் தாமதித்துள்ளது.

(இ) மதிப்பாய்வு ஆண்டில் 14 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட ரூபா 787,450 சூழ்நிலை உப பணி முற்பணம் உரிய பணிக்காக பயன்படுத்தப்பட்டு 05 நாட்கள் முதல் 231 நாட்கள் வரை வைத்திருந்து பின்னர் தீர்க்கப்பட்டுள்ளது.

(ஈ) மதிப்பாய்வு ஆண்டில் 85 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட சூழ்நிலை உப பணி முற்பணம் ரூபா மில்லியன் 3.22 உரிய பணிக்காக பயன்படுத்தப்பட்டு மீதமுள்ள ரூபா 659,623 இனை 10 நாட்கள் முதல் 142 நாட்கள் வரை வைத்திருந்து பின்னர் தீர்க்கப்பட்டுள்ளது.

(உ) மதிப்பாய்வு ஆண்டில் 03 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட பல்வேறு நிகழ்சித் திட்டங்கள் நடாத்துவதற்கான மாகாண சுகாதார பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 280,800 இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படாமல் நிதி வழங்கப்பட்ட பின்னர் 03 மாதங்கள் முதல் 05 மாதங்கள் வரையான கால தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டுள்ளது.

(ஊ) 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவுறும் ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்களின் முற்பணம் "B" கணக்கு சீராக்கல் அறிக்கை தொடர்பாக பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(i) ஏற்பாட்டு அறிக்கையின் இணைப்பு 3 இன்படி, அரச அமைச்சு / திணைக்களத்திற்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு உள்ள கடன் நிலுவை ரூபா மில்லியன் 72.95 ஆகும். 2004 ஒக்டோபர் 11 ஆம் திகதிய இலக்கம் 118 எனும் வரவு செலவு சுற்றறிக்கையின்படி, உத்தியோகத்தர் ஒருவர் இடமாற்றம் செய்யப்பட்ட இரண்டு மாதங்களுக்குள் கடன் நிலுவைத் தொகையை செலுத்தவில்லை என்றால், இடமாற்றம் பெற்றுச்சென்ற திணைக்களத்தில் அவர் பணியாற்றுவதை உறுதி செய்து அந்த திணைக்களத்திற்கு எழுத்துமூலம் அறிவிக்க வேண்டும். மூன்றாவது மாதத்தில் இடமாற்றம் வழங்கப்பட்ட திணைக்களத்தினால் மாத கணக்குச்சுருக்கத்தின் மூலம் குறிப்பிட்ட கடன் நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன், மூன்று மாதங்களின் பின்னர் அந்த கடன் நிலுவைத்தொகையை காட்டாதிருப்பதற்கு பொறுப்புக்கூற வேண்டும். எனினும் 2022 டிசம்பர் 31 நிலவரப்படி அமைச்சு மற்றும் அதற்குரித்தான 57 நிறுவனங்களுடன் தொடர்பான 72.95 மில்லியன் ரூபா கடன் நிலுவை தொடர்பாக தாபன விதிக்கோவையின் xxiv அத்தியாயத்தின் 1:6 மற்றும் 1:7 ஆகிய பிரிவுகளின் பிரகாரம் மற்றும் மேற்குறிப்பிட்டவாறு நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த கடன் நிலுவையில் ரூபா மில்லியன் 45.15 ஆன கடன் நிலுவைகள் 5 வருடங்களுக்கு மேலான பழைய நிலுவைகள் ஆகும். மிகுதி கடன் நிலுவைகளில் ரூபா மில்லியன் 21.98 கடன் நிலுவை 03 மாதங்களை தாண்டிய கடன் நிலுவைகள் ஆகும். அதன்படி, மொத்த கடன் நிலுவையில் ரூபா மில்லியன் 67.13 அதாவது, 92 சதவீதம் உத்தியோகத்தர்களின் கவனயீனம் காரணமாக தீர்க்கப்படாத கடன் என்பது அவதானிக்கப்பட்டது.

(ii) உப அட்டவணை 3.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள 2.43 மில்லியன் ரூபா கடன் நிலுவை 29 தொடர்பான உரிய உத்தியோகத்தர்கள் இடமாற்றம்

பெற்றுச்சென்ற சேவை நிலையம் எவை என்பது குறித்து பதியப்படவில்லை. அதன்படி அந்த கடன் நிலுவைகளின் சரியான தன்மை கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை.

(iii) உப அட்டவணை 3.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள 2.23 மில்லியன் ரூபா கடன் நிலுவை 69 தொடர்பான உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றுச்சென்ற மாகாண சபை நிறுவனங்களை உறுதியாக கண்டறிய முடியவில்லை.

(iv) உப அட்டவணை 3.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள மொத்தம் 1.73 மில்லியன் ரூபா கடன் நிலுவை 22 சுகாதார அமைச்சிற்குரிய நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் நிலுவை ஆகும்.

(v) மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு உப அட்டவணை இலக்கம் 3.2.2 மற்றும் 3.3 இல் உள்ள 2022 டிசம்பர் 31 நிலவரப்படி அறவிடப்பட வேண்டிய ரூபா மில்லியன் 13.08 கடன் நிலுவை சுகாதார அமைச்சிற்குரிய வைத்தியசாலைகள் மற்றும் பிற சுகாதார நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் நிலுவைகள் ஆகும். 2019, 2020, 2021 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கான கணக்காய்வு அறிக்கையின் ஊடாக இந்த நிலைமை தங்களின் அவதானத்திற்கு உட்படுத்துவதுடன், ஒரே செலவின தலைப்பில் உள்ள நிறுவனங்களுக்கு இடையே கடனாளி மற்றும் கடன்நிலுவைகள் இருக்கமுடியாது என்பதால் இந்த கடன் நிலுவைகள் குறித்து ஆய்வு செய்து தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரைக்கப்பட்ட போதிலும், 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரை இந்த கடன் நிலுவைகளை கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதன்படி இந்த கடன் நிலுவைகள் சீராக்கல் அறிக்கையில் உள்ளிடுவதற்கான நோக்கத்திற்காக தவறாக உள்ளிட்ட நிலுவை என்ற சந்தேகம் கணக்காய்வின் போது நிராகரிக்க முடியாது. இடமாற்றம் பெற்றுச் சென்ற சேவை நிலையம் குறிப்பிடப்படாத மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற சேவை நிலையம் சரியாக கண்டறிய முடியாத ரூபா மில்லியன் 4.67 கடன் நிலுவையும் உட்பட ரூபா மில்லியன் 17.75 கடன் நிலுவையை உடனடியாக தீர்ப்பதற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களின் துரித அவதானத்திற்கு உட்படுத்துவதன் அவசியத்தை சுட்டிக்காட்டுகிறேன்.

(vi) பதவி நீக்கப்பட்ட 222 உத்தியோகத்தர்களிடமிருந்து 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிடப்படவேண்டிய கடன் நிலுவை ரூபா மில்லியன் 9.76 என்பதுடன், அதில் 74 சதவீதத்திற்கு நிகரான 7.26 மில்லியன் ரூபா கடன் நிலுவை 5 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவைகள் ஆகும்.

(vii) சேவையை வெறிதாக்கிய 888 உத்தியோகத்தர்களிடமிருந்து மொத்தம் 25.08 மில்லியன் ரூபா கடன் நிலுவை அறவிட வேண்டிய இருந்ததுடன் அதில் 11.58 மில்லியன் ரூபா அதாவது 46 சதவீதமான கடன் நிலுவைகள் 5 வருடங்களுக்கு மேலான பழைய நிலுவைகள் ஆகும். இந்த நிலுவைகள் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து அதிகரித்து வருவதுடன், கடனை அறவிடுவதற்கு போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக கணக்காய்வில் திருப்தியடைய முடியவில்லை.

(viii) ஓய்வுபெற்ற 349 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் நிலுவை ரூபா மில்லியன் 19.21 என்பதுடன் அதில் 9.79 மில்லியன்

ரூபா அதாவது 51 சதவீதமான கடன் நிலுவைகள் ஒரு வருடத்திற்கு மேலான பழைய நிலுவைகள் ஆகும்.

(ix) மரணித்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் நிலுவை தொடர்பாக தாபன விதிக்கோவையின் xxiv அத்தியாயத்தின் 4.4 தொடக்கம் 4.6 வரையான பிரிவுகளின் விதிமுறைகளின் பிரகாரம் செயற்பட வேண்டும் என்றபோதிலும், அவ்வாறு செயற்படாத காரணத்தால் 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிடப்பட வேண்டிய கடன் தொகை 6.58 மில்லியன் ரூபா ஆகும். அதில் 26 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய மொத்த தொகை ரூபா மில்லியன் 1.43 அதாவது 19 சதவீதமான கடன் நிலுவைகள் 05 வருடங்களுக்கு மேலான பழைய நிலுவைகள் ஆகும். மேலும், இந்த கடன் நிலுவைகளில் ரூபா மில்லியன் 3.25 அதாவது 49 சதவீதமான கடன் நிலுவைகள் ஒரு வருடத்திற்கு மேலான நிலுவைகள் ஆகும்.

(x) இடமாற்றம் பெற்றுச்சென்ற 62 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா மில்லியன் 12.25 உம், பதவி நீக்கப்பட்ட 11 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா மில்லியன் 3.25 உம், சேவையை வெறிதாக்கிய 11 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா மில்லியன் 1.44 உம், ஓய்வு பெற்ற 08 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா மில்லியன் 1.05 உம் மற்றும் மரணித்த 3 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 298,336 இற்குமான சொத்து /வாகன கடன் கோவைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை.

2.8 வைப்பு

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) நிதி ஒழுங்குவிதிகள் 571 (3) இன்படி, அமைச்சின் கீழுள்ள 26 நிறுவனங்களுக்குரிய 02 வருடங்களுக்கு மேற்பட்ட மொத்தம் ரூபா. மில்லியன் 1,091 இற்கான வைப்பு நிலுவைகள் தீர்ப்பதற்கு அல்லது அரச வருவாயில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 2021 ஜூலை மாதம் முதல் 2022 செப்டெம்பர் வரை கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் சரப் பிரிவினால் செலுத்தாமல் வைப்புச் செய்யப்பட்ட 20 சந்தர்ப்பங்களுக்குரிய கொடுப்பனவு பெறுமதி ரூபா. 1,553,780 ஆனது 2022 டிசம்பர் 31 ஆம் திகதியிலும் உரிய தரப்பினருக்கு செலுத்தி தீர்ப்பதற்கு அல்லது அரச வருவாயில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்படாத மொத்தம் ரூபா 140,000 பண்டிகை முற்பணம் 2022 ஜூலை 06 ஆம் திகதி பொது வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டுள்ளதுடன், 2023 மே 15 ஆம் திகதியிலும் அந்த பணம் பொது வைப்புக் கணக்கில் சேமிக்கப்பட்டுள்ளது.

2.9 நட்டம் மற்றும் இழப்பு

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் தொடர்ந்தும் அறவிட வேண்டியுள்ள அல்லது கைவிடுவதற்கு உள்ள நட்ட அறிக்கையில் மொத்த மதிப்பு (இயற்கும் மற்றும் அபிவிருத்தி) ரூபா மில்லியன் 559.41 ஆகும். அதில் ரூபா மில்லியன் 17.14 ஆனது 05 வருடங்களுக்கு மேற்பட்ட மதிப்பை கொண்டுள்ளதுடன், அது மொத்த மதிப்பில் 3.06 சதவீதமாகும். கால பகுப்பாய்வு சமர்ப்பிக்காமல் மதிப்பு ரூபா. மில்லியன் 512.49 என்பதுடன், அது அது மொத்த மதிப்பில் 91.61 சதவீதமான ஒரு பெரிய மதிப்பாகும்.

(ஆ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட போக்குவரத்து பிரிவில் பராமரிக்கப்படும் கோப்புப் பதிவேட்டின்படி 2021 ஆம் ஆண்டுக்கான 49 வாகன விபத்துகள் தொடர்பாக கோவைகள் திறக்கப்பட்ட போதிலும் 29 கோவைகள் மட்டுமே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. வாகன விபத்துக் கோவைகளைத் திறக்கும் போது, 2 வெவ்வேறு வாகன விபத்துகளுக்கு ஒரே கோவை எண் பயன்படுத்தப்பட்ட 5 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. நி.ஒ 104 (3) இன்படி, வாகன விபத்துகள் தொடர்பான முழுமையான அறிக்கையை சமர்ப்பதற்கு ஏழு நாட்களுக்கு மேல் தாமதம் ஏற்பட்டால், உடனடியாக ஆரம்ப அறிக்கையை அனுப்ப வேண்டும். இருந்த போதிலும், பல சந்தர்ப்பங்களில் வாகன விபத்துகள் தொடர்பில் அமைச்சு முதற்கட்ட விசாரணைகளை மேற்கொள்ளாமல் 2-3 மாதங்கள் தாமதமாக முதற்கட்ட அறிக்கை வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. மேலும், ஆரம்ப அறிக்கைகள் பலவற்றில் தலைவர் கையொப்பமிட்ட போதிலும் திகதி குறிப்பிடப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட 29 விபத்துக் கோவைகளின் படி, போலிஸ் அனுமதி அறிக்கை காணப்படாமை, போக்குவரத்து உத்தியோகத்தர் சான்றளித்த மதிப்பீடு காணப்படாமை, பழுதுபார்க்கும் நிறுவனத்தின் மதிப்பீடு காணப்படாமை, வழங்கு பதிவு செய்யப்படதா / இல்லையா என்பது பற்றிய தகவல்கள் இல்லாமை, ஆரம்ப விசாரணை அறிக்கை காணப்படாமை, பழுதுபார்ப்பு செலவுகளை ஏற்கும் விதம் குறித்த தகவல்கள் உள்வாங்கப்படாமை, ஆரம்ப அறிக்கை மற்றும் இறுதி அறிக்கைகள் காணப்படாமை மற்றும் கோவைகள் புதுப்பித்த நிலையில் பராமரிக்கத் தவறியமை போன்ற குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. மேலும், மூன்றாம் நிலை தரப்பினரின் தவறால் அமைச்சின் வாகனம் சேதமடைந்தால் மூன்றாம் தரப்பினரிடமிருந்து இழப்பை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காத பல சந்தர்ப்பங்களில் வாகனத்தின் காப்புறுதி உரிமத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது எனினும், வாகனத்தின் சாரதி நீதிமன்றத்தால் குற்றவாளி என கண்டறியப்பட்டு அபராதம் விதிக்கப்பட்ட சந்தர்ப்பங்களிலும் உரிய பழுதுபார்த்தல் காப்புறுதி மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

2.10 வரித் தேவைகளுடன் இணங்காமை

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள அனைத்து வைத்தியசாலைகள் மற்றும் பிற நிறுவனங்களில் பணிபுரியும், 2020 ஜனவரி 01 முதல் 2020 மார்ச் 31 வரையிலான காலகட்டத்தில் தனிநபர் வருமானம் ரூபா 750,000 இனை தாண்டும் உத்தியோகத்தர்களிடமிருந்து விதிக்கப்படும் தனிநபர் வருமான வரி (APIT) தொடர்பாக 2022 மார்ச் 29 ஆம் திகதிய கடிதத்தில் கோரப்பட்ட தகவல்கள் வைத்தியசாலைகள், நிறுவனங்கள் மற்றும் பிரிவுகள் 31 இனால் 2023 ஜனவரி 27 ஆம் திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை என்பதுடன், உரிய வரி கழிப்பதற்கு தகுதியான உத்தியோகத்தர்கள் இல்லை என்பதும் தெரிவிக்கப்படவில்லை. மேலும் தகவல் கோரப்பட்ட கடிதத்தின் பந்தி (அ) வின்படி, 2020 ஜனவரி 01 முதல் 2020 மார்ச் 31 வரையான காலப்பகுதியில்

தனிப்பட்ட வருமானம் ரூபா 750,000 இனை தாண்டும் உத்தியோகத்தர்களின் பெயர்கள், பதவிகள் மற்றும் வருமானம் பற்றிய தகவல்கள் 06 வைத்தியசாலைகள் / நிறுவனங்களினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை என்பதுடன், தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்ட வைத்தியசாலைகள் / நிறுவனங்களுள் 09 வைத்தியசாலைகள், நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளினால் கழிக்கப்பட்ட வரி உள்நாட்டு வரித் திணைக்களத்திற்கு செலுத்துதல் மற்றும் வரி அறிக்கை சமர்ப்பித்தல் தொடர்பான விபரங்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் தொடர்பான தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை.

(ஆ) 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு வருவாய் சட்டத்தின் முறையான திருத்தத்தின்படி சட்டத்தின் 83 வது பிரிவின் கீழ் கட்டாயத் தேவையாக உள்ள வேலை வருவாயில் பணம் செலுத்துவதன் கீழ் பணியமர்த்துபவர் மூலம் பயனடையும் ஊழியரின் வேலை வாய்ப்பு வருவாயில் இருந்து பிடித்தம் செய்யும் வரியைக் கழித்தல் 2020 ஜனவரி 01 ஆம் திகதி முதல் நீக்கப்பட்டு 2020 ஏப்ரல் 01 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தனிநபர் வருமான முற்பண வரி அறிமுகப்படுத்தப்பட்டது. இருப்பினும், PN/PAYE/2020-01 மற்றும் 2020 ஏப்ரல் 15 ஆம் திகதிய வரி அறிவிப்பின்படி, 2020 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2020 மார்ச் 31 ஆம் திகதி வரையிலான கால கட்டத்தில் பணியாளரின் இணக்கத்துடன், அவரின் வேலை செலவில் இருந்து கழித்தல் அல்லது வேறு விதமாக, முறையாகக் கணக்கிடப்பட்டு, கழிக்கப்படும் வரியானது வருவாய் வரியாக 2020 மே 15 ஆம் திகதிக்கு முன்னர் பணியமர்த்துபவரினால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு பணம் அனுப்ப வேண்டும் என்பதுடன், அந்த செலுத்த வேண்டிய வரி தொடர்பான தகவல்கள், 2020 ஏப்ரல் 30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அனுப்ப வேண்டிய 2019/2020 மதிப்பீட்டு வருடத்திற்கான செலுத்த வேண்டிய வருவாய் வரி ஆண்டறிக்கையில் அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், அமைச்சு உட்பட 14 வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, 2020 ஜனவரி 01 முதல் 2020 மார்ச் 31 வரையிலான 03 மாதங்களுக்கான தனிநபர் வருமானம் 750,000 ரூபாவிற்கு மேற்பட்ட வருமானம் பெறும் உத்தியோகத்தர்களிடம் இருந்து உரியவாறு அந்த வரி அறவிடப்பட்டு இறைவரித் திணைக்களத்திறகு அனுப்பப்படவில்லை என்பதுடன், பணம் செலுத்தாதது தொடர்பான தகவல்கள் வருடாந்த வரி அறிக்கையுடன் சமர்க்கப்படவில்லை. மேலும், தனிநபர் வருவாயைக் கணக்கெடுப்பதில் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ வாகன வசதி, உத்தியோகபூர்வ வாகனத்திற்கான அவர்களின் தனிப்பட்ட வாகனத்தைப் பயன்படுத்துவதற்கான கொடுப்பனவு, எரி பொருள் கொடுப்பனவு, உத்தியோகபூர்வ இல்லங்கள், அரசாங்க இல்லங்கள் அல்லது வாடகைக்கு பெறப்பட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்ட வீட்டு வசதிகள் போன்ற நிதிசாரா பயன்கள் தனிநபர் வருவாயில் கவனத்தில் கொள்ளவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. கணக்காய்விற்கு அமைச்சு, 24 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் நிதிப் பலன்கள் பற்றிய தகவல்களின்படி செய்யப்பட்ட கணக்கீட்டின்படி, மேற்படி 03 மாத காலத்திற்கு அரசாங்கம் இழந்த வரி வருமானம் ரூபா. 7,656,529 ஆகும்.

(இ) அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள அனைத்து வைத்தியசாலைகள் மற்றும் பிற சுகாதார நிறுவனங்களில் பணியாற்றும், 2020 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் 2022 மார்ச் 31 ஆம் திகதி வரையிலான இரண்டு ஆண்டுகளுக்கு, மாத தனிநபர் வருமானம் ரூபா 250,000 அல்லது ஆண்டு வருமானம் ரூபா 3,000,000 இற்கு மேற்படும் உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்படும் தனிநபர் வருமான வரி (APIT) தொடர்பாக 2022 மார்ச் 29 ஆம் திகதிய கடிதத்தில் கோரப்பட்ட

தகவல்கள் 2023 பெப்ரவரி 06 ஆம் திகதியிலும் 34 வைத்தியசாலைகள், நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவோ உரிய வரிகளை கழிப்பதற்கு தகுதியான உத்தியோகத்தர்கள் இல்லை என்பது பற்றியோ தெரிவிக்கவில்லை என்பதுடன், தகல்கள் சமர்ப்பிக்கப்பட்ட 02 வைத்தியசாலைகள் / நிறுவனங்களினால் 02 வருடத்திற்குரிய மாத தனிநபர் வருமானம் ரூபா 250,000 அல்லது ஆண்டு வருமானம் ரூபா 3,000,000 இற்கு மேற்படும் உத்தியோகத்தர்களின் பெயர்கள், பதவிகள் மற்றும் வருமானம் பற்றிய தகவல்கள் சமர்ப்பிக்கவில்லை. மேலும் தகவல்கள் சமர்ப்பித்த 08 வைத்தியசாலைகள், நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளினால் கழிக்கப்பட்ட வரி உள்நாட்டு வரித் திணைக்களத்திற்கு செலுத்துதல் மற்றும் வரி அறிக்கை சமர்ப்பித்தல் தொடர்பான விபரங்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் தொடர்பான தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை.

(ஈ) 2020 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலத்தினுள் அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள பிற அரச இராஜாங்க அமைச்சுகளுக்கு பொறுப்பாக இருந்த அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களிடம் இருந்து முற்பண வருமான வரி கழிக்கப்பட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருப்பின் அது தொடர்பான தகவல்கள், அவ்வாறு அனுப்பப்படாமல் இருப்பின் மேற்குறிப்பிட்ட காலப் பகுதியில் அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள பிற இராஜாங்க அமைச்சுகளுக்கு பொறுப்பாக இருந்த அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் மாதாந்த வருமானம் பற்றிய தகவல்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருப்பின் அந்த தகவல்கள் அல்லது வரி செலுத்துதல் தொடர்பான தகவல்கள் அனுப்பப்படாவிட்டால், உரிய காலத்திற்கான அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் மாதாந்த தனிநபர் வருமானம் (நிதி மற்றும் நிதி சாராத பலன்கள் உட்பட) கணக்கிடப்பட்ட தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(உ) 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு வருவாய் சட்டத்தின் முறையான திருத்தத்தின்படி சட்டத்தின் 83 வது பிரிவின் கீழ் கட்டாயத் தேவையாக உள்ள வேலை வருவாயில் பணம் செலுத்துவதன் கீழ் பணியமர்த்துபவர் மூலம் பயனடையும் ஊழியரின் வேலை வாய்ப்பு வருவாயில் இருந்து பிடித்தம் செய்யும் வரியைக் கழித்தல் 2020 ஜனவரி 01 ஆம் திகதி முதல் நீக்கப்பட்டு 2020 ஏப்ரல் 01 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தனிநபர் வருமான முற்பண வரி அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்படி, வரிப் பொறுப்பிற்கு உட்பட்ட ஊழியர் தமது விருப்பத்தின் பேரில் (Consent) தனிப்பட்ட வருமானத்திலிருந்து வரியைக் கழிக்க வேண்டாம் என பணியமர்த்துபவரிடம் கோருவதற்கு உரிமை உண்டு. எவ்வாறாயினும், அவ்வாறு விருப்பம் தெரிவிக்காத ஊழியர்களின் பட்டியலை வருடாந்த உப அட்டவணை 03 இன் கீழ் வருடாந்த அறிக்கைகளுடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும் எனினும், அமைச்சு உட்பட வைத்தியசாலைகள் மற்றும் 16 நிறுவனங்கள் அவ்வாறு செய்யவில்லை என்பதுடன், ஊழியர்களின் விருப்பத்தின் பேரில் வரி கழிக்கப்பட்டாலும் தனிநபர் வருமானத்தை கணக்கிடும் போது உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ வாகன வசதி, உத்தியோகபூர்வ வாகனத்திற்கான அவர்களின் தனிப்பட்ட வாகனத்தைப் பயன்படுத்துவதற்கான கொடுப்பனவு, எரி பொருள் கொடுப்பனவு, உத்தியோகபூர்வ இல்லங்கள், அரசாங்க இல்லங்கள் அல்லது வாடகைக்கு பெறப்பட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்ட வீட்டு வசதிகள் போன்ற நிதிசாரா பயன்கள் தனிநபர் வருவாயில் கவனத்தில் கொள்ளவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, 2020/2021 மற்றும் 2021/2022 ஆகிய இரண்டு வரி ஆண்டுகளில் முறையே 1707 மற்றும் 2171 உத்தியோகத்தர்களின் வரி கழிக்கப்பட்டு செலுத்துவதற்கு ஒப்புதல் வழங்காமை

குறித்த தகவல்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கவில்லை.

2.11 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2015 நவம்பர் 27 ஆம் திகதி முதல் இலங்கை சுகாதார சேவையின் மருத்துவ சேவையின் ஆரம்ப தர மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் 2022 ஆகஸ்ட் 20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட பொது 126 படிவத்தில் வெளிநாட்டு லீவு படிவத்தின்படி, 2022 செப்டெம்பர் 20 முதல் 2022 டிசம்பர் 14 ஆம் திகதி வரை தனிப்பட்ட காரணங்களுக்காக அவுஸ்திரேலியாவிற்கு செல்வதற்கு 84 நாட்கள் சம்பளத்துடன் கூடிய லீவு மற்றும் 02 நாட்கள் சம்பளமற்ற வெளிநாட்டு லீவு 2022 செப்டம்பர் 29 வரை விடயப்பொறுப்பு அமைச்சரினால் ஒப்புதல் அளித்துள்ளது. மருத்துவரினால் சமர்ப்பிக்கப்பட்ட வெளிநாட்டு லீவு விண்ணப்பத்தின்படி, தனிப்பட்ட காரணங்களுக்காக வெளிநாடு செல்வதாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அவர் அவுஸ்திரேலியாவின் கென்பரா வைத்தியசாலையில் மருத்துவ அலுவலராக பணியாற்றுவதற்காக கையொப்பமிட்ட சேவை ஒப்பந்தத்தின்படி, வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காக சென்றுள்ளமைக்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2022 ஆகஸ்ட் 01 ஆம் திகதி முதல் 2023 ஜூலை 31 ஆம் திகதி வரை முழு நேர வேலை ஒப்பந்தத்தில் சென்றுள்ளதுடன், அவர் அந்த தகவல்களை மறைத்து உண்மைக்கு புறம்பான தகவல்களைச் சமர்ப்பித்து வெளிநாட்டு விடுமுறைக்கு ஒப்புதல் பெற்றுள்ளார். மேற்கூறிய பொது 126 படிவ வெளிநாட்டு விடுப்பு படிவத்தின்படி, இதற்கு முன்னர் வெளிநாட்டு லீவு பெற்று இலங்கைக்கு திரும்பிய திகதி 2017 பெப்ரவரி 18 என குறிப்பிடப்பட்டிருந்தாலும், இந்த மருத்துவர் 2022 மே 08 ஆம் திகதி முதல் 2022 மே 11 வரை முறையான அனுமதியின்றி சிங்கப்பூர் சென்றுள்ளார். கண்டி தேசிய வைத்தியசாலையில் பராமரிக்கப்படும் விடுமுறைப் பதிவேட்டின் பிரகாரம் மற்றும் அவரின் நாட்குறிப்பேட்டின் பிரகாரம் அந்த நாட்களுக்காக உள்நாட்டு விடுமுறைக்கான அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. இந்த மருத்துவரினால் 2022 நவம்பர் 12 ஆம் திகதியிட்ட கடிதத்தில் இந்த மருத்துவர் 2022 டிசம்பர் 15 ஆம் திகதி முதல் பதவி விலகுவதற்கு கோரப்பட்டுள்ளதுடன், அந்த கடிதம் 2022 டிசம்பர் 10 ஆம் திகதி கண்டி தேசிய வைத்தியசாலைக்கு கிடைத்துள்ளது. அந்த கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ள சத்திய பிரமாணம் 2022 செப்டெம்பர் 15 சான்றளிக்கப்பட்டுள்ளதுடன், அந்த சத்திய பிரமாணத்தின் 3 வது பந்தியில் அவர் வெளிநாடு செல்வதற்கு எதிர்பார்த்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, இந்த மருத்துவர் சம்பளமற்ற லீவு பெறுவதற்காக பொய்யான தகவல்களை சமர்ப்பித்துள்ளமை அவதானிக்கப்பட்டது.

3 செயற்பாட்டு ஆய்வு

3.1 செயற்திறன்

3.1.1 திட்டமிடல்

2022 ஆம் ஆண்டுக்காக மருத்துவ விநியோகப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட செயற்திட்டம் வரவு செலவு ஒதுக்கீடுகளுக்கு ஏற்ப தயாரிக்கப்படவில்லை. அதன்படி, செயற்திட்டத்தில் 1646.4 மில்லியன் ரூபாவிற்கான 43 பணிகள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதில் 476.17 மில்லியன் ரூபாவிற்கான 36 பணிகள் ஒதுக்கீடு கிடைக்காமையினால் செயற்படுத்தப்படவில்லை.

3.1.2 கடமைகளைச் செய்யத் தவறுதல்

செயற்திட்டத்தில் உள்ள பின்வரும் பணிகள் முறையாக மேற்கொள்ளப்படவில்லை.

(அ) தேசிய சுகாதார மூலோபாய பிரதான திட்டம் 2016 – 2025 இல் சுகாதார நிர்வாக மற்றும் சுகாதார மனித வளம் தொடர்பான கருப்பொருளில் முக்கிய 2 பிரிவுகள் இல் இனங்காணப்பட்ட மனித வளம் குறித்த பிரச்சனைகளாக குறைந்த ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் நியமங்கள் தரப்படுத்தப்பட்ட அளவுகோல்களுக்கு ஏற்ப திருத்தப்படல் வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (சேவைகளுக்கான தேவை/ வேலையின் அளவு/ மக்கள் தொகை, புவியியல் மற்றும் பிராந்திய காரணிகள்/ சர்வதேச தரங்கள் போன்றவை) இந்த பிரச்சனைகளுக்கான யுத்திகளாக சுகாதார மனித வள கொள்கைகளை மேம்படுத்தலில் (திட்டமிடல் /ஆட்சேர்ப்பு/ பயிற்சி/ ஈடுபடுத்தல்/ தொழில்முறை மேம்பாடு) குறிப்பிடப்பட்டுள்ளன. எனினும் சுகாதார அமைச்சினால் 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் இந்த கொள்கை தயாரிக்கப்படவில்லை என்பதுடன், 2022 செயற்திட்டத்தை இலக்காகக்கொண்ட விடயமாக குறிப்பிடப்பட்டுள்ள மனித வளங்கள் குறித்த மூலோபாய திட்டமும் மூன்றாவது வரைவு கட்டத்தில் உள்ளமையும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் சபையின் நிதி ஒதுக்கீட்டின் ஊடாக 2022 ஆம் ஆண்டினுள் செயற்படுத்துவதற்கு உத்தேசித்த பின்வரும் திட்டங்கள் சிறப்பாக பூர்த்தி செய்யாத காரணத்தால் அந்த துறைகளின் ஒழுங்குபடுத்தல் பணிக்கு சுகாதார அமைச்சு மட்டத்தில் தேவையான பங்களிப்புகள் கிடைக்காமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(i) 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நாடளாவிய ரீதியில் சுமார் 275 தனியார் வைத்தியசாலைகள் நிறுவப்பட்டிருந்த போதிலும் ஜனாதிபதி நிதியம் தொடர்பில் ஒப்புதல் வழங்குவதற்கான கள சோதனைகளுக்கு ஒரேயொரு வைத்தியசாலை மட்டுமே பங்கேற்றியது.

(ii) தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் சபை, மாகாண மற்றும் பிராந்திய சுகாதார நிர்வாகம், பொது மருத்துவ தொழில்வல்லுனர்கள் (General practitioners), சுயாதீன மருத்துவ தொழில்வல்லுனர்கள் (Independent Medical Practitioners), பொது மருத்துவ தொழில்வல்லுனர்களின் சங்கம் மற்றும் அங்கத்தவர்கள் (Association and Society of General Medical Practitioners) ஆகியோருடன் ஆலோசனைக் கூட்டங்கள் (Advisory meetings) நடாத்துவதற்கு இலக்கு வைக்கப்பட்ட போதிலும், நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை குறிப்பிடப்படவில்லை.

(iii) தனியார் சுகாதார சேவைகள் நிறுவனங்கள் தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்களால் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணை செய்தல் மற்றும் ஆன்லைன் வழியின் ஊடாக முறைப்பாடுகள் செய்யும் முறை தொடர்பான குறிக்கோல் இருந்த போதிலும், வருடம் முழுவதும் செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை தொடர்பாகவும் நடாத்தப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை தொடர்பாகவும் குறிப்பிடப்படவில்லை. மேலும் ஆன்லைன் வழியின் ஊடாக பொது மக்கள் முறைப்பாடுகள் செய்யும் முறை தயாரிக்கப்படவில்லை என்பது தொடர் விசாரணைகளில் அவதானிக்கப்பட்டது.

(இ) அரச நிறுவனமொன்றான பொறியியலாளர் விடயங்கள் குறித்த மத்திய ஆலோசனை பணியகத்தின் (CECB) ஆலோசனையின் கீழ் அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனம் (SEC) இனால் 583.78 மில்லியன் ரூபா மதிப்பீட்டு செலவில் கட்டப்படும் சிலாபம் மாவட்ட பொது வைத்தியசாலையின் மருத்துவ

வாட்டுத்தொகுதியின் 2022 செப்டெம்பர் 23 ஆம் திகதி கணக்காய்வு தினத்திலும் கட்டமைப்பு கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. 2018 பெப்ரவரி 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த திட்டத்தின் 735 நாட்கள் ஒப்பந்த காலம் தணிக்கை திகதியின்படி சுமார் 937 நாட்கள் எடுத்துள்ளன.

(ஈ) சிலாபம் மாவட்ட பொது வைத்தியசாலையில் காணப்பட்ட தீவிர இட நெருக்கடி மற்றும் சத்திர சிகிச்சை மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவு மிக விரைவாக நிறுவ வேண்டியதன் காரணமாக சாதாரண கட்டிடம் கட்டுவதற்கு எடுக்கும் காலத்தை குறைக்கும் பொருட்டு இரும்பை பயன்படுத்தி தற்காலிக கட்டிடமொன்று 06 மாத காலத்தினுள் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2022 செப்டெம்பர் 23 தணிக்கை தினமாகும் போது இந்த திட்டத்தின் ஒப்பந்த காலத்தைத்தாண்டி 5 ½ வருடங்கள் கடந்துவிட்டபோதிலும், தீவிர சிகிச்சைப் பிரிவிற்காக முன்மொழியப்பட்ட கட்டிடத்தின் 02 வது மாடி முடிக்கப்படவில்லை. இந்த கால தாமதத்திற்கு ஒப்பந்ததாரரின் அலட்சியம், திட்டத்தை தயாரிக்க முன் முறையாக தேவையினை இனங்காணாமையினால் பின்னர் திட்டத்தை மாற்றுதல், கட்டுமானத்திற்குரிய நிலத்தை ஆய்வு செய்து சாத்தியக்கூறு ஆய்வு இல்லாமல் திட்டமிடல் மற்றும் மதிப்பீடு தயாரித்தல், கொடுப்பனவுகள் செலுத்துவதில் தாமதம் போன்றவை காரணங்களாக அமைந்தன. இதன் விளைவாக, ரூபா மில்லியன் 85.18 ஆன இந்த கட்டுமான மதிப்பீட்டுச் செலவு ரூபா மில்லியன் 131.95 வரை அதிகரிப்பதற்கு ஒப்பந்ததாரர் 2021 மே மாதம் 03 ஆம் திகதி கோரியதன் மூலம் அரச நிதி தேவையில்லாமல் அதிகம் செலவிடுவதற்கும், நோயாளர் பராமரிப்பு சேவை பாதிப்படைவதற்கும் காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைக்கூடம், களஞ்சிய இட வசதிகளில் கடும் பற்றாக்குறை நிலவுவதாகவும் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட மருத்துவ உபகரணங்கள் மற்றும் விநியோகங்கள் (Aero misr /Drug Nebulizer kit) கட்டில்கள், மெத்தை போன்ற பல்வேறு பொருட்கள் கட்டுமானத்தை கைவிட்ட ஒரு கட்டிடத்தின் நடைபாதையில் பாதுகாப்பின்றி குவித்து வைக்க நேரிட்டுள்ளது.

3.1.3 எதிர்பார்க்கப்படும் பயன்களை (Outcome) பெறாமை

சுகாதார அமைச்சினால் செயற்படுத்தப்படும் இலங்கையின் புற்று நோயாளர்களுக்கு உயர் தொழில்நுட்ப கதிரியக்க சிகிச்சைக்காக மிகவும் உயர் தரத்திலான கதிரியக்க உபகரணங்கள் வழங்குதல் தொடர்பான திட்டத்தின் கட்டம் 01 இன் கீழ் கண்டி தேசிய வைத்தியசாலையின் புதிய புற்று நோய் சிகிச்சை பிரிவிற்கு 597.65 மில்லியன் ரூபா செலவில் Elekta Synergy Platform Linear Accelerator (LINAC) மற்றும் Elekta Synergy Compact Linear Accelerator இயந்திரங்கள் 2021 ஆண்டில் வழங்கப்பட்டுள்ளதுடன், இது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) புதிய புற்றுநோய் சிகிச்சைப் பிரிவின் குளிரூட்டல் அமைப்பு நிறுவுதல் கட்டம் 02 இன் கீழ் மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்ட போதிலும், அந்த அமைப்பை நிறுவுவதற்கு முன் இந்த பிரிவில் நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்ட Linear Accelerator இயந்திரம் உரிய நிறுவனத்தினால் வினியோகிக்கப்பட்டிருந்தமையால் அந்த இயந்திரத்தை நிறுவுவதற்கு குளிரூட்டல் அவசியம் என்பதால் 89.92 மில்லியன் ரூபா செலவில் Backup Chiller இயந்திரத்தைப் பயன்படுத்தி மத்திய குளிரூட்டல் அமைப்பு நிறுவப்பட்டது. எனினும் இயந்திரத்தை விநியோகித்த நிறுவனத்தினால் அதற்கு மேலதிகமாக ஒரு Chiller இயந்திரத்தை பொறுத்துவது சிறந்தது என 2020 டிசம்பர் 22 ஆம் கடிதத்தின் மூலம் வைத்தியசாலை

பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், இதுவரை அதுகுறித்து எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இந்த குளிரூட்டல் அமைப்பின் கம்ரெஷர் இயந்திரம் 2022 நவம்பர் 14 ஆம் திகதியிலிருந்து செயலிழந்து காணப்பட்டதுடன் அதனை திருத்துவதற்கு 12.66 மில்லியன் ரூபா மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டு அதற்கான நிதி ஒதுக்கப்பட்ட போதிலும் 2023 மார்ச் 20 ஆம் திகதிவரை அதனை திருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

(ஆ) புதிய புற்று நோய் பிரிவில் அமெரிக்க டொலர் 2,045,474.43 (ரூபா. 364,094,448 (1 அமெரிக்க டொலர் = 178 ரூபா என)) பெறுமதியான Elekta Synergy Platform LINAC இயந்திரம் நிறுவப்பட்டு அதில் 80 சதவீதம் பணம் அதாவது 293.37 மில்லியன் ரூபா 2019 ஜூன் 28 மற்றும் 2019 ஒக்டோபர் 25 ஆம் திகதிகளில் செலுத்தப்பட்டுள்ளது. அதனூடு பக்கவிளைவுகளை குறைத்து புற்று நோய் பகுதி மற்றும் அதன் எல்லையை துல்லியமாக அடையாளம் கண்டு கதிர்களை துல்லியமாக புற்று நோயிற்கு மாத்திரம் செலுத்தக்கூடிய தன்மை உண்டு என்பதுடன், இந்த இயந்திரத்தை பயன்படுத்தி 2021 நவம்பர் 11 ஆம் திகதி தொடக்கம் 2022 நவம்பர் 14 ஆம் திகதி வரை 771 நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த இயந்திரத்தின் மூலம் நாளொன்றுக்கு 50 - 60 நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கக்கூடியதாக உள்ளது. இருப்பினும், இயந்திரம் நிறுவப்பட்டுள்ள பதுங்குக்குழியில் உள்ள மேலே பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள மத்திய குளிரூட்டல் அமைப்பின் கம்ரெஷர் இயந்திரம் செயல் இழந்த காரணத்தால் காற்று ஈரப்பதன் நிலை முறையாக பராமரிக்க முடியாததால் அந்த இயந்திரம் 2022 நவம்பர் 14 ஆம் திகதி தொடக்கம் நோயாளர் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.

(இ) புதிய புற்று நோய் பிரிவில் அமெரிக்க டொலர் 1,312,119.85 (ரூபா. 233,557,333 (1 அமெரிக்க டொலர் = 178 ரூபா என)) பெறுமதியான Elekta Compact LINAC இயந்திரம் நிறுவப்பட்டு அதில் 80 சதவீதம் பணம் அதாவது 187.75 மில்லியன் ரூபா 2019 ஜூன் 28 ஆம் திகதி செலுத்தப்பட்டுள்ளது. அதனூடு 6 mv photon beam therapy (06mv, X கதிர்களை பயன்படுத்தி மேற்கொள்ளும் சிகிச்சை) மேற்கொள்ளும் போது (Intensity Modulated Radiotherapy (IMRT) சிகிச்சை முறையின் முக்கிய முறையொன்றான Step and Shoot தொழில்நுட்பத்தில் புற்று நோயிற்கு கதிரியக்க தாக்கத்தை அதிகம் செலுத்தி அருகிலுள்ள உறுப்புகள் மற்றும் தசைகளுக்கு ஏற்படும் சேதத்தை குறைத்து சிகிச்சை திட்டமிடக்கூடிய ஒரு தனித்துவமான செயல்களை மேற்கொள்ள முடியும் என்பதுடன், 2021 ஏப்ரல் 06 ஆம் திகதி இந்த இயந்திரம் புதிய புற்று நோய் பிரிவில் நிறுவப்பட்டபோதிலும், அன்றைய தினத்தில் இருந்து 2022 மார்ச் 20 ஆம் திகதி வரை அதாவது 23 மாத காலம் அது பயன்பெறாது இருந்தது எனவும், இயந்திரம் பயன்படுத்தாத நிலையில் இருக்கும்போது அந்த இயந்திரத்தின் உத்தரவாதக் காலமும் காலாவதியாகும் அபாயமும் உள்ளமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2019 கொள்முதல் திட்டத்தின்படி மருத்துவ உபகரணங்கள் மதிப்பீட்டுக் குழுவின் தீர்மானத்திற்கு அமைய ஹம்பாந்தோட்டை மற்றும் மஹரகம அபேக்ஷா ஆகிய இரு போதனா வைத்தியசாலைகளுக்கு Digital fluoroscopy இயந்திரங்கள் இரண்டு கொள்வனவு செய்வதற்காக உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவின் ஊடாக 2019 ஆம் ஆண்டில் கொள்ளல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. உபகரண

செலவு ரூபா மில்லியன் 172.40 உம், நிறுவுதல் மற்றும் அறைகளை மேம்படுத்துவதற்கான செலவு ரூபா மில்லியன் 4 உம் கொண்ட இந்த உபகரணம் 2 வருட உத்தரவாத காலத்திற்கு உட்பட்டு 2020 ஒக்டோபர் 16 ஆம் திகதி ஆடர் பிறப்பிக்கப்பட்டது. ஆடர் நிபந்தனைகளின்படி, 2020 டிசம்பர் 25 ஆம் திகதிக்கு முன்னர் வழங்க வேண்டும் என்ற போதிலும், இந்த உபகரணத்தை உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவிற்கு 2021 பெப்ரவரி 12 ஆம் திகதியன்றே கையளித்துள்ளது. ஹம்பாந்தோட்டை போதனா வைத்தியசாலையில் நிறுவுவதற்கு திட்டமிடப்பட்ட இயந்திரம் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் நிறுவப்பட்டுள்ளதுடன், மஹரகம வைத்தியசாலையில் இயந்திரத்தை நிறுவுவதற்கான இடத்தின் கட்டுமானம் 2023 மார்ச் 31 ஆம் திகதியிலும் பூர்த்தி செய்யப்படவில்லை. அதிகூடிய பெறுமதி கொண்ட இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கு முன் நிறுவுதற்கு தேவையான வசதிகளை ஏற்பாடு செய்து ஆடர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காத காரணத்தால் 2021 மார்ச் 29 ஆம் திகதி மஹரகம அபேக்ஷா வைத்தியசாலைக்கு பெறப்பட்ட இந்த இயந்திரம் 2023 மார்ச் 31 ஆம் திகதியிலும் நிறுவப்படவில்லை என்பதுடன், இந்த உபகரணத்தின் உத்தரவாதக் காலம் 2023 பெப்ரவரி 13 ஆம் திகதியில் முடிவடைந்தது.

3.1.4 திட்டத்தை நிறைவு செய்யாது கைவிடல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கேகாலை பொது வைத்தியசாலைக்கு 04 மாடிகளைக் கொண்ட அவசர சிகிச்சை பிரிவு அமைப்பதற்காக 2018 இல் 320.10 மில்லியன் ரூபாவிற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டது. எனினும், 2019 ஏப்ரல் 16 ஆம் திகதி முடிக்கவேண்டிய இந்த திட்டம் கட்டிடத்தின் ஸ்லெப் (Slab) மட்டம் வரை கட்டப்பட்ட பிறகு 2019 ஆம் ஆகஸ்ட் மாதத்தில் ஒப்பந்ததாரர் திட்டத்தை கைவிட்டு 03 வருடங்கள் கடந்துவிட்ட போதிலும், மீண்டும் கட்டுமான பணிகளை ஆரம்பிக்காததால் அதுவரை செலவு செய்யப்பட்ட வேலை பெறுமதி ரூபா மில்லியன் 37.62 பணம் பயனற்றதாக ஆனது.

(ஆ) சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவின் ஒதுக்கீட்டில் கேகாலை பொது வைத்தியசாலையில் மருந்துக் களஞ்சியமொன்று அமைப்பதற்காக 2021 மே 12 ஆம் திகதி 5.49 மில்லியன் ரூபா நிதிக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டது. 2021 டிசம்பர் 15 ஆம் திகதிக்கு முடிக்க வேண்டிய இத்திட்டம் 2022 ஜனவரி 18 ஆம் திகதியிலும் பாதியளவு முடிக்கப்பட்ட நிலையில் நிறுத்தப்பட்டுள்ளதுடன், அன்றைய தினம் வரை 2.92 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டிருந்த போதிலும், தணிக்கை தினத்திலும் அதன் மீதமுள்ள வேலைகளின் கட்டுமான பணிகள் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

(இ) சிலாபம் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு 501.21 மில்லியன் ரூபா மதிப்பீட்டு செலவில் 609 நாட்களுக்குள் நிறைவு செய்வதற்கு 2018 ஜனவரி 15 ஆம் திகதி பணிகள் ஆரம்பிக்கப்பட்ட அவசர விபத்து சிகிச்சைப் பிரிவின் கட்டுமானப் பணிகள் தணிக்கை தினமான 2022 செப்டெம்பர் 23 ஆம் திகதியிலும் கைவிடப்பட்டிருந்ததுடன், கட்டுமானத்தின் அடிப்படை கட்டமைப்பு பகுதிகள் 2 மட்டுமே முடிக்கப்பட்டிருந்தன. கட்டுமான பணியில் உள்ள தாமதம், பொறியியலாளரின் ஆலோசனைகளுக்கு மாறாக செயற்பட்டமை போன்ற காரணங்களால் உரிய கட்டுமான ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதாக 2021 ஏப்ரல் 22 ஆம் திகதி கடிதத்தின் மூலம் சுகாதார செயலாளரினால்

ஒப்பந்ததாரருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் அந்த ஒப்பந்தம் இரத்துச் செய்ததால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் அறவிடப்படவில்லை.

3.2 செயல்பாட்டு ரீதியிலுள்ள பலவீனங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கம்பஹா மற்றும் அனுராதபுரம் பிராந்திய மருத்துவ களஞ்சிய பிரிவுகளில் மற்றும் மீரிகம ஆதார வைத்தியசாலை, அனுராதபுரம் போதனா வைத்தியசாலைகளின் வளாகத்தில் இயற்பியல் தணிக்கை சோதனைகளின் போது 25^0C இனை விடவும் குறைந்த வெப்பநிலையில் பேணப்பட வேண்டிய 17 வகை மருந்துகள் 30^0C இனை விடவும் வெப்பநிலை கூடிய களஞ்சியங்களில் வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அந்த மருந்துகளில் ஒவ்வாமைக்கான மற்றும் உயர் குருதி அமுக்க நோயிற்கான மருந்துகளும் ஆண்டிபயாடிக் மருந்துகளும் இருந்தமை அவதானிக்கப்பட்டன.

(ஆ) களஞ்சியங்களில் காணப்பட்ட மருந்துகளில் காலாவதியாகும் திகதி தொடர்பாக சரியான புரிதல்கள் இல்லாத காரணத்தால் வெயங்கொட களஞ்சியத்தினுள் 02 வகை மருந்துகளும், கம்பஹா பிராந்திய மருத்துவ களஞ்சிய பிரிவின் களஞ்சியத்தில் 05 வகை மருந்துகளுமாக காலாவதியான 09 வகையான மருந்துகள் வேறாக இனங்காணாமல் மற்றைய மருந்துகளுடன் சேர்த்து வைக்கப்பட்டிருந்தன. இவ்வாறு காலாவதியான மருந்துகள் சாதாரண மருந்துகளுடன் சேர்த்து வைக்கும் போது அந்த மருந்துகள் நோயாளர்களுக்கு வழங்குவதற்கான அபாயம் உள்ளதாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(இ) 2021 ஜூன் 27 ஆம் திகதி மருத்துவ விநியோகப் பிரிவிற்கு கிடைக்கப் பெற்ற ஒரு அலகின் விலை 98 ரூபாவான Propofol injection BP (SR இலக்கம் - 01500301) தடுப்பூசி அலகுகள் 171,875 இல் அலகுகள் 131,885 ஆனது 2021 ஜூலை 06 ஆம் திகதி வெயங்கொடை களஞ்சியத்திற்கு அனுப்பப்பட்ட போதிலும், 12,924,730 ரூபா பெறுமதியான இந்த இருப்பு 2022 நவம்பர் 30 ஆம் திகதி காலாவதியாகி இருந்ததுடன் அதனை கொள்வனவு செய்த முழுத் தொகையில் 77 சத வீதத்திற்கும் மேற்பட்டதாகும்.

(ஈ) அரச வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்ட மருத்துவ விநியோகங்களில் ரூபா 349,025,664 பெறுமதியான மருந்துகள், சத்திர சிகிச்சை மற்றும் ஆய்வுகூட பொருட்கள் 2022 ஆண்டில் தர தோல்வியுற்ற காரணத்தால் பாவணையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதுடன் மேலும் ரூபா 31,751,024 பெறுமதியான மருந்துகள் தர தோல்வியின் காரணத்தால் பாவணையை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது.

(உ) மருத்துவ விநியோகப் பிரிவினால் வைத்தியசாலைகளுக்கு விநியோகிப்பதற்கு முன் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் கீழ் செயற்படும் தேசிய ஔடதங்கள் தர பாதுகாப்பு ஆய்வுகூடம் (National Medicines Quality Assurance Laboratory – NMQAL) ஊடாக தரத்தை பரிசோதிப்பதற்கான வாய்ப்பு இருக்கவில்லை. இதன் விளைவாக மருந்துகள் தரத்தில் தோல்வியுற்றவை என அறிவிக்கப்படும் போது அந்த மருந்துகளில் பெரும்பாலான அளவு

நோயாளர்கள் பயன்படுத்தப்பட்மை பல வருடங்களாக அவதானிப்பட்ட போதிலும், மதிப்பாய்வு ஆண்டிலும் அந்நிலைமையை தவிர்ப்பதற்கு மருந்துகள் வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்க முன்பு தரத்தை பரிசோதிப்பதற்கான முறைகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை.

(ஊ) 2004 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் இலங்கை அரச மருந்தக கூட்டுத்தாபனத்தினால் மருத்துவ விநியோகப் பிரிவிற்கு கையளிக்கப்பட்ட மருத்துவப் பொருட்களில் பற்றாக்குறைக்காக அந்த கூட்டுத்தாபனத்தினால் உரிய தரப்பினரிடமிருந்து 6.06 மில்லியன் ரூபா அறவிட வேண்டியுள்ளது. அதில் 3.20 மில்லியன் ரூபா பெறுமதியானவை வழக்கு நடவடிக்கைகள் காரணமாக காலாவதியாகி விட்டன என்பதாலும், 1.70 மில்லியன் ரூபாவிற்கான இருப்பு விநியோகத்தருக்கு சமர்ப்பிக்க முடியாததாலும், 1.14 மில்லியன் ரூபா நட்டம் தொடர்பாக மருத்துவ விநியோகப் பிரிவின் தாமதம், அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் கோவைகள் அழித்தல், கோவைகள் தொலைதல் போன்ற உத்தியோகத்தர்களின் கவனயீனம் காரணமாக 10 வருடங்கள் கடந்த போதிலும் அறவிடுவதற்கு முடியாதுள்ளது.

(எ) 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையான 11 வருட காலத்தினுள் மருத்துவ விநியோகப் பிரிவிற்குரிய மருத்துவக் களஞ்சியங்களில் ஏற்பட்ட மருந்துகளுக்கான சேதங்கள் மற்றும் நட்டங்களை கண்டறிதல், அறிக்கையிடல் மற்றும் அறவிடுவதற்கு அல்லது வெட்டி நீக்குவதற்காக முறையான நடவடிக்கைகள் எடுக்காத காரணத்தால் 285 நிகழ்வுகளுக்கு உரித்தான 452 மில்லியன் ரூபா சேதங்கள் மற்றும் நட்டங்களை தணிக்கை தினமான 2022 டிசம்பர் 31 ஆம் திகதியளவிலும் அறவிடுவதற்கு அல்லது வெட்டி நீக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அதனால் 05 வருடத்திற்குட்பட்ட காலத்தில் 64.8 மில்லியன் ரூபாவிற்கான 37 நிகழ்வுகளும், 05 – 10 வருடத்திற்கு உட்பட்ட காலத்தில் 294.5 மில்லியன் ரூபாவிற்கான 146 நிகழ்வுகளும், 10 வருடத்திற்கு மேற்பட்ட காலத்தில் 92.9 மில்லியன் ரூபாவிற்கான 102 நிகழ்வுகளும் பதிவாகி உள்ளன.

(ஏ) மருத்துவ விநியோகப்பிரிவிற்கு உரித்தான கொடியாவத்தை இலக்கம் 53 களஞ்சியம் 2016 மே 18 ஆம் திகதி வெள்ளத்தினால் மூழ்கியதால் ஏற்பட்ட இழப்பு ரூபா மில்லியன் 405.57 என கணக்கிடப்பட்டுள்ளதுடன் தொடர்ந்து அறவிடுவதற்கு அல்லது வெட்டி நீக்குவதற்கு உள்ள தொகை ரூபா மில்லியன் 199.26 ஆகும். அதன்படி 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் இந்த தொகையை தீர்ப்பது குறித்து நிதி ஒழுங்குவிதிகளின்படி செயற்பட்டு புத்தகத்திலிருந்து வெட்டி நீக்குவதற்கு சமபந்தப்பட்ட உத்தியோகத்தரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை சான்றுறுதி செய்வதற்கு, அமைச்சின் செயலாளரினால் திறைசேரி செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதி ஒழுங்குவிதிகள் 104(4) நட்டங்கள் குறித்த இறுதி அறிக்கை, அமைச்சின் செயலாளரின் பரிந்துரையுடன் திறைசேரி செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதி ஒழுங்குவிதிகள் 109 இன் கீழ் நட்டங்கள் புத்தகத்திலிருந்து வெட்டி நீக்குதலுக்கான கோரிக்கை படிவம் மற்றும் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தினால் 2015 ஆகஸ்ட் 20 தொடக்கம் 2016 ஆகஸ்ட் 20 வரையான காலப்பகுதிக்காக பெறப்பட்ட 400 மில்லியன் ரூபா பெறுமதியான காப்புறுதிக்கான நிபந்தனைகள் அடங்கிய காப்புறுதி ஒப்பந்தம் என்பவை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஐ) இந்த இழப்பு தொடர்பாக கிடைக்கவேண்டிய காப்புறுதித் தொகை ரூபா மில்லியன் 320 என்றபோதிலும், கிடைக்கப்பெற்ற தொகை 206.31 மில்லியன் ரூபா ஆகும். அதன்படி, காப்புறுதி நிறுவனத்தினால்

கிடைக்கவேண்டிய 113.69 மில்லியன் ரூபாவை அறவிடுவது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை.

(ஒ) மருத்துவ விநியோகப்பிரிவினால் இழப்பு மற்றும் நட்டத்தை அறிக்கையிடுவதற்கு நிதி ஒழுங்குவிதிகளின்படி முறையான முறைமைகள் பின்பற்றப்படவில்லை என்பதுடன், மருத்துவ களஞ்சியங்களில் வருடாந்த இருப்பு கணக்கெடுப்பின் போது வெளிப்படுத்தப் பட்ட பற்றாக்குறை அல்லது காலாவதியாதல் தொடர்பாக வழங்கப்பட்ட அவதானிப்பு படிவத்தை அடிப்படையாக்கொண்டு இழப்பு மற்றும் நட்டம் அறிக்கையிடப்பட்டுள்ளது.

(ஓ) மாதிரிகள் கணக்காய்வு சோதனையாக 12.36 மில்லியன் ரூபா பெறுமதியான மருந்துகள் பற்றாக்குறை நிகழ்வுகள் 34 இற்கான அவதானிப்புப் படிவங்கள் 05 பரிசீலிக்கப்பட்டதுடன், மருந்து இருப்புகள் விநியோகித்தல் முறையாக மேற்கொள்ளாமையே பற்றாக்குறை ஏற்படுவதற்கு முக்கிய காரணம் என்பது அவற்றிலிருந்து அவதானிக்கப்பட்டன. எனினும், இந்த அவதானிப்புப் படிவம் வழங்கப்பட்டு 9 – 12 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களினால் உரிய நடவடிக்கைகள் எடுத்து அவதானிப்புப் படிவத்தை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்காத காரணத்தால் உண்மைக்கு புறம்பான தகவல்கள் நிதிக் கூற்றுகளில் உள்வாங்கப்பட்டுள்ளன.

(ஔ) மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சைப் பொருட்களில் காலாவதியாதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மாதிரிகள் கணக்காய்வு சோதனையில் 77.82 மில்லியன் ரூபா பெறுமதியான காலாவதியான இருப்பு 11 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் களஞ்சியங்களில் வைக்கப்பட்டிருந்தன.

(.·.) மருந்து இருப்புகள் காலாவதியாவதற்கு முன் கூடியளவு பயன்படுத்துவதற்கு பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து 2021 நவம்பர் 08 ஆம் திகதி சுகாதார செயலாளரின் இலக்கம் 01/2021 எனும் உள்ளக சுற்றறிக்கை ஊடாக சுட்டிக் காட்டப்பட்டிருந்த போதிலும், மருத்துவ விநியோகப் பிரிவினால் இதுவரை அதன்படி செயற்படுத்தவில்லை.

(க) கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் Histopathology cut up room Test இற்கு பயன்படுத்தப்படும் அறை போதியளவு இடவசதியற்ற காரணத்தால் பரிசோதனைக்காக பயன்படுத்தும் மாதிரிகள் மற்றும் ஆய்வு முடிந்த பிறகும் தொடர்ந்து சேமித்து வைக்கப்படும் மாதிரிகள் ஆகிய இரண்டும் அதே அறையிலேயே களஞ்சியப்படுத்தப் பட்டுள்மை அவதானிக்கப்பட்டது. முறையாக களஞ்சியப்படுத்துவதற்கு போதியளவு வசதிகள் இல்லாத காரணத்தால் அந்த மாதிரிகள் எலி போன்ற விலங்குகளினால் பாதிப்புக்கு உள்ளாகுவதாகவும், அதனால் துர்நாற்றம் வீசுவதாகவும் அது குறித்து மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஹ) கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவிற்கு மற்றும் சட்ட மருத்துவ அலுவலர் அலுவலகத்திற்கு அருகில் 04 முச்சக்கர வண்டிகள் கொண்ட முச்சக்கர வண்டி தரிப்பிடமொன்று வைத்தியசாலை பணிப்பாளரின் எவ்வித அனுமதியும் பெறாது பராமரிக்கப்படுவது அவதானிக்கப்பட்டது. இதன் காரணத்தால் நோயாளர்களை ஏற்றி வரும் மற்றும் நோயாளர்களை எடுத்துச் செல்ல

வரும் வாகனங்கள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்களின் வாகனங்கள் நிறுத்துவதற்கு கடுமையான தடையாக உள்ளமை அவதானிக்கப்பட்டது.

3.3 உள்நாட்டு நிதி பயன்படுத்தப்படும் திட்டங்கள்

மருந்துகள் உற்பத்திக்கு முதலீட்டுத் தகுதிகளை ஏற்படுத்திக்கொள்வதற்காக ஹம்பாந்தோட்டை ஆரபொக்க எஸ்டேட்டில் மருந்துகளுக்காக ஒதுக்கப்பட்ட விஷேட மருந்து உற்பத்தி வலயம் நிறுவுவது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மருந்து உற்பத்தி வலயத்தின் வெளிப்புற நீர் வழங்குவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட 229.81 மில்லியன் ரூபா மதிப்பீட்டை 360.60 மில்லியன் ரூபா வரை திருத்தப்பட்டுள்ளதுடன், திட்டத்தின் மீதமுள்ள பணிகளை நிறைவு செய்வதற்கு 216.60 மில்லியன் ரூபா கூடுதல் நிதியை வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. (ரூபா 360,600,993 - ரூபா 144,000,000) எனினும் இந்த திட்டத்தின் செயற்பாடுகளை நிறைவு செய்வதற்கு மதிப்பாய்வு ஆண்டில் அந்நிதி தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு கொடுக்கப்படவில்லை என்பதுடன், திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட 100 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் 66 சதவீதம் அதாவது 66.98 மில்லியன் ரூபா ஒதுக்கீடு 2022 டிசம்பர் 31 ஆம் திகதி செலவு விடயம் 02 இற்கு மாற்றப்பட்டுள்ளது.

(ஆ) செலவுத் தலைப்பு இலக்கம் 111-2-25-07-2506 இற்கான ஒதுக்கீடு மீதி ரூபா மில்லியன் 32.62 என்றபோதிலும், மதிப்பாய்வு ஆண்டில் நிதிக் கூற்றின்படி நிகழ்ச்சித் திட்டங்கள் 02 இல் வரவுகள் குறித்த கூற்றின்படி செலுத்த வேண்டியது என ரூபா மில்லியன் 85 கடன் நிலுவைகள் குறிப்பிட்டுள்ளது. அதன்படி ஒதுக்கீட்டை தாண்டிய செலவு ரூபா மில்லியன் 52.38 ஆகும்.

3.4 கொள்வனவுகள்

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) அமைச்சின் மற்றும் அதன் கீழுள்ள சகல நிறுவனங்களினதும் கொள்ளல் நடவடிக்கைகளுக்கான முழு நிர்வாகப் பொறுப்பு, சகல வைத்தியசாலைகள், நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளுக்கான கொள்வனவுகளை ஒழுங்குபடுத்தல் மற்றும் கண்காணிப்பிற்காக நிறுவப்பட்ட கொள்ளல் பிரிவிற்கு நியமிக்கப்பட்ட மேலதிக செயலாளர் (கொள்ளல்) உட்பட ஏனைய ஊழியர்களும், அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள அனைத்து வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய சுகாதார நிறுவனங்களின நடவடிக்கைகள் தொடர்பாக திடீர் முற்றுகை மற்றும் ஆரம்ப விசாரணைகள் மேற்கொள்வதற்காக நிறுவப்பட்ட அமைச்சின் திடீர் முற்றுகை பிரிவின் உத்தியோகத்தர்கள் மற்றும் அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய சுகாதார நிறுவனங்களின் முறையான விசாரணைகள் மற்றும் ஒழுக்காற்று தொடர்பாக நிர்வாப் பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ள அமைச்சின் விசாரணை பிரிவின் உத்தியோகத்தர்கள் கொள்ளல் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டுள்ளதுடன், இந்த நிலைமை கொள்ளல் செயல்முறையின் வெளிப்படைத்தன்மை மற்றும் சுயாதீனத் தன்மையை பேணுவதற்கும் மற்றும் கொள்ளல் செயல்முறைகளில் ஏற்படக்கூடிய பல்வேறு முறைக்கேடுகள் தொடர்பாக வெளிப்படைத் தன்மை மற்றும் சுயாதீனமாக சோதனைகள் மேற்கொள்ளும் போது பாதகமான தாக்கம் செலுத்தும் என்பது கணக்காய்வில் இருந்து விலக்க முடியாது.

(ஆ) காலி புதிய மகப்பேற்று வைத்தியசாலைக்கு OT, ICU மற்றும் NICU இற்கு தேவையான மருத்துவ உபகரணங்கள் வழங்குதல், நிறுவுதல், பரிசீலித்தல், சோதனையிடல், செயற்படுத்தல் மற்றும் பயனர் பயிற்சிக்கும் பராமரிப்பதற்குமான மதிப்பீட்டு செலவு யுரோ (EURO) 2,659,630 இனை அடிப்படையாகக் கொண்டு 2021 செப்டெம்பர் 27 ஆம் திகதி விலைமனு கோரப்பட்டது. 2022 பெப்ரவரி 18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு அறிக்கையின்படி, பதிலளித்த இரண்டு விலைமனுதாரிகளில் குறைந்த விலை சமர்ப்பித்த விலைமனுதாரிக்கு ஒப்பந்தம் யுரோ (EURO) 2,554,253.78 இற்கு வழங்குவதற்கு 2022 மார்ச் 31 ஆம் திகதி அமைச்சின் கொள்ளல் குழு "A" (MPC "A") இனால் தீர்மானிக்கப்பட்டது. இது குறித்து மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(i) மேற்படி கொள்வனவிற்காக 2022 பெப்ரவரி 18 ஆம் திகதி வழங்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு அறிக்கையின்படி, அனைத்து தொழில்நுட்ப அளவுகோல்கள் பூர்த்தி செய்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்ட போதிலும், மேற்படி ஒப்பந்தத்தை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்ட நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனு ஆவணங்களில் சேர்க்கப்பட்டுள்ள கெட்லொக் மற்றும் அந்த உபகரணம் தொடர்பான இணையத்தளத்தில் இருந்து பெறப்பட்ட விபரங்களை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது LOT 2.1 இல் 05 வது பொருள் மற்றும் LOT 2.2 இல் 05 வது பொருள் 61 தொழில்நுட்ப அளவுகோல்களை பூர்த்தி செய்வதற்கு தவறியுள்ளமை அவதானிக்கப்பட்டது. எனினும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கையில் உரிய நிறுவனம் அனைத்து தொழில்நுட்ப அளவு கோல்களையும் பூர்த்தி செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் அரச கொள்முதல் வழிகாட்டியின் 1.2 (அ) மற்றும் (எ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கொள்ளல் செயல்முறையின் ஊடாக உறுதிப்படுத்தப்பட வேண்டிய நோக்கம் நிறைவேற்றப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ii) தேர்ந்தெடுக்கப்பட்ட விநியோகத்தரினால் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனு ஆவணங்களின் படி LOT 2.2 இல் 08 வது பொருட்களின் கீழ் "Ventilator" இல் குறிப்பிடப்பட்டுள்ள சந்தைப்பெயர் (make) "Stephan" மற்றும் உருப்படிவம் (Model) "sophie" ஆகும். எனினும், அதனை உறுதிப்படுத்துவதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் (NMRA) சான்றிதழின் படி சந்தைப் பெயர் (Brand name) sophie/Eve மற்றும் உருப்படிவம் (Size/Model) "ABV-U"ஆகும். அதன்படி, இந்த விபரங்களின் முரண்பாடு காணப்பட்ட போதிலும் மதிப்பீட்டுக்குழு அதுகுறித்து அவதானம் செலுத்தவில்லை.

(iii) 2022 பெப்ரவரி 18 ஆம் திகதியன்று தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் சமர்ப்பித்த தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கையின்படி விலைமனுதாரியின் சில முக்கியமான (Critical) அளவுகோல்கள் பொருந்தாத போதிலும், அந்த அளவு கோல்கள் ஒரு சிறிய முரண்பாடு (Minor Deviation) என குறிப்பிட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட கொள்ளல் ஆவணங்களில் முக்கியமான அளவு கோலாக குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல்களில் எந்தவொரு மாற்றங்கள் செய்வதாயின் அதன்படி மீண்டும் விலைமனுக்கள் கோரப்படல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு மேற்கொள்ளாது விடின் உரிய மாற்றங்களுக்கு ஏற்ப விலைகளை சமர்ப்பிக்க முடியுமான விலைமனுதாரிகளுக்கு உள்ள ஒரு வாய்ப்பை

வீணாக்கும் செயலாகும். மேலும் சிறிய மாற்றத்தை ஏற்பதென்றால் அது தொடர்பாக கொள்ளல் ஆவணங்களில் விலைமனு மதிப்பீட்டு அளவு கோல்களின் கீழ், தொடர்புடைய அனுமதிக்கப்பட்ட வரம்புகளை தெளிவாக குறித்தல் வேண்டும். இந்த விலைமனு மதிப்பீட்டின் போது அவ்வாறான வழிமுறைகள் இன்றி முக்கியமான அளவு கோல்களை சிறிய மாற்றம் என குறிப்பிடுவது மிகவும் தீங்கு விளைவிக்கும் மற்றும் சட்ட விரோதமான செயல் என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(இ) போட்டியுடனான விலைமனுக் கோரலின் கீழ் சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களுக்கு 2022/2023 ஆண்டிற்கான சுத்திகரிப்பு சேவை வழங்குதல் 2022 செப்டெம்பர் 15 ஆம் திகதி தனியார் நிறுவனமொன்றுக்க வழங்கப்பட்டது. இந்த நிறுவனத்தினால் சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களுக்கு சுத்திகரிப்பு சேவைகளை வழங்குதல் மற்றும் சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்கள் சுத்திகரிப்பு சேவைகளை பெறல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மாதிரி சோதனை கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மேற்படி சுத்திகரிப்பு சேவை ஒப்பந்தம் 2022 செப்டெம்பர் 15 ஆம் திகதி தொடக்கம் 2023 செப்டெம்பர் 14 ஆம் திகதி வரை ஒரு வருட காலத்திற்கு இரசாயனப் பொருள் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் பெறப்பட்ட சான்றிதழை வழங்குதல் என்பதன் கீழ் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன்படி 2022 செப்டெம்பர் 16 ஆம் திகதி ஒப்பந்ததாரரினால் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (விநியோகம்) இற்கு ஆய்வுகூட அறிக்கை முடிவுகளின் ஒரு பகுதியை நீக்கிய ஒரு ஆய்வுகூட பரிசோதனை அறிக்கையும் மற்றும் ஆய்வுகூட பரிசோதனை அறிக்கைக்கு பதிலாக சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுகூடத்திற்கு அனுப்பப்பட்ட இரசாயனப் பொருளின் மாதிரியை பரிசோதனை செய்யாமல் வழங்கப்பட்ட ஆய்வுகூட பரிசோதனை அறிக்கையல்லாத "Material Safety Data Sheets" (MSDS) ஐந்து மாத்திரம் சமர்ப்பித்துள்ளது. இந்த "Material Safety Data Sheets" (MSDS) அறிக்கைகள் கொள்ளல் செயல்முறைகளின் போது எந்த விதத்திலும் ஆய்வுகூட பரிசோதனை அறிக்கையாக ஏற்ற முடியாது என்றபோதிலும் இந்த அறிக்கையை ஆய்வுகூட பரிசோதனை அறிக்கையாக கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ii) கொள்ளல் இலக்கம் MH/PB/CL/03/2022 எனும் கேள்வி ஆவணங்களில் VII பகுதியின் ஒப்பந்த படிவங்களில் சுத்திகரிப்பு சேவை வழங்குவதற்கான ஒப்பந்த உடன்படிக்கை மற்றும் 2022 ஒக்டோபர் 15 ஆம் திகதி மேலதிக செயலாளர் நிர்வாகம் -01) சுகாதார அமைச்சு மற்றும் ஒப்பந்த நிறுவனத்துடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையை ஆய்வு செய்யப்பட்ட போது கேள்வி ஆவணங்களில் ஒப்பந்த நிபந்தனை 09 இல் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவு வழங்கும் போது ஒப்பந்ததாரரினால் கேள்வி ஆவணங்களில் கேள்வி மாதிரிப்படிவத்தின் (II வது பகுதி) இலக்கம் 02 பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளம் மற்றும் மேலதிக நேர கொடுப்பனவு அவ்வாறே வழங்குவதாக உறுதி செய்வதற்கு நிறுவனத் தலைவரினால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்ற நிபந்தனை கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையில் சேர்க்கப்படவில்லை. அத்துடன் குறைவாக வழங்கப்படும் ஒவ்வொரு பணியாளருக்கும் "நாளொன்றுக்கு அவர்களின் நாளாந்த சம்பளத்திற்கு மேலதிகமாக" எனும் பகுதி 5.13 ii (அ) ஒப்பந்தம் செய்யப்பட்ட நிபந்தனைகளின் கீழ் சேர்க்கப்படவில்லை.

(iii) கேள்வி நிபந்தனை 2.18 (v) இன்படி பணியாளரின் அதிகூடிய வயதெல்லை 65 வயது என்றபோதிலும் சுவசிறிபாய கட்டத்தொகுதியில் சுத்திகரிப்பு

சேவைக்காக ஈடுபடுத்தப்பட்ட 44 ஊழியர்களில் 16 ஊழியர்கள் 65 வயதிற்கு மேற்பட்டவர்கள் என்பது 2022 டிசம்பர் 14 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு சோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(iv) கேள்வி நிபந்தனை 4.75 (i) இன்படி வேலை மேற்பார்வையாளர் மற்றும் தொழிலாளி ஆகிய இரு தரப்பினரும் உத்தியோகபூர்வ அடையாள அட்டை அணிந்திருத்தல் வேண்டும் என்றபோதிலும், சுவசிறிபாய கட்டத்தொகுதியில் சுத்திகரிப்பு சேவைக்காக ஈடுபடுத்தப்பட்ட 44 மொத்த ஊழியர்களில் 17 ஊழியர்களுக்கு மாத்திரமே உத்தியோகபூர்வ அடையாள அட்டை வழங்கியுள்ளமையும் அந்த ஊழியர்கள் உத்தியோகபூர்வ அடையாள அட்டை அணிந்திருக்கவில்லை என்பதும் 2022 டிசம்பர் 14 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு சோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(v) ஒப்பந்ததாரர் கொள்வனவின் போது ''ஆர்பிகோ மற்றும் பீனிக்ஸ் '' ஆகிய வர்த்தகப் பெயர் கொண்ட உபகரணங்களை வழங்குவதாக இணங்கிய போதிலும் 2022 டிசம்பர் மாதம் சுவசிறிபாய கட்டிடத் தொகுதிக்கு வழங்கப்பட்டிருந்த உபகரணங்கள் இணக்கம் கண்ட வர்த்தகப் பெயர் அல்லாதவை என்பது மாதிரி கணக்காய்வு சோதனையின் போது அவதானிக்கப்பட்டது. மேலும் அந்த உபகரணங்களை பொறுப்பேற்கும் போது ஒப்பந்ததாரர் இணங்கிய வர்த்தகப் பெயர் கொண்ட உபகரணங்களை மாத்திரம் பொறுப்பேற்பதற்கோ அல்லது வழங்கப்பட்ட உபகரணங்களை பரிசோதித்து உண்மையாக வழங்கப்பட்ட உபகரணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தகப் பெயரை குறித்துக்கொண்டு பொறுப்பேற்கதற்கோ நடவடிக்கை எடுக்கவில்லை.

(vi) கொள்ளல் தீர்மானம் மற்றும் நிபந்தனைகளுக்கு ஏற்ப ஒப்பந்த நிறுவனத்தினால் வேலை மேற்பார்வையாளர் ஒருவரின் நாளாந்த சம்பளம் 1,326 ரூபா எனவும் தொழிலாளி ஒருவரின் நாளாந்த சம்பளம் 1,121 ரூபா எனவும் குறிப்பிடப்பட்டு வருட சம்பளம் கணக்கிடப்பட்டுள்ளது. அந்த சம்பளம் முறையாக வழங்குவதை உறுதி செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் மேற்பார்வையாளர் ஒருவருக்கு வழங்கப்பட்ட நாளாந்த சாதாரண சம்பளம் 1,111.25 ரூபா மற்றும் தொழிலாளி ஒருவருக்கு வழங்கப்பட்ட நாளாந்த சாதாரண சம்பளம் 861.25 ரூபா என்பதுடன், மேற்பார்வையாளருக்கு சாதாரண மேலதிக நேர கொடுப்பனவாக ஒரு மணித்தியாலத்திற்கு ரூபா 157.50 இனை வழங்க இணங்கிய போதிலும் ஒரு மணித்தியால மேலதிக நேர கொடுப்பனவாக ரூபா 138.75 மாத்திரமே வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

(vii) சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களுக்காக 2022/2023 ஆம் ஆண்டிற்கான சுத்திகரிப்பு சேவை வழங்குவதற்கான கொள்ளல் செயல்முறையின் போது சுவசிறிபாய கட்டிடத்தொகுதிக்கு புறம்பாக அமைந்துள்ள மெடி ஹவுஸ் கட்டிடம், முல்லேரியா சேவைப் பிரிவு, தொற்று நோய் அறிவியல் பிரிவு போன்ற வளாகங்களும் பயன்படுத்தப்பட்டாலும், கொள்ளல் செயல்முறையின் போது குறைந்த செலவில் கூடுதல் பொருளாதார பயன் பெற முடியுமான சுகாதார அமைச்சிற்குரிய சுவசிறிபாய கட்டத் தொகுதிக்கு அருகில் அமைந்துள்ள உயிரியல் மருத்துவ பொறியியலாளர் பிரிவு, மருத்துவ விநியோகப்பிரிவு உட்பட சுகாதார மேம்பாட்டு பணியகம், குடும்பநல சுகாதார பணியகம் போன்ற பிரிவுகள் சுகாதார பிரிவிற்கு இணைந்த நிறுவனங்கள் என சேர்ப்பதற்கு அதிகாரிகள் அவதானம் செலுத்தாமை கணக்காய்வில் பிரச்சனைக்குரியதாக இருந்தது.

(viii) 2022 டிசம்பர் 30 ஆம் திகதி ஒப்பந்ததாரருடனும் அமைச்சின் உத்தியோகத்தர்களுடனும் பெறப்பட்ட இரசாயனப் பொருட்களின் 6 மாதிரிகள்

அரச ஆய்வுகூடமொன்றுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், உரிய பரிசோதனை அறிக்கையை ஒப்பந்ததாரர் பெற்று அமைச்சிற்கு வழங்காது தம் வசம் வைத்திருந்த போது இது குறித்து கணக்காய்வு சோதனையில் விசாரிக்கும் போது 2023 பெப்ரவரி 22 ஆம் திகதி அமைச்சிற்கு கையளித்துள்ளது. இந்த ஆய்வுகூட அறிக்கையின்படி 4 இரசாயனப் பொருட்கள் உரிய தர நிலைக்கு இணங்கவில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான தரமற்ற இரசாயனப் பொருட்களை பாவிப்பதன் மூலம் உரியவாறு சுத்திகரிப்பு பணிகள் நடைபெறுவதில்லை என்பதுடன், தரமற்ற பொருட்களை பயன்படுத்தினால் அமைச்சின் உத்தியோகத்தர்கள் மற்றும் சுத்திகரிப்பு சேவையில் ஈடுபடும் ஊழியர்களுக்கு சுகாதார தீங்குகள் ஏற்படலாம் என்பதும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஈ) பிரதிப் பணிப்பாளர் நாயகம் (பொது சுகாதார சேவை 1) இனால் நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளின் டெங்கு நோயாளர்களின் பயன்பாட்டுக்காக சீராக்கல் படுக்கைகள் (adjustable beds) 113,800 ரூபா வீதம் 168 படுக்கைகள் அரச தொழிற்சாலையிலிருந்து கொள்வனவு செய்வதற்காக 19,118,400 ரூபாவிற்கு (வட் வரியின்றி) ஒரு கொள்முதல் ஆணையை 2013 செப்டெம்பர் 26 ஆம் திகதி பிறப்பித்துள்ளது. முதலில் வழங்கப்பட்டுள்ள விபரக்குறிப்புகள் (Specifications) இன்படி செய்து முடிக்கப்பட்ட மாதிரி (Sample) படுக்கை குறித்து பிரதிப் பணிப்பாளர் நாயகம் (பொது சுகாதார சேவை 1) இனால் அரச தொழிற்சாலையில் விசாரிக்கப்பட்டுள்ளதுடன், அதன்படி மாதிரி பரிசோதிக்கப்பட்டு செய்யவேண்டிய மாற்றங்கள் தொடர்பாக 2013 நவம்பர் 28 திகதியன்று எழுத்துமூலம் அறிவித்துள்ளது. மாற்றங்களுக்கு அமைய மீண்டும் தயாரிக்கப்பட்ட மாதிரி படுக்கை 2014 பெப்ரவரி 13 ஆம் திகதி தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளதுடன், அதற்கு ஒப்புதல் வழங்கி 2014 பெப்ரவரி 26 ஆம் திகதி அரச தொழிற்சாலைக்கு கடிதம் வழங்கப்பட்டுள்ளது. அந்த படுக்கைகள் 168 இல் முதலில் 50 கட்டில்கள் 4 ½ மாத காலத்திலும், முழுமையான ஆணையை 06 மாத காலத்திலும் நிறைவு செய்யமுடியும் என 2013 ஜூன் 26 ஆம் திகதி அரச தொழிற்சாலையினால் அறிவித்துள்ளது. எனினும், 2015 இறுதிவரை 23 சந்தர்ப்பங்களில் இந்த 168 படுக்கைகளை நிறைவு செய்து வழங்கியுள்ளமை அவதானிக்கப்பட்டது. 2014 டிசம்பர் மாதத்தில் 74 படுக்கைகள் சுகாதார அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், 37 படுக்கைகள் மாத்திரமே சரியான தரத்தில் உள்ளதாக தீர்மானித்து அந்த படுக்கைகளுக்காக 4,842,190 ரூபா (வட் வரியுடன்) 2017 மார்ச் 08 ஆம் திகதி செலுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இந்த படுக்கைகளை கொள்வனவு செய்வதற்காக 2012 ஒக்டோபர் 13 ஆம் திகதி தேசிய ரீதியில் போட்டியுடனான விலைமனுக்கள் கோரப்பட்டன. 2012 ஒக்டோபர் 18 ஆம் திகதி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கையின் படி, விலைமனுக்கள் சமர்ப்பித்த நிறுவனங்களிடையே ஒரு நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட மாதிரி, விபரக்குறிப்புடன் பெரும்பாலும் பொருந்தியதாலும், சமர்ப்பிக்கப்பட்ட 54,750 ரூபா ஒரு அலகிற்கான விலை குறித்து திருப்தியடைய முடியும் என்பதாலும் அந்த ஆணையை அந்நிறுவனத்திற்கு வழங்குவதற்கு பரிந்துரைத்துள்ளது. அவ்வாறு இருக்கும் போது ஒரு படுக்கைக்காக 113,800 ரூபா விலையை சமர்ப்பித்த அரச தொழிற்சாலைக்கு இந்த ஆணையை வழங்கியுள்ளது. கணிசமாக பதிலளித்த விலைமனுதாரிகளிடையே, கொள்ளல் நிலைத்தன்மையின் தேவைக்கு மிகவும் பொருந்தக்கூடிய நிறுவனத்திற்கு பதிலாக வேறொரு நிறுவனத்திற்கு ஆணையை வழங்கிய காரணத்தால் அரச கொள்ளல் செயல்முறைகள் ஊடாக உறுதிப்படுத்தப்பட வேண்டிய கொள்ளல் வழிகாட்டியின் 1.2.1 (அ) இன் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கம்

நிறைவேற்றப்படவில்லை. மேலும், தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட படுக்கையின் விலையுடன் ஒப்பிடுகையில் அரச தொழிற்சாலையினால் சமர்ப்பிக்கப்பட்ட படுக்கையின் விலை இரண்டு மடங்கிலும் அதிகம் என்பது அவதானிக்கப்பட்டது.

(ii) அரச தொழிற்சாலையினால் படுக்கைகள் உற்பத்தி செய்து விநியோகிக்கும் போது விபரக்குறிப்புகளுடன் பரிசோதித்து பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்காததால் படுக்கைகளை பொறுப்பேற்று ஒரு வருட காலம் கடந்த பின்னரே அவற்றில் காணப்படும் குறைபாடுகள் குறித்து 2015 ஜூலை 22 ஆம் திகதி அரச தொழிற்சாலைக்கு அறிவித்துள்ளது. இதன் காரணத்தால் படுக்கைகளில் காணப்பட்ட குறைப்பாடுகளை சரி செய்வதற்கு இருந்த சந்தர்ப்பத்தை இழந்துள்ளது. இந்த நிலைமையில் அரச தொழிற்சாலைக்கு செலுத்துவதற்கு எஞ்சியுள்ள தொகையை செலுத்துவதற்கு இந்த கணக்காய்வு தினமாகிய 2022 ஜூலை 19 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்படவில்லை.

(iii) இந்தப் பணியை நேரடியாக அரச தொழிற்சாலைக்கு ஒப்படைக்காமல் தேசிய ரீதியில் போட்டியுடனான விலைமனு கோரலுக்கான அறிவிப்பு செய்ததற்காக மற்றும் உரிய கொள்முதல் மற்றும் தொழில்நுட்பக் குழு அங்கத்தவர்களுக்கு செலுத்தப்பட்ட கொடுப்பனவு குறித்த தகவல்கள் 2022 ஜூன் மாதம் 29 ஆம் திகதி தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவில் எழுத்து மூலம் கோரப்பட்ட போதிலும் 2023 ஏப்ரல் 12 ஆம் திகதி வரை கணக்காய்விற்கு இந்த தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

(உ) சுகாதார அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களினால் 2020/2021 ஆம் ஆண்டிற்கான சுத்திகரிப்பு சேவைகளை வழங்குவது தொடர்பாக 2022 மார்ச் 21 ஆம் திகதி கடிதத்தின் மூலம் கோரப்பட்ட விபரங்கள், 2022 ஒக்டோபர் 31 ஆம் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்ட 26 வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய சுகாதார நிறுவனங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மாதிரி பரிசோதனை தணிக்கையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2020/2021 ஆம் ஆண்டிற்காக வைத்தியசாலைகளில் சுத்திகரிப்பு சேவைகளைப் பெறுவதற்கு ஒப்பந்ததாரர்களை தெரிவு செய்வதற்கான கொள்முதலுக்குரிய கொள்ளல் நிபந்தனைகளின்படி, தாம் வழங்குவதற்கு உத்தேசித்துள்ள இரசாயனப் பொருட்களுக்குரிய ஆய்வுகூட அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், விலைமனு மதிப்பீட்டின் போது இதுகுறித்து அவதானம் செலுத்தப்படவில்லை. ஆய்வுகூட பரிசோதனை அறிக்கைக்கு பதிலாக விலைமனுதாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுகூடத்திற்கு அனுப்பப்பட்ட இரசாயனப் பொருளின் மாதிரியை பரிசோதனை செய்யாமல் வழங்கப்பட்ட ஆய்வுகூட பரிசோதனை அறிக்கையல்லாத "Material Safety Data Sheets" (MSDS) மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் மூன்று மாதிரியில் இருந்தது. இந்த அறிக்கை கொள்ளல் செயல்முறைகளின் போது எந்த விதத்திலும் ஆய்வுகூட பரிசோதனை அறிக்கையாக ஏற்ற முடியாது என்றபோதிலும் இந்த அறிக்கையை ஆய்வுகூட பரிசோதனை அறிக்கையாக கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ii) ஆய்வுகூட பரிசோதனை அறிக்கை சமர்ப்பித்துள்ள நிறுவனமும் 18 சந்தர்ப்பங்களில் முழுமையாக அறிக்கைகளை சமர்ப்பிக்கவில்லை

என்பதுடன், கேள்வி நிபந்தனை 1.1 இல் இணைப்பு III இன் கீழ் கோரப்பட்ட விபரங்கள் சமர்ப்பிக்காத நிலையில் மற்றும் பூர்த்தி செய்யாமல் சமர்ப்பித்துள்ள நிலையில் விலைமனு மதிப்பிடுகையில் மற்றும் கொள்வனவை தீர்மானிக்கும் போது பொறுப்பற்ற விதத்தில் செயற்பட்டுள்ளது. முழுமையற்ற ஆய்வுகூட பரிசோதனை அறிக்கையின்படி ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட இரசாயனப் பொருட்கள் அவர் விநியோகிப்பதற்கு இணங்கிய இரசாயனப் பொருட்களா என்பது பற்றி துல்லியமாக அடையாம் காண முடியவில்லை என்பதுடன், ஆய்வுகூட அறிக்கைகள் சிலவற்றில் பரிசோதனை முடிவுகள் அடங்கிய பக்கங்கள் சேர்க்கப்படவில்லை.

(iii) வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய சுகாதார நிறுவனங்களுக்காக தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட Medical Safety Deta Sheets மற்றும் ஆய்வுகூட அறிக்கையின்படி அவர் வழங்குவதற்கு இணங்கிய இரசாயனப் பொருளுக்குப் பதிலாக 21 சந்தர்ப்பங்களில் பிற இரசாயனப் பொருட்கள் வழங்கப்பட்டமை அந்த நிறுவனத்தினால் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களிலிருந்து உறுதியானது. இதன்படி, விலைமனுதாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழ்களின் பிரகாரம் வைத்தியசாலைகள்/ நிறுவனங்களுக்கு சுத்திகரிப்பு சேவை வழங்கும் போது உரிய தரத்தில் சுத்திகரிப்பு இரசாயனப் பொருட்கள் வழங்குவதாக ஒப்பந்த நிறுவனத்தினால் பொறுப்பேற்க வேண்டும் என்ற ஒப்பந்த நிபந்தனையை ஒப்பந்ததாரர் மீறியுள்ளார். அதன்படி, சமர்ப்பித்துள்ள ஒரு அலகிற்கான விலையை அடிப்படையாகக் கொண்டு இரசாயனப் பொருட்களுக்காக பணம் செலுத்துதலானது, ஒப்புதல் பெறப்படாமல் பணம் செலுத்துவதாக அவதானிக்கப்பட்டது. ஒப்பந்ததாரரினால் விலைமனுக்கள் சமர்ப்பிக்கும் போது இணங்கிய உற்பத்திப் பெயரின் கீழ் இல்லாத பிற உற்பத்திப் பெயரின் கீழுள்ள இரசாயனப் பொருட்களை வழங்குவதற்கு எவ்வத அனுமதிகளும் பெறப்படவில்லை என்பதால் இரசாயனப் பொருட்களுக்காக செலுத்தப்பட்ட சகல செலுத்துகைகளும் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரிடம் அறவிடப்படல் வேண்டும் என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(iv) சுத்திகரிப்பு சேவையைப் பெறுவதற்கான கொள்ளல் தீர்மானம் மட்டும் வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய சுகாதார நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், கேள்வி நிபந்தனைகள் அல்லது விலைமனுதாரியுடன் செய்யப்பட்ட முன் இணக்கங்கள் குறித்து இந்த சேவைகளை நேரடியாகப் பெறும் வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய சுகாதார நிறுவன அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்படவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் வழங்குவதற்கு இணங்கிய இரசாயனப் பொருட்கள், சுத்திகரிப்பு உபகரணங்கள் மற்றும் ஏனைய பொருள்களின் தரம், உரிய இரசாயனப் பொருட்கள், சுத்திகரிப்பு உபகரணங்கள் மற்றும் ஏனைய பொருள்களின் உற்பத்தி நிறுவனம் அல்லது உற்பத்திப் பெயர் குறித்தான ஒரு தெளிவு வைத்தியசாலைகள்/நிறுவனத்தலைவர்களுக்கு இல்லாத காரணத்தால் ஒப்பந்ததாரரர்கள் இந்த சந்தர்ப்பத்தை உச்சகட்டமாக பயன்படுத்தி தாம் விரும்பியவாறு சுத்திகரிப்பிற்கான இரசாயனப் பொருட்கள், சுத்திகரிப்பு உபகரணங்கள் மற்றும் ஏனைய பொருள்களை வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய சுகாதார நிறுவனங்களுக்கு தொடர்ந்து வழங்குவதற்கான சந்தர்ப்பத்தை பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களினால் வேண்டுமென்றே அல்லது கவனயீனம் காரணமாக ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

(v) சமர்ப்பிக்கப்பட்ட சில விலைமனுக்களின்படி இரசாயனப் பொருட்களுக்காக 100 வீத தள்ளுபடி வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஏனைய விலைமனுதாரிகளினால் அதற்கு எதிராக முறைப்பாடுகள் செய்துள்ள சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டது. அவ்வாறு தள்ளுபடியுடன் கூடிய இரசாயனப் பொருட்களை வழங்குவதன் ஊடாக சரியான தரத்திலான இரசாயனப் பொருட்களை வழங்க முடியாது எனவும், ஒப்பந்ததாரரினால் தரம் குறைந்த மற்றும் தரமற்ற சுத்திகரிப்பு பொருட்களை வழங்கும் நோக்கில் இந்த தள்ளுபடி வழங்கப்பட்டிருப்பதாக மேன்முறையீட்டாளர்களினால் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் மேன்முறையீட்டு சபையினால் விலைமனுதாரிகளுக்கு சமர்ப்பிக்கப்பட்ட உரிய தரத்திலான இரசாயனப் பொருட்களை வழங்குவதற்கான வாக்குமூலத்தின் மூலம் அல்லது செயற்திறன் பிணையை அதிகரித்தல் மூலம் அந்த விலைமனுதாரிகளுக்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்ட 05 சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. எனினும், விபரங்கள் வைத்தியசாலைகள்/ நிறுவனத்திற்கு அறிவிக்காத காரணத்தால் இந்த ஒப்பந்ததாரர்களினால் விலைமனுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட இரசாயனப் பொருட்களுக்குப் பதிலாக மாற்று இரசாயனப் பொருட்கள் வைத்தியசாலைகள்/ நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதன்படி ஒப்பந்ததாரர்களுக்கு மோசடி வேலை செய்வதற்கான சந்தர்ப்பத்தை பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களினால் வேண்டுமென்றே அல்லது கவனயீனம் காரணமாக ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(vi) சுத்திகரிப்பு செய்வதற்குத் தேவையான தொழிலாளின் எண்ணிக்கை, தேவையான சுத்திகரிப்பு உபகரணங்கள் மற்றும் தேவையான இரசாயனப் பொருட்களின் அளவு தொடர்பாக கொள்வனவு செலவின மதிப்பீடொன்று தயாரித்து அங்கீகரிக்கப்பட்டு விலைமனுக்கள் கோரப்படல் வேண்டும் என்றபோதிலும், 23 சந்தர்ப்பங்களில் அவ்வாறு செய்திருக்கவில்லை. அதன்படி, தேவையான தொழிலாளிகளின் எண்ணிக்கை, தேவையான சுத்திகரிப்பு உபகரணங்களின் அளவு மற்றும் தேவையான இரசாயனப் பொருட்களின் அளவு குறித்து வைத்தியசாலைகள்/ நிறுவனங்களினால் விபரங்கள் அனுப்பப்பட்டிருந்த போதிலும் அதற்கான செலவுகள் கண்டறியப்படவில்லை. இரசாயனப் பொருட்கள் மற்றும் உபகரணங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட விலைகள் சந்தை விலையுடன் நியாயமானதாக இருக்க வேண்டும் என்பது குறித்து விலைமனு மதிப்பீட்டில் கவனத்தில் கொள்ளப்படும் விஷேட அளவுகோலாக இனங்கண்ட போதிலும் கேள்வி ஆவணங்களில் உள்வாங்கப்பட்டுள்ள இரசாயனப் பொருட்கள் மற்றும் உபகரணங்களின் ஒரு அலகிற்கான விலை கண்டறியப்படவில்லை என்பதால் இரசாயனப் பொருட்கள் மற்றும் உபகரணங்களுக்காக விலைமனுதாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட விலைகள் சந்தை விலையுடன் நியாயப்படுத்தியமை எவ்வாறு என்பது குறித்து கணக்காய்வில் பிரச்சனைக்குரியதாக இருந்தது.

(vii) ஆண்டிற்கான சுத்திகரிப்பு சேவை பெறுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டின்படி, ஆண்டிற்கான தேவை இனங்காணப்பட்ட சுத்திகரிப்பு இரசாயனப் பொருட்கள் மற்றும் சுத்திகரிப்பு உபகரணங்களுள் இரசாயனப் பொருட்கள் மற்றும் சுத்திகரிப்பு உபகரணங்கள் பல முழுமையாக அல்லது 70 சதவீதம் குறைவாக வழங்கப்பட்ட 34 சந்தர்ப்பங்கள் 11 வைத்தியசாலைகளில் அவதானிக்கப்பட்டன. கேள்வி ஆவணங்களில்

குறிப்பிடப்பட்டுள்ள தேவை சரியானதாயின் ஒப்பந்ததாரரினால் குறைவாக வழங்கப்பட்ட அளவின் தேவைப்பாடு வைத்தியசாலையினால் எவ்வாறு பெற்றப்பட்டது என்பது குறித்து கணக்காய்வில் பிரச்சனைக்குரியதாக இருந்தது. மேலும் இந்த தேவைப்பாடுகள் கூடுதலாக மதிப்பீடு செய்யப்பட்டதா என்பது குறித்தும் கணக்காய்வின் போது கைவிடவும் முடியாது, கூடுதலாக மதிப்பீடு தயாரிப்பதன் மூலம் வைத்தியசாலை கொள்ளல் குழுவின் ஊடாக மேற்கொள்ள முடியுமான கொள்வனவுகள் அமைச்சின் கொள்ளல் குழுவிற்கு அனுப்புவதுடன் இதனால் போட்டித்தன்மையும் கட்டுப்படுத்தப்படுகிறது. அத்துடன், அதி கூடுதல் மதிப்பீடு செய்யப்பட்ட பொருட்கள் தொடர்பாக புரிந்து, அந்த வைத்தியசாலையில்/ நிறுவனங்கள் நீண்ட காலமாக சேவை வழங்கும் நிறுவனம் கூடுதல் மதிப்பீடு செய்த பொருட்களுக்காக குறைந்த அலகு செலவு அல்லது கூடுதல் சதவீத தள்ளுபடி வழங்குவதன் மூலம் கொள்வனவை சாதகமாக பயன்படுத்துவது அவதானிக்கப்பட்டது.

(viii) கேள்வி நிபந்தனைகளின்படி, வழங்கப்படவேண்டிய இரசாயனப் பொருட்கள் திறக்கப்படாத சந்தைப் பொருளாக இருத்தல் வேண்டும் என்பதுடன், தரத்திற்கு இணங்க இரசாயனப் பொருட்களை வழங்குவதாக உற்பத்தியாளரினால் சீல்வைக்கப்பட்ட இலங்கை தரச் சான்றிதழுக்கு (SLS Standards) இணங்க உள்ளதாக தொழிற்துறை தொழில்நுட்ப நிறுவனத்தினால் ((ITI) சான்றுறுதிப்படுத்தப்பட்ட இரசாயனப் பொருட்கள் வழங்கப்படல் வேண்டும் என்றபோதிலும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, சில வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு ஒப்பந்ததாரர் அவ்வாறு செய்யாத சந்தர்ப்பங்கள் மற்றும் தகவல்கள் வழங்காத 07 சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டது. மேலும் வைத்தியசாலைகள் / நிறுவனங்களினால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள இரசாயனப் பொருட்கள் இலங்கை தர நிலைகளுக்கு ஏற்புடையனவா என்பது குறித்து சுகாதார அமைச்சினால் உறுதி செய்யாது இந்த கேள்வி நிபந்தனைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

(ix) மாதாந்தம் தேவைப்படும் உபகரணங்கள் மற்றும் இரசாயனப் பொருட்களின் அளவு வைத்தியசாலையில்/ நிறுவனத்தில் நோய்த் தெற்று கட்டுப்பாட்டுப் பிரிவின் உத்தியோகத்தர் ஒருவர் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் பெறப்பட்டு இருப்புப் பதிவேடுகளில் உள்வாங்கி தமது பொறுப்பில் வைத்துக்கொண்டு தேவைக்கேற்ப வழங்கப்பட வேண்டும். எனினும், அந்த உபகரணங்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள் 18 சந்தர்ப்பங்களில் ஒப்பந்ததாரரின் பொறுப்பில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. இவ்வாறு இரசாயனப் பொருட்கள் மற்றும் ஏனைய சுத்திகரிப்பு பொருட்களை ஒப்பந்ததாரரின் பொறுப்பில் இருப்பதால் மாதாந்தம் வழங்கப்படுவதாக அவரினால் சமர்ப்பிக்கப்படும் பற்றுச்சீட்டில் குறிப்பிடப்படும் தொகை உண்மையாகவே வைத்தியசாலைகள்/ நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டனவா என்பதை உறுதிப்படுத்த முடியாது என்பதுடன், இவ்வாறான பலவீனமானது, தவறான மற்றும் மோசடியான கொடுப்பனவுகளுக்கு உள்ளக நிர்வாக அமைப்பு இடமளித்துள்ளது.

(x) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்களின்படி, ஒரு நிறுவனத்தினால் வைத்தியசாலை/ நிறுவனங்கள் 10 இற்கு இரசாயனப் பொருட்களுக்கு 100 சதவீதம் தள்ளுபடி வழங்கி ஒப்பந்தத்தை உடமையாக்கிக் கொண்டிருந்ததுடன், மேலும் வைத்தியசாலை/ நிறுவனங்கள் 03 இற்காக விலைமனுக்கள் சமர்ப்பித்து ஒப்பந்தம்

வழங்கப்பட்ட பின்னர் அதனை ஏற்பதற்கு மறுத்துள்ளது. அவ்வாறு ஏற்பதற்கு மறுக்கப்பட்ட வைத்தியசாலைகளுக்கு இரசாயனப் பொருட்களுக்காக விலைகள் சமர்ப்பித்துள்ளமையும் இங்கு விஷேட அம்சமாகும். ஒப்பந்தம் வழங்கப்பட்ட பின்னர் அதனை ஏற்க மறுத்த நிறுவனங்கள் 03 இற்காக விலைமனு பிணைகளின் மூலப் பிரதி சிரேஷ்ட உதவிச் செயலாளர் (கொள்ளல்) இற்கு கோரப்பட்டுள்ளமை மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அந்த விலைமனு பிணை அரச உடமையாக்குவதற்கோ அல்லது ஒப்பந்த நிறுவனத்தை திருப்தியின்மை பட்டியலில் சேர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(xi) கேள்வி நிபந்தனைகளின்படி, வைத்தியசாலைகள்/ நிறுவனங்களுக்காக நியமிக்கப்பட்ட இடங்களுக்கு சுத்திகரிப்பு தொழிலாளிகளை ஈடுபடுத்துவது ஒப்பந்ததாரரின் பொறுப்பாகும். எனினும், அவ்வாறு செயற்படாத 6 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன், குறைவாக வழங்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 10 சதவீதம் தொடக்கம் 35 சதவீதமாக இருந்தது. இதன் காரணத்தால் சேவை திறன்மிக்கதாக நிறைவேற்றப்படவில்லை எனவும் அல்லது தேவையான சுத்திகரிப்பு ஊழியர்களை கூடுதல் மதிப்பீடு செய்துள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(xii) சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தின் சுத்திகரிப்பு சேவைகளை மேற்கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்ததாரருடன் 2020 செப்டெம்பர் 21 ஆம் திகதி செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையின்படி, இரசாயனப்பொருட்கள் மற்றும் பொது பணிகளுக்காக மாத்திரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி 2021 ஜனவரி தொடக்கம் செப்டெம்பர் வரை 285,824 ரூபா பிற செலவுகள் என செலுத்தப்பட்டுள்ளது. ஒப்பந்தம் செய்யப்படாத இந்த மேலதிக கொடுப்பனவை பொறுப்புக்கூற வேண்டியவர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டும்.

(xiii) ஒப்பந்ததாரர் கொள்வனவின் போது வர்த்தகப் பெயர் (Branded) கொண்ட உபகரணங்களை வழங்குவதாக இணங்கியிருந்த போதிலும், வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்கள் 04 இற்கு அவ்வாறு வர்த்தகப் பெயர் கொண்ட உபகரணங்கள் வழங்கப்படவில்லை. ஒப்பந்ததாரருடன் இணக்கம் காணப்பட்ட இணக்கப்பாடுகள் பொறுப்பான தரப்பினரால் வைத்தியசாலை / நிறுவனத்திற்கு அறிவிக்காத காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதால் இணங்கியவாறு வழங்கப்படாத உபகரணங்களுக்காக செலுத்தப்பட்ட தொகையை பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து அறவிட வேண்டும்.

(xiv) மேலே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளின்படி வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய சுகாதார நிறுவனங்களுக்கான சுத்திகரிப்பு சேவை பெறுவது குறித்து சுகாதார அமைச்சினால்/வை த்தியசாலைகள் மற்றும் ஏனைய சுகாதார நிறுவனங்களினால் செயற்படுத்தப்படும் உள்ளக நிர்வாக அமைப்பு மிகவும் பலவீனமான நிலையில் உள்ளமை அவதானிக்கப்பட்டது. இந்த பலவீனமான உள்ளக நிர்வாக அமைப்பினால் நீண்ட காலமாக அரசாங்க நிதி தவறாக செலவிடப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது குறித்து அவசர கவனம் செலுத்தி இது தொடர்பாக செயற்பாட்டு ரீதியான உள்ளக நிர்வாக அமைப்பை வலுப்படுத்துவதற்கான தேவையை அனைத்து வைத்தியசாலை அமைப்பிலும் காணப்படும் முறையற்ற நிலை குறித்து ஆய்வு செய்து

காணப்படும் சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் கொள்ளல் நடைமுறைகளை பொருந்தக்கூடிய வகையில் திருத்துவதற்கான தேவையை சுட்டிக்காட்டுகிறேன்.

(xv) சுகாதார அமைச்சின் கீழுள்ள வைத்தியசாலைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கும் கனிஷ்ட ஊழியர்களுக்கும் சமைத்த உணவுகள் வழங்குவதற்குத் தேவையான உலர் உணவுப் பொருட்கள் வழங்குவது தொடர்பான விபரங்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்குமாறு 2022 மார்ச் 18 ஆம் திகதி அனுப்பிய கடிதத்திற்கு 2022 ஒக்டோபர் 31 ஆம் திகதிவரை தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்ட 16 வைத்தியசாலைகளின் தகவல்களின்படி 2021 ஆம் ஆண்டிற்காக வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு சமைத்த உணவுகள் வழங்குவதற்கான உலர் உணவுப் பொருட்களின் தேவைகள் உள்வாங்கப்பட்டு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு எவ்வித தர்க்கரீதியான அடிப்படையிலும் இல்லாமல் தயாரிக்கப்பட்டிருந்தன. இந்த மதிப்பீடு தயாரிக்கையில், கிட்டிய 03 வருடங்களுக்கான உண்மையான தேவைகளை கணக்கிட்டு அதன்படி தேவைகள் தீர்மானிக்கப்படவில்லை. இந்த மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ள சில பொருட்கள் வருடத்தில் எந்தவொரு நாளிலும் ஆடர் செய்யப்படவில்லை என்பதுடன், சில பொருட்கள் மிகவும் குறைந்த சதவீதத்தில் ஆடர் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறான ஆதாரமற்ற மதிப்பீடுகளின் அடிப்படையில் கொள்ளல் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் போட்டித் தன்மையை வரையறுத்தல், கொள்ளல் நடவடிக்கைகளை சிக்கலாக்குதல், கொள்ளல் நடவடிக்கைகளின் போது ஊழல்கள் மேற்கொள்வதற்கு சந்தர்ப்பமளித்தல், இந்நிலைமை தொடர்பாக அறிந்துள்ள ஒப்பந்ததாரர்கள் சிலர் தமது அனுபவத்தைக் கொண்டு வைத்தியசாலையினால் ஆடர் செய்யாத அல்லது குறைந்தளவில் ஆடர் செய்யப்படும் பொருட்களுக்கு ஒரு அலகிற்கான விலையை குறைவாகவும், அதிகளவில் ஆடர் செய்யப்படும் பொருட்களுக்கு ஒரு அலகிற்கான விலையை அதிகமாகவும் சமர்ப்பிப்பதன் மூலம் அனைத்து போட்டியாளர்களுக்குமான சமமான வாய்ப்புகள் இழத்தல், அதிக பெறுமதியான விலைமனுக்கள் கோரப்படும் காரணத்தால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிணைத் தொகை மற்றும் தெரிவு செய்யப்பட்டால் சமர்ப்பிக்க வேண்டிய செயற்திறன் பிணையின் பெறுமதி அதிகமாக இருப்பதன் காரணமாக விலைமனுக்கள் சமர்ப்பித்தல் வரையறுக்கப்படல் மற்றும் யதார்த்தமான மதிப்பீடுகளை தயாரித்து வைத்தியசாலைகளின் பிராந்திய கொள்ளல் குழுவினால் செய்யமுடியுமான கொள்வனவுகளை அமைச்சின் கொள்ளல் குழுவினால் செய்வதால் கொள்ளல் நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க தாமதம் ஏற்படுதல் போன்ற பாதகமான நிலை ஏற்படலாம் என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பித்த 16 வைத்தியசாலைகளின் விபரங்களை பகுப்பாய்வு செய்ததில் அந்த வைத்தியசாலைகளினால் மதிப்பீடு செய்யப்பட்ட வருடாந்த மதிப்பீட்டில் 967 பொருட்களுக்கான உண்மையான தேவை 50 சதவீதத்திற்கும் குறைவாகும். இந்த பொருட்களானது மதிப்பீடு செய்யப்பட்ட பொருட்களின் 63 சதவீதமாகும். வருடாந்த தேவை 51 சதவீதம் தொடக்கம் 75 சதவீதம் ஆடர் செய்யப்பட்ட பொருட்கள் 280 என்பதுடன், அது மொத்த பொருட்களில் 18 சதவீதமாகும். அவ்வாறே வருடாந்த தேவைகளில் 75 சதவீதத்தை விட ஆடர் செய்த பொருட்கள் 150 என்பதுடன் அது அது மொத்த பொருட்களில் 10 சதவீதமாகும். இவ்வாறு வருடாந்த மதிப்பீடு எவ்வித தர்க்க அடிப்படையில் தயாரிக்கப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டது. அவ்வாறே கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட 16 வைத்தியசாலைகளினால் கணக்காய்விற்கு சமர்ப்பித்த தகவல்களின்படி

ஒப்பந்ததாரர்களினால் 2021 ஆம் ஆண்டின் எந்த சந்தர்ப்பத்திலும் மாற்றீடுகள் சமர்ப்பிக்கவில்லை என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இதன் துல்லியத் தன்மை சிக்கலாக இருந்தது.

(ஊ) 2019 ஆம் ஆண்டில் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட 1,4309 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட இரவெளிக்கண்டம் (Iravelikkandam) காணியை சுற்றி மதில் கட்டுதல் 3 கட்டங்களின் கீழ் ரூபா 27,840,391.53 மொத்த செலவில் 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது வைத்தியசாலை பிராந்திய கொள்ளல் குழுவினால் கட்டங்கள் இரண்டிற்கு தேசிய ரீதியில் போட்டியுடனான விலைமனு கோரல் மற்றும் மூன்றாம் கட்டத்திற்கு சந்தை விலை (Shopping) முறை எனும் இரு கொள்ளல் முறைகளை பின்பற்றி தெரிவு செய்யப்பட்ட இரு ஒப்பந்ததாரர் ரூபா. 15,725,555.73 செலுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) அரச கொள்ளல் விதிமுறைகள் கோவையின் 4.1 மற்றும் 4.4 வது ஒழுங்குவிதிகளுக்கு முரணாக வைத்தியசாலையினால் இந்த கொள்முதல் வைத்தியசாலை பிராந்திய கொள்ளல் குழுவின் அதிகார வரம்பிற்கு உட்பட்டு 3 கட்டங்களின் கீழ் கொள்வனவை பிரித்து மேற்கொண்டுள்ளது.

(ii) 2021 ஆம் ஆண்டிற்கான சுகாதார அமைச்சின் நிதி கட்டுப்பாடு தொடர்பாக அதிகாரமளித்தலின்படி, வைத்தியசாலை பிராந்திய கொள்ளல் குழுவின் அதிகார வரம்பு 10 மில்லியன் ரூபா என்றபோதிலும், இந்த வரம்பை மீறி 12.36 மில்லியன் ரூபாவில் இந்த திட்டத்தின் கட்டம் III வைத்தியசாலை பிராந்திய கொள்ளல் குழுவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(iii) அரச கொள்ளல் விதிமுறைகள் கோவையின் 2.14.1 வது ஒழுங்குவிதிகளுக்கு அமைய ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னர் கொள்ளல் குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரைக்கு உரிய அதிகார சபையின் ஒப்புதல் பெறப்படல் வேண்டும் என்றபோதிலும் மேற்படி கொள்வனவின் கட்டம் 3 இற்காக வழங்கப்பட்ட கொள்ளல் குழு பரிந்துரைகளுக்கு அதற்கான அதிகார சபையின் ஒப்புதல் பெறப்படவில்லை.

(iv) இந்த கொள்வனவின் மூன்று கட்டங்களுக்குமாக தயாரிக்கப்பட்ட கட்டமைப்பு திட்டங்கள் (Structural Plans), மதிப்பிடப்பட்ட வேலை அளவுகள் கணிப்பிடும் முறையை உறுதிப்படுத்தும் அளவீட்டு அறிக்கைகள் (Taking off sheets) மற்றும் பணியிட பதிவுப் புத்தகம் 2022 நவம்பர் 29 கணக்காய்வு வேளை வரை ஆலோசனை சேவைகள் வழங்கும் நிறுவனத்தினால் வைத்தியசாலைக்கு வழங்கப்படவில்லை என்பதுடன், அந்த ஆவணத்தை பெறாமல் வைத்தியசாலையினால் ஆலோசனை வழங்கும் நிறுவனத்திற்கு பணம் செலுத்தியுள்ளது. மேலும் இந்த கட்டுமானத்திற்குரிய கட்டுமான திட்டம் விலைமனு ஆவணங்களுடன் விலைமனுதாரிக்கு வழங்கப்படவில்லை.

(v) இந்த திட்டத்திற்குரிய மதிப்பீடு மற்றும் திட்டம் தயாரித்து கட்டுமான பணிகளை கண்காணிக்கும் ஆலோசனை நிறுவனத்தின் பொறியியலாளரை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அங்கத்தவராக

நியமிக்கப்பட்ட காரணத்தால் ஆலோசனை சேவைகள் வழங்கும் நிறுவனத்தினால் இந்த திட்டத்திற்காக தயாரித்து சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு மற்றும் திட்டம், முன்மொழிவுகள் என்பன அவ்வாறே பரிந்துரைக்கப்படும் ஆபத்துள்ளதால் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சுயாதீனத்தன்மையும் வெளிப்படைத் தன்மையும் பாதுகாக்கப்படவில்லை.

(vi) இந்த திட்டத்திற்கு மூன்று கட்டங்களாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள வைத்தியசாலை தேவைகளுடன் ஒப்பந்ததாரரினால் மேற்கொள்ளப்பட்ட வேலை அளவுகளை ஒப்பிடும் போது மூன்றாவது கட்டத்திற்கான 4 வேலை விடயங்கள் அதாவது, D – 03, D – 04 (சீமெந்து மேற்படை இடுதல்) மற்றும் F – 01, F – 02 (வயரிங்) இன் கீழ் உள்ளடக்கப்படும் வைத்தியசாலையின் தேவைகள் ஒப்பந்ததாரரினால் செய்யப்படவில்லை என்பதுடன், மூன்று கட்டங்களுக்குமான 17 வேலை விடயங்களின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்ட வைத்தியசாலையின் தேவைகள் ஒப்பந்ததாரரினால் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. வேலை நிறைவேற்றப்படாத சதவீதம் 28 தொடக்கம் 90 வரையாக காணப்பட்டது.

(vii) மூன்றாம் கட்டத்திற்குரிய வேலை விடயங்கள் A – 01 இன் கீழ் வைத்தியசாலையின் தேவைகளுக்கு ஏற்ப மதிப்பீடு செய்யப்பட்ட சரளை மீட்டர் கியுப் 575 என்றபோதிலும், ஒப்பந்ததாரரினால் சரளை மீட்டர் கியுப் 2235.86 அதாவது மதிப்பீட்டு பெறுமானத்தை தாண்டி 289 சதவீத சரளை இட்டதாக உத்தரவாதமளிக்கப்பட்டு அதற்காக 4,876,840 ரூபா அதாவது மூன்றாவது கட்டத்திற்கான ஒப்பந்த நிதியில் 59 சதவீதம் செலுத்தப்பட்டுள்ளது. இது குறித்து மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு மற்றும் வேலைத் தளத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக ஆய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- கட்டம் மூன்றிற்கான அளவு படிவத்தின் வேலை விடய இலக்கம் A – 01 இன் கீழ் சரளை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தரத்தினாலான நிரப்பியைக் கொண்டு எல்லை மதிலின் அஸ்திவாரம் இரண்டு பக்கங்களும் மூன்று அங்குளம் படையாக இடுதல் மற்றும் நீரேற்றி பாய்ச்சப்பட்டு நிரப்புதல் (supplying & filling under floors with gravel or other approved quality of filling spread watered and rammed in 75MM) இற்காக 575 மீட்டர் கியுப் மண் தேவைக்கு ஒரு மீட்டர் கியுப் 3,893 ரூபா ஒரு அலகிற்கான விலையில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அந்த தேவைக்கு மேலதிகமாக எல்லை சுவரின் நிலைப்பாட்டை உருவாக்குவதற்கு மண் இடப்படல் வேண்டும் என ஆலோசனை சேவைகள் வழங்கும் நிறுவனத்தினால் 2021 ஒக்டோபர் 25 ஆம் திகதி வைத்தியசாலைக்கு தெரிவித்திருந்த போதிலும், அவ்வாறு தேவைப்படும் மண்ணின் அளவு எவ்வளவு என்பது குறித்து அல்லது மேலதிகமாக வழங்கப்படும் மண்ணிற்கு ரேட் எவ்வளவு என்பது குறித்து உறுதிப்படுத்தும் கடிதம் வைத்தியசாலைக்கு சமர்ப்பிக்கவில்லை. அவ்வாறு இருக்கும் போது வைத்தியசாலையின் மருத்துவ அத்தியட்சகரினால் பிராந்திய கொள்ளல் குழுவின் பரிந்துரையின்றி கொள்வனவிற்கு சுவருக்கு சீமெந்து இடுதலுக்குப் பதிலாக மண் இடுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

- மூன்றாம் கட்டத்திற்கு ஆலோசனைகள் வழங்கும் நிறுவனத்தினால் சான்றுறுதி செய்து சமர்ப்பிக்கப்பட்ட முதலாவது, இரண்டாவது, மூன்றாவது மற்றும் இறுதி கட்டணச் சான்றிதழ்களின்படி, ஒப்பந்ததாரரினால் A – 01 வேலை விடயத்திற்காக இணங்கிய ரூபா 2450 ஒரு அலகிற்கான விலையை அடிப்படையாகக் கொண்டு சரளை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தரத்தினாலான மண்ணிற்கு பதிலாக வழங்கப்பட்ட மணல் மற்றும் சேற்றுடன் கூடிய மண்ணிற்காக அங்கீகாரம் வழங்கப்பட்ட தரமான மண் என்பதை உறுதிப்படுத்தும் ஆய்வுகூட சோதனை அறிக்கை அல்லது மண் கூறுகள் குறித்த ஆய்வுகூட அறிக்கை (Compaction Report) இன்றி ரூபா 4,876,840 பணம் விநியோகத்தருக்கு வழங்கப்பட்டுள்ளது.

- மேற்படி 2021 டிசம்பர் 10 ஆம் திகதிவரை செய்யப்பட்ட வேலைகளுக்காக ஒப்பந்ததாரருக்கு கொடுப்பனவு பரிந்துரைக்கப்பட்டுள்ள போதிலும், 2021 டிசம்பர் 10 ஆம் திகதிவரை உறுதி செய்யப்பட்ட மொத்த மண் மீட்டர் கியுப் 2,637.05 அளவிற்குப் பதிலாக இறுதி கட்டணச் சான்றிதழ் மூலம் மண் மீட்டர் கியுப் 2,235.86 இற்கான கொடுப்பனவிற்கு பரிந்துரை செய்துள்ளது. இங்கு கோடு வரைபடங்களை (Contour Plan) அடிப்படையாகக் கொண்டு வேலை அளவை உறுதி செய்து மேற்படி ரூபா 4,876,840 பணம் விநியோகத்தருக்கு வழங்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு கோடு வரைபடங்களை (Contour Plan) அடிப்படையாகக் கொண்டு இடப்பட்ட மண்ணின் அளவை கணக்கிடுவதற்கு தேவையாயின் வைத்தியசாலையினால் அல்லது ஆலோசனைகள் வழங்கும் நிறுவனத்தினால் அதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். எனினும், அதனை ஒப்பந்ததாரர் தாம் தெரிவு செய்த தனியார் அளவீட்டாளர் ஒருவரினால் மேற்கொள்வதற்கு இடமளிக்கப்பட்ட காரணத்தால் இச்செயல்பாட்டின் சுயாதீனத் தன்மையும் வெளிப்படைத் தன்மையும் பாதுகாக்கப்படவில்லை.

- இவ்வாறு கோடு வரைபடங்களை பாவித்து நிரப்புவதற்குத் தேவையான மண்ணின் அளவை தீர்மானிக்கும் போது மண் நிரப்புவதற்கு முன் அளவீடுகளைப் பெற்று அந்த அளவீடு மற்றும் நிரப்புவதற்குத் தேவையான மட்டத்திற்கு ஏற்ப தேவையான மண்ணின் அளவை தீர்மானித்து அந்த மண்ணின் அளவை மதிப்பீட்டில் உள்வாங்கப்படல் வேண்டும் என்பதுடன், மண் நிரப்பியதன் பின்னர் பெறப்படும் அளவீட்டின்படி தயாரித்த கோடு வரைபடங்களை பயன்படுத்தி இடப்படும் மண்ணின் அளவை கணக்கிட வேண்டும். எனினும் மேலே குறிப்பிடப்பட்ட மீட்டர் கியுப் 2,235.86 மண் நிரப்பியதை உறுதிப்படுத்துவதற்காக மண் இடுவதற்கு முன் ஆரம்ப ஆய்வு (initial surveying) 2021 நவம்பர் 02 ஆம் திகதி அதாவது மீட்டர் கியுப் 2,235.86 மண் அளவில் 62 சதவீதம் நிரப்பிய பின்னரே பெறப்பட்டமை அவதானிக்கப்பட்டது. அதன்படி, மீட்டர் கியுப் 2,235.86 மண் நிரப்பியதை உறுதிப்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட கோடு வரைபடம் (Contour Plan) பொய்யாக தயாரிக்கப்பட்டவை என்பது உறுதி செய்யப்பட்டது. மேலும் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட

காணியின் அளவு 1.4309 ஹெக்டேர் என்றபோதிலும், தயாரிக்கப்பட்ட கோடு வரைபடங்களின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள காணியின் அளவு 2.01 ஹெக்டேர் என்பதும் காணியின் C தொடக்கம் D வரை அஸ்திவாரத்தின் எல்லைக்கு வெளியே ஒரு கால்வாய் செல்வதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான கால்வாய் உண்மையாகவே இல்லை என்பதன் ஊடாக இந்த கோடு வரைபடம் பொய்யாக தயாரிக்கப்பட்டது என்பது மேலும் தெளிவாகியது.

- 2021 டிசம்பர் 10 ஆம் திகதி வரை நீளம் x அகலம் x உயரம் தொடர்பாக முறையே 146 x 4.292 x 2 மீட்டர் அளவு குறிப்பிடப்பட்டு மீட்டர் கியுப் 1253.26 மண் எல்லை மதிலின் C மற்றும் D பகுதிகளுக்கு இடுவதற்கான உறுதி செய்யப்பட்ட அளவீடு தொடர்பாக 2022 நவம்பர் 29 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தள ஆய்வில் இடப்பட்டிருந்த மண் அடுக்கின் சாதாரண தடிப்பு (ஆழம்) 1.377 மீட்டர் என்பது அவதானிக்கப்பட்டது. எனினும், முதலாம் கட்டத்திலும் இந்த பகுதிகளுக்கான மண் நிரப்பப்பட்டு அதற்கான கட்டணமும் செலுத்தப்பட்டுள்ளதால் மற்றும் கல்முனை மாநகர சபையினாலும் மண் கொண்டு வந்து பரப்பப்பட்டதால் மேலே கூறப்பட்ட மண் அடுக்கின் சாதாரண தடிப்பு (ஆழம்) இதனை விடவும் குறைவாக இருத்தல் வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.

- மேலும், 2021 டிசம்பர் 10 ஆம் திகதி மண் மீட்டர் கியுப் 2,637.05 அளவிற்கு மண் லோட் 284 இடப்பட்டதாக உறுதி செய்யப்பட்டுள்ள போதிலும், அது தொடர்பாக வேலை தளத்தினால் பராமரிக்கப்பட வேண்டிய ஏடுகள் (அதாவது மண் ஏற்றிய வாகனங்கள் வந்த தினம், வாகன இலக்கம், மண் எடுத்து வருவதற்கான அனுமதிப் பத்திர இலக்கம், மண் எடுக்கும் இடம், வேலைத் தளத்தில் மண் பரப்பப்பட்ட திகதிகள் மற்றும் பயன்படுத்திய ஊழியர்களின் வேலை மணித்தியாலங்கள் போன்றவை) எவையும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்காத காரணத்தால் இவ்வாறு மண் பரப்பப்பட்டதை உறுதி செய்ய முடியாது.

- இடப்பட்ட மண் அளவை உறுதி செய்வதற்கு சமர்ப்பிக்கப்பட்ட கோடு வரைபடம் பொய்யாக தயாரிக்கப்பட்டிருந்தமையும், வலை வேலிக்கு அருகில் உள்ள பகுதியில் இடப்பட்டதாக கொடுப்பனவு உறுதி செய்யப்பட்ட மண் அளவை இடுவதற்கான அளவீடுகள் சமர்ப்பிக்காமல் இருந்ததாலும், சமர்ப்பிக்கப்பட்ட அளவீடுகள் சரியானவையல்ல என பௌதீக ஆய்வில் உறுதி செய்யப்பட்டமையும் இடப்பட்ட நிரப்பிகள் சரளை அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிரப்பி 1.3 மீட்டர் கியுப் தேவைப்படுவதாக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதனை உறுதிப்படுத்தும் இசைவு அறிக்கை பெறப்படாமையும், சரளை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தரத்தினாலான மண்ணிற்கு பதிலாக மணல் மற்றும் சேற்றுடன் கூடிய மண் இடப்பட்டமையும், உத்தேசித்தவாறு எல்லை சுவரின் நிலைப்பாட்டை உருவாக்க மண் இடுவதற்கு திட்டமிடப்பட்ட பகுதிகளுக்கு புறம்பாக மண் இட்டதாக கொடுப்பனவு உறுதி செய்யப்பட்டிருந்தமையும், வேலைத் தளத்திற்கு மண் கொண்டு வரப்பட்டதை உறுதிப்படுத்தும் சூழ்நிலை சான்றுகள் எவையும்

சமர்ப்பிக்காமையும், வைத்தியசாலை அத்தியட்சகரினால் அங்கீகரிக்கப்பட்ட அளவினைத் தாண்டி ஒப்பந்ததாரரின் மற்றும் ஆலோசனை நிறுவனத்தின் விருப்பப்படி மண் இடப்பட்டதை உறுதி செய்யப்பட்டதால் இந்த வேலைக்காக செலுத்தப்பட்ட ரூபா 4,876,840 ஆனது உண்மைக்குப் புறம்பான கொடுப்பனவு என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(viii) மூன்றாவது கட்டத்திற்கு மாத்திரம் Taking off sheets கணக்காய்விற்கு சமர்ப்பித்துள்ளதுடன், அந்த Taking off sheets இன்படி, 12 மி.மீ அளவான கம்பியினால் கொங்றீட் தளம் மற்றும் கொங்றீட் தூண் இடப்படல் வேண்டும். எனினும், 10 மி.மீ அளவான கம்பியினால் கொங்றீட் தளம் மற்றும் கொங்றீட் தூண்னிற்கு இடப்பட்டுள்ளது. இதன் காரணத்தால் சதுப்பு நிலம் கொண்ட மற்றும் காட்டு யானை தாக்கம் உள்ள இந்த காணியில் அமைக்கப்படும் மதில் நீண்ட காலம் பாவிக்கக்கூடியதா என்பது குறித்து கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ix) மூன்று கட்டங்களுக்குமாக கொங்றீட் தளம் மற்றும் கொங்றீட் தூண்னிற்கு G 25 1:1:5:3 (20 mm) எனும் கொங்றீட் கலவை பயன்படுத்தப்பட்டதை உறுதிப்படுத்தும் ஆய்வுகூட அறிக்கை பெறாமல் அதற்காக ரூபா 1,064,236 பணம் ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டுள்ளதன் மூலம் அதன் துல்லியத்தன்மை கணக்காய்வில் உறுதி செய்யப்படவில்லை.

(x) சுமார் 2 மீட்டர் வரை உயர்த்திய மதிலின் அஸ்திவாரம் மதில் கட்டும் போது உரிய முறையில் அத்திவாரம் இடுவதற்கு திட்டமிடப்படவில்லை என்பதுடன் கட்டுமானம் மேற்கொள்ளும் போது எல்லை மதிலின் B பகுதிக்கு மாத்திரம் சில வெண்ட்கல் இடப்பட்டுள்ளன.

(xi) ஒப்பந்ததாரரின் மற்றும் ஆலோசனை நிறுவனத்தின் விரும்பத்திற்கு ஏற்றவாறு மண் நிரப்புவதற்கு இடமளித்தல் மற்றும் பொய்யான அளவீடுகளின் அடிப்படையில் மற்றும் தரமான மண் நிரப்புவதற்குப் பதிலாக கொடுப்பனவு உறுதி செய்யப்பட்ட காரணத்தால் எல்லை அஸ்திவாரம் A பகுதியின் மதிலை கட்டுதல், கட்டப்பட்ட மதிலின் ஒரு பகுதிக்கு சீமெந்து படை பூசுதல், பெயின்ட் பூசுதல் போன்றவை ஒப்பந்ததாரரினால் செய்யப்படாத காரணத்தால் காணியை சுற்றி மதில் இடுவதற்கான வேலை திட்டமிடப்பட்டவாறு பூர்த்தி செய்யப்படவில்லை.

(xii) 2002 இலக்கம் 14 எனும் சேர்க்கப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் வரி சட்டத்தின் பிரிவு 20(I) இன்படி மற்றும் அரசாங்க கொள்ளல் வழிகாட்டலின் 5.4.11 இன் படி சேர்க்கப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் வரிக்காக பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் சமர்ப்பிக்கும் முறையான வரியானது இன்வொயிஸ் இற்காக மாத்திரம் வரி செலுத்தப்படல் வேண்டும். எனினும், வரி இன்வொயிஸ் பத்திரத்தை பெறாமல் முதலாவது மற்றும் இரண்டாவது கட்டத்திற்காக ரூபா 632,437.47 வெட் வரி தொகையை ஒப்பந்ததாரருக்கும், மூன்றாவது கட்டத்திற்காக ரூபா 116,212.06 வெட் வரி தொகையை பொறியியலாளர் விடயம் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகத்திற்கும் செலுத்தியுள்ளது.

(xiii) விநியோகத்தரினால் சமர்ப்பிக்கும் முறையான இன்வோயிஸ் தவிர பெயரளவு இன்வொயிஸ் இனை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்ய முடியாது என்றபோதிலும் கட்டம் மூன்றுக்காக பொறியியலாளர் விடயம் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகத்தினால் வழங்கப்பட்ட சேவைக்காக ரூபா 1,568,687.83 இனை பெயரளவு இன்வொயிஸ் இன் அடிப்படையில் செலுத்தியுள்ளது.

(எ) 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டிற்காக கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்குத் தேவையான மருத்துவ ஆய்வுகூட பரிசோதனை சேவை வசதிகளை செய்வதற்காக வைத்தியசாலைக்கு அருகில் உள்ள தனியார் மருத்துவ ஆய்வுகூடமொன்று தெரிவு செய்து அந்த மருத்துவ ஆய்வுகூட பரிசோதனை சேவைகளுக்காக இரண்டு வருடங்களுக்கும் முறையே ரூபா 4,892,565 மற்றும் ரூபா 3,682,370 கொடுப்பனவுகள் செய்துள்ளது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஆய்வுகூட பரிசோதனை சேவைகள் பெறுவது தொடர்பாக வைத்தியசாலையினால் பதிவு செய்யப்பட்ட விநியோகத்தர்கள் 03 பேரும் வைத்தியசாலையுடன் நேரடி தொடர்புள்ள தரப்பினர் என்பது பதிவு செய்வதற்காக பெறப்பட்ட ஆவணங்கள் மூலம் தெளிவாக அவதானிக்கப்பட்டது. எனினும், வைத்தியசாலையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் ஆய்வுகூட பரிசோதனை சேவை வழங்குனர்கள் என பதிவு செய்யப்பட்டுள்ளனர். அதன்படி, ஆய்வுகூட பரிசோதனை சேவைகளுக்காக வழங்குனர்களை பதிவு செய்வதற்கான செயற்பாடு வெளிப்படைத் தன்மையற்றது என்பது அவதானிக்கப்பட்டது.

(ii) 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவிற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்படவில்லை என்பதுடன், அதற்குப் பதிலாக அமைச்சினால் நியமிக்கப்பட்ட பிராந்திய கொள்ளல் குழு அங்கத்தவர்கள் மூவருக்குப் பதிலாக இந்த விநியோகம் வழங்கப்பட்ட தனியார் வைத்தியசாலையின் உரிமையாளரான வைத்தியசாலையின் பிரதான மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் உட்பட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மற்றைய உறுப்பினர்களும் கொள்ளல் குழுவின் அங்கத்தவர்கள் என பங்கேற்கச் செய்து இந்த கொள்ளல் தீர்மானத்தில் அங்கத்தவர்கள் என கையொப்பமிட்டுள்ளனர். மேலும், 2019 ஆம் ஆண்டிற்கான கொள்ளல் தீர்மானம் வழங்கும் போது, அந்த ஆண்டிற்காக அமைச்சினால் நியமிக்கப்பட்ட பிராந்திய கொள்ளல் குழு அங்கத்தவர் கணக்காளர் - மாவட்ட செயலகம், அம்பாரை இற்குப் பதிலாக 2018 ஆம் ஆண்டின் கொள்ளல் குழு அங்கத்தவர் கணக்காளர் - பிரதேச செயலகம், கல்முனை இனால் தீர்மானத்திற்காக கையொப்பமிடப்பட்டுள்ளது. அதன்படி, பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- வைத்தியசாலையின் மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்களுக்கான தனியார் மருத்துவ ஆய்வுகூடங்கள் மட்டும் உள்ளடக்கப்பட்ட விநியோகத்தர்களின் பட்டியலை பாவித்து விலைமனு கோரப்பட்ட இந்த விலைமனுவிற்கு விலைமனுக்கள் சமர்ப்பித்துள்ள தனியார் ஆய்வுகூடத்தின் உரிமையாளரான வைத்தியசாலையின் பிரதான மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளரை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அங்கத்தவராக நியமித்தல் மற்றும்

மேற்படி கொள்ளல் குழு தீர்மானம் வழங்கும் போது அவரை அங்கத்தவராக கொண்டிருத்தல் என்பது அரசாங்க கொள்ளல் வழிகாட்டலின் பிரிவு 1.2.1 (ஏ) இனை வைத்தியசாலை மீறியுள்ளது.

- இந்த கொள்ளல் செயல்முறையில் உறவுகள் நிலைத்தன்மை குறித்து தொடர்புகள் காணப்பட்ட வைத்தியசாலையின் பிரதான மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அங்கத்தவராக நியமிக்கப்படும் போது அல்லது கொள்ளல் குழு தீர்மானத்தில் கையொப்பமிடுவதற்கு முன்னர் தமது தொடர்புகள் குறித்து தெரிவித்து இந்த கொள்வனவிலிருந்து விலகியிருக்க வேண்டும். எனினும், அவ்வாறு செய்யாததால் அரசாங்க கொள்ளல் வழிகாட்டலின் 1.4.3 மற்றும் 2.12 (அ) (iii) ஆகிய பிரிவுகளை மீறியுள்ளார்.

- அரசாங்க கொள்ளல் வழிகாட்டலின் பிரிவு 2.8.1 (அ) இன் பிரகாரம் எந்தவொரு அங்கத்தவரும் கொள்ளல் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு ஆகிய இரண்டிலும் கடமையாற்ற முடியாது. எனினும், இந்த கொள்வனவு தொடர்பாக வைத்தியசாலையின் பிரதான மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அங்கத்தவராகவும் மற்றும் கொள்ளல் குழுவின் அங்கத்தவர் என கையொப்பமிட்ட காரணத்தால் அரசாங்க கொள்ளல் வழிகாட்டலின் மேற்குறிப்பிட்ட பிரிவுகளை மீறியுள்ளார்.

- இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் 1வது பிரிவின் XXX ஆவது பந்தியின் பிரிவு 1.2 இன் பிரகாரம் எந்தவொரு உத்தியோகத்தரும் வணிகத்தில் அல்லது வியாபாரத்தில் அல்லது எந்தவொரு தொழில் பணிகள் மேற்கொள்ளும் நிறுவனங்களின் நடவடிக்கைகளிலும் பங்கேற்க முடியாது. எனினும், அதற்கு மாறாக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் தனியார் ஆய்வுகூட பரிசோதனைகள் சேவை வழங்குவதுடன் தொடர்பான பதிவு செய்யப்பட்ட விநியோகத்தர்களின் பட்டியலில் உள்வாங்கப்பட்ட இந்த கொள்வனவை பொறுப்பேற்ற தனியார் ஆய்வுகூடத்தின் உரிமையாளரான வைத்தியசாலையின் பிரதான மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளரும், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் விலைமனுக்கள் சமர்ப்பித்த மற்றைய இரு மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்களும் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளமை அவதானிக்கப் பட்டது.

- வைத்தியசாலையினால் 04 விஷேட மருத்துவ நிபுணர்களின் பங்கேற்பில் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முறையே தனியார் ஆய்வுகூடங்களினால் மேற்கொள்ளப்பட வேண்டிய 129 மற்றும் 226 பட்டியல் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், 2017 ஜனவரி 21 ஆம் திகதிய D/LS/Lab Test/ 2017 எனும் இலக்க சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் ஆலோசனைகள் அடங்கிய கடிதத்தின்படி தனியார் பிரிவுகளினூடு மேற்கொள்ள வேண்டிய பரிசோதனைகள் எவை என்பது குறித்து இனங்காணும் போது பின்பற்றவேண்டிய செயல்முறைகள் வைத்தியசாலையினால் பின்பற்றவில்லை. அந்த இரு வருடங்களிலும் தனியார் ஆய்வுகூடங்களினால்

மேற்கொள்ளப்பட்ட பரிசேதனை வகைகள் 15 இன் மாதிரிகளை ஆய்வு செய்த போது, இந்த 15 வகை பரிசோதனைகளையும் வைத்தியசாலையில் உள்ள ஆய்வுகூட உபகரணங்களின் மூலம் செய்ய முடியும் என்பதும், அவ்வாறு வைத்தியசாலையினால் செய்ய முடியுமான பரிசோதனைகளை தனியார் ஆய்வுகூடங்கள் ஊடாக செய்யப்பட வேண்டிய பரிசோதனைகளின் பட்டியலில் சேர்த்து பரிந்துரை செய்துள்ளதாகவும், அந்த பரிசோதனை வகைகள் 15 இற்காக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முறையே 1,386 மற்றும் 1,307 பரிசோதனைகள் செய்யப்பட்டு அதற்காக முறையே ரூபா 2,331,270 மற்றும் ரூபா 2,046,670 பணம் தனியார் மருத்துவ ஆய்வுகூடத்திற்கு செலுத்தப்பட்டுள்ளமையும் அவதானிக்கப்பட்டது. எனவே மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு வைத்தியசாலையினால் தனியார் ஆய்வுகூடத்திற்கு ரூபா 4,377,940 பணம் அநாவசியமாக செலுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

(iii) மேற்படி பரிசோதனை மாதிரி பரிசோதனை என்பதால் தனியார் மருத்துவ ஆய்வுகூடத்தினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த பரிசோதனைகளில் வைத்தியசாலையில் உள்ள ஆய்வுகூட உபகரணங்களை பயன்படுத்தி மேற்கொள்ளமுடியுமா என்பது பற்றி கண்டறிந்து அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை கணக்கிட்டு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.

(iv) வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் காணப்படும் BS 480 Automated Biochemistry Analyser எனும் உபகரணத்தினால் ஒவ்வொரு வகையான பரிசோதனைகளும் எவ்வளவு செய்யலாம் என்பது குறித்து ஆராய்ந்த போது 2017, 2018 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளுக்கான தரவு (Machine reading about number of test done) கணினி திரையில் அல்லது அச்சு பிரதிகளைப் பெற முடியாமல் போனதானது, அந்த தரவுகளை அழித்திருத்தல் அல்லது ஏதோவொரு வகையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக இந்த உபகரணத்தை விநியோகித்த உரிய நிறுவனத்தின் பிரதிநிதி ஒருவரிடம் 2022 ஒக்டோபர் 26 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது, இந்த உபகரணத்தின் தரவுகளுக்காக பிரவேசிக்க முடியுமான Admin மற்றும் Services இற்காக 02 கடவுச் சொற்கள் பயன்படுத்தப்பட்டன எனவும், Admin கடவுச் சொல் வைத்தியசாலையின் ஆய்வுகூடத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், Services கடவுச் சொல் உபகரணத்தை விநியோகித்த நிறுவனத்தினால் உபகரணம் பராமரிப்பு சேவைக்காக பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும், இந்த இரு கடவுச்சொற்களையும் பாவித்து உபகரணத்தின் தரவுகளை மாற்ற அல்லது அழிக்க முடியும் எனவும், கணக்காய்வு தினம் வரை உபகரணத்தின் தரவுளை மாற்ற அல்லது அழிக்க முடியாத கடவுச் சொற்களை ஆய்வுகூடத்தில் பணியாற்றும் மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்களுக்கு வழங்கப்படவில்லை எனவும், அதற்குப் பதிலாக Admin கடவுச் சொல்லை அந்த உத்தியோகத்தர்களுக்கு வழங்கியுள்ளதாகவும் அவதானிக்கப்பட்டது. அதற்கமைய உபகரணத்தின் தரவுகளை பாதுகாப்பது தொடர்பான உள்ளக நிர்வாகம் பலவீனமாக மட்டத்தில் காணப்பட்டது. மேலும், உரிய பிரதிநிதியினால் மீண்டும் இயல்பு நிலைக்கு மீட்கப்பட்டதாக கூறப்படும் ஒரு கோவையை

கணக்காய்விற்கு காட்டப்பட்ட போதிலும், அதன் உண்மைத்தன்மை மற்றும் துல்லியம் தொடர்பாக (அதாவது 2017, 2018 மற்றும் 2019 ஆண்டுகளுக்குரிய தரவு கோப்புகள் அழிப்பதற்கு அல்லது மாற்றுவதற்கான காரணங்கள், அதற்காக பெறப்பட்ட அனுமதி, மாற்றப்பட்ட அல்லது அழித்த திகதி, அதற்காக பயன்படுத்தப்பட்ட கடவுச் சொற்கள் என்பவற்றை உறுதிப்படுத்தும் தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்காமை) கணக்காய்வில் உறுதி செய்யப்படாததால் தனியார் ஆய்வுகூடத்திற்கு கட்டணம் செலுத்தப்பட்ட பரிசோதனைகள் மேற்படி உபகரணத்தினூடாக செய்யப்பட்டனவா என்பது குறித்து கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக விஷேட அறிவு கொண்டுள்ள தரப்பினர் ஊடாக சுயாதீன ஆய்வு மேற்கொண்டு மேற்படி விடயம் தொடர்பாக முழுமையான தொழில்நுட்ப அறிக்கை இதுவரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை.

(v) மேலும் வைத்தியசாலையில் உள்ள உபகரணங்களைக் கொண்டு மேற்கொள்ள முடியுமான ஆய்வுகூட பரிசோதனைகள் தனியார் ஆய்வுகூடத்தின் ஊடாக செய்தமையால் ரூ. 9,700,000 செலவு செய்யப்பட்ட வைத்தியசாலையின் ஆய்வுகூட உபகரணத்தினால் உரிய பயன் பெறப்படவில்லை.

(vi) வைத்தியசாலையில் உள்ள உபகரணங்களைக் கொண்டு செய்திருக்கக்கூடிய, வைத்தியசாலைக்கு அதிகமாகத் தேவைப்படும் மேலே கூறப்பட்ட 15 வகை பரிசோதனைகளில் 06 வகையான பரிசோதனைகள் தொடர்பாக மேலும் நடத்தப்பட்ட ஆய்வில் அந்த 06 வகையான பரிசோதனைகள் வைத்தியசாலையில் தற்போது காணப்படும் அதாவது, BS 480 Automated Biochemistry Analyser, Minividas Immuno Chemistry Analyser மற்றும் Magglumi 800 Immuno Chemistry Analyser ஆகிய ஆய்வுகூட உபகரணங்கள் மூலம் செய்திருக்க முடியும் எனவும், அந்த உபகரணத்தை பயன்படுத்தியிருப்பின் சுமார் 982,828 ரூபா செலவு கொண்ட இந்த 06 வகையான பரிசோதனைகளை செய்திருக்க முடியும் என்பது அவதானிக்கப்பட்டது. இருப்பினும், அந்த 06 வகையான பரிசோதனைகளுக்காக வைத்தியசாலையினால் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்காக தனியார் ஆய்வுகூடங்களுக்கு ரூ. 2,931,500 செலுத்தியுள்ளது. 06 வகையான பரிசோதனைகளுக்காக மாத்திரம் கிட்டத்தட்ட அரசாங்கத்திற்கு ஏற்படுத்தப்பட்ட நட்டம் ரூ.1,948,681 என்பது அவதானிக்கப்பட்டது.

(vii) அதன்படி, மேலே கூறப்பட்ட நட்டம் 06 வகையான பரிசோதனைகளுக்காக மட்டும் என்பதால் வைத்தியசாலையில் உள்ள உபகரணத்தைக்கொண்டு செய்திருக்க முடியுமான ஆனாலும் தனியார் ஆய்வுகூடத்தினால் செய்து கொள்ளப்பட்ட ஏனைய பரிசோதனை வகைகள் தொடர்பாக மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரசாங்கத்திற்கு ஏற்படுத்தப்பட்ட நட்டத்தை கணக்கிட்டு அதற்குப் பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடப்பட வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.

(viii) வைத்தியசாலையினால் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்காக தெரிவு செய்யப்பட்ட தனியார் ஆய்வுகூடங்கள் தொடர்பாக ஒரு பௌதீக ஆய்வு மேற்கொண்டு அறிக்கை பெறப்பட்டுள்ளதுடன், அந்த அறிக்கையின்படி அந்த தனியார் ஆய்வுகூடத்தினால் தமது ஆய்வுகூட உபகரணத்தின் மூலம் மேற்கொள்ள முடியாத, மேலே குறிப்பிடப்பட்ட பரிசோதனை பட்டியலில் உள்ள ஏனைய ஆய்வுகூட பரிசோதனைகள், பிற

ஆய்வுகூடங்கள் ஊடாக மாதிரிகள் தினசரி கொண்டு செல்லப்பட்டு நிறைவேற்றப்படுவதை வைத்தியசாலையினால் கண்காணிக்கப்பட்டுள்ளது. எனினும் அவ்வாறு பிற ஆய்வுகூடங்கள் ஊடாக செய்து கொள்ளப்படும் பரிசோதனைகள் தொடர்பாக தனியார் ஆய்வுகூடத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட விலைகள் தொடர்பாக அதற்கான அளவுகோல்களைப் பயன்படுத்தி மதிப்பீடுகள் செய்யாமல் வைத்தியசாலையினால் தனியார் ஆய்வுகூடத்திற்கு அந்த பரிசோதனை வகைகளை வழங்கியதால் சுமார் 58 வகை பரிசோதனைகள் பிற ஆய்வுகூடங்களினால் செய்து கொண்டு அவற்றின் பரிசோதனை கட்டணங்கள் தனியார் ஆய்வுகூட இன்வொயிஸ் ஊடாக வைத்தியசாலைக்கு சமர்ப்பிக்கப்பட்டு வைத்தியசாலையினால் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முறையே ரூ. 2,353,305 மற்றும் ரூ. 1,415,770 நிதி தனியார் ஆய்வுகூடத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. அதன்படி வைத்தியசாலையினால் பிற தனியார் ஆய்வுகூடங்களினால் நேரடியாக இந்த சேவைகள் பெறப்பட்டிருந்தால் அல்லது பிற ஆய்வுகூடங்கள் ஊடாக செய்து கொள்ளப்பட்ட பரிசோதனைகள் தொடர்பாக தனியார் ஆய்வுகூடங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட விலைகள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்டால் தனியார் ஆய்வுகூடங்களுக்காக செலவிட்ட தொகையை குறைக்க முடியுமான சந்தர்ப்பத்தை வைத்தியசாலையினால் இழக்க நேரிட்டது. இது தொடர்பாக அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டுள்ளதா என்பதை கண்டறிந்து அந்த நட்டத்தை அதற்கு பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிட வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.

(ix) அரச கொள்ளல் வழிகாட்டலின் 1.2.1 வது பிரிவின் பிரகாரம், உயர் தரத்தைக் கொண்ட குறைந்த செலவில் அதிகபட்ச பொருளாதார நன்மைகளை பெறல், சரியான நேரத்தில் தரமான கொள்ளல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல், சரியான தரத்தில், விபரக்குறிப்பு, விதிமுறைகள், ஒழுங்கு முறைகள் மற்றும் சிறந்த நிர்வாகத்திற்கு ஏற்ப செயற்படுதல், தகைமையுள்ள ஆர்வம் கொண்ட தரப்பினருக்கு கொள்ளலில் பங்கேற்பதற்கு நியாயமான, சமமான மற்றும் அதிகபட்ச வாய்ப்புகளை வழங்குதல், மதிப்பீடு மற்றும் தேர்வு நடைமுறையில் வெளிப்படைத்தன்மை மற்றும் ஒழுங்குமுறையை உறுதி செய்தல் போன்றவை கொள்ளல் செயற்பாட்டின் மூலம் உறுதி செய்யப்பட வேண்டும் என்பதுடன், அதற்கு கொள்ளல் குழு அங்கத்தவர்கள் தனித்தனியாகவும் கூட்டாகவும் பொறுப்பாக இருத்தல் வேண்டும். எனினும், மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் செய்யப்பட்ட தனியார் ஆய்வுகூடங்களினால் ஆய்வுகூட பரிசோதனை சேவைகள் பெறுவதற்கான கொள்முதல் செயல்முறையில் புறக்கணிப்பு செய்தல், விதிமுறைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்காமை மற்றும் பிற குறைப்பாடுகளின் காரணத்தால் இந்த கொள்ளல் செயற்பாடுகள் மூலம் மேற்படிவிடயங்களை உறுதி செய்வதற்கு தவறியமை தொடர்பில் கொள்ளல் குழு அங்கத்தவர்கள் தனித்தனியாகவும் கூட்டாகவும் பொறுப்புக்கூற வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.

(x) மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின்படி வைத்தியசாலையில் தேவையான வசதிகள் இருந்தபோதும் வைத்தியசாலைக்கு தொடர்ந்து தேவைப்படும் ஆய்வுகூட பரிசோதனைகள் பல தனியார் மருத்துவ ஆய்வுகூடங்களுக்கு வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. எனினும் சுகாதார அமைச்சின் திடீர் முற்றுகைப் பிரிவின் 2020 டிசம்பர் 30 ஆம் திகதிய MH/FS/PI/33/2019/B-107/220 எனும் இலக்க ஆரம்ப கட்ட விசாரணை அறிக்கையின் 4.4 வது பந்தியின் ஊடாக நோயாளர்

பராமரிப்பு சேவைக்கு குறைந்தபட்ச வசதிகள் இல்லாதது மற்றும் நோயாளிகளின் குறைந்தபட்ச எண்ணிக்கையின் காரணமாக வைத்தியசாலையில் வசதியற்ற ஆய்வுகூட பரிசோதனைகள் தனியார் மருத்துவ ஆய்வுகூடங்களினால் மேற்கொண்டுள்ளதாக அவதானிக்கப்பட்டமை ஏற்றுக்கொள்ளக்கூடிய அவதானிப்பு அல்ல என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(xi) இந்த கொள்வனவிற்காக தனிப்பட்ட தொடர்புகள் உள்ள தரப்பினரை சேர்த்துக்கொண்டுள்ளமை மேற்படி ஆரம்ப கட்ட விசாரணை அறிக்கையில் மூலம் அவதானிக்கப்பட்ட போதிலும், அவ்வாறு தனிப்பட்ட தரப்பினருடன் சேர்ந்து வழங்கப்பட்ட கொள்ளல் தீர்மானத்தின் ஊடாக அரசாங்கத்திற்கு ஏதேனும் இழப்புகள் ஏற்பட்டுள்ளதா என்பது குறித்து விசாரணை செய்திருக்கவில்லை. மேலும் வைத்தியசாலை தலைவர் உட்பட வைத்தியசாலையின் உயர் முகாமைத்துவத்தினால் இந்த கொள்வனவிற்காக தனிப்பட்ட தொடர்புகள் உள்ள தரப்பினரை சேர்த்துக்கொள்வதற்கு இடமளிக்கப்பட்டமை விசாரணையின் போது கவனத்தில் எடுக்கப்படவில்லை என்பது இந்த கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(xii) எனவே, மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆரம்ப கட்ட விசாரணை அறிக்கை தொடர்பாக திருப்தியடைய முடியாது என்பதுடன் தொடர்ந்தும் இவ்விடயம் தொடர்பாக முறையான மற்றும் சுயாதீன விசாரணையின் தேவையை சுட்டிக்காட்டுகிறேன்.

(ஏ) 2018 ஜூலை 16 ஆம் திகதிய இலக்கம் 2080/22 எனும் அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின்படி, சுத்திகரிப்பு சேவை தொழில்துறை சேவையில் இருப்பவர்களுக்கு அரசாங்கத்தினால் அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவு வழங்குதல் தொடர்பாக அமைச்சின் கொள்ளல் குழு "சீ 1" இனால் 2018 டிசம்பர் 17 ஆம் திகதியன்று வழங்கப்பட்ட HM/PB/06/062/2016 எனும் இலக்க தீர்மானத்தின்படி, கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையினால் 2018 ஆகஸ்ட் மாதம் முதல் 2019 ஜனவரி மாதம் வரையான காலப்பகுதிக்காக ரூ. 5,911,427.82 இனை சுத்திகரிப்பிற்கான நிலுவைத் தொகையாகவும், இந்த கொள்ளல் தீர்மானத்திற்கு முன் பழைய ரேட்டின் அடிப்படையில் மேற்படி காலத்திற்காக ரூ. 12,840,931.95 இனை சுத்திகரிப்பு சேவை ஊழியர் சம்பளமாகவும் சுத்திகரிப்பு சேவை வழங்குனருக்கு செலுத்தியுள்ளது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(i) மேற்படி கொள்ளல் தீர்மானத்தின் (a) முதல் (f) வரை குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் குறித்து எந்தவொரு முறையான உறுதிப்படுத்தல்களும் இன்றி விநியோகத்தருக்கு செலுத்தப்பட்டுள்ள ரூ. 5,911,427.82 நிலுவை சம்பளம் உண்மையாகவே சுத்திகரிப்பு சேவை ஊழியர்களுக்கு பணமாக கிடைத்ததா என்பதும், அந்த ஊழியர்களுக்காக வரவு வைக்கவேண்டிய அதிகரிக்கப்பட்ட சேமாலாப நிதி மற்றும் ஊழியர் வேலைவாய்ப்பு அறக்கட்டளை நிதி ஆகிய பங்களிப்புத் தொகைகள் உரிய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டதா என்பதும் உறுதிசெய்யப்படவில்லை என்பதுடன் நிலுவை சம்பளம் மற்றும் கொடுப்பனவு பெறுவதற்கு சுத்திகரிப்பு சேவை வழங்குனரினால் வைத்தியசாலைக்கு சமர்ப்பிக்கப்பட்ட சம்பள அறிக்கையின்படி 2018 ஆகஸ்ட் மாதம் முதல் 2019 ஜனவரி மாதம்

வரையான காலப்பகுதிக்கான சுத்திகரிப்பு ஊழியர்களின் சம்பளம் வழங்குவதற்காக விநியோகத்தர் செலவிட்ட செலவு ரூ. 8,599,608 என்பதுடன், அந்த அறிக்கையின்படி, சுத்திகரிப்பு ஊழியர்களுக்கு மேலதிக நேர கொடுப்பனவு வழங்கப்படவில்லை. மேலும், 2018 ஆகஸ்ட் மாதத்தில் அரசாங்கத்தினால் சுத்திகரிப்பு ஊழியர்களுக்காக அதிகரிக்கப்பட்ட புதிய ரேட் இற்குப் பதிலாக பழைய ரேட் இனை அடிப்படையாகக் கொண்டு விநியோகத்தரினால் சுத்திகரிப்பு ஊழியர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட நிலையில் வைத்தியசாலையினால் புதிய ரேட் இனை அடிப்படையாகக் கொண்டு 2018 ஆகஸ்ட் மாதத்திற்காக ரூ. 988,358.07 இனை நிலுவை சம்பளமாக விநியோகத்தருக்கு செலுத்தியமையானது அங்கீகாரம் அளிக்கப்படாத ஒரு செலுத்துகையாக அவதானிக்கப்படுகிறது. அதன்படி அரசாங்கத்தினால் அதிகரிக்கப்பட்ட புதிய ரேட்டின் படி செலுத்தப்பட வேண்டிய நிலுவை சம்பளம் மற்றும் கொடுப்பனவு உட்பட 2018 ஆகஸ்ட் மாதம் முதல் 2019 ஜனவரி மாதம் வரையான காலப் பகுதிக்கான சுத்திகரிப்பு ஊழியர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவாக வைத்தியசாலையினால் விநியோகத்தருக்கு ரூ. 18,752,359.77 செலுத்தியதன் மூலம் வைத்தியசாலையினால் சுத்திகரிப்பு ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவாக ரூ. 10,152,751.77 கூடுதலாக விநியோகத்தருக்கு செலுத்தியுள்ளது. இவ்வாறு கூடுதலாக செலுத்தப்பட்ட உரிய விநியோகத்தரிடம் இருந்து அல்லது அவ்வாறு முடியாவிட்டால் பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடப்படல் வேண்டும்.

(ii) 2002 இலக்கம் 14 எனும் சேர்க்கப்பட்ட பெறுமதி மீது வரி சட்டத்தின் பிரிவு 20 (1) இன்படி மற்றும் அரச கொள்வனவு வழிகாட்டலின் 5.4.11 இன் சேர்க்கப்பட்ட பெறுமதி மீது வரிக்காக பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் ஒருவரினால் சமர்ப்பிக்கப்படும் முறையான வரியானது இன்வொயிஸ் இற்காக மாத்திரம் வரி செலுத்தப்படல் வேண்டும். எனினும், வரி இன்வொயிஸ் பத்திரத்தை பெறாமல் 2018 ஆகஸ்ட் மாதம் முதல் 2019 ஜனவரி மாதம் வரையான காலப் பகுதிக்கான சுத்திகரிப்பு சேவைக்காக ரூ. 3,207,713.17 சேர்க்கப்பட்ட பெறுமதி மீது வரியாக செலுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு உத்தியோகத்தர்களின் கவனக்குறைவினால் செலுத்தப்பட்ட வரிப்பணத்தை உரிய நிறுவனத்திடம் இருந்து அல்லது பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடப்படல் வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.

(ஐ) 2021/2022 ஆம் ஆண்டிற்காக அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு தேவையான சுத்திகரிப்பு சேவை வழங்கும் ஒப்பந்தத்தை ரூ. 62,694,300 மதிப்பீட்டு செலவில் தனியார் சுத்திகரிப்பு சேவை நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது. தரப்பினருக்கிடையே செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் வைத்தியசாலையினால் சுத்திகரிப்பு சேவை பெறப்பட்டதா என்பது குறித்து மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஒப்பந்ததாரரினால் சுத்திகரிப்பு சேவை ஊழியர்களின் வருகை மற்றும் அவர்களின் கடமைகளை பகிர்ந்தளிப்பதை பதிவு செய்வதற்கான பதிவேடு, பணியிட பதிவேடு மற்றும் வேலை சுழற்சி பதிவேடு ஆகிய 03 பதிவேடுகள் பராமரிக்கப்பட்டன. கணக்காய்வின் மூலம் 2022 ஜூலை 05 ஆம் திகதி நடாத்தப்பட்ட கள ஆய்வில் மேற்குறிப்பிட்ட தினத்தில் பகல் சேவை சுழற்சியில் 42 சுத்திகரிப்பு ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டமை அவதானிக்கப்பட்ட போதிலும், மேலே குறிப்பிடப்பட்ட 03 பதிவேடுகளிலும் அந்த சேவையாளர்களின் எண்ணிக்கை முறையே 45, 37 மற்றும் 40 என உண்மைக்கு புறம்பாக அறிக்கையிடப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி கணக்காய்வுத் தினத்தில்

சேவையில் ஈடுபடுத்தப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையானது ஒப்பந்தம் செய்யப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையை விட 18 குறைவு. எவ்வாறாயினும், 2021 ஒப்பந்த ஆண்டு முழுவதும் ஒப்பந்தம் செய்யப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையை விடவும் அதிக எண்ணிக்கையான ஊழியர்களை ஈடுபடுத்தியதாக குறிப்பிட்டு ஒப்பந்தம் செய்யப்பட்ட முழு உழியர்களின் எண்ணிக்கைக்கும் பணம் செலுத்தப்பட்டுள்ளது. எனவே சுத்திகரிப்பு ஊழியர்களின் வருகை மற்றும் விநியோகத்தரினால் வைத்தியசாலைக்கு சமர்ப்பிக்கப்பட்ட வரவு அறிக்கை தொடர்பாக வைத்தியசாலை கண்காணிப்பு பலயீனமான மட்டத்தில் காணப்பட்டது.

(ii) ஒப்பந்தத்தின் 15.1 நிபந்தனையின்படி சம்பந்தப்பட்ட மாதத்தின் சம்பளம் வழங்கப்பட்டதை உறுதிப்படுத்தும் சம்பள பதிவேட்டின் சான்றுறுதி செய்யப்பட்ட ஒரு பிரதியை வைத்தியசாலை தலைவருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். எனினும், அவ்வாறு உரிய மாத்தில் சம்பளம் வழங்கப்பட்டதை சான்றுறுதி இல்லாமல் வைத்தியசாலையினால் 2021 பெப்ரவரி மாதம் முதல் 2022 ஜனவரி மாதம் வரை ரூ. 40,088,533 இனை சுத்திகரிப்பு ஊழியர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவாக வழங்கப்பட்டுள்ளது.

(iii) வைத்தியசாலை சுத்திகரிப்பு சேவைக்காக பயன்படுத்தப்படும் உபகரண வகைகள் 08 இற்காக வைத்தியசாலை களஞ்சியத்தில் உள்ள அலகுகளின் அளவு தொடர்பாக கவனிக்காமல் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட உபகரண வகைக்கான வைத்தியசாலையின் மாதாந்த தேவைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு தொடர்ச்சியாக ஒப்பந்த காலம் முழுவதும் (2019 பெப்ரவரி 01 முதல் கணக்காய்வுத் தினமான 2022 ஜூலை 05 ஆம் திகதி வரை) விநியோகத்தரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட காரணத்தால் 2022 ஜூலை 05 ஆம் திகதி நிலவரப்படி ரூ. 2,137,150 செலவு கொண்ட உபகரணங்கள் 08 வகைக்கான 357 அலகுகள் வைத்தியசாலையின் பிரதான களஞ்சியத்தில் உபயோகிக்காமல் காணப்பட்டன. எனவே இந்த அவசியமற்ற கொள்வனவிற்காக செலுத்தப்பட்ட பணம் அநாவசிய கொடுக்கல் வாங்கலாக அவதானிக்கப்பட்டது.

(iv) வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை வாட்டு, காயங்களுக்கு மருந்திடும் பகுதி (wound dressing areas), மற்றும் பெரிதும் மாசுபட்ட மேற்பரப்புகள் போன்ற இடங்களை சுத்தம் செய்வதற்காக 1800 லீட்டர் கொண்ட 4% - 6% ஹைபொக்லோரயிட் பொருள் (HCL) இற்கான வைத்தியசாலைக்கான வருடாந்த தேவையை ஒப்பந்ததாரரினால் 2021 ஆம் ஆண்டு முழுவதும் வழங்கப்படவில்லை என்பதுடன், மேற்படி இடங்களை சுத்தம் செய்வதற்காக வைத்தியசாலையினால் லைசோல் போன்ற கிருமி நாசினி சுத்திகரிப்பு பொருள் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனினும், ஒப்பந்தத்தின் 25 ஆவது நிபந்தனையின் பிரகாரம் சுத்தம் செய்வதற்காக பரிந்துரைக்கப்பட்ட கலவைக்கு அமைய கிருமி நாசினி மற்றும் இரசாயனப் பொருட்கள் ஒப்பந்ததாரரினால் வழங்காத சந்தர்ப்பங்களில் வைத்தியசாலையினால் அந்த பொருட்களை கொள்வனவு செய்து அவற்றின் விலையில் 10 சதவீதம் அபராதத்தைச் சேர்த்து ஒப்பந்ததாரரிடம் இருந்து அறவிடப்பட வேண்டும். எனினும் அவ்வாறு செய்யாத காரணத்தால் அது மேற்குறிப்பிட்ட பகுதிகளில் தொற்று கட்டுப்படுத்தலுக்கு பாரிய தாக்கம் செலுத்தும் என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(v) ஒப்பந்தத்தின் 40 (v) நிபந்தனையின்படி, சுத்திகரிப்பு சேவைக்காக ஈடுபடுத்தும் ஊழியர்கள் குறைந்தபட்சம் 20 சதவீதமாவது ஆண் ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும். எனினும், ஒப்பந்ததாரரினால் அவ்வாறு போதியளவு ஆண் ஊழியர்கள் வைத்தியசாலையின் சுத்திகரிப்பு சேவைக்காக ஈடுபடுத்தாத காரணத்தால் கட்டிடங்களின் கண்ணாடிகளை சுத்தம் செய்தல், வைத்தியசாலை தோட்டங்களை சுத்தம் செய்தல் மற்றும் வைத்தியசாலையின் வடிகால் அமைப்புகளை சுத்தம் செய்தல் சரியாக செய்யப்படவில்லை. இதனால் 2021 ஆம் ஆண்டில் பெறப்பட்ட 235 லீட்டர் கண்ணாடிகள் சுத்தம் செய்யும் பொருள் வைத்தியசாலையின் பிரதான களஞ்சியத்தில் உபயோகிக்காமல் காணப்பட்டதுடன், அவற்றின் பெறுமதி சுமார் ரூ. 49,350 என்பது அவதானிக்கப்பட்டது.

(vi) சுத்திகரிப்பு சேவை ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட வாடகை செலுத்தும் சுத்திகரிப்பு சேவை அலுவல அறைக்கு மேலதிகமாக வைத்தியசாலையின் வாட்டு இலக்கம் 03 இற்குரிய தனி மண்டப வளாகமும் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனினும், அந்த மேலதிக வசதிகளுக்காக வைத்தியசாலை அத்தியட்சகரினால் விநியோகத்தரிடமிருந்து எவ்வித கட்டணமும் அறவிடப்பட வில்லை.

(ஒ) கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவின் ஆய்வுகூடத்திற்காக Full Automated Biochemistry Analyser உபகரணமொன்று கொள்வனவு செய்ததற்காக 2019 ஆகஸ்ட் 30 ஆம் திகதி தேசிய ரீதியில் போட்டியுடனான விலைமனுக்கள் கோரல் முறையை பின்பற்றி விலைமனுக்கள் கோரப்பட்டு 2021 மே மாதத்தில் ரூ. 7,500,000 பெறுமதியான உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(i) இலக்கம் 02 எனும் விபரக்குறிப்பிற்கு அமைய உபகரணத்தின் திறன் மணித்தியாலத்திற்கு 800 பரிசோதனைகள் ஆகும். உபகரணம் நாளாந்தம் சுமார் 05 மணித்தியாலங்கள் இயங்குவதாயின் என்ற அனுமானத்தில் உபகரணத்தின் மொத்த திறன் ஒரு நாளைக்கு பரிசோதனைகள் 4000 ஆகும். இந்த புதிய உபகரணம் கொள்வனவு செய்வதற்கு முன் வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் காணப்பட்ட Kone 60 வகைக்குரிய Biochemistry Analyser உபகரணத்தைப் பயன்படுத்தி 2019, 2020 மற்றும் 2021 ஆகிய 3 ஆண்டுகளில் சராசரியாக சுமார் 614 பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன. எனினும் இந்த சராசரி நாளாந்த பரிசோதனை திறனைத் தாண்டி குறைந்தபட்சம் நாளாந்த பரிசோதனைகள் சுமார் 4,000 இனை செய்ய முடியுமான புதிய உபகரணத்தை கொள்வனவு செய்வதற்கான அவசியத்தை அடையாளம் காண்பது குறித்து எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை.

(ii) மருத்துவ உபகரணங்களுக்கான தொழில்நுட்ப அளவுகோல்களைத் தயாரித்து ஒப்புதல் பெறுவதற்கான பொறுப்பு வழங்கப்பட்ட உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவினால் இந்த வகை உபகரணத்திற்காக பயன்படுத்தப்பட வேண்டிய நிலையான தொழில்நுட்ப விபரக்குறிப்புகள் தயாரிக்கப்படவில்லை. இந்த கொள்வனவில் உபகரணத்திற்கான தொழில்நுட்ப விபரக்குறிப்புகள் தயாரித்து தருமாறு உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவிடம் கோரப்படவில்லை என்பதுடன், வைத்தியசாலையினால் தயாரிக்கப்பட்ட தொழில்நுட்ப விபரக்குறிப்புகள் உயிரியல் மருத்துவ

பொறியியல் பிரிவிற்கு அனுப்பி அங்கீகாரம் பெறப்படவுமில்லை. வைத்தியசாலையினால் இந்த கொள்வனவில் பாவிக்கப்பட்ட தொழில்நுட்ப விபரக்குறிப்புகளுக்கு இது போன்ற உபகரணங்கள் கொள்வனவு செய்யும் போது சேர்க்கப்பட வேண்டிய 02 முக்கியமான அளவுகோல்கள் சேர்க்கப்படவில்லை.

(iii) Full Automated Biochemistry Analyser (ARCHITETT C 8000) உபகரணத்திற்காக 05 விலைமனுதாரிகளால் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஆதில் 04 விலைமனுதாரிகள் தமது விலைமனுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட விபரக்குறிப்பு, தேவையான விபரக்குறிப்புடன் பொருந்தாததால் எதிர்வினை, நுகர்வு மற்றும் அளவுத் திருத்தங்கள் (Reagents, Consumables and Calibrators) தொடர்பாக ஒரு விலை சீராக்கல் செய்யாமல் நிராகரித்து எஞ்சிய ஒரேயொரு விலைமனுதாரி (Hemas Surgicals & Diagnostics (Pvt) Ltd) கணிசமாக பதிலளித்த விலைமனுதாரியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஆனாலும் அந்த விலைமனுதாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட விபரக் குறிப்புகளில் முக்கியமான (CRITICAL) விபரக் குறிப்புகள் 05, தேவையான விபரக் குறிப்புக்கு முரணானது என்பதால் அந்த விலைமனுதாரியும் நிராகரிக்கப்படல் வேண்டும் என்றபோதிலும் அதற்கு மாறாக அது குறித்து தெளிவுபடுத்தல்கள் இன்றி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு தமது பரிந்துரையை வழங்கியுள்ளது என்பதுடன், அதனை அடிப்படையாகக் கொண்டு அந்த விலைமனுதாரியிடமிருந்து உபகரணத்தை கொள்வனவு செய்வதற்கு கொள்ளல் குழு பரிந்துரை வழங்கியுள்ளது.

(iv) தற்போது இந்த உபகரணம் வைத்தியசாலையின் பழைய வெளிநோயாளர் ஆய்வுகூடத்தில் நிறுவப்பட்டிருந்த போதிலும், இந்த வெளிநோயாளர் ஆய்வுகூடம் வைத்தியசாலையின் புதிதாக அமைக்கப்பட்ட கட்டிடத்திற்கு மாற்றம் செய்ய இருப்பதால் அந்த புதிய கட்டிடத்தில் இந்த உபகரணத்தை மீண்டும் நிறுவுவதற்கான பொறுப்பை விநியோகத்தர் ஏற்க வேண்டும் என தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அங்கத்தவர் ஒருவரினால் 2019 நவம்பர் 26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவை உரிய விலைமனுதாரிக்கு சமர்ப்பித்து பதிலைப் பெற வேண்டும் என பிரதிப் பணிப்பாளர் நாயகம் 2020 ஜனவரி 06 ஆம் திகதியன்று குறிப்பிட்டுள்ளார். இருப்பினும் இந்த கொள்வனவை வழங்க முன் விலைமனுதாரியிடம் இந்த விடயத்தை கேட்டு பதிலை பெறுவதற்கு வைத்தியசாலை தவறியதால் இந்த உபகரணம் புதிய கட்டிடத்தில் மீண்டும் நிறுவுவதற்கான பொறுப்பை ஒப்படைத்தல் தொடர்பாக சிக்கல்கள் ஏற்படும் ஆபத்து உள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(v) அரச கொள்ளல் வழிகாட்டல் கோவையின் 4.2.2 இன்படி கொள்ளல் காலக்கெடு தயாரிக்காமல் செயற்பட்டதால் அரச கொள்ளல் வழிகாட்டல் கோவையின் 4.2.3 இற்காக வெளியிடப்பட்ட 31வது துணை இணைப்பின்படி ரூபா மில்லியன் 1 - 20 வரையான கொள்வனவுகளுக்காக எடுக்கப்பட வேண்டிய அதிகபடியான காலம் 4 வாரங்கள் என்பதை தாண்டி 104 வாரங்களுக்கு மேற்பட்ட காலம் எடுக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே இந்த உபகரணத்திற்கான கேள்வி ஆவணங்களில் செல்லுபடியாகும் காலம் 2019 டிசம்பர் 06 ஆம் திகதி காலாவதியான போதிலும் செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பு செய்வதற்கு வைத்தியசாலையினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதன்

காரணத்தால் 2019 டிசம்பர் 11 ஆம் திகதி இந்த உபகரணத்திற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தீர்மானம் வழங்கப்படும் போதும் அதற்கான விலைமனு செல்லுபடியாகும் நிலையில் இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(vi) இந்த உபகரணத்தை கொள்வனவு செய்வதற்கான ஆடர் 2021 மார்ச் 12 ஆம் திகதி வெளியிடும் போது விலைமனுவின் மற்றும் விலைமனு பாதுகாப்பின் செல்லுபடியாகும் காலத்தைத் தாண்டி 01 வருடமும் 02 மாதங்கள் கூடுதலான காலம் எடுக்கப்பட்டிருந்தது. இருந்தபோதிலும் அவற்றின் செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பு செய்வதற்கு வைத்தியசாலையினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது மேலும் அவதானிக்கப்பட்டது.

(vii) இந்த உபகரணம் (ARCHITETT C 8000) இற்கான விபரக் குறிப்புகளில் பொருள் இலக்கம் 41.4 இன்படி Original Equipment Manufacturer (OEM) certificate certifying the equipment is brand new and the date of Manufacturer certified by the Manufacturer shall be handed over with the equipment எனும் விபரக் குறிப்பு முக்கிய அளவுகோல் என்றபோதிலும், மேற்படி உபகரணத்தை வழங்கும் வேளையில் இந்த சான்றிதல் பெறப்படவில்லை என்பதால் இந்த உபகரணம் Brand New உபகரணமா என்பது குறித்து சிக்கல் நிலை காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இது குறித்து கணக்காய்விற்கு Certification of Compliance என்று குறிப்பிட்டு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் அது மேலே குறிப்பிட்ட தேவையைப் பூர்த்தி செய்யும் ஆவணம் அல்ல என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(viii) திறக்கப்பட வேண்டிய பரிசோதனை வகைகள் எவை என்பது பற்றி வைத்தியசாலையினால் உறுதியாக அடையாளம் காணாமல் விபரக் குறிப்புகளில் இலக்கம் 13 இன் கீழ் there shall be minimum of 15 open channels to operate and use third party reagents and produce accurate test results என்று கூறப்பட்டதன் மூலம் விலைமனுதாரி விரும்பியவாறு திறக்கப்பட்ட பரிசோதனை வகைகளை தீர்மானிப்பதற்கு இடமளிக்கப்பட்டதால் அதிக அளவில் மேற்கொள்ளப்படும் பரிசோதனை வகைகளுக்காக தேவைப்படும் reagents போட்டியுடனான விலையின் கீழ் பெறவிருந்த வாய்ப்புகள் வைத்தியசாலையினால் இழக்கச் செய்துள்ளது என்பதுடன், அதற்கு மாறாக "As per the request We could Provide Provisions to have 15 open channels" என விலைமனுதாரியினால் குறிப்பிடப்பட்ட போதிலும் 2022 மார்ச் 31 ஆம் திகதி வரை திறக்கப்பட வேண்டிய பரிசோதனை வகைகள் எவை என்பது பற்றி கண்டறிந்து அதன்படி போட்டியுடனான குறைந்த விலையை பெறுவதற்கு வைத்தியசாலையினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ix) கொள்ளல் வழிகாட்டல் கோவையின் மற்றும் கையேட்டில் உள்வாங்கப்பட்ட பின்வரும் நியதிகளுக்கு அமைய கொள்வனவு மேற்கொள்ளப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

கொள்ளல் வழிகாட்டல் கோவை/ கையேடு	இணங்காமை தொடர்பான விபரங்கள்
கொள்ளல் வழிகாட்டல் கோவையின் 2.12	கொள்ளல் குழு அங்கத்தவர்கள், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அங்கத்தவர்கள் மற்றும் Clerk உத்தியோகத்தர் மூலம் அந்த குழுவின் முதலாவது கூட்டத்தின் போது கொள்ளல் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இரகசியத்தன்மையை வெளிப்படுத்தும் படிவத்தை பூர்த்தி செய்து சமர்ப்பித்தல் வேண்டும் எனினும், கொள்ளல் குழு அங்கத்தவர்கள் மற்றும் Clerk உத்தியோகத்தர் அவ்வாறு செய்யவில்லை.
கொள்ளல் வழிகாட்டல் கோவையின் 2.14.1	ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன் கொள்ளல் குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரைக்கு உரிய அதிகார சபையின் பரிந்துரை பெறப்படல் வேண்டும். எனினும், 2021 ஏப்ரல் 29 ஆம் திகதி கொள்ளல் தீர்மான இலக்கம் 280 இன் கீழ் பிராந்திய கொள்ளல் குழுவினால் வழங்கப்பட்ட கொள்ளல் தீர்மானத்திற்கு உரிய அதிகார சபையின் அனுமதி பெறப்படவில்லை.
கொள்ளல் வழிகாட்டல் கோவையின் 6.3.6	விலைமனு திறத்தல் தொடர்பான நடவடிக்கைகள் உரிய படிவமொன்றில் அறிக்கையிடப்படல் வேண்டும் எனினும் அவ்வாறான ஒரு அறிக்கை வைத்தியசாலையினால் பராமரிக்கப்படவில்லை. அதற்கு மாறாக விலைமனு திறத்தலுக்காக பங்கேற்றவர்களின் பெயர் பட்டியல் மாத்திரம் கணக்காய்விற்கு சமர்ப்பித்துள்ளது.

(x) தொழில்நுட்ப சிக்கல்கள் உள்ள இது போன்ற உபகரணமானது, கோரப்பட்ட தொழில்நுட்ப விபரக்குறிப்புகளின்படி வழங்கப்பட்டதா என்பது குறித்து அது தொடர்பான விஷேட அறிவு கொண்ட உயிரியல் மருத்துவ பொறியியலாளர் ஒருவரினால் சோதித்து பொறுப்பேற்கப்படல் வேண்டும் எனினும் அவ்வாறு செய்யவில்லை என்பதுடன் அதற்குப் பதிலாக நோயியல் பிரிவிற்கு பொறுப்பான விஷேட மருத்துவ நிபணர் ஒருவரினால் திகதி குறிப்பிடப்படாத விலைப்பட்டியலில் கையொப்பமிட்டு அந்த உபகரணம் பொறுப்பேற்கப்பட்டுள்ளது. இக்காரணத்தால் உபகரணம் உண்மையாகவே வைத்தியசாலைக்கு விலைப்பட்டியலில் குறிப்பிடப்பட்ட தினத்தில் கிடைத்ததா அல்லது அதற்குப் பின்னரான தினமொன்றில் கிடைத்ததா என்பது குறித்து உறுதிப்படுத்த முடியாததால் விலைமனு ஆவணத்தில் ஒப்பந்த தரவு CC 15.1 III a இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உபகரணம் வழங்குவதற்கு இணங்கம் தெரிவித்த காலத்தை விட எவ்வளவு காலம் தாமதித்து

உபகரணம் கிடைத்தது என்பது பற்றி சரியான உறுதிப்படுத்தலை பெற முடியவில்லை. எனவே அறவிடப்பட்டிருந்த தாமதக் கட்டணம் சரியான தொகையா என்பது பற்றி உறுதி செய்ய முடியவில்லை.

(xi) ஒரேயொரு விலைமனுதாரியினால் ஒரெயொரு வகை உபகரணத்திற்கு (அதாவது ARCHITETT C 8000 வகைக்குரிய Full Automated Biochemistry Analyser) பயன்படுத்தப்படும் Reagents, Consumables மற்றும் Calibrators தொடர்பாக இதற்கு முன் 01 வருடமும் 08 மாதங்களுக்க முன்னர் அதாவது 2017 ஜனவரி 06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட ஒரு அலகிற்கான விலை (வரியின்றி) மற்றும் இந்த உபகரணம் தொடர்பாக 2019 செப்டெம்பர் 17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட ஒரு அலகிற்கான விலை (வரியின்றி) இற்கும் இடையே 27 சதவீத அதிகரிப்பு குறித்து தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் கொள்ளல் மதிப்பீட்டுக்குழு தமது அவதானத்தை செலுத்தாத காரணத்தால் மேற்படி உபகரணத்திற்கு பயன்படுத்தப்படும் Reagents, Consumables மற்றும் Calibrators இற்காக கூடுதலாக பணம் செலுத்துவதற்கான சூழலை வைத்தியசாலை உருவாக்கிக் கொடுத்துள்ளது.

(xii) உபகரணம் சரியாக இயங்குகிறதா என்பது பற்றி, பரிசோதனை செய்வதற்கு பல வகையான பரிசோதனைகளுக்காக விநியோக நிறுவனத்தினால் வழங்கப்பட்ட Reagent இனை பாவித்து விநியோகத்தரின் தலைமையில் 2021 ஜூலை 20 ஆம் திகதி மேற்கொண்டுள்ளதுடன், பரிந்துரைக்கப்பட்டவாறு உபகரணம் நிறுவப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்துவதற்கு விநியோகத்தரினால் வழங்கப்படும் நிறுவுவதற்கான சான்றிதழ் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(xiii) 2021 செப்டெம்பர் 27 ஆம் திகதி ஆய்வுகூடத்தில் உள்ள இன்வென்ரி புத்தகத்திற்கு இந்த உபகரணம் மட்டும் உள்வாங்கப்பட்டுள்ளதுடன், அதனுடன் கிடைக்கப்பட்ட உதிரிப்பாகங்கள் (moniter, USP, Printer போன்ற) குறித்தான தகவல்கள் உள்வாங்கப்படவில்லை.

(xiv) விபரக் குறிப்பு இலக்கம் 17 இன் மூலம் Barcode System வசதிகள் முக்கியமான அளவு கோலாக கோரியுள்ளதுடன் அந்த வசதிகள் நிறுவப்பட்டு இருந்தபோதிலும், ஆய்வுகூடத்தினுள் இவ்வசதிகள் பாவிக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஓ) சுகாதார அமைச்சின் கீழ் உள்ள 09 வைத்தியசாலைகளுக்கு திரவ மருத்துவ ஒக்சிஜனை களஞ்சியப்படுத்துவதற்கு 10 ஒட்சிஜன் தாங்கிகளை அனைத்து உதிரிப்பாகங்களுடன் வழங்கி நிறுவுவுதற்காக அமைச்சின் கொள்ளல் குழு "C1" இனால் 2020 ஆம் ஆண்டில் தேசிய போட்டியுடனான விலைமனு கோரல் முறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்பட்டு விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட ஒரேயொரு விலைமனுதாரிக்கு ரூபா.75,753,477 இற்கு (வரியின்றி) 2020 டிசம்பர் 19 ஆம் திகதி ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளதுடன், அந்த தினத்தில் இருந்து 336 நாட்களுக்குள் அதாவது 2021 நவம்பர் 20 ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து திரவ மருத்துவ ஒக்சிஜன் தாங்கிகளை வழங்கி நிறுவப்பட்டு வைத்தியசாலைக்கு கையளிக்க வேண்டும். இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(i) இந்த கொள்ளல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் போது மேலே குறிப்பிடப்பட்ட 09 வைத்தியசாலைகளில் தனியார் ஒக்சிஜன் விநியோக நிறுவனமொன்றினால் இலவசமாக வழங்கப்பட்டு நிறுவப்பட்டிருந்த திரவ மருத்துவ ஒக்சிஜனை களஞ்சியப்படுத்தும் 10 தாங்கிகள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் அந்த 10 தாங்கிகளை வைத்தியசாலைக்கு வழங்கி நிறுவும் போது 10 வருட காலங்களுக்கு அதிகாரத்தில் உள்ளவாறு உரிய வைத்தியசாலையுடன் ஒப்பந்தம் செய்துள்ளது. ஒப்பந்த நிபந்தனையின்படி, நிறுவனத்திற்கு அவற்றின் உரிமைகள் இருந்ததுடன், அந்ததந்த வைத்தியசாலைகளுக்குத் தேவையான திரவ மருத்துவ ஒக்சிஜனை அந்த நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யவேண்டியிருந்தது. மேலும் இந்த ஒக்சிஜன் களஞ்சிய தாங்கிகளில் உரிமை கட்டண அறவீடுகள் இன்றி 2024 ஆம் ஆண்டில் வைத்தியசாலைகளுக்கு ஒப்படைக்க முடியும் என நிறுவனத்தினால் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் அமைச்சிற்கு அறிவித்துள்ளது. இவ்வாறு 10 வருட காலங்களுக்கு ஒக்சிஜனைப் பெறுவதற்கு தனியார் ஒக்சிஜன் விநியோக நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளதால் அந்த ஒப்பந்த காலம் நிறைவடையும் வரை சுகாதார அமைச்சின் கீழுள்ள அந்த 09 வைத்தியசாலைகளுக்கு போட்டியுடனான விலைமனு கோரலின் கீழ் திரவ ஒக்சிஜன் பிரிதொரு நிறுவனத்திடமிருந்து பெறுவதற்கான கொள்ளல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டமை தொடர்பில் சட்டரீதியான தடைகள் உள்ளன எனவும், ஒக்சிஜன் களஞ்சிய தாங்கிகளில் உரிமை கட்டண அறவீடுகள் இன்றி 2024 ஆம் ஆண்டில் உரிய வைத்தியசாலைகளுக்கு ஒப்படைப்பதாக அந்த நிறுவனம் அறிவித்துள்ளமை, இதுவரை வைத்தியசாலையில் உள்ள ஒக்சிஜன் களஞ்சிய தாங்கி மூலம் போதுமான அளவு ஒக்சிஜன் தேவையை பூர்த்தி செய்துள்ளமை, ஒக்சிஜனை களஞ்சியம் செய்வதற்காக புதிதாக தாங்கிகள் தேவைப்படுவதாக உரிய வைத்தியசாலைகளினால் எழுத்துமூலம் கோரப்படாமை மற்றும் 2024 ஆம் ஆண்டின் பின்னர் திரவ மருத்துவ ஒக்சிஜனை போட்டியுடனான விலைமனு கோரல் முறையின் கீழ் கொள்வனவு செய்து வைத்தியசாலைகளில் உள்ள தாங்கிகளுக்கு நிரப்ப முடியும் என்பதால் இந்த வைத்தியசாலைகளுக்கு போட்டியுடனான விலைமனு கோரல் முறையின் கீழ் திரவ மருத்துவ ஒக்சிஜனை பெற்றுக் கொள்வதற்குப் பதிலாக புதிதாக தாங்கிகள் நிறுவ வேண்டிய அவசியம் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது. எனவே மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த கொள்வனவு பயனற்ற ஒரு கொடுக்கல் வாங்கல என்பது அவதானிக்கப்பட்டது.

(ii) கோவிட் தொற்று நாட்டில் நிலவிய காரணத்தால் 2021 மே மாதம் 06 ஆம் திகதி இந்த கொள்வனவின் முதலாவதாக திட்டமிடப்பட்டிருந்த 07 வைத்தியசாலைகளுக்குப் பதிலாக வேறு 07 வைத்தியசாலைகளில் திரவ மருத்துவ ஒக்சிஜனை களஞ்சிய தாங்கிகள் நிறுவுவதற்கு கொள்ளல் குழுவின் உள்ளடக்க அனுமதியின் கீழ் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் ஒப்புதல் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்கான கொள்ளல் குழுவின் தீர்மானம் 08 மாதங்கள் கடந்த பின்னரே பெறப்பட்டுள்ளது.

(iii) இந்த கொள்வனவின் கீழ் ஒப்பந்ததாரரினால் வழங்கப்பட வேண்டிய திரவ மருத்துவ ஒக்சிஜன் களஞ்சிய தாங்கிகள் 10 இல் 05 மாத்திரமே 05 வைத்தியசாலைகளுக்கு வழங்கி நிறுவப்பட்டுள்ளன. இருப்பினும், இந்த 05 வைத்தியசாலைகளில் 02 வைத்தியசாலைகள்

மாத்திரம் அதாவது இந்த கொள்வனவு ஆரம்பிக்க முன் ஒக்சிஜன் களஞ்சிய தாங்கி காணப்படாத தெல்தெனிய ஆதார வைத்தியசாலை மற்றும் கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலைகள் மட்டும் முறையாக ஒக்சிஜன் தாங்கிகளை வைத்தியசாலைக்கு பெற்று தற்போது பயன்படுத்தப்பட்டு வருவதுடன் ஏனைய 03 வைத்தியசாலைகள் அதாவது, இலங்கை தேசிய வைத்தியசாலை (இருதய நோய் பிரிவு), காசல் வீதி மகளிர் (போதனா) வைத்தியசாலை மற்றும் வெலிசர சுவாச நோய்கள் தொடர்பான தேசிய வைத்தியசாலைகளினால் ஒக்சிஜன் தாங்கிகள் முறையாக வைத்தியசாலைக்கு பெறப்பட்டு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காத காரணத்தால் ரூ. 20,151,647 செலவிடப்பட்ட இந்த ஒக்சிஜன் தாங்கிகள் இதுவரை சுமார் 1 ½ வருட காலமாக பயனற்று காணப்பட்டன.

(iv) 2019 ஆம் ஆண்டில் இந்த கொள்வனவிற்கு ஒதுக்கீடு பெறப்பட்ட போதிலும் அந்த வருடம் அரசாங்கத்தினால் செலவுகள் வரையறுக்கப்பட்ட காரணத்தால் இந்த கொள்வனவு 2020 ஜனவரி 29 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. அதன் போது கொள்ளல் வழிகாட்டல் கோவையின் 4.2.3 இன்படி பரிந்துரைக்கப்பட்ட படிவத்திற்கு புறம்பாக தயாரிக்கப்பட்ட கொள்ளல் கால அட்டவணையின்படி 2020 பெப்ரவரி 20 ஆம் திகதி விலைமனுக்கள் கோரப்பட்டு 2020 மார்ச் 26 ஆம் திகதி ஒப்பந்தத்தை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் திட்டமிடப்பட்ட காலத்தை விட 09 மாத காலம் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு தாமதித்தமையால் ஒப்பந்ததாரர் வழங்குவதற்கு இணங்கிய திரவ மருத்துவ ஒக்சிஜன் களஞ்சிய தாங்கிகள் 10 இனை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கான ஆடர் செய்தல் தாமதமானது என்பதுடன் 2021 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இந்தியாவில் கோவிட் தொற்று பரவிய காரணத்தால் அதில் ஒக்சிஜன் தாங்கிகள் 05 இனை வழங்க முடியாதுள்ளதாக ஒப்பந்ததாரரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஒப்பந்தத்தை வழங்குவதற்கு தாமதித்த காரணத்தால் கொள்வனவின் தொடக்கத்தில் ரூ.8,218,277 இற்கு பெறக்கூடிய 10000 லீட்டர் திரவ மருத்துவ ஒக்சிஜன் களஞ்சிய தாங்கிக்காக 2022 ஆம் ஆண்டில் ரூ.17,276,000 இனை அதாவது 100 சதவீதத்திற்கும் மேற்பட்ட அதிக விலைக்கு கொள்வனவு செய்துள்ளது.

(v) 2020 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த கொள்வனவின் ஊடாக இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் நிறுவுவதற்கு திட்டமிடப்பட்ட 10000 லீட்டர் திரவ மருத்துவ ஒக்சிஜன் களஞ்சிய தாங்கியை கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் நிறுவுவதற்கு அமைச்சினால் 2021 மே மாதம் 06 ஆம் திகதி தீர்மானித்து அதனை ஒப்பந்ததாரருக்கு அறிவித்துள்ளது. அதன்படி, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் 10000 லீட்டர் திரவ மருத்துவ ஒக்சிஜன் களஞ்சிய தாங்கியை கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2021 ஆகஸ்ட் 19 ஆம் திகதி மீண்டும் அதற்காக 111 – 01 – 05 - 2103 (11) எனும் செலவின விடய தலைப்பின் கீழ் ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்படி ஒரே விடயத்திற்காக இரண்டு முறை நிதி ஒதுக்குதல் பலவீனமான நிதி நிர்வகித்தல் என்பது அவதானிக்கப்பட்டது.

(vi) வைத்தியசாலைகளில் திரவ மருத்துவ ஒக்சிஜன் களஞ்சிய தாங்கிகள் நிறுவும் போது புதிதாக அடித்தளமிட கொள்வனவிற்கு முன்னரான கூட்டத்தில் ஒப்பந்ததாரர் இணங்கியுள்ளதுடன் அதற்கமைய கொழும்பு

தேசிய வைத்தியசாலையில் ஒக்சிஜன் தாங்கியை நிறுவுவதற்காக தரையை சீராக்குதல் மற்றும் கொங்றீட் அடித்தளம் இடுதற்காக ஒப்பந்ததாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட ரூ. 40,000 இனை தாண்டி ரூ. 428,000 உம், மதிப்பீட்டின் மூலம் இனங்காணப்படாத தாங்கிக்கு ஒக்சிஜன் விநியோகிக்கும் குழாயிக்காக ரூ.405,965 உம் என ரூ.833,965 இனை கூடுதலான செலவில் அதாவது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் ஒக்சிஜன் களஞ்சிய தாங்கியை நிறுவுவதற்கான மொத்த செலவில் 10 சதவீதத்தை விட அதிக செலவில் மேற்கொண்டுள்ளது. மேலும் மேலே குறிப்பிடப்பட்ட தாங்கிக்கு திரவ ஒக்சிஜனை விநியோகிக்கும் குழாய், தாங்கியின் பாதுகாப்பிற்காக அமைக்கப்பட்ட பாதுகாப்பு வேலி (Safty Fence) வாயில் கதவுகளை திறக்க முடியாதவாறு வாயிலுக்கு குறுக்கே போடப்பட்டுள்ளதால் ரூபா 85,000 செலவில் போடப்பட்ட பாதுகாப்பு வேலியினால் எதிர்பார்க்கப்படும் பாதுகாப்பு கிடைப்பதில்லை.

(vii) ஒப்பந்ததாரரினால் நிறைவேற்றப்பட்ட பணிகளுக்காக 8 வீதம் சேர்க்கப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் வரி சதவீதத்தை பயன்படுத்தி வரி இன்வோயிஸ் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் அமைச்சினால் 12 சதவீதம் வரியை அடிப்படையாகக் கொண்டு ஒப்பந்ததாரருக்கு கொடுப்பனவு மேற்கொண்ட காரணத்தால் ரூ. 710,220 மேலதிகமாக ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டுள்ளது. அதன்படி இவ்வாறு மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகையை ஒப்பந்ததராரரிடமிருந்து அல்லது பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்படல் வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.

(viii) பொது ஒப்பந்த சட்டத்தின்படி ரூபா. 5,000,000 இற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்ததாரர் பதிவு செய்யப்பட்டவராக இருத்தல் வேண்டும் என்பதுடன், ஒப்பந்தம் வழங்கப்பட்ட பின் PCA 4 பெறப்படல் வேண்டும். எனினும் அதனை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பது குறித்து கேள்வி ஆவணங்களில் அல்லது ஒப்பந்தம் வழங்கப்படும் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கவில்லை என்பதுடன் ஒப்பந்ததாரர் இந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தாரா என்பது கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை.

(ix) கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பண்டாரநாயக்க கட்டிடத்திற்கு அருகில் நிறுவப்பட்டிருந்த 20,000 லீட்டர் கொள்திறன் கொண்ட திரவ மருத்துவ ஒக்சிஜன் களஞ்சிய தாங்கிக்கான உரிமை வைத்தியசாலைக்குரியதா என்பது பற்றி வைத்தியசாலை அறிந்திருக்கவில்லை என்பதுடன், அதற்கான கொள்ளல் கோவைகளும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை. அதன்படி, போட்டியுடனான விலைகளின் கீழ் திரவ மருத்துவ ஒக்சிஜன் பெறுவதற்கான திறன் வைத்தியசாலைக்கு உள்ளதா என்பது குறித்து அவதானம் செலுத்தாது மற்றும் விலைமனுக்கள் கோராமல் தொடர்ந்தும் ஒக்சிஜன் வழங்கும் தனியார் நிறுவனத்திடமிருந்து அந்த தாங்கிக்கான திரவ மருத்துவ ஒக்சிஜனை பெற்றுக்கொண்டுள்ளது.

(ஒள) தேசிய கண் வைத்தியசாலையில் காணப்படும் உள்ளக தொலைபேசி அமைப்பு (PABX System) 2012 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டிருந்ததுடன், இந்த அமைப்பை பராமரித்தல் மற்றும் சேவைகள் என்பவற்றுக்காக 2012 ஏப்ரல் 28 ஆம் திகதி தொடக்கம் 2020 ஏப்ரல் 27 ஆம் திகதிவரையான 08 வருட காலத்தினுள் அமைப்பின் விநியோகத்தருக்கு வருடாந்தம் கட்டணம் செலுத்தி இந்த சேவை

பெறப்பட்டுள்ளது. இது குறித்து மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) விநியோகத்தரினால் சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த பராமரிப்பு மற்றும் சேவை ஒப்பந்தம் தொடர்பில் தொலைத்தொடர்பு மற்றும் ஒழுங்குமுறை ஆணையத்தினால் ஒரு தொழில்நுட்ப அறிக்கை பெறப்பட்ட பின்னர் 05 நிபந்தனைகளின் கீழ் விநியோகத்தர் சமர்ப்பிக்கும் வருடாந்த பராமரிப்பு மற்றும் சேவை ஒப்பந்தத்திற்கான அங்கீகாரம் பெறப்பட்டு அதற்கமைய கொடுப்பனவுகள் மேற்கொள்வதற்கு வைத்தியசாலை பிராந்திய கொள்ளல் குழு தீர்மானம் எடுத்திருந்த போதிலும், 2014/2015 மற்றும் 2015/2016 ஆகிய இரு வருடங்கள் தவிர ஏனைய வருடங்களில் இவ்வாறு தீர்மனிக்கப்பட்ட நிபந்தனை விநியோகத்தருக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்படவில்லை என்பதுடன், விநியோகத்தரினால் சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த பராமரிப்பு மற்றும் சேவை ஒப்பந்ததை அவ்வாறே ஏற்று செயற்படுத்தியுள்ளது.

(ii) கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு கொள்ளல் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் உள்ளக தொலைபேசி அமைப்பின் பராமரிப்பு மற்றும் சேவைகள் நடக்காததால் கடந்த 07 வருட காலத்தினுள் விநியோகத்தருக்கு வழங்கப்பட்ட ரூபா 2 மில்லியனுக்கும் மேற்பட்ட தொகை பயனற்ற கொடுக்கல் வாங்கல் என அவதானிக்கப்பட்டதுடன், கொள்ளல் நிபந்தனைகளின்படி அமைப்பின் பராமரிப்பு மற்றும் சேவைகள் பெறப்பட்டதா என்பது பற்றி மதிப்பீடு செய்யாது மேற்கொள்ளப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளும் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து அறவிடப்படல் வேண்டும்.

- தீர்மானிக்கப்பட்ட நிபந்தனைகளின்படி தொலைபேசி அமைப்பில் செயலிழந்ததாக அறிவிக்கப்பட்டவுடன் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும். எனினும் 2014 ஆம் ஆண்டு முதல் 2020 ஏப்ரல் 27 ஆம் திகதி வரை வைத்தியசாலையினால் 277 சந்தர்ப்பங்களில் செயலிழந்தமை தொடர்பாக முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும் அதில் 112 சந்தர்ப்பங்களில் மாத்திரம் விநியோகத்தரினால் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதுடன் முறைப்பாடு செய்து 01 முதல் 104 நாட்கள் வரை தாமதித்து முறைப்பாட்டுக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- தீர்மானிக்கப்பட்ட நிபந்தனைகளின்படி மாதத்திற்கு ஒருமுறை தொலைபேசி அமைப்பு (PABX) சேவை பராமரிப்பு செய்தல் வேண்டும் என்றபோதிலும், விநியோகத்தரினால் அவ்வாறு எவ்வித சேவை பராமரிப்புகளும் மேற்கொள்ளப்படாமை அவதானிக்கப்பட்டது.

- தீர்மானிக்கப்பட்ட நிபந்தனைகளின்படி சேவை ஒப்பந்தத்தின் பிரகாரம் செலுத்த வேண்டிய பணம் காலாண்டுக்கு ஒருமுறை செலுத்த வேண்டும் என்பதுடன் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட மொத்த பெறுமதியும் கிடைத்தால் மட்டுமே ஒப்பந்தம் செல்லுபடியாகும் என்ற ஒரு நிபந்தனை விநியோகத்தரினால் சமர்ப்பிக்கப்பட்ட பராமரிப்பு மற்றும் சேவை ஒப்பந்தத்தில் உள்வாங்கப்பட்டுள்ளதால் சட்டரீதியில் சாதகமற்ற ஒரு நிலைக்கு வைத்தியசாலை முகங்கொடுக்க நேடிடும் என்பது அவதானிக்கப்பட்டது.

- விநியோகத்தரினால் சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த பராமரிப்பு மற்றும் சேவை ஒப்பந்தத்தில் உள்வாங்கப்பட்டுள்ள "SHEDULED SERVICES" என்ன என்பது குறித்தான விளக்கம் ஒப்பந்தத்தில் இல்லை என்பதுடன், அது குறித்து எவ்வித மதிப்பீடுகளும் செய்யாமல் பிராந்திய கொள்ளல் குழுவினால் மேற்படி ஒப்பந்தத்தை அங்கீகரித்துள்ளது. மேலும் "SHEDULED SERVICES" என்ன என்பது குறித்தான விளக்கம் வைத்தியசாலை முகாமைத்துவமும் அறிந்திருக்கவில்லை என்பது மேலும் அவதானிக்கப்பட்டது.

(iii) 2017/2018, 2018/2019 மற்றும் 2019/2020 ஆகிய வருடங்களுக்காக விநியோகத்தரினால் சமர்ப்பிக்கப்பட்ட பராமரிப்பு மற்றும் சேவை ஒப்பந்தத்திற்கு கொள்ளல் குழுவின் தீர்மானமானது முறையே 171 நாட்கள், 87 நாட்கள், 151 நாட்கள் தாமதித்தே கிடைத்துள்ளது. இவ்வாறு தாமதித்ததால் வைத்தியசாலையின் உள்ளக தொலைபேசி அமைப்பிற்கு பயனுள்ள வினைத்திறனான பராமரிப்பு மற்றும் சேவை பெறுவதற்கான வாய்ப்பு குறைந்துள்ளது.

(iv) 2020 ஏப்ரல் 27 ஆம் திகதியின் பின்னர் தற்போது வரையும் வைத்தியசாலையின் உள்ளக தொலைபேசி அமைப்பின் பராமரிப்பு மற்றும் சேவைக்காக தரப்பினர்களுக்கிடையே முறையான ஒப்பந்தங்கள் இருக்கவில்லை என்பதுடன், தற்போதுள்ள உள்ளக தொலைபேசி அமைப்பிற்குப் பதிலாக புதிய உள்ளக தொலைபேசி அமைப்பொன்றை நிறுவுவதற்கு விலைமனுக்கள் கோருவதற்காக 2021 ஒக்டோபர் 29 ஆம் திகதி பத்திரிகை விளம்பர கட்டணமாக ரூபா. 88,020 செலவு செய்யப்பட்டுள்ள போதிலும் புதிய உள்ளக தொலைபேசி அமைப்பிற்கான தேவை குறித்து எவ்வித மதிப்பீடுகளும் இன்றி ஆரம்பிக்கப்பட்ட இந்த கொள்ளல் நடவடிக்கைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டதால் அதற்காக செலவிட்ட பணம் பயனற்ற செலவாகும். இது குறித்து சுகாதார அமைச்சின் பணிப்பாளர் (கட்டிடம்) இனால் 2020 பெப்ரவரி 10 ஆம் திகதி செய்யப்பட்ட பரிந்துரையின் அடிப்படையில் இது தொடர்பான அறிவு கொண்ட தொழில்நுட்ப பொறியியலாளர் ஒருவரின் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் இவ்வாறான உள்ளக தொலைபேசி அமைப்பை 15 வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் பாவிக்க முடியும் என்பது அவதானிக்கப்பட்டது.

(v) தேசிய மட்டத்தில் பிரதான வைத்தியசாலையான இந்த வைத்தியசாலையின் ஊடாக நோயாளர் பராமரிப்பு சேவைகள் ஆயிரக்கணக்கான பயனாளிகளுக்கு திறனாகவும் தொடர்ச்சியாகவும் வழங்குவதற்கு வைத்தியசாலையின் உள்ளக தொலைபேசி கட்டமைப்பு முக்கியமானது என்பதுடன் அதனை முறையாக பராமரிப்பது வைத்தியசாலை நிர்வாகத்தின் பொறுப்பாக இருந்த போதிலும் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒப்பந்தம் செய்வதற்கு தாமதித்தல், கொள்ளல் தீர்மானங்களை விநியோகத்தருக்கு அறிவித்து முறைப்படி ஒப்பந்தம் செய்யப்படாமை, கொள்ளல் தீர்மானத்தின்படி பாராமரிப்பு மற்றும் சேவைகள் மேற்கொள்ளப்பட்டதை உறுதிப்படுத்தாமல் கொடுப்பனவுகள் செய்துள்ளதால் மேற்படி பொறுப்புகள் முறையாக நிறைவேற்றுவதற்கு வைத்தியசாலை நிர்வாகம் தவறியுள்ளது.

(க) 2021 ஆம் ஆண்டிற்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பொலிதீன் கழிவு பைகள் (Polythene Garbage Bag) இற்கான தேவை திறந்த விலைமனுக்களின் கீழ் கோருவதன் ஊடாக ஒரு தனியார் நிறுவனம் மற்றும் வைத்தியசாலைக்கு

சுத்திகரிப்பு சேவைகள் வழங்கும் 05 நிறுவனங்களினூடாக பெற்றுக் கொண்டதற்காக ரூபா 38,095,585 செலவிடப்பட்டுள்ளது. வைத்தியசாலைக்காக பொலிதீன் கழிவு பைகளை பெறல் மற்றும் வைத்தியசாலையின் பயன்பாட்டுக்காக அவை பகிர்ந்தளிக்கப்பட்ட முறை தொடர்பாக கணக்காய்வில் பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(i) ஒவ்வொரு வருடத்திற்கும் வைத்தியசாலையின் வாட்டு, சத்திர சிகிச்சை பிரிவு மற்றும் ஏனைய பிரிவுகள் உட்பட உள்ளக மற்றும் வெளிப்புற கழிவுகளை அகற்றுவதற்கு தேவையான பொலிதீன் கழிவு பைகளின் அளவுகள் மற்றும் தேவைப்படும் அளவுகள் என்பனவற்றை சரியாக இனங்காணாமல் வைத்தியசாலையினால் 2019 ஆம் ஆண்டிற்கான அறிக்கையின் அடிப்படையில் 2021 ஆம் ஆண்டிற்கான பொலிதீன் கழிவு பைகளுக்கான தேவை 2,328,084 அலகுகள் என அடையாளம் கண்டுள்ளது. எனினும் முழு வருடத்திற்கும் வைத்தியசாலையின் தேவைக்காக விநியோகத்தரிடமிருந்து 1,140,000 பொலிதீன் கழிவு பைகளை ஆடர் செய்துள்ளது. அதன்படி, கண்டறியப்பட்ட பொலிதீன் கழிவு பைகளின் தேவை 1,188,084 அலகுகள் அதாவது 51 சதவீதம் மிகைப்படுத்தி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் வைத்தியசாலைக்குத் தேவைப்படும் பொலிதீன் கழிவு பைகளை திறந்த விலைமனு கோரலின் ஊடாக விநியோகத்தரை தெரிவு செய்து அவர்களிடமிருந்து கொள்வனவு செய்தல் மற்றும் வைத்தியசாலைக்கு சுத்திகரிப்பு சேவைகள் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து கொள்வனவிற்காக இரண்டு விதங்களில் இந்த தேவையை பூர்த்தி செய்யப்பட்டமைக்கான காரணம் கணக்காய்வில் தெளிவாகவில்லை என்பதுடன், இவ்வாறு இரண்டு விதங்களில் கொள்வனவு செய்யப்பட்ட பொலிதீன் கழிவு பைகள் கழிவுகள் அகற்றுவதற்காக எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும் என்பது பற்றிய நடைமுறைகள் வைத்தியசாலையில் இருக்கவில்லை.

(ii) மேற்குறிப்பிட்ட நிலைமையில், வைத்தியசாலையின் பிரதான களஞ்சியத்தினால் வழங்கப்பட்டுள்ள மஞ்சள் நிற பொலிதீன் கழிவு பைகள் பாவிக்கப்படும் சிறய, நடுத்தர மற்றும் பெரிய அளவுகளில் குப்பை தொட்டிகளின் வீதம் முறையே 46, 25 மற்றும் 29 வீதமாக இருந்த போதிலும், 2021 மார்ச் 21 ஆம் திகதி முதல் 2022 ஜனவரி 31 ஆம் திகதி வரையிலான காலத்தினுள் பிரதான களஞ்சியத்தினால் வழங்கப்பட்ட மஞ்சள் நிற சிறய, நடுத்தர மற்றும் பெரிய அளவுகளில் உள்ள பொலிதீன் கழிவு பைகள் வீதம் முறையே 43, 7 மற்றும் 50 ஆகும். மேலும், மஞ்சள் அல்லாத ஏனைய நிற பொலிதீன் கழிவுப் பைகள் சிறய, நடுத்தர மற்றும் பெரிய அளவுகளில் உள்ள குப்பைத் தொட்டிகளின் சதவீதம் முறையே 29, 44 மற்றும் 27 ஆக இருந்த போதிலும், மேற்படி 10 மாதங்களில் வழங்கப்பட்ட ஏனைய நிற சிறய, நடுத்தர மற்றும் பெரிய அளவுகளில் உள்ள பொலிதீன் கழிவு பைகளின் சதவீதம் முறையே 29, 7 மற்றும் 64 ஆகும். அதன்படி, வைத்தியசாலையினால் சிறய, நடுத்தர மற்றும் பெரிய அளவுகளில் உள்ள தொட்டிகளுக்கு பாரிய அளவில் பொலிதீன் பைகள் பயன்படுத்தப்படுவதை அவதானிக்கக் கூடியதாக இருந்ததுடன், அதற்காக சுமார் 2,816,912 ரூபா அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

(iii) வைத்தியசாலையின் மருத்துவக் கழிவுகளை வெளியேற்றுவதற்காக மஞ்சள் நிற பொலிதீன் கழிவுப்பைகள் பயன்படுத்தப்படுவதுடன் சுகாதார

ஊழியர்களுக்கு சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட சுகாதார பராமரிப்பு கழிவகற்றல் முகாமைத்துவ பயற்சி மொடியுலரின் பிரகாரம் தொற்றுள்ள கழிவுகளை வெளியேற்றுவதற்கான இந்த கழிவுப் பைகள் 75 microns/300 gauge இனை கொண்டிருத்தல் வேண்டும். எனவே வைத்தியசாலையின் தேவைக்கென கோரப்பட்ட பொலிதீனின் தடிப்பு (Thickness of film) 300 gauge ஆக இருத்தல் வேண்டும். எனினும், விநியோகத்தரினால் 2021 ஆம் ஆண்டிற்காக வழங்கப்பட்ட மஞ்சள் நிற சிறய, நடுத்தர மற்றும் பெரிய அளவுகளை கொண்ட கழிவு பைகளின் பொதுவான பொலிதீன் தடிப்பு (Thickness of film) முறையே 216 gauge, 172 gauge மற்றும் 228 gauge என தொழில்துறை தொழில்நுட்ப நிறுவனம் (ITI) இனால் 2022 ஜூன் 22 ஆம் திகதியன்று வழங்கப்பட்ட சோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. அதன்படி வைத்தியசாலையினால் கோரப்பட்ட தேவையை விடவும் குறைந்த பொலிதீன் தடிப்பு (Thickness of film) கொண்டதாக வழங்கப்பட்ட மஞ்சள் நிற பொலிதீன் பைகளுக்கு செலுத்தப்பட்ட ரூ. 16,398,585 மொத்த தொகையும் பயனற்ற கொடுப்பனவாக அவதானிக்கப்பட்டது.

(iv) அவ்வாறே பச்சை, நீலம், சிவப்பு மற்றும் செம்மஞ்சள் நிற சிறய, நடுத்தர மற்றும் பெரிய அளவுகளைக் கொண்ட பொலிதீன் கழிவுப் பைகள் தொடர்பாகவும் வைத்தியசாலையினால் கோரப்பட்ட தேவையான பொலிதீன் தடிப்பு (Thickness of film) 200 gauge ஆகும். தொழில்துறை தொழில்நுட்ப நிறுவனம் (ITI) இனால் 2022 ஜூன் 22 ஆம் திகதியன்று வழங்கப்பட்ட சோதனை அறிக்கையின் படி விநியோகத்தரினால் 2021 ஆம் ஆண்டினுள் வழங்கப்பட்ட அந்த நிறங்களைக் கொண்ட பொலிதீன் கழிவு பைகளின் பொலிதீன் தடிப்பு (Thickness of film) வைத்தியசாலையினால் கோரப்பட்ட தடிப்பை விட குறிந்த தடிப்புள்ளவை என்பது அவதானிக்கப்பட்டது. எனவே மேற்படி நிறங்களில் கொள்வனவு செய்யப்பட்ட கழிவு பைகளின் பொலிதீன் தடிப்பு (Thickness of film) வைத்தியசாலையின் தேவையினை பூர்த்தி செய்யவில்லை என்பதால் 2021 ஆம் ஆண்டில் பெறப்பட்ட மேற்படி நிறங்களைக்கொண்ட சிறய, நடுத்தர மற்றும் பெரிய அளவு பொலிதீன் கழிவு பைகளுக்காக (கருப்பு நிறம் தவிர்ந்த) செலுத்தப்பட்ட ரூ. 8,453,654 மொத்த கொடுப்பனவும் பயனற்றதாக அவதானிக்கப்பட்டது.

(v) வைத்தியசாலைக்கு சுத்திகரிப்பு சேவைகள் வழங்கும் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள கருப்பு நிற பொலிதீன் கழிவுப் பைகளின் தடிப்பும் (Thickness of film) வைத்தியசாலையினால் கோரப்பட்டதை விடவும் குறைந்த தடிப்பு கொண்டவை என்பது தொழில்துறை தொழில்நுட்ப நிறுவனம் (ITI) இனால் 2022 ஜூன் 22 ஆம் திகதியன்று வழங்கப்பட்ட சோதனை அறிக்கையின் படி அவதானிக்கப்பட்டது. மேலும் சுத்திகரிப்பு சேவைகள் வழங்கும் ஏனைய 04 நிறுவனங்களினாலும் 2021 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட பொலிதீன் கழிவுப் பைகளின் தடிப்பும் (Thickness of film) அதேபோன்று அல்லது அதனை விடவும் குறைவானதாக இருக்கலாம் என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. மேலும் சுத்திகரிப்பு சேவைகள் வழங்கும் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பொலிதீன் கழிவுப் பை பொதிகளில் அதன் தடிப்பு "மைக்ரோன் 20 இற்கு மேற்பட்டது" (above 20 Microns) என குறிப்பிடப்பட்டுள்ளதைக் கொண்டு அதனை மேலும் உறுதி செய்யக்கூடியதாக உள்ளது. அதன்படி, 2021 ஆம் ஆண்டில்

சுத்திகரிப்பு சேவை வழங்கும் நிறுவனத்தினால் கருப்பு நிற பொலிதீன் கழிவுப் பைகள் பெறப்பட்டதற்காக செலுத்திய ரூ. 7,250,700 ஆனது பயனற்ற கொடுப்பனவு என்பது அவதானிக்கப்பட்டது.

(vi) 2019 ஆண்டில் இலக்கம் PER/B/2018/04 எனும் மருத்துவக் கழிவுகளை வெளியேற்றும் முறை மற்றும் அதன் சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்து வெளியிடப்பட்ட சுற்றுச்சூழல் கணக்காய்வு அறிக்கையினூடாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் மருத்துவக் கழிவுகளை வெளியேற்றுவதற்காக பயன்படுத்தப்படும் பொலிதீன் கழிவுப்பைகள் உரிய தடிப்பை கொண்டிருக்கவில்லை என்பது சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் பொலிதீன் பைகள் கொண்டிருக்க வேண்டிய உரிய தடிப்பை தொடர்ந்து பேணுவதற்கு வைத்தியசாலை நிர்வாகம் தவறியுள்ளது.

(vii) 2021 ஆம் ஆண்டில் வைத்தியசாலையின் சுத்திகரிப்பு சேவை பெறுவதற்கான கொள்வனவிற்கு உரிய கேள்வி ஆவணங்கள் ஊடாக 200 gauge இற்கு மேற்பட்ட தடிப்பு கொண்ட பெரிய, நடுத்தர மற்றும் சிறிய கழிவுப்பைகள் வழங்குமாறு கோரப்பட்டிருந்த போதிலும் பெரிய மற்றும் சிறிய கழிவுப் பைகளின் அளவு எவ்வளவு என்பது குறித்து அறிவித்திருக்கவில்லை. இதனை அதிகபட்ச அனுகூலமாக பயன்படுத்தி வைத்தியசாலையின் சுத்திகரிப்பு சேவை வழங்குனர்களினால் பல்வேறு அளவுகளில் பெரிய மற்றும் சிறிய கழிவுப் பைகள் வழங்கியதற்காக ஒரு அலகின் விலை 6 ரூபா முதல் 25 ரூபா வரையில் விலை அறவிடப்பட்டுள்ளது.

(viii) பொலிதீன் கழிவுப்பைகள் விநியோகிக்கும் ஒரு தனியார் நிறுவனத்தினால் இலங்கை தர நிர்ணய நிறுவனத்தினால் பெறப்பட்ட சோதனை அறிக்கை (Test Report) இனை சமர்ப்பித்து வைத்தியசாலையினால் அவசியம் என கோரப்பட்ட பொலிதீன் பைகளை விடவும் தடிப்பு கூடிய பொலிதீன் பைகளை வழங்குவதாக உறுதி செய்த போதிலும் அவ்வாறு செய்வதற்கு அந்த நிறுவனம் தவறியதால் அந்த பொலிதீன் பைகளின் தடிப்பை பரிசோதிப்பதற்கு தொழில்துறை தொழில்நுட்ப நிறுவனம் (ITI) இற்கு வைத்தியசாலையினால் செலுத்தப்பட்ட தொகையை விநியோகத்தருக்கு செலுத்த வேண்டிய தொகையில் இருந்து அறவிடுவதன் அவசியத்தை சுட்டிக்காட்டுகிறேன்.

(ix) மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு வைத்தியசாலையின் வாட்டு, சத்திர சிகிச்சைக்கூடம் மற்றும் ஏனைய பிரிவுகள் உட்பட உள்ளக மற்றும் வெளிப்புற கழிவுகளை வெளியேற்றுவதற்குத் தேவையான பொலிதீன் கழிவுப் பைகளின் அளவுகள் மற்றும் தேவைப்படும் அளவுகள் குறித்து கருத்தில் கொள்ளாது பொலிதீன் கழிவுப் பைகளை கோருதல், வழங்குதல் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட பொலிதீன் தடிப்பு கொண்ட பொலிதீன் கழிவுப்பைகள் வைத்தியசாலைக்கு கிடைப்பதை ஆய்வு செய்யாமை மற்றும் கண்காணிக்காமை போன்ற காரணங்களினால் பொலிதீன் கழிவுப்பைகளை பெறல் மற்றும் வழங்குதல் தொடர்பாக உள்ளக நிர்வாகம் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டதுடன், 2021 ஆம் ஆண்டில் வைத்தியசாலைக்குத் தேவையான பொலிதீன் கழிவுப்பைகள் பெறப்பட்டதற்காக ரூபா மில்லியன் 38 இற்கும் மேற்பட்ட தொகையை செலவிட்டுள்ளதுடன் அந்த செலவை பொருளாதார ரீதியில் நன்மை பெறுவதற்கு வைத்தியசாலை தவறியுள்ளது.

(ங) கண்டி தேசிய வைத்தியசாலையில் வரிசை முகாமைத்துவ அமைப்பு மற்றும் நோயாளர் தகவல் தொடர்பு அமைப்பு (Queue Management System and Patients Communication System (QMS)) இற்காக 2020 ஜூலை 01 ஆம் திகதி மாதாந்த வாடகை ரூபா. 257,247 என்ற ரீதியில் 2020 ஜூலை மாதம் முதல் 2023 ஜூன் மாதம் வரையான 03 வருட காலத்திற்கு ஒப்பந்தம் செய்துள்ளது. அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) அரச கொள்ளல் வழிகாட்டல் கோவையின் 2.8.5 இன்படி பிராந்திய கொள்ளல் குழுவிற்கு இவ்வாறான தொழில்நுட்ப அமைப்பு குறித்த அறிவுள்ள உத்தியோகத்தர் ஒருவர் அல்லது விடய அறிவு கொண்ட நிபுணர் ஒருவர் பங்கேற்கவில்லை என்பதுடன் இதற்கான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றும் நியமிக்கப்படவில்லை.

(ii) 2022 ஒக்டோபர் 12 ஆம் திகதி நிலவரப்படி உரிய அமைப்பு செயற்படாத காரணத்தால் Kiosks இயந்திரங்கள் 03 உம், Mini PC இயந்திரங்கள் 08 உம் மற்றும் 32 அங்குல தொலைகாட்சி இயந்திரங்கள் 06 உம் வைத்தியசாலையின் கிளினிக் மற்றும் வெளிநோயாளர் பிரிவின் Cardiology, Diabetes மற்றும் Gyn Clinic ஆகிய பகுதிகளில் செயலற்று காணப்பட்டன.

(iii) மேற்படி அமைப்பை செயற்படுத்துவதற்காக 2020 ஜூலை மாதம் தொடக்கம் 2022 பெப்ரவரி மாதம் வரையான காலப்பகுதியினுள் ரூபா. 4,751,339 இனை செலவிட்ட போதிலும் திட்டமிடல், நெறிப்படுத்தல் மற்றும் கண்காணிப்பு உட்பட உள்ளக நிர்வாகமொன்றை அறிமுகப்படுத்தப்படாத காரணத்தால் உரிய அமைப்பை இதுவரைக்கும் செயற்படுத்த முடியவில்லை.

(ச) கண்டி தேசிய வைத்தியசாலையினால் மின்சார பயணிகள் போக்குவரத்து வாகனம் மற்றும் மின்சார அன்புலன்ஸ் கொள்வனவு செய்தல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நோயாளர் பராமரிப்பு சேவையின் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் 2018 பெப்ரவரி 08 ஆம் திகதி ரூபா. 18,024,548 இனை செலவு செய்து மின்சார பயணிகள் போக்குவரத்து வாகனங்கள் 06 உம், மின்சார அன்புலன்ஸ் 04 உம் கொள்வனவு செய்யப்பட்டன. மின்சார வாகனங்களுக்கான விபரக் குறிப்புகள் மற்றும் தெரிவு செய்த விலைமனுதாரிகளின் விபரக்குறிப்புகள் தயாரிக்கும் போது கணிசமான தொழில்நுட்ப விலகல்கள் இருந்தன என தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கையின் ஊடாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மேலும் இந்த வாகனங்களை மேம்படுத்துவதற்காக பரிந்துரைக்கப்பட்ட போதிலும் அந்த வாகனங்களை சோதனை செய்தமைக்கான அல்லது மேம்படுத்தியமைக்கான அறிக்கை சமர்ப்பிக்கவில்லை. அதன்படி, கொள்ளல் வழிகாட்டல் கோவையின் 8.12.1 (ஆ) மற்றும் 8.12.2 (அ) இன்படி செயற்படுத்தப்படவில்லை. இருப்பினும் இந்த வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டு 2 வருடங்களின் பின்னர் மேடுகள் ஏறுவதற்கு இயந்திர திறன் போதுமானதாக இல்லை என பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.

(ii) வைத்தியசாலைக்கு பணமாகக் கிடைக்கும் நன்கொடைகள் தொடர்பாக 2017 மார்ச் 13 ஆம் திகதிய Health Ministry/ CA/17/2017 எனும் சுகாதார அமைச்சின் செயலாளரின் நிதி நிர்வாகம் தொடர்பாக அதிகாரமளிக்கும் கடிதத்தின் 16 (அ) இன் அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயல்பட்டு இந்த

திட்டத்திற்காக நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற ரூபா. 1,178,834 நிதி வைத்தியசாலை கணக்கில் வைப்புச் செய்யாமல் நேரடியாக உரிய நிறுவனத்திற்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

(iii) 2017 மார்ச் 13 ஆம் திகதிய Health Ministry/ CA/17/2017 எனும் நிதி நிர்வாகம் தொடர்பாக அதிகாரமளிக்கும் கடிதத்தின் 20.2 இன்படி, பிராந்திய கொள்ளல் குழுவிற்கு ரூபா. 10,000,000 வரை மட்டுமே கொள்ளல் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் அந்த எல்லைக்கு மேற்படும் கொள்வனவுகளுக்கு அமைச்சின் அனுமதி பெறப்படல் வேண்டும். எனினும், அவ்வாறு செய்யாமல் ஒரேயொரு திட்ட முன்மொழிவை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் 21 மற்றும் 26 ஆகிய இரு திகதிகளில் 02 பத்திரிகை அறிவித்தல் வெளியிட்டு 02 கொள்ளல் பணிகள் என குறிப்பிட்டு ரூபா. 14,420,126 இற்கு (வட் வரியுடன்) மின்சார வாகனங்கள் 08 கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

(iv) கொள்முதல் பணிகள் தொடர்பான டெண்டர் ஆவணத்தில் விலைமனு மதிப்பீடு செய்தல் மற்றும் ஒப்பீடு (ITB 35.4) ஆகிய விடயங்களின் கீழ் விலைமனுதாரியின் முன் அனுபவம் குறித்து கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன், ஒரே மாதிரியான வாகனங்கள் வழங்குவதற்கு விலைமனுதாரியின் அனுபவம் பயனாளிகளின் விபரங்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும் தேர்ந்தெடுக்கப்பட்ட விலைமனுதாரி அதே மாதிரி வாகனங்களை பிற நிறுவனங்களுக்கு வழங்கியமை தொடர்பான தகவல்கள் மற்றும் உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

(v) டெண்டர் ஆவணங்களின் விபரக்குறிப்பு இலக்கம் 4 (b) இன்படி, 05 வருட பராமரிப்பு ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என்றபோதிலும், மின்சார வாகன விநியோகத்தருடன் அத்தகைய பராமரிப்பு ஒப்பந்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஞ) உலக வங்கிக் கடனுதவி மூலம் செயற்படும் COVID 19 அவசர சிகிச்சை மற்றும் சுகாதார அமைப்புத் தயாரிப்புத் திட்டம் (மூன்றாவது துணை நிதியுதவி) இன் ஊடாக 2021 டிசம்பர் முதல் 2022 ஜனவரி வரையான காலத்தில் கோவிட் 19 நோயை தடுப்பதற்கு 16,101,724,809 ரூபா பெறுமதியான 13,999,050 டோஸ் பைசர் தடுப்பூசிகள் அரச மருந்தாக கூட்டுத்தாபனத்தின் ஊடாக கொள்வனவு செய்யப்பட்டு தொற்றுநோயியல் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) திட்டத்தினால் வணிக விலைப்பட்டியல் பிரதிகளைக் கொண்ட ஒரு கோவையை மாத்திரம் கணக்காய்விற்கு சமர்ப்பித்துள்ளதுடன், திட்டத்தின் இறுதிக் கணக்குகளின் குறிப்பு இலக்கம் 01 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள 16,101,724,809 மதிப்புள்ள 48 விலைப்பட்டியல்கள் ஊடாக கொள்வனவு செய்யப்பட்ட தடுப்பூசிகள் குறித்து கணக்காய்வு செய்வதற்கு வவுச்சர், விலைப் பட்டியல்களின் மூலப் பிரதிகள் மற்றும் பிற உறுதிப்படுத்தல்கள் வழங்கப்படவில்லை.

(ii) இந்த கட்டளையின் அனைத்து வகையிலிருந்தும் பெறப்பட்ட இந்த தடுப்பூசியின் 13,999,050 டோஸ்களில் 10,736,687,091 மதிப்புள்ள 7,951,710 டோஸ்கள் 2022 ஜூலை 31 இல் காலாவதியாகி உள்ளதுடன், அது நூற்றுக்கு 57 ஆக காணப்பட்டது.

(iii) தடுப்பூசிகளின் விநியோகச் சங்கிலி அங்கீகரிக்கப்பட்ட களஞ்சிய நிபந்தனைகளின் கீழ் இருப்பின், உற்பத்தியாளரின் சான்றிதழின் அடிப்படையில் 12 மாதங்கள் வரை ஆயுட்காலத்தை நீடிக்கலாம் என ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை ஒப்புதல் அளிக்கும் போது 781,560 டோஸ்கள் கொண்ட FN 9092 என்ற தொகுதி தடுப்பூசி விடுபட்டு 04 தொகுதிகளுக்கு மட்டும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதுடன் இந்த விடுபட்ட தொகுதியின் பெறுமதி 1,055,290,644 ரூபா ஆகும்.

(iv) பைசர் தடுப்பூசி 20,907,900 டோஸ்களில் 11,839,500 டோஸ் தடுப்பூசிகள் தடுப்பூசி ஏற்றல் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட போதிலும், தடுப்பூசி ஏற்றல் திட்டங்களில் தடுப்பூசியைப் பெற்ற சில சுகாதார நிறுவனங்கள் பரிந்துரைக்கப்பட்ட 30 நாட்களைக் கடந்ததால் தடுப்பூசிகளை பயன்பாட்டிலிருந்து விலக்கியுள்ளன.

ட) சுகாதார அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் The Project for Supply of Equipment of High Quantity Radiography with High Energy Radiation for Cancer Patients in Sri Lanka எனும் செயற்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் கராப்பிட்டிய போன்ற போதனா வைத்தியசாலைகளுக்கு CT Simulators இயந்திரங்கள் 03 கொள்வனவு செய்வதற்கு குறைந்த விலைக்கு சாதகமான பதிலளித்த விலைமனுதாரிக்கு வழங்கப்பட்டது. 344,752,756 ரூபா செலவிடப்பட்ட இந்த கொள்முதல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கொள்முதல் வழிகாட்டல் கோவையின் 4.2.3 (உ) இன்படி, பெரிய தாமதங்கள் ஏற்படும் போது அந்த தாமதத்திற்கான காரணங்களை விளக்கி, அதற்கான தீர்வு நடவடிக்கைகளை எடுப்பது அமைச்சு செயலாளரின் பொறுப்பாகும். அதன்படி, கொள்ளல் வழிகாட்டுதல் விதிகளுக்கு அமைய கொள்ளல் குழுவினால் கொள்முதல் நடவடிக்கைகளுக்காக ஒரு காலவரையறையை அனுமதித்துள்ளது. அந்த காலக்கெடுவிற்கு ஏற்ப கொள்முதல் பணிகளை மேற்கொள்வதற்கு தவறியுள்ளதுடன், திட்டமிடப்பட்ட 16 வாரங்கள் 113 வாரங்களினால் தாமதமாகின. எனவே, இந்த இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கான கொள்முதல் மிகவும் திறமையாக, பொருளாதார ரீதியில் பயனுள்ள வழியில் மேற்கொள்ளாததால் கால தாமதம் காரணமாக செலவாணி விகிதங்களில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களைத் தவிர்க்க எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

(ii) விநியோகத்தர்களின் பங்கேற்புடன் நடைபெற்ற ஏலத்திற்கு முந்திய கூட்டத்தில் (Pre bid meeting) கலந்துரையாடப்பட்ட விடயங்களின்படி 06 தொழில்நுட்ப விடயங்களை திருத்துவதற்கு கொள்வனவு குழு அனுமதி வழங்கியிருந்தது. அதன்படி, மாற்றங்கள் உட்பட அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப அளவுகோல்கள் அனைத்து விலைமனுதாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டதற்கான எந்த ஆதாரங்களும் தாக்கல் செய்யப்படவில்லை.

(iii) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் உறுப்பினராக இருந்த புற்றுநோயியல் நிபுணர், விபரக்குறிப்புகள் தொடர்பான 06 விடயங்களை மாற்றுவது தொடர்பான தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கைக்கு 2019 ஏப்ரல் 15 ஆம் திகதி கூட்டு ஒப்புதலில் கையெழுத்திட்டிருந்தாலும், 2019 செப்டம்பர் 09 ஆம் திகதியன்று விபரக்குறிப்புகள் 3.3 மற்றும் 4.2 இல் உள்ள குறைபாடுகளைக் குறிப்பிட்டு அடிப்படை விபரக்குறிப்புகளை நியாயப்படுத்தி தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் தலைவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மாற்றங்கள்

மேற்கொள்ளப்பட்ட முதல் கட்டத்தில் இந்த கருத்துக்கள் முன்வைக்கப்படாதது கணக்காய்வில் சிக்கலாக இருந்தது.

3.5 குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

அரச வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களுக்குத் தேவையான மருந்துகள், சத்திர சிகிச்சை மற்றும் ஆய்வுகூட உபகரணங்களை வழங்கும் மருத்துவ விநியோகப் பிரிவின் அலுவலக கட்டிடம் மற்றும் களஞ்சிய கட்டிடத் தொகுதியை உள்ளடக்கி 2016 ஆம் ஆண்டில் 6,503,846 ரூபா செலவில் 72 கெமராக்கள் கொண்ட CCTV கெமரா அமைப்பு குறித்து பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இந்த கெமரா அமைப்பு 02 ½ வருடங்களுக்கு மேலாக செயல்படாமல் இருந்தது.

(ஆ) CCTV கெமரா அமைப்பு தொடர்பான கொள்வனவில் (Design, Supply, Installation, Testing, Commissioning & Maintenance of CCTV Camera System for MSD) சம்பந்தப்பட்ட நிறுவனம் பராமரிப்பு மற்றும் சேவைப் பணிகளுக்கு முதல் ஆண்டு இலவசமாகவும் அடுத்த 05 வருடங்களுக்கான செலவு ஏல ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கொள்முதல் வழிகாட்டல் கோவையின் 8.9 இன்படி மருத்துவ விநியோகப் பிரிவு உரிய நிறுவனத்துடன் முறையான ஒப்பந்தம் அல்லது பராமரிப்பு ஒப்பந்தம் செய்து கொள்ளவில்லை.

(இ) திடீர் மின்வெட்டு காரணமாக அதன் இயக்க முறைமை செயலிழந்துள்ளதாகவும், UPS நிறுவப்படவில்லை என்பதாலும், சில இடங்களில் பொருத்தப்பட்ட கெமராக்கள் பழுதடைந்ததாலும், சில கெமராக்கள் சரியான கோணத்தில் பொருத்தப்படாததாலும் அவற்றின் படங்கள் தெளிவாக இல்லை எனவும், கெமரா அமைப்பின் Power off switch வெளிப்புறமாக நிறுவப்பட்டிருப்பதால் யாருக்கும் மின்சாரத்தை துண்டிக்கும் திறன் காணப்படுவதாலும், இயக்க அமைப்பை பாதுகாப்பான வேறொரு இடத்தில் பொருத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டு, 2021 டிசம்பர் 21 ஆம் திகதியன்று மீண்டும் நிறுவனத்திடமிருந்து அறிக்கையைப் பெறுவதற்கு உரிய பணி ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரை அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படாமை தொடர்பாக பின்தொடர்தல் மேற்கொள்ளப்படவில்லை.

(ஈ) 5,835,000 ரூபா செலவில் கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் Histopathology ஆய்வுகூடத்தில் பொருத்தப்பட்டிருந்த Freezing Microtome இயந்திரத்தின் செயற்பாட்டுக்குத் தேவையான Sanosil S010 Ag இரசாயனத்தை வழங்குமாறு 2022 நவம்பர் 16 அன்று வைத்தியசாலை நிர்வாகத்திடம் கோரியுள்ளது. எனினும், கணக்காய்வு தினமான 2023 பெப்ரவரி 22 நிலவரப்படி அந்த இரசாயனப்பொருள் வழங்கப்படாத காரணத்தால் இந்த இயந்திரம் செயலற்ற நிலையில் இருந்தது.

3.6 சர்ச்சைக்குரிய பரிவர்த்தனைகள்

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) 8,034,436 ரூபா பெறுமதியான பல்வேறு அளவுகளில் உள்ள Kumtscher Cloverleaf_Nail For Femur சாதனங்கள் 4962 அலகுகள் மற்றும் Unreamed Tibial Nails (UTN) சாதனங்கள் 966 அலகுகள் கண்டி தேசிய வைத்தியசாலையின் எலும்பு சத்திர சிகிச்சை (Orthoopedic) வளாகத்தில் அசையாத பொருட்களாக (Non moving items) களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) 2022 டிசம்பர் 24 ஆம் திகதியன்று மருத்துவ விநியோகப் பிரிவினால் 2023 ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் காலாவதியாகவிருந்த 12 வகையான மருந்துகளுடன் தொடர்புடைய மருந்துகளை பேராதனை வைத்தியசாலைக்கு கோரிக்கையின்றி வழங்கியிருந்தது. அந்த மருந்துகளில் பெரும்பாலானவை உரிய வைத்தியசாலையினால் பயன்படுத்தப்படாத காரணத்தால் அந்த மருந்துகள் காலாவதியாகி வருகின்றன.

(இ) குருணாகல் போதனா வைத்தியசாலை 2021 ஆம் ஆண்டில் அவசர கொள்வனவுகளாக (Local Purchase) 9,800,963 ரூபா பெறுமதியான மருந்துகளை கொள்வனவு செய்துள்ளது. அதன்படி, அந்த வருடத்தில் அவசர கொள்முதல்களின் போது கணனி தரவு அமைப்பில் மதிப்பிடப்பட்ட விலைக்கு அப்பால் 9 மருத்துவப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன், அப்பொருட்களின் விலை 24 சதம் முதல் 2461.24 ரூபா வரையில் மாறுபட்டு காணப்பட்டன. மேலும், மதிப்பிடப்பட்ட விலைக்கு மேல் கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகளின் பெறுமதி 7,846,673 என்பதுடன், அந்த மருந்துகள் மதிப்பிடப்பட்ட விலையில் கொள்வனவு செய்திருந்தால் அதன் பெறுமதி 2,646,533 ரூபா ஆகும். அதன்படி, அவசர கொள்முதல் காரணமாக 5,200,140 ரூபா கூடுதலாக செலுத்த வேண்டியிருந்தது.

(ஈ) 2020 ஜூன் 25 ஆம் திகதிய CA/AG/01/2019/01 எனும் இலக்க சுகாதார அமைச்சின் செயலாளரின் கடிதத்தின் 3 வது பந்தியில், மருத்துவம் அல்லாத நிர்வாகப் பணிகளை செய்யும் மருத்துவர்களுக்கு 12.00 – 1.00 வரை மதிய உணவு இடைவேளைக்கு வழங்கப்படும் மேலதிக நேர கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அது குறித்து கருத்தில் கொள்ளாமல் 2022 ஆம் ஆண்டில் கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையில் நிர்வாகப் பணிகளைப் புரியும் மூன்று மருத்துவர்களுக்கு 12.00 – 1.00 வரையான ஒரு மணித்தியாலத்திற்கு ரூபா 817,262 மேலதிக கொடுப்பனவுகளாக செலுத்தப்பட்டது.

(உ) உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு கொடுப்பனவுகள் மற்றும் மேலதிக நேர கொடுப்பனவுகளின் தொகை மாதாந்த ஒன்றிணைந்த சம்பளத்தை விட அதிகமாக இல்லாத வகையில் முறைமை தயாரிக்கப்பட வேண்டும் என தேசிய வரவு செலவுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 03/2022 எனும் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையில் நிர்வாகப் பணிகளைப் புரியும் மூன்று மருத்துவர்களுக்கு 2022 ஆம் ஆண்டு ஒன்றிணைந்த சம்பளத்தை விடவும் மேலதிகமாக ரூபா 749,353 இனை மேலதிக கொடுப்பனவாக வழங்கியுள்ளது.

(ஊ) 2001 ஆகஸ்ட் 31 ஆம் திகதிய 7/2001 (அ) எனும் இலக்க சுகாதார அமைச்சின் பொது சுற்றறிக்கையின்படி, நிர்வாக பதவிகளில் ஈடுபட்டுள்ள மருத்துவ அலுவலர்கள் விடுமுறை ஊதியத்தைப் பெற குறைந்தபட்சம் 08 மணித்தியாலம் பணியாற்ற வேண்டும். விடுமுறை நாட்களில் பணிபுரிவதற்காக சம்பளத்தின் 1/20 கொடுப்பனவு பெறுவதற்கு மேலதிகமாக ஒரு நாளைக்கு 08 மணித்தியாலங்களுக்கு மேல் பணியாற்றினால் அந்த மேலதிக நேரத்திற்கான மேலதிக நேர கொடுப்பனவுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் இல்லை.

எனினும், கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையில் நிர்வாகப் பணிகளைப் புரியும் மூன்று மருத்துவர்களுக்கு 2022 ஆம் ஆண்டு விடுமுறை தின கொடுப்பனவாக 1/20 கொடுப்பனவு வழங்கப்பட்ட நாட்களில் 08 மணித்தியாலத்திற்கு மேல் பணியாற்றிய காலத்திற்காக மேலதிக நேர கொடுப்பனவாக 560,177 ரூபாவை செலுத்தியுள்ளது.

3.7 சொத்து முகாமைத்துவம்

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) சுகாதார செயலாளர்/ சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகிய பதவிப் பெயர்களின் கீழ் மற்றும் மாகாண அரச சேவைகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட, இப்போது பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்ட மீண்டும் பழுதுபார்ப்பதற்கு முன்மொழியப்பட்ட 68 ஆம்புலன்ஸ் வண்டிகள் உள்ளதாகவும், தனியார் உதவியுடன் அவற்றை பழுதுபார்ப்பதற்கு ஒப்புதல் அறிக்குமாறு மேலதிக செயலாளர் (நிர்வாகம்) 01 இனால் 2020 நவம்பர் 26 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் கன்ட்ரோலர் ஜெனரலிடம் கோரப்பட்டது. அதன்படி, 2021 ஜனவரி 19 ஆம் திகதியன்று, அரசாங்க செலவினங்கள் ஏதுமின்றி தனியார் உதவியுடன் பழுதுபார்த்து இயங்குவதற்கு அனுமதிக்கப்பட்டது. அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2021 ஜனவரி 19 ஆம் திகதிய கடிதத்தின மூலம், 05 ஆம்புலன்ஸ் வண்டிகளை பழுதுபார்த்து தருமாறு சுகாதார அமைச்சின் செயலாளரினால் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபையின் மேயரிடம் கோரப்பட்டது. அதன்படி, 2021 ஜனவரி 27 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் மாநகர சபையின் தொழிலாளர் பங்களிப்பை வழங்குவதற்கும் தேவையான மேலதிக உதிரிப்பாகங்களுக்கு அமைச்சிடம் இருந்து ஒதுக்கீட்டைப் பெறவும் பரிந்துரைப்பதாக ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபையின் மாநகர ஆணையாளர் (பதில்) இனால் அறிவிக்கப்பட்டுள்ளது. இருந்த போதிலும், 2021 ஜனவரி 25 ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் வேண்டுகோளின்படி அந்த பாராளுமன்ற உறுப்பினரின் பெயரில் நிறுவப்பட்ட அறக்கட்டளை மின்னணு ஊடக நிறுவனத்துடன் இணைந்து பழுதுபார்ப்பதற்கு 4 ஆம்புலன்ஸ் வண்டிகள் போக்குவரத்து பிரிவின் போக்குவரத்து பணிகளின் தலைவரினால் உரிய அறக்கட்டளைக்கு வழங்கப்பட்டன. மேலும், 2021 ஜூன் 06 ஆம் திகதி 4 ஆம்புலன்ஸ் வண்டிகள் மற்றும் 2021 செப்டம்பர் 17 ஆம் திகதி மேலும் 05 ஆம்புலன்ஸ் வண்டிகளும், பெஜெரோ வண்டியும் இந்த அறக்கட்டளைக்கு வழங்கப்பட்டன. ஆம்புலன்ஸ் வண்டிகள் பழுதுபார்ப்பதற்காக ஒப்புதல் பெறப்பட்டாலும் முறையான அனுமதியின்றி வாகனத்தின் இயந்திரம் மாற்றப்பட்டதால் வருவாய் உரிமம் பெற முடியாமல் இயங்கக்கூடிய நிலையில் போக்குவரத்தில் இருந்து அகற்றப்பட்ட பெஜெரோ வண்டி பழுதுபார்ப்பதற்காக வழங்குவதற்கு பெறப்பட்ட ஒப்புதல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட கோவையில் சேர்க்கப்படவில்லை. மேலும் கணக்காய்வுத் தினமான 2023 மார்ச் 20 நிலவரப்படி அந்த வாகனம் பழுதுபார்த்து மீண்டும் அமைச்சிற்கு ஒப்படைக்கப்படவில்லை.

(ii) மேற்கண்டவாறு பலமுறை இந்த அறக்கட்டளைக்கு 11 ஆம்புலன்ஸ் வண்டிகள் மற்றும் ஒரு ஜீப் வண்டி ஆகியவை பழுதுபார்ப்பதற்காக வழங்கப்பட்ட போதிலும் அதற்காக சுகாதார செயலாளரின் ஒப்புதல்

வழங்கப்படவில்லை. சுகாதார செயலாளரினால் இந்த பாராளுமன்ற உறுப்பினரின் ஒருங்கிணைப்பின் கீழ் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபையினால் பழுதுபார்ப்பதற்காக வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்த 12 வாகனங்கள் முறையான அனுமதியின்றி இந்த அறக்கட்டளைக்கு வழங்கப்பட்டுள்ளன.

(iii) எவ்வித ஒப்பந்தமும் செய்யாமல் 12 வாகனங்களை அறக்கட்டளைக்கு வழங்கியதன் காரணமாக, பழுதுபார்க்கும் போது வாகனத்தின் பாகங்கள் காணாமல் போதல் அல்லது வாகனத்திற்கு ஏற்படும் சேதங்கள் அல்லது அது தொடர்பான வேலைகள் சரியாக செய்யப்படாமை அல்லது வாகனங்களை திருப்பித் தரப்படாமல் இருத்தல் போன்ற நிலைமைகள் ஏற்பட்டால் அதன்போது பொறுப்பான தரப்பினரை தீர்மானிப்பது சிக்கலாக இருந்தது.

(iv) 2021 ஆகஸ்ட் 30 நிலவரப்படி, அறக்கட்டளையினால் பழுதுபார்க்கப்பட்ட 6 ஆம்புலன்ஸ் வண்டிகளை மீண்டும் அமைச்சிற்கு ஒப்படைத்துள்ளது. அமைச்சின் போக்குவரத்து பணி தலைவரிடம் விசாரிக்கையில், மீதமுள்ள 06 வாகனங்கள் 2022 மார்ச் 20 ஆம் திகதியிலும் பழுதுபார்ப்புப் பணிகள் நிறைவடையவில்லை என கூறப்பட்டதுடன், அன்றைய தினமாகும் போது வாகனங்கள் பழுதுபார்க்க வழங்கப்பட்டு 1.5 வருடங்கள் கடந்துவிட்டன.

(ஆ) பேராதனை போதனா வைத்தியசாலையில் நோயாளர்களை கொண்டு செல்வதற்கு பயன்படுத்தப்படும் 1,800,000 ரூபா பெறுமதியான மைக்ரோ ஆம்புலன்ஸ் இயந்திரம் 2019 ஆம் ஆண்டு மே மாதம் தொடக்கம் பழுதுபார்க்கப்பட வேண்டியிருந்தது. மேலும் மற்றொரு ஆம்புலன்ஸ் 2022 ஜனவரி 22 ஆம் திகதி விபத்துக்குள்ளாகி பயன்படுத்தப்படாமல் இருந்தது. அந்த இரு வாகனங்களையும் பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கு அல்லது அகற்றுவதற்கு 2023 ஜனவரி 31 நிலவரப்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) 2019 ஏப்ரல் 22 ஆம் திகதி கணக்காய்வாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் வாகன முகாமைத்துவம் தொடர்பான விஷேட கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கிய தணிக்கை தொடர்பான தேவையான திருத்தங்கள் மற்றும் அந்த தணிக்கை அறிக்கையில் உள்ளடக்கிய பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது திருப்திகரமான மட்டத்தில் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது. இந்த நிலையில், அமைச்சின் வாகன முகாமைத்துவம் தொடர்பில் தற்போதைய நிலவரங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுகளின் போது பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(i) அமைச்சிற்குச் சொந்தமான வாகனங்களின் பயன்பாடு தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை என்பதுடன், பணிப்பாளர் (போக்குவரத்து) இனால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள், போக்குவரத்து பிரிவினால் பராமரிக்கப்படும் அமைச்சிற்கு சொந்தமான வாகனங்கள் பற்றிய இரண்டு சொத்துப் பதிவேடுகளில் உள்ள தகவல்கள், போக்குவரத்து பிரிவினால் பராமரிக்கப்படும் கணினி தரவு அமைப்பில் காட்டப்பட்டுள்ள தகவல்கள், 2019 ஏப்ரல் 22 ஆம் திகதி கணக்காய்வாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் வாகன முகாமைத்துவம் தொடர்பான விஷேட கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கிய தரவுகள் மற்றும் கணக்காய்வின் போது அடையாளம் காணப்பட்ட தகவல்களின் படி அமைச்சிற்கு சொந்தமான வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் தொடர்பில் அமைச்சினால் செயல்படுத்தப்படும் உள்ளக

நிர்வாக அமைப்பு மிகவும் பலவீனமான நிலையில் இருப்பதை அவதானிக்க முடிந்தது.

(ii) உண்மையான சிறப்பு தணிக்கை அறிக்கையின் 5.3.1 இல் காட்டப்பட்டுள்ள மோட்டார் வாகன திணைக்களத்தினால் பெறப்பட்ட தகவல்களின்படி, அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்ட ஆனால் அமைச்சின் வாகன பதிவேட்டில் பதிவு செய்யப்படாத 161 வாகனங்களில் 50 வாகனங்கள் 2023 ஏப்ரல் 10 ஆம் திகதியன்று கூட சொத்து பதிவேட்டில் பதிவு செய்யவில்லை என்பதுடன், சொத்து பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட 24 வாகனங்கள் பௌதீக இருப்பு உறுதி செய்யப்படவில்லை.

(iii) அமைச்சின் வாகன முகாமைத்துவ கணினி தரவு அமைப்பின்படி, 2023 மார்ச் 17 இல் 1301 வாகனங்களின் தரவுகள் உள்ளிடப்பட்டுள்ளதாக காட்டப்பட்ட போதிலும் அந்த வாகன இலக்கங்களில் 04 வாகன இலக்கங்கள் 3 சந்தர்ப்பங்களிலும் 98 வாகன இலக்கங்கள் 2 சந்தர்ப்பங்களிலும் அதில் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும் இதில் குறிப்பு இலக்கம் 681 இன் கீழ் சேர்க்கப்பட்டுள்ள WPPSO12345 என்ற வாகனத்தின் சரியான இலக்கம் கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை.

(iv) அமைச்சின் போக்குவரத்துப் பிரிவினால் பராமரிக்கப்படும் இரண்டு சொத்து பதிவேடுகளின் ஆய்வுகளின் போது அந்த சொத்து பதிவேடுகள் முறையாக ஒரு பொறுப்பான உத்தியோகத்தரின் பொறுப்பில் பராமரிக்கப்படவில்லை. அமைச்சின் செயலாளர் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் மத்திய அரச சுகாதார சேவைக்குரிய நிறுவனங்கள், வைத்தியசாலைகள் மற்றும் பல்வேறு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், அதிகளவான வாகனங்கள் மாகாண சபைகளின் கீழ் நிர்வகிக்கப்படும் வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும் சில வாகனங்கள் வெளி நிறுவனங்களுக்கும் விடுவிக்கப்பட்டுள்ளன. ஆனால் இந்த விடுவிப்புகள், ஒப்படைத்தல் அல்லது வழங்கல்கள் முறையாக சொத்துப் பதிவேடுகளில் பதிவு செய்யப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இந்த இரண்டு சொத்து பதிவேடுகளிலும் உள்ளடக்கிய அடையாளம் காணக்கூடிய குறிப்புகளின்படி, 1167 வாகனங்களை வழங்கும் போது விடுவிப்பு உத்தரவின் பேரில் வழங்கப்படவில்லை என்பதுடன், அதன்படி இந்த வாகனங்கள் உரிய நிறுவனங்கள் அல்லது வைத்தியசாலைகளுக்கு பெறப்பட்டதற்கான ரசீது உத்தரவுகளும் இல்லை. மேலும் 1870 வாகனங்கள் வழங்கும் போது விடுவிப்பு உத்தரவின் பேரில் விடுவிக்கப்பட்ட போதிலும் அது தொடர்பான ரசீது உத்தரவு பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(v) உண்மையான சிறப்பு தணிக்கை அறிக்கையின் 5.3.3 இன்படி, அமைச்சுக்கு சொந்தமான 679 வாகனங்கள் காணாமல் போனதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் 240 வாகனங்கள் இனங்காணப்பட்டதாக கூறப்பட்ட போதிலும் அதனை உறுதிப்படுத்தும் வகையில் போதிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை என்பதுடன், மேற்படி விஷேட கணக்காய்வு அறிக்கை வெளியிடப்பட்டு சுமார் 04 வருடங்கள் கடந்துள்ள போதிலும் இந்த கணக்காய்வு விசாரணை திகதி வரையில் 439 வாகனங்கள் பற்றிய தகவல்களைக் கண்டறிய முடியவில்லை.

(vi) கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, அமைச்சு மற்றும் நிறுவனங்கள் / வைத்தியசாலைகள் மற்றும் 68 பிரிவுகள் வசம் 1216 வாகனங்கள் உள்ளமை அவதானிக்கப்பட்டது. இந்த 1216 வாகனங்களில் 201 வாகனங்கள் தொடர்பான தகவல்கள் அமைச்சினால் பராமரிக்கப்படும் கணினி தரவு அமைப்பில் சேர்க்கப்படவில்லை. மேலும் இதில் 09 வாகனங்கள் அமைச்சின் போக்குவரத்து பிரிவினால் பராமரிக்கப்படும் சொத்து பதிவேட்டில் உள்வாங்கப்பட்ட போதிலும் வழங்கப்பட்ட நிலையம் குறிப்பிட்டிருக்கவில்லை என்பதுடன் 277 வாகனங்கள் குறித்த தகவல்கள் சொத்து பதிவேட்டில் சேர்க்கப்படவில்லை.

(vii) கணக்காய்விற்காக தகவல்கள் வழங்கப்பட்ட வாகனங்களில் 113 வாகனங்கள் பதிவு செய்யப்பட்ட உரிமையாளர் என வழங்கப்பட்ட தகவல்களின் உண்மை தன்மை கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை. மேலும் 17 வாகனங்களின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளர் குறித்த தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(viii) கணக்காய்விற்காக தகவல்கள் வழங்கப்பட்ட வாகனங்களில் 39 வாகனங்களுக்கு சுப்பர் டீசல் பாவிக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதே நிலை கொண்ட பெருமளவு எண்ணிக்கையிலான வாகனங்களுக்கு சாதாரண டீசல் பாவிக்கப்படுவதுடன் இந்த 39 வாகனங்களுக்கும் சுப்பர் டீசலைப் பயன்படுத்துவதற்கு சிறப்பு அனுமதி வழங்கப்பட்டதா என்பது குறித்து கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை.

(ix) கணக்காய்விற்காக தகவல்கள் வழங்கப்பட்ட வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பற்றி ஆராயும் போது, ஒரே வகையான வாகனங்களின் ஒரு லீட்டர் எரிபொருள் மைலேஜில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இருப்பது அவதானிக்கப்பட்டது. இது தொடர்பான சுருக்கம் பின்வருமாறு.

வாகன வகை	ஒரு லீட்டர் எரிபொருளுக்கு ஓடும் தூரம்
கார்கள்	3-15
கெப்கள்	4-9
ஆம்புலன்ஸ்கள்	3-20
ஜீப்கள்	4-8
முச்சக்கர வண்டிகள்	7-24
பேருந்துகள்	1.5-10
லோறிகள்	3-7
வேன்கள்	4-10

(x) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள வைத்தியசாலைகள், நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளில் பயன்படுத்தப்படும் 783 வாகனங்களின் மதிப்பு ரூபா 4,119,274,717 என்பதுடன், 433 வாகனங்களின் பெறுமதி / விலை குறிப்பிடப்படவில்லை.

(xi) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள வைத்தியசாலைகள், நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளில் பயன்படுத்தப்படும் வாகனங்களின் பின்வரும் விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்கள் 237 இன் தற்போதைய நிலையை கணக்காய்வில் உறுதிப்படுத்தவில்லை.

விபரம்	வாகனங்களின் எண்ணிக்கை
இயங்கும் நிலையில் இல்லாத	01
விபத்துக்குள்ளான	01
அழித்தலுக்கான கோரிக்கை சய்யப்பட்ட	02
பழுதுபார்க்க பரிந்துரைக்கப்பட்ட	160
அழிந்த நிலையில் உள்ள	10
தற்காலிகமாக பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்ட	02
தகவல் சமர்ப்பிக்கப்படாத	52
ஓடுவதில் இருந்து நீக்கப்பட்ட	09
மொத்தம்	237

(xii) கணக்காய்வின் போது அடையாளம் காணப்பட்ட மற்றும் கிடைக்கபபெற்ற தகவல்களின்படி, அமைச்சினால் பெறப்பட்ட/கொள்வனவு செய்யப்பட்ட 2299 வாகனங்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை. இந்த 2299 வாகனங்களில் 1540 வாகனங்கள் போக்குவரத்துப் பிரிவினால் பராமரிக்கப்படும் சொத்து பதிவேட்டில் உள்வாங்கப்பட்ட போதிலும், அதில் 35 வாகனங்கள் வழங்கப்பட்ட இடங்கள் பதிவு செய்யப்படவில்லை. மேலும், இந்த சொத்து பதிவேட்டில் 759 வாகனங்கள் பற்றிய தகவல்கள் சேர்க்கப்படவில்லை என்பதுடன், இந்த 2299 வாகனங்களை தற்போது பயன்படுத்தும் நிறுவனங்கள் எவை என்பது அல்லது அவற்றின் தற்போதைய பதிவு உரிமையாளர் யார் என்பது குறித்த விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை. இது தவிர மேலும் 56 வாகனங்கள் தொடர்பான தகவல்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை.

(xiii) வடக்கு கிழக்கு யுத்தத்தின் போது காணாமல் போன வாகனங்கள் என அடையாளம் காணப்பட்ட 11 வாகனங்கள் தொடர்பாக உறுதியான தகவல்கள் கிடைக்கப்பெற்றதா என்பது குறித்தும் மற்றும் இந்த வாகனங்கள் உண்மையாகவே காணாமல் போனமை உறுதி செய்யப்பட்டிருப்பின் இந்த வாகாண இலக்கங்கள் மோட்டார் வாகன திணைக்கள அமைப்பில் இருந்து நீக்குவதற்கு அந்த திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டதா என்பது பற்றிய விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை.

(xiv) விஷேட அறிக்கையின்படி, அழிந்த நிலையில் உள்ள வாகனங்கள் என அடையாளம் காணப்பட்ட ஆனாலும் அழித்தலுக்கான செயற்பாடுகளை இனங்காணாத 34 வாகனங்களின தற்போதைய நிலை பற்றிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை.

(xv) மாகாண சபைகள் மற்றும் பல்வேறு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட 442 வாகனங்கள் தற்போது பயன்படுத்தும் நிறுவனங்கள், அவற்றின் உரிமம் பதிவு செய்யப்பட்டுள்ள பெயர், இந்த வாகனங்களுக்கான செலவு அமைச்சின் சொத்துக்களின் கீழ் உள்ளதா மற்றும் சுகாதார சேவைக்கு வெளியே உள்ள நிறுவனங்களுக்கு வாகனங்களை வழங்குவதற்கான காரணங்கள் போன்ற தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை.

(xvi) முன்னால் சுகாதார இராஜாங்க அமைச்சர் ஒருவருக்கு வழங்கப்பட்ட ஒரு வாகனம் இராஜாங்க அமைச்சு இரத்துச்செய்யப்பட்டதன் பின்னர் மீண்டும் அமைச்சிற்கு ஒப்படைக்கவில்லை என்பதுடன், இந்த வாகனத்தை அமைச்சிற்குத் திருப்பித்தருமாறு பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் அது மீளப்பெறப்படவில்லை. ஆனாலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் அது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(xvii) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, பயன்பாட்டிலிருந்து நீக்கப்படும் வாகனங்களை துரிதமாக அகற்றுவதற்கான ஒரு முறைமையை அமைச்சு பல ஆண்டுகளாக செயற்படுத்தவில்லை. 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட வாகனங்களை அழித்தல் செயற்பாடு 2022 ஏப்ரல் 10 வரை நிறைவு செய்யப்படவில்லை. அமைச்சின் போக்குவரத்து பிரிவினால் இரண்டு தடவைகள் அழிக்கவேண்டிய 60 வாகனங்கள் மற்றும் 97 வாகனங்களை உள்ளடக்கி இரண்டு பட்டியல் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், அதில் 97 வாகனங்களின் பட்டியலில் 03 வாகன இலக்கங்கள் இரண்டு தடவைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. நாடளாவிய ரீதியில் வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய பல சுகாதார நிறுவனங்களில் பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்ட வாகனங்கள் இருப்பது அவதானிக்கப்பட்டது. அந்த வாகனங்கள் வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் அழிந்துவருவது அவதானிக்கப்பட்டது. அழிப்பதற்காக அடையாளம் காணப்பட்ட 97 வாகனங்கள் மற்றும் 60 வாகனங்களை உள்ளடக்கிய இரண்டு பட்டியல்களில் 122 வாகனங்களை அழித்தல் நடவடிக்கையின் தற்போதைய முன்னேற்றம் அமைச்சு, அமைச்சின் கீழுள்ள வைத்தியசாலைகள், பிற சுகாதார நிறுவனங்கள், மாகாண சபை மற்றும் பிற நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் பதிவு உரிமம் சுகாதார செயலாளர் அல்லது சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் உள்ள அழிக்கப்பட வேண்டிய வாகனங்களை உடனடியாக அழிப்பதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்த எந்த தகவல்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(xviii) 2022 ஆம் ஆண்டில் அமைச்சின் வாகன அழித்தல் சபையினால் ஆய்வு செய்யப்பட்ட பதிவு செய்யப்படாத 5 வாகனங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(xix) சுகாதார அமைச்சிற்குச் சொந்தமான வாகனமொன்று 2022 ஆண்டில் அபேபுஸ்ஸ பிரதேசத்தில் உள்ள ஒருவருக்கு ஏலத்தில் விற்கப்பட்டுள்ளதாகவும், 2022 ஜனவரி 05 ஆம் திகதி அமைச்சின் பணிப்பாளர் (போக்குவரத்து) ஆக கடமையாற்றிய அதிகாரி ஒருவரின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரையுடன் கூடிய ஒரு கடிதத்தை சமர்ப்பித்து காலி பத்தேகம பிரதேசத்தில் வசிக்கும் நபர் ஒருவர் வருமான அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ள முயற்சித்த போது இது தொடர்பில் சுகாதார அமைச்சிடம் விசாரிக்கப்பட்டது. இதன்படி, மேல்

மாகாண மோட்டார் வாகன திணைக்களத்தினால் 2022 ஜனவரி 28 ஆம் திகதி சுகாதார அமைச்சின் செயலாளருக்கு இந்த நிலைமை குறித்து எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்த வாகனத்தை கையகப்படுத்துவதற்கு அமைச்சு சட்ட நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் என்ற போதிலும் அவ்வாறு செய்திருக்கவில்லை. 2022 பெப்ரவரி 18 ஆம் திகதி மேல் மாகாண மோட்டார் வாகன ஆணையாளருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரதி அமைச்சின் பிரதான சட்ட அலுவலருக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் அந்த கடிதம் அமைச்சின் சட்ட கிளைக்கு கிடைத்த போதிலும் கணக்காய்வு தினமான 2023 பெப்ரவரி 08 நிலவரப்படி அக்கடிதம் பிரதான சட்ட அலுவலர் அல்லது விடயப்பொறுப்பு உத்தியோகத்தரிடம் கையளிக்கப்படவில்லை. போக்குவரத்து அதிகாரி என வழங்கப்பட்ட கடிதம் தொடர்பாக முறையான விசாரணை நடத்தப்படவில்லை என்பதுடன், 2023 ஏப்ரல் 10 வரை அமைச்சிற்கு சொந்தமான இந்த வாகனத்தை சட்டரீதியாக மீளப்பெறுவதற்கு போதுமான நடவடிக்கை பொறுப்பான அதிகாரிகளினால் எடுக்கப்படவில்லை.

(xx) கோவிட் 19 அவசர சிகிச்சை மற்றும் சுகாதார அமைப்பு தயாரிப்புத் திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டில் ரூபா 239,487,500 செலவிடப்பட்டு 2020 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்து பொது சுகாதார பரிசோதகர்களுக்கு விநியோகிக்கப்பட்ட 805 மோட்டார் சைக்கிள்கள் அமைச்சின் சொத்துப் பதிவேட்டில் சேர்க்கப்படவில்லை. இவற்றில் 14 மோட்டார் சைக்கிள்களை விநியோகித்த உத்தியோகத்தர்கள் பற்றிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை என்பதுடன், பல தடவைகள் கணக்காய்வில் சுட்டிக்காட்டிய போதிலும் 2023 ஏப்ரல் 10 வரை இந்த மோட்டார் சைக்கிள்களை வழங்கியவர்களுடன் எழுத்துபூர்வ ஒப்பந்தங்கள் செய்வதற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(xxi) அமைச்சின் செயலாளர் அல்லது சுகாதார பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்ட 721 மோட்டார் சைக்கிள்கள் பற்றிய தகவல்கள் அமைச்சின் சொத்துப் பதிவேட்டில் சேர்க்கப்படவில்லை என்பதுடன் இந்த மோட்டார் சைக்கிள்கள் குறித்த போதிய தரவுகள் அமைச்சில் இல்லை. விஷேட கணக்காய்வு அறிக்கையிலும் இந்த நிலை சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் 2023 ஏப்ரல் 10 ஆம் திகதி வரை இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

(xxii) அமைச்சின் போக்குவரத்துப் பிரிவினால் பராமரிக்கப்படும் சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கிய மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை 891 என்பதுடன், அதில் 450 மோட்டார் சைக்கிள்கள் சுகாதார பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள மோட்டார் சைக்கிள்களின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளர் பற்றிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. இந்த மோட்டார் சைக்கிள்களில் 51 மோட்டார் சைக்கிள்கள் விடுவிப்பு உத்தரவுடன் வழங்கப்பட்டுள்ளதுடன், அதில் 50 மோட்டார் சைக்கிள்கள் கிடைத்ததற்கான பெறல் கட்டளை வழங்கப்படவில்லை. மீதமுள்ள 840 மோட்டார் சைக்கிள்களை வழங்கியமைக்கு விடுவிப்பு உத்தரவு வழங்கப்படவில்லை.

3.8 நிதி முறைக்கேடுகளின் வடிவத்தில் பரிவர்தனைகள்

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) 2007 ஜூலை 01 ஆம் திகதி முதல் சேவை நிரந்தரமாக்கப்பட்ட மருத்துவ அலுவலர் ஒருவரின் முறையான நியமனக் கடிதம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட அலுவலரின் சுயவிபர கோவையில் கோவையிடப்படவில்லை என்பதுடன், இந்த மருத்துவர் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் தனிப்பட்ட பதவியணிக்கு நியமிப்பதற்காக 5 வருட அதிகபட்ச காலத்திற்கு உட்பட்டு 2016 மார்ச் 03 ஆம் திகதி சேவையின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார். 2020 மார்ச் 02 ஆம் திகதி தொடக்கம் அவர் மீண்டும் நிரந்தர சேவை நிலையத்திற்கு விடுவிக்கப்பட்ட போதிலும், அவர் நிரந்தர சேவை நிலையத்தில் சேவைக்கு சமூகமளித்தமைக்கான எந்த ஆதாரங்களும் சுயவிபரக் கோவையில் உள்வாங்கப்படவில்லை. மீண்டும் 2020 செப்டெம்பர் 04 ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் செயலாளர் பதவிக்கு நியமிப்பதற்காக தற்காலிகமாக விடுவிக்குமாறு அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் சுகாதார அமைச்சின் செயலாளரிடம் கோரப்பட்டுள்ளது. இந்த கோரிக்கையின் அடிப்படையில், எந்த முறையான அனுமதியும் இன்றி குருதி மாற்றூட்டல் மற்றும் சிறுநீரக மாற்று சிகிச்சை தேசிய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளரினால் அவர் 2020 செப்டம்பர் 10 ஆம் திகதி சேவையின் பின்னர் சுகாதார அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டுள்ளார். இந்த கடிதத்தின்படி அவர் இலங்கை தேசிய வைத்தியசாலையின் கீழ் சம்பளம் பெற்று வருவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. சுகாதார அமைச்சிற்கு விடுவிக்கப்பட்ட பின்னர் அவருக்கான சம்பளம் சுகாதார அமைச்சினால் வழங்கியிருக்க வேண்டும். எனினும் அவர் சுகாதார அமைச்சில் கடமையைப் பொறுப்பேற்றதற்கான எவ்வித எழுத்துமூல ஆதாரங்கள் அல்லது எவ்வித சேவை சான்றிதழும் இன்றி 2020 செப்டம்பர் 11 ஆம் திகதி தொடக்கம் 2021 நவம்பர் 15 ஆம் திகதி வரையான காலத்திற்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவாக ரூபா 1,830,872.50 இனை குருதி மாற்றூட்டல் மற்றும் சிறுநீரக மாற்று சிகிச்சை தேசிய நிலையத்தினால் செலுத்தப்பட்டுள்ளது. இந்த காலகட்டம் தொடர்பாக அவரினால் சமர்ப்பிக்கப்பட்ட சுகாதாரம் 99 வடிவில் உள்ள புத்தக குறிப்பின்படி இந்த முழு கால கட்டத்திலும் ''சுகாதார அமைச்சில் இருந்து விடுவிக்கும் வரை காத்திருக்கிறேன்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இந்த புத்தகம் பொறுப்பான எந்த அதிகாரியினாலும் சான்றளிக்கப்படவில்லை. இதன்படி, இந்த காலகட்டத்திற்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் என்பன பொறுப்பான அதிகாரியின் அலட்சியத்தால் வழங்கப்பட்டுள்ளன. 2021 நவம்பர் 15 ஆம் திகதி முதல் இந்த மருத்துவ உத்தியோகத்தர் ஒரு வருட காலத்திற்காக தற்காலிகமாக விடுவிக்கப்பட்டார். அதன்படி, அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2021 நவம்பர் 15 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அவர் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் செயலாளராக 2021 நவம்பர் 15 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனக் கடிதத்தில் 0 பந்தியின்படி நிரந்தர சேவை நிலையத்தினால் வழங்கப்படும் சம்பளம் குறித்த விபரங்கள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் மீள் செலுத்தப்படும் என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் 2021 நவம்பர் 15 தொடக்கம் 2022 செப்டம்பர் 09 கணக்காய்வுத் தருனம் வரை சம்பள விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டு சம்பளம் மீள் பெறப்பட்டதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் அவர் இதற்கு முன்பு விடுவிக்கப்பட்ட 2016 மார்ச் 04 முதல் 2020 மார்ச் 02 வரையான காலத்திற்கான சம்பளமும் மீள் பெறப்பட்டதற்கான ஆதாரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை. சுகாதார அமைச்சினால் இந்த தற்காலிக விடுவிப்பு இலங்கை அரச சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் 146 இன் கீழ் மேற்கொள்வதாக குறிப்பிடப்பட்டுள்ள

போதிலும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் தனிப்பட்ட பதவியணிக்கு அரச ஊழியர்களை விடுவிப்பதற்கான நடைமுறை விதிக்கு இது உட்பட்டது அல்ல என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) மேற்கொள்ளப்பட்ட மாதிரி - தணிக்கையின்படி, 2016 ஜனவரி தொடக்கம் பயிற்சிக்காக மத்திய அரசிற்குரிய 22 வைத்தியசாலைகளுக்கு நியமிக்கப்பட்ட உள்ளக பயிற்சி மருத்துவ அலுவலர்களுக்கு 2022 மார்ச் வரையான காலத்திற்காக ரூபா.47,400,200 சட்டவிரோத கொடுப்பனவாக செலுத்தப்பட்டுள்ளது. மாதிரி தணிக்கை செய்யப்படாத பிற வைத்தியசாலைகளினாலும், 2016 தொடக்கம் 2022 டிசம்பர் வரை மேலதிகமாக செலத்தப்பட்ட நிதி தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை.

(இ) கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிறப்புறுப்பு சிறுநீர் சத்திர சிகிச்சை கூடத்தில் (Genito-Urinary Operation Theater – GUOT அல்லது நவலோக்க சத்திர சிகிச்சைக் கூடத்தில் (Nawaloka Cardiac Operation Theater NCOT) சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மாதிரி- தணிக்கை ஆய்வின் போது அந்த இருப்புகள் ஒழுங்கற்ற முறையில் சேமித்து வைக்கப்பட்டிருப்பதும், ஒழுங்கற்ற முறையில் சத்திர சிகிச்சைக்கூடத்தில் இருந்து அகற்றப்பட்டதும் அவதானிக்கப்பட்டது. அதுகுறித்து மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2022 ஏப்ரல் 13 ஆம் திகதிக்கு முன்னர், நவலோக்க சத்திர சிகிச்சை கூடத்திற்கு தாதியர் சகோதரிகள் நியமிக்கப்படவில்லை என்பதுடன் அதற்குப் பதிலாக தாதி உத்தியோகத்தர் ஒருவர் விடயப்பொறுப்பு உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டார். எனினும் 2022 ஏப்ரல் 13 ஆம் திகதி முதல் இந்த சத்திர சிகிச்சைக்கூடத்திற்கு தாதியர் சகோதரி ஒருவர் நியமிக்கப்பட்டார். இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் 755(1) இன்படி, பொருட்கள் மற்றும் பிற அரசாங்க சொத்துக்களை பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ள எந்தவொரு உத்தியோகத்தரும் தமது கடமைகளை துறப்பதற்கு முன் அவர் அவரது பதிலாளர் அல்லது அந்த பணியை வழங்கப்பட்ட வேறு எந்த உத்தியோகத்தருக்கும் தமது பொறுப்பின் கீழுள்ள அனைத்து அரச பொருட்கள் மற்றும் பிற சொத்துக்களை ஒப்படைத்திருக்க வேண்டும் என்றாலும், நவலோக்க சத்திர சிகிச்சைக்கூடத்தின் விடயப் பொறுப்பு தாதி உத்தியோகத்தரினால் புதிய தாதி சகோதரிக்கு சத்திர சிகிச்சைக்கூடத்தின் அனைத்து பொருட்கள், சத்திர சிகிச்சைக்கூட மற்றும் களஞ்சிய புத்தகங்கள், ஆவணங்கள் மற்றும் சத்திர சிகிச்சைக் கூடத்தினதும் மற்றும் களஞ்சியத்தினதும் சாவிகள் போன்றவை கணக்காய்வுத் தினமான 2022 ஆகஸ்ட் 17 ஆம் திகதியிலும் ஒப்படைக்கவில்லை. சத்திர சிகிச்சைக்கூடத்தை மேற்பார்வையிடும் சிறப்புத்தர தாதி உத்தியோகத்தரினால் (மேட்டன்) 2022 ஏப்ரல் 20 ஆம் திகதி வெளியிடப்பட்ட பொதுக் கடிதத்தின் ஊடாக புதிய தாதியர் சகோதரிக்கு பொருட்கள், ஆவணங்கள் மற்றும் சாவிகளை ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்ட போதிலும் விடயப் பொறுப்பு தாதி உத்தியோகத்தர் அதனை கடைபிடிக்கவில்லை. சுத்திர சிகிச்சைக்கூடத்தின் பொருட்கள், ஆவணங்கள் மற்றும் சாவிகளை ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கவில்லை என புதிய தாதியர் சகோதரி சத்திர சிகிச்சைக்கூடத்தின் மேட்டனுக்கு அறிவித்தாரா அல்லது

மேட்டனினால் பிரதான தாதி உத்தியோகத்தருக்கு அறிவித்தாரா என்பது பற்றி அல்லது பிரதான தாதி உத்தியோகத்தரினால் வைத்தியசாலையின் கணக்கீட்டு உத்தியோகத்தரான பிரதிப்பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவித்தாரா என்பது தொடர்பில் எழுத்துமூல ஆதாரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை என்பதால் இவ்வாறான நிலமைகளில் வைத்தியசாலை கண்காணிப்பு மோசமான மட்டத்தில் உள்ளதை அவதானிக்க முடிந்தது.

(ii) நிதி ஒழுங்குவிதிகள் 755 (2) (ஆ) இன்படி, பொருட்களை பொறுப்பேற்றல், பொறுப்பில் வைத்திருத்தல் மற்றும் விநியோகித்தல் ஆகிய செயற்பாடுகள் ஒப்படைக்கப்படும் உத்தியோகத்தரினால் முறையாக பொருட்களை பொறுப்பில் வைத்திருப்பதற்கு, அவற்றை நல்ல நிலையில் பராமரிப்பதற்கு மற்றும் எந்த நேரத்திலும் அவற்றை எளிதாக கண்டுபிடித்து கணக்கிடுவதற்கு முடியுமான வகையில் முறையாக ஒழுங்கமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன், மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்களை களஞ்சியப்படுத்தும் போது அது எப்போதும் மருந்துகள் முகாமைத்துவம் பற்றிய கையேட்டின் 2008 ஆம் ஆண்டின் இரண்டாம் பதிப்பின் 09 வது அத்தியாயத்தின் இலக்கம் 1 தொடக்கம் 5 வரையான பிரிவிற்கு இணங்க மேற்கொள்ளப்பட வேண்டும். ஆனால் இந்த சத்திர சிகிச்சைக் கூடத்தில் மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்களை கணக்கிட முடியாத வகையில் ஒழுங்கற்ற முறையில் களஞ்சியம் செய்துள்ளன. இதன் விளைவாக புத்தக இருப்புகளை மற்றும் பௌதீக இருப்புகளுடன் ஒப்பிட முடியவில்லை. சத்திர சிகிச்சைக்கூடத்தில் காணப்படும் இந்த நிலைமையை சரிசெய்து கையிருப்பு புத்தகங்களின்படி இருப்பு மற்றும் பௌதீக இருப்பு நிலையை கணக்கிட்டு கணக்காய்விற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு 2022 ஆகஸ்ட் 25 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்ட போதிலும், 2021 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.

(iii) பிரதான களஞ்சியத்தில் இருந்து சத்திர சிகிச்சைக் கூடத்திற்கு வழங்கப்பட்ட மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்களின் அளவு மற்றும் அவற்றில் சத்திர சிகிச்சைக்காக வழங்கப்பட்ட மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்களின் அளவு ஆகியவை பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் சத்திர சிகிச்சைக் கூடத்திற்கு நன்கொடையாகப் பெறப்பட்ட மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை நுகர்வுப்பொருட்களின் அளவு மற்றும் விற்பனை பிரதிநிதிகளிடம் இருந்து பெறப்பட்ட மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்களின் அளவு ஆவணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்த சூழ்நிலையைப் பயன்படுத்தி நன்கொடையாக மற்றும் விற்பனை பிரதிநிதிகளிடம் பெறப்பட்ட மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை நுகர்வுப்பொருட்களை பல்வேறு முறைகேடுகளுக்கு பயன்படுத்த இடமளிக்கப்பட்டது. மேலும் சத்திர சிகிச்சைகளில் உண்மையாகவே பாவிக்கப்பட்ட மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை நுகர்வுப்பொருட்களின் அளவை சம்பந்தப்பட்ட விஷேட மருத்துவ நிபுணரிடமிருந்து உறுதிப்படுத்துவதற்கு எந்த நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. அதன் காரணமாக, சத்திர சிகிச்சையின் போது உண்மையாகவே பாவிக்கப்பட்ட மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை நுகர்வுப்பொருட்களின் அளவை விட அதிகமாக பயன்படுத்தப்பட்டதாக கருத்தில் கொண்டு, கையிருப்பு புத்தகங்களில் பொய்யான குறிப்புகள் இட்டு இருப்பு புத்தகங்களை சரி

செய்வதற்கும் வசதி செய்யப்பட்டுள்ளன. எனினும், இந்த நிலைமை குறித்து சம்பந்தப்பட்ட மேட்டன் அல்லது பிரதான தாதி உத்தியோகத்தர் கண்காணிக்கவில்லை. இதன் காரணமாக இந்த சத்திர சிகிச்சைக்கூடத்தில் பல்வேறு முறைக்கேடுகள் செய்வதற்கு ஏற்ற சூழல் உருவாக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது.

(iv) நிதி ஒழுங்குவிதிகள் 758 (1) இன்படி, வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்புக்கு மேலதிகமாக குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை பொருட்கள் ஆவணங்கள், புத்தகம் மற்றும் இருப்பு நிலுவைகள் தொடர்பாக தேடல் சோதனைகள் செய்யப்பட வேண்டும். எனினும் நவலோக்க சத்திர சிகிச்சைக்கூடத்தில் இன்வென்ரி பொருட்கள் மற்றும் சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்களின் பயன்பாடு, ஆவணப்படுத்தல், இருப்பு புத்தகங்களை பராமரித்தல், சத்திர சிகிச்சைக் கூடத்திற்கு கிடைக்கும் நன்கொடை பொருட்கள், மேலதிக இருப்பை பராமரித்தல் மற்றும் கையிருப்பு காலாவதியாதல் போன்றவை சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டதாக எழுத்துமூல சான்றுகள் மூலம் நிரூபிக்கப்படவில்லை. இதன் காரணமாக சத்திர சிகிச்சைக்கூடம் தொடர்பில் வைத்தியசாலையின் வைத்தியசாலை கண்காணிப்பு மோசமான மட்டத்தில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(v) மேலும், இந்த சத்திர சிகிச்சைக்கூடத்தின் தாதியர்களும் (மேற்பார்வையாளர் உட்பட) கனிஷ்ட ஊழியர்களும் கிட்டத்தட்ட 10 ஆண்டுகள் அல்லது அதற்கும் மேற்பட்ட காலம் ஒரே சேவை நிலையத்தில் (ஒரே சத்திர சிகிச்சைக்கூடத்தில்) பணி புரிவது அவதானிக்கப்பட்டது. இவ்வாறு ஒரே சேவை நிலையத்தில் நீண்ட காலம் பணியாற்ற அனுமதித்ததன் மூலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முறைக்கேடுகளை அனுமதிக்கும் சூழலை நிர்வாகம் ஏற்படுத்தியிருந்தது.

(vi) இந்த சத்திர சிகிச்சைக்கூடத்தின் சிங்க் (Wash Basin) ஒன்றின் கீழ் மஞ்சள் நிற பொலிதீன் பையில் வைக்கப்பட்டிருந்த Urinary Catheters 583 , Guidewire 14, TOT Set 42 , Tegaderm Film 36 மற்றும் 71 யுனிட் இதர சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்களும், மருந்துகள் களஞ்சிய அறையில் 06 வகையான 75 யுனிட் மருந்துகள் மற்றும் 11 வகையான சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்கள் 71 யுனிட் உம், எண்டோஸ்கொபி அறைக்கு வெளியே நுழைவாயில் கதவுக்கு அருகில் ஒரு தொட்டியில் வைக்கப்பட்டிருந்த 192 Urinary Catheters உம், ஒக்சிஜன் சிலிண்டர் களஞ்சியப்படும் அறையில் வைக்கப்பட்டிருந்த Fluid warmer set (Hotline Blood IV Admin set) 95 உம் மற்றும் சத்திர சிகிச்சை களஞ்சிய அறையின் கதவுக்கு அருகில் உள்ள அலுமாரியில் ஒழுங்கற்ற முறையில் 26 வெவ்வேறு வகையான 208 யுனிட் சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்களும் காலாவதியாகி விட்டதை 2022 ஆகஸ்ட் மாதத்தில் நடாத்தப்பட்ட பௌதீக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(vii) மேலே (vi) வது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த சத்திர சிகிச்சைக்கூடத்தில் உள்ள காலாவதியான மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்கள் குறித்து, மருந்துகள் முகாமைத்துவம் பற்றிய கையேட்டின் 2008 ஆம் ஆண்டின் இரண்டாம் பதிப்பின் 11 வது அத்தியாயத்தின் இலக்கம் 2 மற்றும் 3 வது பிரிவிற்கு இணங்க எடுக்கப்பட வேண்டிய காலாவதிக்கு

முந்திய, காலாவதியாவதற்கு கிட்டிய மற்றும் பிந்திய காலாவதியான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு முறையாக அறிவிக்கப்படவில்லை. மேலும் இவ்வாறு காலாவதியான பொருட்கள் சத்திர சிகிச்சைகளுக்காக வழங்கப்பட்டதாக குறிப்பிட்டு கையிருப்பு புத்தகத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளதுடன், அவை கலாவதியான பொருள் பதிவேட்டில் பதிவு செய்திருக்கவில்லை. இந்த காலாவதியான சில பொருட்களை பயன்படுத்திய பின்னர் கிருமி நீக்கம் செய்து (Sterilization) மீண்டும் பயன்படுத்தக்கூடிய நிலையில் இருந்த போதிலும், அவ்வாறு கிருமி நீக்கம் செய்து மீண்டும் பயன்படுத்தக்கூடிய காலாவதியான பொருட்கள் பற்றிய பதிவுகள் சத்திர சிகிச்சைக்கூடத்தில் பராமரிக்கப்படவில்லை. இவ்வாறு ஆவணப்படுத்தாத மற்றும் காலாவதியானதை சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு தெரிவிக்கப்படாத காலாவதியான பொருட்கள் நோயாளிகளின் சிகிச்சை சேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு, அதற்குப் பதிலாக புதிய பொருட்களைப்பெற்று அவற்றை நோயாளர் சிகிச்சைக்கு பயன்படுத்தப்பட்டதாகக் கூறி, சத்திர சிகிச்சைக் கூடத்தில் இருந்து முறைசாரா முறையில் அந்த புதிய பொருட்களை வெளியே எடுத்துச் செல்லக்கூடிய அபாயம் காணப்படுவது அவதானிக்கப்பட்டது. இந்த நிலைமையை சம்பந்தப்பட்ட மேட்டன் அல்லது பிரதான தாதி உத்தியோகத்தர் கண்காணிக்கவில்லை. மேலும், இவ்வாறு ஆவணப்படுத்தப்படாத மற்றும் காலாவதியானதை சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அறிவிக்கப்படாத காலாவதியான சத்திர சிகிச்சை நுகர்வுப்பொருட்கள் தொடர்பில் பின்வரும் முறைக்கேடுகள் செய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டதுடன், இதற்குப் பின்னரும் இவ்வாறான முறைக்கேடுகள் நடக்காது என்பதை கணக்காய்வின் போது நிராகரிக்க முடியாது.

- நிதி ஒழுங்குவிதிகள் 715(2)(ஆ) இன்படி, பொருட்களை பொறுப்பேற்றல், பொறுப்பில் வைத்திருத்தல் மற்றும் விநியோகித்தல் ஆகிய செயற்பாடுகள் ஒப்படைக்கப்படும் உத்தியோகத்தரினால் முறையாக பொருட்களை பொறுப்பில் வைத்திருப்பதற்கு, அவற்றை நல்ல நிலையில் பராமரிப்பதற்கு மற்றும் எந்த நேரத்திலும் அவற்றை எளிதாக கண்டுபிடித்து கணக்கிடுவதற்கு முடியுமான வகையில் முறையாக ஒழுங்கமைப்பதற்கும், நிதி ஒழுங்குவிதிகள் 751 (5) இன்படி, நெருப்பினால், திருடர்களினால், அழிவதனால், வீணாகுவதால் ஏற்படும் இழப்புகளை தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்து பொருட்களுக்கான போதியளவு பாதுகாப்பிற்கு விதிமுறைகளை பயன்படுத்தல், பொருட்களை பொறுப்பேற்றல், பொறுப்பில் வைத்திருத்தல், விநியோகித்தல் போன்ற பணிகள் பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட உத்தியோகத்தரின் கடமையாக இருந்த போதிலும், 2022 ஆகஸ்ட் 17 ஆம் திகதி நவலோக்க சத்திர சிகிச்சை கூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக ஆய்வின் போது பயன்படுத்தப்படாத மற்றும் பொதிகளுடன் Anesthesia tube 17 மற்றும் பிற சத்திர சிகிச்சை பொருட்கள் 10 கழிவுகளுடன் அகற்றுவதற்காக நவலோக்க சத்திரசிகிச்சை கூடத்தின் கழிவுகள் கொட்டும் இடத்தில் கழிவுத் தொட்டியின் மேலேயும் அருகிலும் கிடந்த பொலித்தீன் பைகள் இரண்டில் இடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதன்மூலம் வைத்தியசாலை அதிகாரிகள் மேற்குறிப்பிட்ட நிதி ஒழுங்குவிதிகளுக்கு இணங்கவில்லை என்பதுடன், இவ்வாறு சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்களை வெளியேற்றுவது, முறையற்ற மற்றும் மோசடி செயல் என்பதும் அவதானிக்கப்பட்டது.

- 2022 ஆகஸ்ட் 24 ஆம் திகதி வைத்தியசாலையின் பிரதான தாதி உத்தியோகத்தரின் முன்னிலையில் மேற்கொண்ட வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைக் கூடம் B தொடர்பான பௌதீக ஆய்வின் போது, நவலோக்க சத்திர சிகிச்சைக் கூடத்திலிருந்து முறைசாரா முறையில் வெளியேற்றப்பட்ட 1,555 யுனிட் சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்கள் சத்திர சிகிச்சை கூடம் B இன் கனிஷ்ட ஊழியர்களின் கழிவறையினூடு உள் நுழையக்கூடிய அதற்கு அருகில் உள்ள சத்திர சிகிச்சை தையல் அறையின் கூரை சிவிலினின் உற்புறத்தில் பொலித்தீன் பைகளில் இட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்கள் நவலோக்க சத்திர சிகிச்சைக்கூடத்தின் விடயப் பொறுப்பு தாதி உத்தியோகத்தரினால் சத்திர சிகிச்சைக் கூடத்திற்கு பொறுப்பான தாதியர் சகோதரிக்குத் தெரியாமல் பொலித்தீன் பைகளில் இட்டு சத்திர சிகிச்சை கூடம் B இன் கனிஷ்ட ஊழியர்களின் ஊடாக சத்திர சிகிச்சை கூடம் B இற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், சத்திர சிகிச்சை கூடம் B இன் தாதியர் சகோதரி அந்தப் பொருட்களை முறையற்ற விதத்தில் பெற்று தமது கனிஷ்ட சேவை ஊழியர்களைக் கொண்டு அந்த பொருட்களை பொலித்தீன் பைகளில் இட்டு மேலே குறிப்பிடப்பட்ட சிவிலினின் உட்புறத்தில் மறைத்து வைக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. அத்துடன் நவலோக்க சத்திர சிகிச்சைக் கூடத்திலிருந்து ஏதாவது பொருட்கள் சத்திர சிகிச்சை கூடம் B இற்கு பெறப்பட்டதா என்பது பற்றி 2022 ஆகஸ்ட் 18 ஆம் திகதி சத்திர சிகிச்சை கூடம் B இன் தாதியர் சகோதரியிடம் விசாரித்த போது, அவ்வாறு எவ்வித பொருட்களும் சத்திர சிகிச்சைக்கூடம் B இற்கு பெறப்படவில்லை என தெரிவித்துள்ளார். அதன்படி சத்திர சிகிச்சைக் கூடம் B இன் தாதியர் சகோதரி வேண்டுமென்றே இந்த பொருட்கள் பற்றிய விபரங்களை கணக்காய்வு உத்தியோகத்தர்களிடம் மறைத்தார் என்பது அவதானிக்கப்பட்டது. அதன்படி நவலோக்க சத்திர சிகிச்சைக் கூடத்தின் சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்கள் முறைசாரா மற்றும் மோசடியாக வெளியேற்றப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இந்த சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்களில் 20 வகையிலான 83 யுனிட் பொருட்கள் காலாவதியாகவில்லை என்பதுடன் எஞ்சிய பொருட்கள் காலாவதியாகி இருந்தன. அவ்வாறு காலாவதியான பொருட்களை கிருமி நீக்கம் செய்து அவை மீண்டும் பயன்படுத்தக்கூடிய நிலையில் இருந்தன. கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் 2022 செப்டெம்பர் 12 ஆம் திகதிய DDG/NHSL/Gen/2022 எனும் இலக்க கடிதத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கணக்கீடுகளின்படி, சத்திர சிகிச்சைக்கூடம் B இன் சத்திர சிகிச்சை தையல் அறையின் கூரை சிவிலினின் உற்புறத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்களுக்கான செலவு ரூபா. 8,842,068.29 ஆகும். மருத்துவ விநியோகப் பிரிவின் முகாமைத்துவ தகவல் அமைப்பில் (MSMIS) குறிப்பிடப்பட்டுள்ள சராசரி அலகு விலையின் (Average price) அடிப்படையில் இந்த செலவு கணக்கிடப்பட்டுள்ளதுடன், அதில் 06 பொருட்களின் 23 அலகுகளின் விலை தெரியவில்லை (Not Known) என குறிப்பிடப்பட்டுள்ளதுடன், 46 பொருட்களின் 105 அலகுகளின் விலை கணக்கிடப்படவில்லை.

- இந்த சத்திர சிகிச்சைக்கூடத்தில் உள்ள மருந்துகள் மற்றும் மருத்துவ நுகர்வுப்பொருட்களை புத்தக இருப்புடன் பௌதீக

சமநிலையை ஒப்பிட முடியவில்லை, நவலோக்க சத்திர சிகிச்சைக்கூடத்தில் இருந்து முறைசாரா முறையில் வெளியேற்றப்பட்ட சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்களின் அளவு பதிவு செய்யப்படவில்லை, சத்திர சிகிச்சைக்கூடம் B இனால் முறையற்ற விதத்தில் பெறப்பட்ட சிகிச்சை நுகர்வுப் பொருட்களின் அளவு பதிவு செய்யப்படவில்லை போன்ற காரணத்தால் நவலோக்க சத்திர சிகிச்சைக்கூடத்தில் இருந்து முறைகேடாகவும் மோசடியாகவும் வெளியேற்றப்பட்ட சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்களின் ஒரு குறிப்பிட்ட அளவு வைத்தியசாலையிலிருந்து வெளியேற்றப்பட்டதா என்ற சந்தேகத்தை கணக்காய்வில் நிராகரிக்க முடியாது.

- 2022 ஆகஸ்ட் 22 ஆம் திகதி நவலோக்க சத்திர சிகிச்சைக்கூடத்தின் விடயப்பொறுப்பு உத்தியோகத்தரினால் அந்த சத்திர சிகிச்சைக் கூடத்திற்கு பொறுப்பான தாதியர் சகோதரிக்கு அறிவிக்காமல் GS டவலில் சுற்றப்பட்ட பார்சலை வைத்தியசாலை சுத்திகரிப்பு சேவை வழங்கும் தனியார் நிறுவனத்தின் சுத்திகரிப்பு பெண் ஊழிர் ஒருவரின் மூலம் சத்திர சிகிச்சைக்கூடம் G இன் விடயப்பொறுப்பு உத்தியோகத்தருக்கும், அதே நாளில் சத்திர சிகிச்சைக்கூடம் G இன் கனிஷ்ட சேவை பெண் ஊழியர் ஒருவர் மூலம் சத்திர சிகிச்சைக்கூடம் D இன் தாதியர் சகோதரிக்கும் கொடுத்த பிறகு, D இன் தாதியர் சகோதரியினால் சத்திர சிகிச்சைக்கூடம் D இன் களஞ்சியத்தில் வைக்கப்பட்டன. அவ்வாறு பொருட்கள் கிடைத்ததை சத்திர சிகிச்சைக்கூடம் D இன் தாதியர் சகோதரியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர், இவ்வாறு நவலோக்க சத்திர சிகிச்சைக்கூடத்திலிருந்து பெறப்பட்ட பொருட்கள் 2022 ஆகஸ்ட் 25 ஆம் திகதியன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அங்கு 5 வகையான சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்கள் தொடர்பான 27 அலகுகள் கருப்பு நிற பொலித்தீன் பையில் இடப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. இவ்வாறு நவலோக்க சத்திர சிகிச்சை கூடத்தில் இருந்து சத்திர சிகிச்சைக்கூடம் G இற்கும் அதன் பின்னர் சத்திர சிகிச்சைக்கூடம் D இற்கும் பொருட்களை வெளியேற்றுவது ஒழுங்கற்ற மற்றும் மோசடியாக வெளியேற்றலாக அவதானிக்கப்பட்டது. இந்த கையிருப்புப் பொருட்களின் விலையை கணக்கிட்டு அதை கணக்காய்விற்கு சமர்ப்பிக்குமாறு கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு 2022 ஆகஸ்ட் 31 ஆம் திகதிய වීඑච්ඔ /බී/එන්එච්එස්එල් කොරතුරු -2022/17 எனும் இலக்க கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த செலவுகள் பற்றிய தகவல்கள் இந்த அறிக்கையிடும் தினத்திலும் இன்னும் சமர்ப்பிக்கப்படவிலலை.

- மேலும், இந்த முறைகேடான வெளியேற்றம் தொடர்பாக நவலோக்க சத்திர சிகிச்சைக்கூடத்திற்கு பொறுப்பான தாதியர் சகோதரியினால் தொலைபேசி ஊடாக, இந்த சத்திர சிகிச்சைக்கூடத்தின் கண்காணிப்பு உத்தியோகத்தரான விஷேட தர தாதி உத்தியோகத்தருக்கு (மேட்டன்) தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், இந்த சம்பவம் குறித்து கணக்காய்வு உத்தியோகத்தர்கள் சுத்திகரிப்பு பெண் பதிவு ஊழியரிடம் வாக்குமூலம் பதிவு செய்வதை அந்த விஷேட தர தாதி உத்தியோகத்தரினால் அவதானிக்கப்பட்டது. ஆனால், இந்தச் சம்பவம் குறித்து தனக்குத் தெரிந்திருந்தும் இதுபற்றித் தெரியாதது போல் மௌனம் காத்தமை இந்த சம்பவத்தை விசாரித்து அது தொடர்பான விடயங்களை வைத்தியசாலையின் உயர் அதிகாரிகளுக்குத்

தெரிவிக்கவேண்டிய மேற்பார்வை கடமையை அவர் புறக்கணித்துள்ளார்.

- நவலோக்க சத்திர சிகிச்சைக்கூடத்தின் விடயப்பொறுப்பு தாதி உத்தியோகத்தரினால் சத்திர சிகிச்சைக்கூடத்திற்கு பொறுப்பான தாதியர் சகோதரிக்கு அறிவிக்காமல் சத்திர சிகிச்சைக்கூடத்தில் பயன்படுத்தும் பாவிக்கப்படாத நல்ல நிலையில் காணப்பட்ட காலணிகளை (Canvas shoes and Half shoes) பொலித்தீன் பைகளில் இட்டு சத்திர சிகிச்சை கூடம் B இன் கனிஷ்ட ஊழியர்களின் ஊடாக சத்திர சிகிச்சை கூடம் B இற்கு அனுப்பப்பட்டுள்ளது. நவலோக்க சத்திர சிகிச்சைக் கூடத்தின் விடயப் பொறுப்பு தாதி உத்தியோகத்தரிடம் இருந்து அந்த காலணிகள் பெறப்பட்டதாக சத்திர சிகிச்சைக்கூடம் B இன் தாதியர் சகோதரி தமது வாக்குமூலத்தில் ஒப்புக்கொண்டதை அடுத்து, சத்திர சிகிச்சைக்கூடம் B இன் களஞ்சிய அறையிலும், அழித்தல் மற்றும் பழுது பார்ப்பதற்கான உபகரணங்கள் வைக்கப்படும் அறையிலும் 02 கறுப்பு பொலித்தீன் பைகள் மற்றும் மஞ்சள் நிற பொலித்தீன் பையும் 2022 செப்டம்பர் 05 ஆம் திகதி கணக்காய்வுத் தினத்தில் கணக்காய்விற்காக வழங்கப்பட்டது. அதன்படி, அந்த பைகளில் 20 ஜோடி காலணிகளும் 15 ஒற்றை (single) காலணிகளும் போடப்பட்டிருப்பதை அவதானிக்க முடிந்தது. மேலும், சத்திர சிகிச்சைக்கூடம் B இல் பயன்படுத்துவதற்குத் தேவையான 150 ஜோடி புதிய காலணிகள் கையிருப்பு அந்த சத்திர சிகிச்சை களஞ்சியத்தில் இருந்த போதிலும், மேற்கூறிய முறையில் சத்திர சிகிச்சைக்கூடம் B இற்கு காலணிகள் முறைசாரா முறையில் பெறப்பட்டுள்ளது. எனவே, இந்த வெளியேற்றமும் முறையற்ற மற்றும் மோசடி செயல் என்பதும் அவதானிக்கப்பட்டது. கணக்காய்வு உத்தியோகத்தர்களினால் செய்த கணக்கீட்டின்படி, இந்த காலணிகளின் விலை ரூபா 24,642 ஆகும். இந்த கணக்கீட்டின்படி, வைத்தியசாலையினால் இறுதியாக காலணிகள் கொள்வனவு செய்த 2020 ஆம் ஆண்டின் விலையை அடிப்படையாகக் கொள்ளப்பட்டது.

- நவலோக்க சத்திர சிகிச்சைக்கூடத்தில் மருந்துகளை களஞ்சியம் செய்வதற்கு போதிய இடவசதியுடன் தனி மருந்து அறையும், குளிர்சாதன பெட்டியில் வைக்க வேண்டிய மருந்துகளை வைப்பதற்கு அந்த சத்திர சிகிச்சைக் கூடத்தின் தாதியர் சகோதரியின் அறையில் தனி குளிர்சாதன பெட்டியும் இருக்கும் போது அந்த இரண்டு இடங்களுக்கும் வெளியே தாதி உத்தியோகத்தர்களின் Changing அறைக்கு அருகில் உள்ள நீல நிற அலுமாரியில் காலாவதியான மற்றும் நல்ல நிலையில் பல்வேறு மருந்து 279 அலகுகளும், காலாவதியான மற்றும் நல்ல நிலையில் பல்வேறு சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருள் 615 அலகுகளும், அந்த தாதி உத்தியோகத்தர்களின் Changing அறையில் அவர்களின் பொது பயன்பாட்டுக்கு வழங்கப்பட்ட குளிர்சாதன பெட்டியில் காலாவதியான மற்றும் நல்ல நிலையில் பல்வேறு மருந்து அலகுகள் 71 உம் வைக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. இந்த மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்கள் பயன்படுத்தப்பட்டதாக புத்தகங்களில் இருந்து நீக்கப்பட்ட மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்கள் என்பது மேலும் அவதானிக்கப்பட்டது. மேலும் இந்த அலுமாரி மற்றும் குளிர்சாதனப் பெட்டியில் உள்ள

சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்கள் குறித்த ஒரு பட்டியலை சத்திர சிகிச்சை கூடத்தின் ஊழியர்களின் காட்சிக்காக வைக்கப்படவில்லை. அதன்படி, புத்தகங்களில் இருந்து அகற்றப்பட்டு உரிய இடத்திற்கு வெளியே காட்சிப்படுத்தப்படாத வகையில் மேற்படி மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்கள் வைக்கப்பட்டுள்ளதால் இந்த இருப்புகள் தொடர்பில் முறைக்கேடு ஏற்பட்டுள்ளமையும் மற்றும் முறைக்கேடு ஏற்படும் அபாயம் காணப்படுவதும் அவதானிக்கப்பட்டது. மேலும் இதன்மூலம் மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்கள் காலாவதியாவதற்கு இடமளிக்கப்பட்டுள்ளதுடன், மருந்து பற்றாக்குறை நிலவிய கடந்த காலப்பகுதியில் சத்திர சிகிச்சைக்கூடங்களில் நோயாளர் பராமரிப்பு சேவைக்காக தேவையான சில மருந்துகள் (Morphine மற்றும் Paracetamol Infusion போன்ற மருந்துகள்) கடுமையான தட்டுப்பாடுகளுக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்டு வந்தமையும் அவதானிக்கப்பட்டது. 1984 ஆம் ஆண்டு இலக்கம் 13 எனும் அபாயகர ஔடதங்கள் சட்டத்தின்படி, Morphine அபாயகர மருந்து என்பதுடன் அந்த மருந்துகள் Vial 14 இனை இவ்வாறு பாதுகாப்பற்ற முறையில் நீலநிற அலுமாரியில் வைக்கப்பட்டிருந்ததுடன் அதில் Vial 08 காலாவதியாகியுள்ளன.

- நிதி ஒழுங்குவிதிகள் 715(2)(ஆ)இன்படி, பொருட்களை பொறுப்பேற்றல், பொறுப்பில் வைத்திருத்தல் மற்றும் விநியோகித்தல் ஆகிய செயற்பாடுகள் ஒப்படைக்கப்படும் உத்தியோகத்தரின் கடமைப் பொறுப்புகளுக்கு முரணாக மேற்கூறிய அவதானிப்புகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபடி, நவலோக்க சத்திர சிகிச்சைக் கூடத்தின் விடயப் பொறுப்பு தாதி உத்தியோகத்தரினால் அந்த சத்திர சிகிச்சைக்கூடத்தின் சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்கள் மற்றும் இன்வன்ரி பொருட்கள் முறைகேடாக வெளியேற்றம் செய்துள்ளதாகவும், சிகிச்சைக்கூடம் B மற்றும் சிகிச்சைக்கூடம் D இற்கு பொறுப்பான தாதியர் சகோதரிகளும் மற்றும் சிகிச்சைக்கூடம் G இற்கு பொறுப்பான விடயப் பொறுப்பு தாதி உத்தியோகத்தரினாலும் அந்த சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்களும் மற்றும் இன்வன்ரி பொருட்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

(viii) நவலோக்க சத்திர சிகிச்சைக் கூடத்தில் நடந்துள்ள முறைகேடுகள் மற்றும் அந்த சத்திர சிகிச்சைக் கூடத்தின் நிலைமை குறித்து கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு 2022 ஆகஸ்ட் 31 ஆம் திகதி கணக்காய்வினால் அறிக்கையிடப்பட்டதுடன், தொடர்ந்தும் முறைகேடுகள் ஏற்படுவதை தடுக்கும் வகையில் உள்ளக வேலைத் திட்டமொன்றை செய்யவேண்டியதன் அவசியத்தை அந்த கடிதத்தின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டது. எனினும், அந்த சத்திர சிகிச்சைக் கூடத்தின் புத்தகங்களும், ஆவணங்களும் மற்றும் அதன் இன்வன்ரி, சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்களின் பாதுகாப்பு தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும், மேற்கூறிய நவலோக்க சத்திர சிகிச்சை கூடத்தில் உள்ள சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்கள் குறித்த முறைகேடுகள் தொடர்பான பின்வரும் பரிந்துரைகளை செயற்படுத்தி அதன் முன்னேற்றம் 2023 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

- சத்திர சிகிச்சை B இன் கனிஷ்ட ஊழியர்களின் கழிவறையினூடு உள் நுழையக்கூடிய அதற்கு அருகில் உள்ள சத்திர சிகிச்சை தையல் அறையின் கூரை சிவிலினின் உற்புறத்தில் மறைத்து

வைக்கப்பட்டிருந்த நவலோக்க சத்திர சிகிச்சைக்கூடத்தின் முறையற்ற விதத்தில் வெளியேற்றப்பட்ட 1,555 யுனிட் சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்களைத் தவிர மேற்கூறிய அவதானிப்புகளால் சுட்டிக்காட்டப்பட்ட மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்களின் இருப்பு மற்றும் இன்வன்ரி தொகைகளின் விலையை கணக்கிட்டு தணிக்கைக்கு சமர்ப்பித்தல்.

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 (1) (ஏ) இன்படி, வெளிப்படையான மோசடி அல்லது குற்றச் செயல்கள் குறித்து கணக்காய்வாளர் நாயகத்தினால் அறிப்பைப் பெற்றால், அந்த சட்ட விரோத செயல் தொடர்பாக எடுக்கக்கூடிய சட்ட அமுலாக்க முகவர் நிறுவனத்திற்கு முறைப்பாடு செய்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு என்பதால் 2022 ஆகஸ்ட் 26 மற்றும் 31 ஆம் திகதிகளில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு செய்யப்பட்ட அறிவிப்புகள் மற்றும் விசாரணையின் போது செய்யப்பட்ட அறிவிப்புகள் குறித்து அவ்வாறே செயற்படுத்தல்.

- நவலோக்க சத்திர சிகிச்சைக் கூடத்தில் உள்ள அனைத்து மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்கள், சத்திர சிகிச்சைக்கூட மற்றும் களஞ்சிய புத்தகங்கள், ஆவணங்கள் மற்றும் சத்திர சிகிச்சைக்கூடத்தினதும் களஞ்சியத்தினதும் சாவிகள் குறித்த ஒரு கணக்கெடுப்பை உடனடியாக மேற்கொண்டு 07 நாட்களுக்குள் புதிய தாதியர் சகோதரியிடம் ஒப்படைப்பதற்கும், கைருப்பு குறைபாடுகள் அல்லது கூடுதலாக இருந்தால் அது தொடர்பாக நிதி ஒழுங்குவிதிகள் 757(2) இன்படி நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பித்தல்.

- மேற்படி (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கெடுப்பு பணியை முடித்து, புதிய தாதியர் சகோதரியிடம் பொருட்கள் ஒப்படைக்கப்பட்டவுடன் இந்த முறைகேடுகளுடன் தொடர்புடைய அனைத்து உத்தியோகத்தர்களையும் இந்த விசாரணையில் தலையிடாத வகையில் பொருத்தமான இடமாற்றம் செய்தல்.

- மேற்படி (உ) (vii) பந்தியின் துணைப் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முறைகேடுகள் தொடர்பாக இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோயின் II வது அத்தியாயத்தின் பிரிவு XLVII பிரிவின் 8.1 மற்றும் 8.2 பந்திகளின் அடிப்படையில் ஒழுக்காற்று நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.

- சம்பந்தப்பட்ட சத்திர சிகிச்சைக்கூடத்தின் நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில், தாதியர்கள் மற்றும் கனிஷ்ட ஊழியர்களை குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை சேவை நிலையங்களுக்கிடையே இடமாற்றம் செய்யும் வகையில் வைத்தியசாலையில உள்ளக இடமாற்றத் திட்டத்தைச் செயல்படுத்தல்.

- வைத்தியசாலையின் ஏனைய சத்திர சிகிச்சைக்கூடங்கள் மற்றும் பிரிவுகளிலும் இதேபோன்ற நிலைகள் இருக்கக்கூடும் என்பதால், அந்த துறைகள் தொடர்பாக நிதி ஒழுங்குவிதிகள் 757(2) இன்படி, மருந்துகள், சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்கள்,

நன்கொடை பொருட்கள், இலவசமாக பெறம் பொருட்கள் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய இன்வன்ரி பொருட்களை பெறுதல், பொறுப்பில் வைத்திருத்தல் மற்றும் விநியோகித்தல் போன்ற செயல்முறைகளை நெறிப்படுத்தவும் மற்றும் அதன் மூலம் சரியான உள்ளக நிர்வாகத்தை பராமரிப்பதற்கும் உடனடி நடவடிக்கை எடுத்தல்.

(ஈ) மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு, சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்களை முறையற்ற விதத்தில் வெளியேற்றிய கொழும்பு தேசிய வைத்தியசாலையின் நவலோக்க சத்திர சிகிச்சைக்கூடத்தில் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்படும் நோயாளியின் படுக்கை இலக்கம், சத்திர சிகிச்சை செய்யப்பட்ட திகதி, கொடுக்கப்பட்ட மருந்துகள் மற்றும் பயன்படுத்தப்பட்ட சத்திர சிகிச்சைப் பொருட்கள் என்பன முறைப்படி பதிவு செய்யப்படவில்லை என்பதுடன், அந்த குறிப்புகள் சம்பந்தப்பட்ட மருத்துவரின் மேற்பார்வை மற்றும் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படவில்லை. இதன் விளைவாக, சத்திர சிகிச்சைக்கூடத்தின் சத்திர சிகிச்சை பதிவேட்டில் மற்றும் A,B,C,D ஆகிய சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருள் புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களின் நம்பகத் தன்மை மற்றும் துல்லியத்தன்மை குறித்து திருப்தியடைய முடியவில்லை. மேலும், சத்திர சிகிச்சைக்கூடத்திற்கு பொறுப்பான விடயப்பொறுப்பு தாதி உத்தியோகத்தரினால் மருந்து மற்றும் சத்திர சிகிச்சை நுகர்வுப்பொருட்கள் புத்தகங்களில் உள்ள பெரும்பாலான குறிப்புகள் ஒரே நேரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், தினசரி அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை புத்தக இருப்பை பௌதீக இருப்புடன் சமநிலைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. இவ்வாறான நிலையில் சத்திர சிகிச்சைக்காக பயன்படுத்தப்பட்ட சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்களின் சிலவற்றின் மாதிரியைத் தேர்ந்தெடுத்து நடத்தப்பட்ட தணிக்கையின் போது கவனிக்கப்பட்ட அவதானிப்புகள் பின்வருமாறு.

(i). நவலோக்க சத்திர சிகிச்சைக்கூடத்தில் பயன்படுத்தப்பட்ட Guide wire இன் பயன்பாடு தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- சத்திர சிகிச்சையில், மெராவுடன் கூடிய சாதனம் நோயாளியின் உடலில் சரியாக செலுத்தப்படுவது போல் சிறுநீர் வடி குழாய்கள், DJ stent நோயாளியின் உடலில் சரியாக செலுத்துவதற்கு பயன்படுத்தப்படும் Guide wire இனை ஒருமுறை பயன்படுத்தப்பட்டதும் பயன்பாட்டிலிருந்து அகற்றுவதில்லை என்பதும், கிருமி நீக்கம் செய்து திரும்பத் திரும்ப பயன்படுத்தலாம் என்பதும், பல நோயாளிகளுக்கு ஒரே Guide wire இனை பல முறை பயன்படுத்தலாம் என்பதும் உறுதி செய்யப்பட்டது. எனினும் D சத்திர சிகிச்சை நுகர்வுப்பொருட்கள் புத்தகத்தில் புதிதாக வழங்கப்படும் அத்தகைய திரும்பத் திரும்ப பயன்படுத்தக்கூடிய சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்கள் உண்மையாகவே எந்த தினத்தில் சத்திர சிகிச்சைக்காக பயன்படுத்தப்பட்டன என்பதை உறுதி செய்வதற்குரிய ஒரு பதிவேடு சத்திர சிகிச்சைக்கூடத்தினால் பராமரிக்கப்படாத காரணத்தால் திரும்பத் திரும்ப பயன்படுத்தக்கூடிய சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்களை வழங்குதல் மற்றும் பயன்பாடு தொடர்பான உள்ளக நிர்வாகம் பலவீனமாக இருந்தது. மேலும் இந்த சத்திர சிகிச்சைக் கூடத்தினால் Poly Tetra Fluor Ethylene (PTFE) Guide wire மற்றும் Hydrophilic Guide wire ஆக இரண்டு வகையான Guide wire இனை பயன்படுத்தி உள்ளதுடன், அவற்றின் அளவு (Size) படியும் வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. எவ்வாராயினும், நவலோக்க

சத்திர சிகிச்சைக்கூடத்தினால் Guide wire பெறப்பட்ட மற்றும் வழங்கப்பட்டவற்றின் வகை அளவுகளின் படி வெவ்வேறாக பதியப்படவில்லை. அதற்கு மாறாக Guide wire அனைத்தும் ஒன்றாக சேர்த்து பதிவு செய்யப்பட்டுள்ளமையும், வைத்தியசாலையின் பிரதான சத்திர சிகிச்சை களஞ்சியத்தில் இருந்து பெறப்பட்ட மற்றும் சத்திர சிகிச்சைகளுக்காக வழங்கப்பட்ட Guide wire இன் அளவு சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருள் D பதிவேட்டில் வெவ்வேறு இடங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளதால், சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருள் D புத்தகத்தில் முறைகேடுகள் அவதானிக்கப்பட்டன. எனினும், சத்திர சிகிச்சைக்கூடம் கண்காணிப்பு உத்தியோகத்தரும், வைத்தியசாலையின் பிரதான களஞ்சியத்தில் நுகர்வுப் பொருட்களை வழங்கும் உத்தியோகத்தரும் இது குறித்து அவதானம் செலுத்தவில்லை. இதன் விளைவாக, சில சந்தர்ப்பங்களில் சில நுகர்வுப் பொருட்களின் கைருப்பு பாரிய அளவில் களஞ்சியத்தில் சேமித்து வைக்கப்பட்டிருந்த போதிலும், அந்த பொருட்கள் மீண்டும் களஞ்சியத்திற்கு விநியோகிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. உதாரணமாக, 2019 மார்ச் 13 ஆம் திகதி மற்றும் 2019 ஒக்டோபர் 11 ஆம் திகதிகளில் நவலோக்க சத்திர சிகிச்சைக் கூடத்தில் Hydrophilic Guide wire முறையே 608 மற்றும் 940 கையிருப்பு இருக்கும் போது, பிரதான சத்திர சிகிச்சை கூடத்தினால் மேற்குறிப்பிட்ட இரு தினங்களில் Hydrophilic Guide wire 400 ஆக வழங்கப்பட்டுள்ளன.

- 2016 டிசம்பர் 20 ஆம் திகதி 69,297 ரூபா செலவில் 0.035 அங்குள Hydrophilic Guide wire 20 உம், அதே நாளில் 140,400 ரூபா செலவில் 0.038 அங்குள Hydrophilic Guide wire 50 உம் சத்திர சிகிச்சைக் கூடத்திற்கு பெறப்பட்டன. இரண்டு அளவிலான இந்த Hydrophilic Guide wire கையிருப்பு சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருள் D புத்தகத்தில் இரண்டு பக்கங்களில் தனித்தனியாக பதியப்பட வேண்டும். எனினும், அந்த இரண்டு வகை கையிருப்புகளும் D புத்தகத்தில் ஒரே பக்கத்தில் (அதாவது பக்கம் 176 இல்) பதியப்பட்டுள்ளது. இந்த இருப்பு 2016 டிசம்பர் 23 ஆம் திகதி சத்திர சிகிச்சைக்கு பயன்படுத்த தொடங்கியதுடன் 2017 ஆக்ஸ்ட் 15 ஆம் திகதி வரையான காலத்தில் 12 Hydrophilic Guide wire சத்திர சிகிச்சைகளுக்காக வழங்கப்பட்டதாக சத்திர சிகிச்சைக் கூடத்தின் மற்ற தாதி உத்தியோகத்தர்களினால் D புத்தகத்தில் பதிவு செய்துள்ளனர். எனினும், சத்திர சிகிச்சைக்கூடத்தின் விடயப் பொறுப்பு தாதி உத்தியோகத்தரினால் அந்த குறிப்பு தவறானது என வெட்டி நீக்கப்பட்டு 2016 டிசம்பர் 23 தொடக்கம் 2017 மே 31 வரையான காலத்தினுள் 46 Hydrophilic Guide wire சத்திர சிகிச்சைகளுக்காக வழங்கப்பட்டதாக பதிந்துள்ளார். எனினும், அந்த Guide wire 46 இனை உண்மையில் சத்திர சிகிச்சை பயன்படுத்தப்பட்டதை உறுதிப்படுத்தும் எழுத்துபூர்வ ஆதாரம் எவையும் இருக்கவில்லை. மேலும், 2017 நவம்பர் 09 நிலவரப்படி, ரூ.56,455 மதிப்புள்ள 18 Hydrophilic Guide wire தொகை மீதமாக இருந்தன. எனினும், அந்த தொகை D புத்தகத்தில் பக்கம் 177 இற்கு கொண்டு செல்லப்படவில்லை என்பதுடன், அந்த தொகை சத்திர

சிகிச்சைக்கு பயன்படுத்தப்பட்டதற்கான எழுத்துமூல ஆதாரம் எதுவும் பராமரிக்கப்படவில்லை.

- வைத்தியசாலையின் பிரதான சத்திர சிகிச்சை களஞ்சியத்தில் இருந்து 2016 பெப்ரவரி 11 ஆம் திகதி வழங்கப்பட்ட ஆவண இலக்கம் W001534651 இன் மூலம் ரூபா.23,929 செலவில் Hydrophilic Guide wire 10 மற்றும் 2020 ஒக்டோபர் 09 ஆம் திகதி வழங்கப்பட்ட ஆவண இலக்கம் W001534651 இன் மூலம் ரூபா. 339,153 செலவில் Hydrophilic Guide wire 100 சத்திர சிகிச்சைக்கூடத்திற்கு வழங்கப்பட்டன. எனினும், அந்த தொகை சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருள் D புத்தகத்தில் பதிவு செய்யப்படவில்லை என்பதுடன், அவை சத்திர சிகிச்சைக்கு பயன்படுத்தப்பட்டதற்கான எழுத்துமூல ஆதாரம் எதுவும் பராமரிக்கப்படவில்லை.

- D புத்தகத்தின் பக்கம் இல. 101 இன்படி, 2020 ஜூலை 17 ஆம் திகதி காணப்பட்ட Hydrophilic Guide wire இன் இருப்பு 1,428 ஆக இருந்தது. எனினும், 1,417 ஆக அதாவது Hydrophilic Guide wire 11 குறைவாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், அதற்கான செலவினம் ரூ. 38,113 ஆக இருந்தது. இவ்வாறு குறைவாக பதிவு செய்யப்பட்ட Hydrophilic Guide wire 11 இனை சத்திர சிகிச்சைக்கு பயன்படுத்தியதற்கான எழுத்துமூல ஆதாரம் எதுவும் பராமரிக்கப்படவில்லை.

- 2020 ஜூலை மாதம் தொடக்கம் சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருள் D புத்தகத்தின் அனைத்து உள்ளீடுகளும் (பொருட்களை வழங்குதல், சமநிலைப்படுத்தல், நிலுவைகளை முன்னோக்கி எடுத்துச் செல்வது போன்றவை) சத்திர சிகிச்சைக் கூடத்திற்கு பொறுப்பான விடயப் பொறுப்பு தாதி உத்தியோகத்தர் மூலம் கிட்டத்தட்ட முழுவதுமாக செய்யப்பட்டுள்ளதுடன், மற்ற தாதி உத்தியோகத்தர்களினால் செய்த குறிப்புகள் வெட்டப்பட்டுள்ளன. உதாரணமாக, 2020 டிசம்பர் 31 வரையான காலத்தினுள் Hydrophilic Guide wire சுமார் 03 பயன்பாட்டுக்காக வழங்கப்பட்டதாக மற்ற தாதி உத்தியோகத்தர்களினால் D புத்தகத்தில் பதியப்பட்டுள்ள நிலையில், அந்த குறிப்புகள் விடயப் பொறுப்பு தாதி உத்தியோகத்தரினால் வெட்டப்பட்டு மேற்குறிப்பிட்ட காலத்தினுள் (2020 ஜூலை 24 முதல் 2020 டிசம்பர் 31 வரை) Hydrophilic Guide wire 823 பயன்பாட்டுக்காக வழங்கப்பட்டதாக பதிவு செய்துள்ளார்.

- Guide wire இனை பயன்படுத்துவது தொடர்பாக சத்திர சிகிச்சைக்கூடத்தின் ஊழியர்களுடன் கலந்துரையாடியதில், சிறுநீர் வடிகுழாய் இடுதல் மற்றும் Percutaneous Nephron Lithotomy (PCNL) சத்திர சிகிச்சைக்காக Guide wire பயன்படுத்துவதாகவும், Stent இடுதல், சிறுநீர் வடிகுழாய் இடுவதற்காக பெரும்பாலும் ஒன்று அல்லது இரண்டு முறை அல்லது பல முறை பயன்படுத்தப்படும் Guide wire பயன்படுத்தப்படுவதாகவும், PCNL சத்திர சிகிச்சைக்கு பெரும்பாலும் புதிதாக Guide wire பயன்படுத்தப்படுவதாகவும் அவதானிக்கப்பட்டது. சத்திர சிகிச்சை

நுகர்வுப் பொருள் D புத்தகத்தின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலான 04 ஆண்டுகளில் Guide wire இன் சராசரி ஆண்டு விநியோகம் 262 அலகுகள் ஆகும். ஆனாலும், அந்த விநியோகம் 2020 மற்றும் 2021 இல் முறையே 952 அலகுகள் மற்றும் 602 அதாவது 263 சதவீதத்தினால் மற்றும் 130 சதவீதத்தினால் அசாதாரணமாக அதிகரித்துள்ளமை அவதானிக்கப்பட்டது. மேற்படி அசாதாரணமான விநியோகம் செய்யப்பட்ட 2020 ஆம் ஆண்டு தொடர்பான மேலதிக ஆய்வில், 2020 ஆண்டின் முதல் 6 மாதங்களுக்கு 910 Guide wire தேவைக்காக புதிதாக 69 Guide wire வழங்கப்பட்ட நிலையில், 2020 ஆண்டின் கடைசி 6 மாதங்களுக்கான 957 Guide wire தேவைக்காக புதிதாக 883 Guide wire வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

- 2021 டிசம்பர் 27 நிலவரப்படி, Guide wire 474 இனை D புத்தகத்தின் பக்கம் இல. 37 இன் இறுதியில் இருப்பு செய்யப்பட்டிருந்தது. ஆனால், அந்த இருப்பு முன்னோக்கி கொண்டு செல்லப்படவில்லை என்பதுடன், அந்த இருப்பு சத்திர சிகிச்சைகளுக்கு பயன்படுத்தப்பட்டதற்கான எழுத்துப்பூர்வ ஆதாரம் எதுவும் பராமரிக்கப்படவில்லை.

(ii) நவலோக்க சத்திர சிகிச்சைக் கூடத்தினால் நோயாளிகளின் சிறுநீர்க்குழாய்களில் அடைப்பு ஏற்படுவதைத் தடுக்கும் சிகிச்சையாக stent பயன்படுத்தப்படுவதுடன், அது பொதுவான DJ stent மற்றும் நீண்ட கால அதாவது Annual stent என இரண்டு வகைகள் பயன்படுத்தப்படுவது அவதானிக்கப்பட்டது. எனினும், 2020 ஆம் ஆண்டில் DJ stent 509 அதிகமாகவும், 2020 தொடக்கம் 2021 ஏப்ரல் வரையான காலத்தினுள் நீண்ட கால அதாவது Annual stent 62 அதிகமாகவும் சத்திர சிகிச்சைக்காக அவற்றின் பயன்பாட்டுக்கு அப்பால் வழங்கப்பட்டுள்ளதுடன், அவற்றின் மொத்த செலவு ரூ. 2,733,313 ஆகும். இந்த பொதுவான மற்றும் நீண்ட கால stent விநியோகம் அனைத்தும் சத்திர சிகிச்சைக்கூடத்திற்கு பொறுப்பான விடயப் பொறுப்பு தாதி உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அவரினால் சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருள் D புத்தகத்தில் வழங்கப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ள வைத்தியசாலை வாட்டு மாதிரி தொடர்பாக ஆராய்ந்த போது வழங்கப்பட்டது என்று குறிப்பிட்டுள்ள திகதியில் அல்லது அதற்கு கிட்டிய திகதிகளில் அந்த வாட்டுகளில் இதுபோன்ற stent பயன்படுத்தும் சத்திர சிகிச்சைகள் நடைபெறவில்லை. அதன்படி, மேலதிகமாக வழங்கப்பட்ட stent 571 தொடர்பாக முறைகேடு இடம்பெற்றுள்ளமை அவதானிக்கப்பட்டது.

(iii) பிரதான சத்திர சிகிச்சை களஞ்சியத்தின் புத்தகங்களின்படி, 03 சந்தர்ப்பங்களில் நவலோக்க சத்திர சிகிச்சைக்கூடத்திற்கு வழங்கப்பட்ட ரூபா. 205,219 பெறுமதியான DJ stent 200 சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருள் D புத்தகத்தில் உள்ளீக்கப்படவில்லை என்பதுடன், அவற்றை சத்திர சிகிச்சைகளுக்கு பயன்படுத்தப்பட்டதற்கான எழுத்துப்பூர்வ ஆதாரங்கள் பராமரிக்கப்படவில்லை.

(iv) தன்னிச்சையாக சிறுநீர் வெளியேறும் நோயாளர்களுக்கு செய்யப்படும் Trans (Tension free) Obturator Tape (TOT) சத்திர சிகிச்சைக்காக TOT SET எனும் சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருள் பயன்படுத்தப்படுவதுடன்,

2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் TOT SET சத்திர சிகிச்சைகள் மிக சொற்ப அளவில் செய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. எனினும், 2020 ஆம் ஆண்டில் TOT SET 20 அதிகமாகவும் TOT சத்திர சிகிச்சைக்காக அவற்றின் பயன்பாட்டுக்கு அப்பால் வழங்கப்பட்டுள்ளதுடன் அவற்றின் மொத்த செலவு ரூ. 1,937,625 ஆகும். இந்த TOT SET விநியோகம் அனைத்தும் சத்திர சிகிச்சைக்கூடத்திற்கு பொறுப்பான விடயப் பொறுப்பு தாதி உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அவரினால் சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருள் D புத்தகத்தில் வழங்கப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ள வைத்தியசாலை வாட்டு மாதிரி தொடர்பாக ஆராய்ந்த போது வழங்கப்பட்டது என்று குறிப்பிட்டுள்ள திகதியில் அல்லது அதற்கு கிட்டிய திகதிகளில் அந்த வாட்டுகளில் இதுபோன்ற TOT பயன்படுத்தும் சத்திர சிகிச்சைகள் நடைபெறவில்லை. மேலும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் சத்திர சிகிச்சைக்கூடத்தின் சத்திர சிகிச்சை பதிவேட்டின்படி சத்திர சிகிச்சைக் கூடத்தில் எந்த சத்திர சிகிச்சைகளும் செய்யப்படாத நாட்களிலும் TOT SET வழங்கப்பட்டதாக சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருள் D புத்தகத்தில் பதியப்பட்டுள்ளது. அதன்படி, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் கூடுதலாக விநியோகப்பட்ட ரூபா. 1,937,625 பெறுமதியான TOT SET 46 தொடர்பாக முறைகேடு இடம்பெற்றுள்ளமை அவதானிக்கப்பட்டது.

(v) நவலோக்க சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்களைக் கோரும் போது, கணக்கிடக்கூடிய பொருட்களுக்கு (உதாரணமாக 3 Ways & Silicon வடிகுழாய்கள், Examination & Surgical gloves, Stent போன்றவை) சத்திர சிகிச்சை கூடத்தில் உள்ள இருப்பு "கொஞ்சம் (few)" என பதிவு செய்யப்பட்டு வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நுகர்வுப்பொருள் களஞ்சியத்தில் கோரப்பட்டுள்ளதாகவும், அதனை கருத்தில் கொள்ளாமல் மருந்தாளரினால் (Pharmacist) அந்த பொருட்களை வழங்குவதோடு இந்த முறை வைத்தியசாலையின் ஏனைய சத்திர சிகிச்சைக் கூடங்களினாலும் பின்பற்றப்பட்டமை அவதானிக்கப்பட்டது. அதன்படி, இது தொடர்பான உள்ளக கட்டுப்பாடு பலவீனமான மட்டத்தில் இருந்தது.

(vi) சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்களைப் பெறல், வழங்குதல் மற்றும் ஆவணப்படுத்தல் ஆகிய முறைகள் ஒரே உத்தியோகத்தரினால் மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டமை மற்றும் சத்திர சிகிச்சைக் கூடத்தை கண்காணித்தல் தொடர்பாக உயர் அதிகாரிகளின் கவனம் செலுத்தப்படாமை, மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள் மற்றும் முறைகேடுகள் செய்வதற்கு இடமளிக்கும் செயல் என அவதானிக்கப்பட்டது. அத்துடன், மேலே குறிப்பிட்டுள்ள அவதானிப்புகள் மூன்று வகையான சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்களுக்காக மாதிரி அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதால், சத்திர சிகிச்சைக்கூடத்தின் மற்றைய நுகர்வுப் பொருட்கள் தொடர்பிலும் இந்த நிலைமை இருக்கக்கூடும் என்பதை கணக்காய்வில் நிராகரிக்க முடியாது.

(உ) அரச வைத்தியசாலைகளில் உருவாகும் மருத்துவக் கழிவுகளை முகாமைத்துவம் செய்தல் மற்றும் அகற்றுவது தொடர்பாக சுகாதார அமைச்சு, மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபை மற்றும் தனியார் நிறுவனமொன்றும் 2019 ஜூலை 11 ஆம் திகதி முத்தரப்பு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதுடன், அது 2018 டிசம்பர் 13 ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்தது. இந்த ஒப்பந்தத்தின் கீழ் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியல் A மூலம் அரச வைத்தியசாலைகள் 52 உள்ளடக்கப்பட்டுள்ளன. எனினும், அதில் சில வைத்தியசாலைகளில் மருத்துவக்

கழிவு முகாமைத்துவம் மற்றும் அகற்றுதல் ஆகியவை அந்த வைத்தியசாலைகளில் உள்ள இன்சினரேட்டர் மற்றும் மெட்டாமைசர் இயந்திரங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டன. சிசிலி ஹனாரோ என்கெயா தனியார் நிறுவனத்தின் ஊடாக மருத்துவக் கழிவு முகாமைத்துவம் மற்றும் அகற்றுதல் மேற்கொள்ளப்பட்ட சில வைத்தியசாலைகளை தெரிவு செய்து, ஒப்பந்தத்தின்படி அந்த வைத்தியசாலைகள் மேற்படி சேவையை பெற்றுள்ளனவா என்பது குறித்த ஆய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இந்த முத்தரப்பு ஒப்பந்தம் வைத்தியசாலை மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதால், ஒப்பந்தத்தின்படி நடவடிக்கைகளை செயற்படுத்த வைத்தியசாலை ஊழியர்கள் ஒப்பந்தத்தில் உள்ள விடயங்கள் மற்றும் நிபந்தனைகளை அறிந்திருக்க வேண்டும். எனினும், அமைச்சின் கவனக்குறைவாகவோ அல்லது வேண்டுமென்றே இந்த ஒப்பந்தத்தை சம்பந்தப்பட்ட வைத்தியசாலைகளுக்கு வழங்கவில்லை. அதற்கு மாறாக அகற்றப்படும் ஒரு கிலோ மருத்துவக் கழிவுக்கு எவ்வளவு விலை கொடுக்க வேண்டும் என்பது பற்றிய ஒரு கடிதம் மாத்திரம் வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, முத்தரப்பு ஒப்பந்தத்தில் உள்ள விடயங்கள் மற்றும் நிபந்தனைகள் வைத்தியசாலைகளுக்கு தெரிவிக்கப்படாததால், ஒப்பந்தத்தின்படி மருத்துவக் கழிவு முகாமைத்துவம் மற்றும் அகற்றுதல் மேற்கொள்ளப்படவில்லை.

(ii) ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் வைத்தியசாலைக்கு தெரிவிக்கப்படாததால், ஒப்பந்தத்தின் உப அட்டவணை 1 இல் 3 வது நிபந்தனையின்படி சேவை வழங்குநரால் வழங்கப்பட வேண்டிய வைத்தியசாலையின் மருத்துவக் கழிவுகளை வகைப்படுத்துவதற்கு மற்றும் சேமிப்பதற்கு தேவையான வர்ண பொதிகள் (colour coded packaging for in-hospital waste segregation and storage) அதாவது, மஞ்சள், சிவப்பு மற்றும் ஊதா நிறத்தினால் ஆன பைகள் மற்றும் சிவப்பு நாடா கொண்ட மஞ்சள் பெட்டிகள் வைத்தியசாலையினால் வெளி தரப்பினரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. அதன்படி, 19 வைத்தியசாலைகளின் மாதிரி ஆய்வின் போது, 2019 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வரை மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு சேவை வழங்குநர்களினால் வழங்கப்பட வேண்டிய வர்ண பொதிகளுக்காக அந்தந்த வைத்தியசாலைகளினால் வெளி தரப்பினருக்கு மொத்தம் ரூபா. 127,402,275 செலுத்தியுள்ளதால், அரசிற்கு அதற்கு சமமான மதிப்பில் இழப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தத் தொகை சேவை வழங்குநர் அல்லது அதற்கு பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடப்படல் வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.

(iii) ஒப்பந்தத்தின்படி, விநியோகத்தரினால் கூரிய கழிவுகளை (Sharp waste) சேமித்து அகற்றுவதற்காக வைத்தியசாலைக்கு சிவப்பு நாடா கொண்ட மஞ்சள் நிற பெட்டிகள் வைத்தியசாலை மாதிரிகளில் (Sharp Bin) வழங்கப்பட வேண்டும் என்பதை அறியாத காரணத்தால் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு வைத்தியசாலை மாதிரிகளில் 4 வைத்தியசாலைகளில் ரூபா.11,104,935 செலவில் சிவப்பு நடா கொண்ட மஞ்சள் நிற பெட்டிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன், இதைத்தவிர அந்த வைத்தியசாலையில் நோயாளர் பராமரிப்பு சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களினால் மற்றும் சிவப்பு நடா கொண்ட மஞ்சள் நிற பெட்டிகள் கொள்வனவு செய்யாத மற்றைய வைத்தியசாலைகளில் நோயாளர் பராமரிப்பு சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் மேலதிக பணியாக

சிவப்பு நடா கொண்ட மஞ்சள் நிற பெட்டிகளை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

(iv) ஒப்பந்தத்தின் V(h) பந்தியின்படி, சேவை வழங்குநரால் ஈட்டப்படும் மாதாந்த வருமானத்தில் 1.5 வீதம் சுற்றுச்சூழல் கண்காணிப்பு கட்டணத்தை (Environmental Monitoring Fee) மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபைக்கு செலுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அந்த கட்டணத்தை எவ்வாறு அறவிடுவது என்பது குறித்த விபரங்கள் ஒப்பந்தத்தில் சேர்க்கப்படவில்லை. சுகாதார அமைச்சின் இலக்கம் Health Ministry/CA/34/2014 மற்றும் 2014 ஏப்ரல் 12 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம், சேவை வழங்குநருக்கு செலுத்த வேண்டிய தொகை மற்றும் சுற்றுச்சூழல் கண்காணிப்பு கட்டணத்தை சுற்றுச்சூழல் அதிகார சபைக்கு சம்பந்தப்பட்ட வைத்தியசாலையினால் செலுத்த வேண்டும் என்பதுடன், மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபையினால் சேவை வழங்குநருக்கு செலுத்த வேண்டிய தொகையை விடுவிக்கப்பட வேண்டும் என்றாலும், இந்த கடிதம் சில வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்படாத காரணத்தால் அந்த வைத்தியசாலைகளினால் (கம்பளை ஆதாரவைத்தியசாலை மற்றும் கண்டி தேசிய வைத்தியசாலை) நேரடியாக சேவை வழங்குநருக்கும் சில வைத்தியசாலைகள் மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபையினூடாக சேவை வழங்குநருக்கும் செலுத்தியுள்ளது. இவ்வாறு வைத்தியசாலைகளில் இருந்து அகற்றப்படும் மருத்துவக் கழிவுகளை எவ்வாறு கட்டணம் செலுத்துவது என்பது குறித்த தகவல்கள் ஒப்பந்தத்தில் இடம்பெறாததாலும், அதற்கான ஒரு குறிப்பிட்ட முறையை அமைச்சு தயாரிக்காததாலும் மருத்துவக் கழிவுகளை அகற்றுவதற்காக அரச வைத்தியசாலைகளினால் கிடைக்கும் வருமானத்தில் அரசாங்கத்திற்கு கிடைக்கவேண்டிய சுற்றுச்சூழல் கண்காணிப்பு கட்டண வருமானம் சரியாக அரச கணக்குகளுக்கு வைப்பு குறித்து கருத்து தெரிவிக்கமுடியவில்லை.

(v) மேற்படி அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பு 19 வைத்தியசாலைகளுக்கு மட்டும் பொருந்துவதால் மேற்படி சேவை வழங்குநரால் சேவைகளைப் பெறும் மற்ற வைத்தியசாலைகள் தொடர்பாக முழுமையான ஆய்வு மேற்கொண்டு, அது தொடர்பான இழப்புகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டதுடன், மேற்குறிப்பிட்ட தரப்பினர்களிடையே 2014 ஆம் ஆண்டில் எட்டப்பட்ட முத்தரப்பு ஒப்பந்தத்தின் இணைப்பு 01 இல் உள்ளிட்ட முழுமையான ஒப்பந்தமும், 2014 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் எட்டப்பட்ட முத்தரப்பு ஒப்பந்தத்தின்படி சேவை வழங்குநரிடமிருந்து சேவைகளைப் பெற்ற அனைத்து அரச வைத்தியசாலைகள் தொடர்பாகவும் தணிக்கை மூலம் படிவங்களில் கோரப்பட்ட தகவல்கள் தணிக்கைக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(vi) 2022 ஆம் ஆண்டு தொடர்பில் மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபையினால் பெறப்பட்ட தகவல்களின்படி, அமைச்சின் கீழுள்ள அரச வைத்தியசாலைகள் மற்றும் 35 நிறுவனங்களினால் மருத்துவக் கழிவுகள் அகற்றுவதற்காக சேவை வழங்குநருக்கு சராசரியாக மாதாந்தம் சுமார் 30 மில்லியன் ரூபா செலுத்தப்படுவது அவதானிக்கப்பட்டது. பொருளாதார நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட இவ்வளவு பாரிய தொகையை பொருளாதார பயனை அதிகரிப்பதற்கு, வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்கள் மூலம் அகற்றப்படும் கழிவுகளின் அளவை எடைபோட்டு அறிக்கையிடுவதில் துல்லியத்தை உறுதிப்படுத்துவதற்கான குறைந்தபட்ச உள்ளக கட்டுப்பாட்டு திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். எனினும்,

அதற்காக வைத்தியசாலைகளினால் கடைபிடிக்க வேண்டிய பொதுவான வேலைத்திட்டத்தை அமைச்சினால் தயாரிக்கப்படவில்லை என்பதுடன், வைத்தியசாலை மட்டத்திலும் போதியளவு உள்ளக கட்டுப்பாடுகள் நிறுவப்படவில்லை. உதாரணமாக,

- 2022 ஒக்டோபர் 26 ஆம் திகதி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வில், சேவை வழங்குனருக்கும் வைத்தியசாலைக்கும் இடையில் பரஸ்பர இணக்கமான மருத்துவக் கழிவு சேகரிப்பு கால அட்டவணை இருக்கவில்லை எனவும், பல நாட்கள் தாமதமாகி சேவை வழங்குனரினால் மருத்துவக் கழிவுகள் எடுத்துச்செல்லப்படுவதாகவும், வைத்தியசாலையில் மூடிய சேமிப்பு இடத்திற்கு வெளியிலும் கழிவுகள் சேமிக்கப்படுவதாகவும், மருத்துவக் கழிவுப் பைகளில் மழைநீர் தேங்கியிருந்தமையும், சேவை வழங்குனரினால் கொண்டு வரப்பட்ட எடைகருவி மூலம் கழிவுகளின் எடையை அளந்து பதியப்படுவதாகவும், மருத்துவக் கழிவுகளில் சேர்ந்துள்ள மழைநீருடன் எடை அளக்கப்படுவதாகவும், அந்த எடையை ஆவணங்களில் பதிவு செய்து, அதனை வைத்தியசாலையின் உயர் அதிகாரி சான்றளித்திருந்த போதிலும் அதனை அடிப்படையாகக்கொண்ட ஆதார ஆவணங்கள் இருக்கவில்லை எனவும், மேற்படி ஆவணத்தை அடிப்படையாகக் கொண்டு சேவை வழங்குனருக்கு பணம் செலுத்தப்படுவதாகவும், கட்டட குப்பைகள், எறியப்பட்ட சோறு, பிளாஸ்டிக் போத்தல் போன்ற மருத்துவம் சாராத கழிவுகள் பொலித்தீன் பைகளில் இட்டு மருத்துவக் கழிவுகளுடன் அகற்றுவதற்காக இந்த இடத்தில் வைக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(ஊ) குருணாகல் போதனா வைத்தியசாலையில் புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய புகையற்ற எரியூட்டியை நிர்மாணிப்பதற்காக 2020 மே மாதம் 09 ஆம் திகதி ரூபா மில்லியன் 19.43 தொகைக்கு ஒப்பந்ததாரர் ஒருவருடன் ஒப்பந்தம் கைச்சாத்திட்டு 2021 மே 22 ஆம் திகதி அதாவது இந்த ஒப்பந்தத்தை நிறைவு செய்ய வேண்டிய காலத்திற்கு மேலாக 06 மாதங்களுக்குப் பிறகு பணிகள் நிறைவடைந்த போதிலும், நிர்மாணிக்கப்பட்ட இந்த எரியூட்டி எதிர்பார்த்தபடி வைத்தியசாலையின் தேவையை நிறைவேற்ற முடியவில்லை என்பதை சுகாதார அமைச்சும் வைத்தியசாலையும் அடையாளம் கண்டதாகவும், எரியூட்டி நிர்மாணிக்கப்பட்ட ஒரு வருடத்தினுள் அடிக்கடி பழுதடைந்து வருவதையும் அவதானிக்க முடிந்தது. மேலும், 2019 ஆம் ஆண்டு தம்புள்ள மாநகர சபையில் மேற்படி ஒப்பந்ததாரரால் கட்டப்பட்ட எரியூட்டி இயந்திரத்திலும் இதேநிலை காணப்படுவதாகவும், இது தொடர்பில் வைத்தியசாலையின் அவதானம் செலுத்தப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டு 2021 ஏப்ரல் 01 ஆம் திகதிய தணிக்கை வினவல் இல HSM/F/THKU/ 2020/AQ 03 மூலம் தெரிவிக்கப்பட்ட போதிலும், அது குறித்து அவதானம் செலுத்தாமல் வைத்தியசாலையின் தேவையை பூர்த்தி செய்யத் தவறிய இந்த எரியூட்டிக்காக ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்ட தொகையான ரூபா. மில்லியன் 16.38 பயனற்ற பரிவர்த்தனையாக அவதானிக்கப்பட்டது. மேலும், கட்டப்பட்ட எரியூட்டியின் வைத்தியசாலைக்கு போதுமானதாக இல்லை என்பது தொடர்பாக அமைச்சின் சுற்றுச்சூழல் மற்றும் தொழில்சார் சுகாதாரப் பிரிவு மறு ஆய்வு செய்து அது குறித்து அமைச்சு எடுக்கும் நடவடிக்கைகளை கணக்காய்விற்கு தெரிவிக்குமாறும் 2022 ஜூன் 21 ஆம் திகதி நடைபெற்ற தணிக்கை மற்றும் நிர்வாகக் குழு கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்ட போதும் அந்த விசாரணை அறிக்கை மற்றும் நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை.

(எ) 2022 ஆம் ஆண்டுக்காக தெரிவு செய்யப்பட்ட சுத்திகரிப்பு சேவை ஒப்பந்ததாரருடன் ஏற்படுத்தப்பட்ட சுத்திகரிப்பு சேவை ஒப்பந்தத்தின் படி, சிலாபம் மாவட்ட பொது வைத்தியசாலையினால் சுத்திகரிப்பு சேவையைப் பெறப்பட்டதா மற்றும் அதற்கான பணம் செலுத்தப்பட்டுள்ளதா என்பது குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஒப்பந்தத்தின்படி, பகல் மற்றும் இரவு சேவைகளுக்கு சுத்திகரிப்பு தொழிலாளிகள் மற்றும் மேற்பார்வை உத்தியோகத்தர்கள் உட்பட 122 ஊழியர்கள் நாளாந்தம் ஈடுபடுத்தப்பட வேண்டும். எனினும், 2022 செப்டம்பர் 23 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட நிலைய ஆய்வின் போது, வரவு பதிவேட்டின் பிரகாரம் மு.ப 6.00 மணி தொடக்கம் பி.ப 7.07 வரை 60 சுத்திகரிப்பு பணியாளர்களும், 06 மேற்பார்வை உத்தியோகத்தர்களுமாக 66 பேர் சேவைக்கு சமூகமளித்திருந்த போதிலும், 39 சுத்திகரிப்பு பணியாளர்களும், 04 மேற்பார்வை உத்தியோகத்தர்களுமாக 43 பேர் மட்டுமே பணியில் ஈடுபட்டிருந்தனர் என்பதுடன், மேற்பார்வை உத்தியோகத்தர் இருவர் மற்றும் சுத்திகரிப்பு பணியாளர்கள் 21 பேர் சேவைக்கு சமூகமளிக்கவில்லை எனினும், வரவுப் பதிவேட்டில் போலி கையொப்பம் இடப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டது. அத்துடன், வைத்தியசாலையில் அமையப் பெற்றுள்ள ஒப்பந்ததாரரின் சேவை அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வந்த ஊழியர்களின் உண்மையான பணியமர்த்தல் தொடர்பான ஆவணத்தின் ஊடாக, கடந்த காலங்களில் ஒப்பந்தம் செய்யப்பட்ட ஊழியர்கள் பணியமர்த்தப்படவில்லை என்பது உறுதிப்படுத்தப் பட்டது.

(ii) ஒப்பந்தத்தின்படி, சுத்திகரிப்பு தொழிலாளர்கள் சீருடை மற்றும் அடையாள அட்டை என்பன அணிந்து பணிபுரிய வேண்டும் என்றாலும், தொழிலாளர்கள் யாரும் அடையாள அட்டை அணிந்திருக்கவில்லை என்பதுடன், சீருடை அணியாத மற்றும் பிற நிறுவனங்களின் (முன்னாள் சேவை வழங்குனர் நிறுவனத்தின்) சீருடை அணிந்திருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(iii) ஊழியர்களை உண்மையில் பணியமர்த்துவதற்கான பதிவேட்டில் 2022 செப்டெம்பர் 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரையிலான பகல் சேவை தொடர்பான தகவல்களை மேலும் பகுப்பாய்வு செய்ததில், சில சுத்திகரிப்பு தொழிலாளிகள் இரண்டு இடங்களில் பணியமர்த்தப்பட்டிருந்தனர்.

(iv) கணக்காய்வில் தேர்ந்தெடுக்கப்பட்ட மிக கிட்டிய காலமான 2022 செப்டெம்பர் 07 ஆம் திகதி முதல் 2022 செப்டெம்பர் 21 ஆம் திகதி வரையான காலத்திற்கிடைப்பட்ட 15 நாட்களில் சேவையில் ஈடுபடுத்தப்படாத ஊழியர்களுக்காக ரூபா 431,361 தொகை செலுத்த நேரிட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

(v) மேலும், 2022 செப்டெம்பர் 23 ஆம் திகதி காலை கணக்காய்வின் போது, சேவைக்கு வரவில்லை என உறுதிப்படுத்தப்பட்ட சுத்திகரிப்பு தொழிலாளர்கள் அன்றைய தினம் பணியை முடிந்து வெளியேறுவதற்கான பதிவேட்டில் போலி கையொப்பமிட்டுள்ளனர். அதன்படி, கணக்காய்விற்கு பிறகும் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் மேற்பார்வை உத்தியோகத்தர்

மோசடியாக பொய்யான பெயர்கள் உள்வாங்குவதை தடுக்கவில்லை என்பது மேலும் அவதானிக்கப்பட்டது.

3.9 மோசமான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) நோயாளர் பராமரிப்பு சேவைகள் மற்றும் அதற்கு உதவும் பிற சேவைகளை நிர்வகிப்பது போன்று நோயாளர் பராமரிப்பு சேவையின் மூலம் வெளியேற்றப்படும் சயலைன் போத்தல்கள், வெற்று டப்பாக்கள், என்ஸ்ரேக்கள், அட்டை பலகைகள் ஆகியவற்றின் விற்பனை வருமாய் நிர்வாகத்தின் மூலம் அரசாங்க வருவாயில் சரியான (அதிக) வருவாயை அரச வருமானத்திற்கு மீட்டெடுப்பது வைத்தியசாலை நிர்வாகத்தின் பொறுப்பு என்றபோதிலும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மேற்படி பொருட்களை வெளியேற்றுவதற்கான முறையான அமைப்பை ஏற்படுத்தாததால் 2021 ஆம் ஆண்டு மற்றும் 2022 நவம்பர் 30 ஆம் திகதி வரை ரூபா 1,190,437 குறைந்த வருமானத்தை மட்டுமே பெறப்பட்டுள்ளது. அங்கு அதிகபட்ச வருமானம் கிடைக்கும் போதியளவு விற்பனை வருமானம் பெறக்கூடிய வைத்தியசாலையில் சேகரிக்கப்பட்ட குறிப்பிட்ட வகை வெற்றுக் கொள்கலன்கள் தொடர்பாக எந்தவொரு வருமானத்தையும் ஈட்ட வைத்தியசாலை தவறியிருந்ததுடன், குறிப்பிட்ட வகை சில வெற்றுக் கொள்கலன் பொருட்களுக்கு குறைவான வருமானத்தையே அறவிட்டுள்ளது. அதன்படி, வைத்தியசாலையிலிருந்து வெளியேற்றப்படும் வெற்று கொள்கலன் பொருட்களின் மாதிரியை எடுத்து மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) வைத்தியசாலையில் சேகரிக்கப்பட்ட வெற்று சயலைன் போத்தல்களை எடைபோட்டு புத்தகங்களில் பதிவு செய்யாமல் அவற்றை வைத்தியசாலை வளாகத்தில் இருந்து வெளியேற்ற வாங்குபவருக்கு இடமளிக்கப்பட்டிருந்ததுடன், பின்னர் வாங்குபவர் அனுப்பிய அளவீடுகளின் அடிப்படையில் 2021 ஆம் ஆண்டு மற்றும் 2022 நவம்பர் 30 ஆம் திகதி வரை முறையே ரூபா 14,750 மற்றும் ரூபா 36,550 வெற்று சயலைன் போத்தல்கள் மூலம் வைத்தியசாலை வருமானமாக ஈட்டியுள்ளது. கணக்காய்வின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், 500 மில்லி லீட்டர் வெற்று சயலைன் போத்தல் 1 கி.கி இற்கு தோராயமாக 50 வெற்று சயலைன் போத்தல்களை உள்ளடக்குகின்றன எனவும், 2021 ஆம் ஆண்டு மற்றும் 2022 நவம்பர் 30 ஆம் திகதி வரை வைத்தியசாலை பயன்படுத்திய 500 மில்லி லீட்டர் வெற்று சயலைன் போத்தல்களின் வருமானம் முறையே கி.கி 14,538, கி.கி 15,461 எனவும் அதன்படி, 2021 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளில் வைத்தியசாலை ஈட்டக்கூடிய வெற்று சயலைன் போத்தல் வருவாய் கிட்டத்தட்ட முறையே ரூபா. 1,817,260 மற்றும் 2,668,510 என அவதானிக்கப்பட்டது. எனினும், வைத்தியசாலையினால் 2021 ஆம் ஆண்டில் மற்றும் 2022 நவம்பர் 30 ஆம் திகதி வரை ஈட்டக்கூடிய வருமானத்தில் 1 சதவீதம் எனும் மிகக்குறைந்த வருமானமாக வைத்தியயசாலை பெற்றுள்ளதால் 2021 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளில் வைத்தியசாலை இழந்துள்ள வெற்று சயலைன் போத்தல் வருவாய் சுமார் ரூபா 4,434,470 என்பது அவதானிக்கப்பட்டது.

(ii) 2021 ஆம் ஆண்டு மற்றும் 2022 நவம்பர் 30 ஆம் திகதி வரை வைத்தியசாலையின் குருதி மாற்றூட்டல் பிரிவிற்கு வழங்கப்பட்ட குருதி வடிகட்டி திரவம் கொண்ட 5L மற்றும் 10 L பிளாஸ்டிக் கேன்களின் அளவுடன் தொடர்புடைய வெற்று கேன்களை அப்புறப்படுத்துவதன் மூலம்

சம்பாதிக்கக்கூடிய வெற்றுக் கேன்களின் வருமானம் முறையே ரூபா. 828,966 மற்றும் ரூபா. 2,549,125 ஆகும். ஆனால், இந்த இரண்டு வருடங்களில் வைத்தியசாலை ஈட்டிய வெற்றுக் கேன்களின் வருமானம் முறையே ரூபா. 162,320 மற்றும் ரூபா. 595,706 ஆகும். அதாவது, இது சம்பாதித்திருக்கலாம் என எதிர்ப்பார்த்த வருமானத்தில் முறையே 20 சதவீதம் மற்றும் 23 சதவீதம் ஆகும். அதன்படி, 2021 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளில் வைத்தியசாலை இழந்துள்ள வெற்றுக் கேன்களின் வருமானம் சுமார் ரூபா 2,620,065 என்பது அவதானிக்கப்பட்டது.

(iii) கொள்வனவு செய்பவர்களால் வைத்தியசாலையிலிருந்து அகற்றப்படும் வெற்று கொள்கலன்களுக்கு முறையாக பணம் செலுத்தப்பட்டதா என்பதை உறுதி செய்வதற்கான முறைமை வைத்தியசாலையில் இருக்கவில்லை. இதன் காரணமாக 2021 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளில் குருதி மாற்றூட்டல் பிரிவினால் முறையே வெற்று குருதி வடிகட்டி திரவ கேன்கள் (5L மற்றும் 10 L) 5641 உம், 6076 உம் கொள்வனவு செய்பவருக்கு வழங்கப்பட்டதாக புத்தகங்களில் பதியப்பட்டிருந்த போதிலும், அந்த ஆண்டுகளைப் பொறுத்தவரை, முறையே வெற்று குருதி வடிகட்டி திரவ கேன்கள் 2826, 4625 வெற்று கேன்களுக்கு மட்டுமே கொள்வனவு செய்பவர் பணம் செலுத்தியுள்ளார். இதன்மூலம் ரூபா 323,735 பெறுமதியான வருமானம் பெறக்கூடிய வெற்று குருதி வடிகட்டி திரவ கேன்கள் 4266 இற்கான தொகையை செலுத்தாது வைத்தியசாலையிலிருந்து எடுப்பதற்கு வைத்தியசாலை நிர்வாகம் கொள்வனவு செய்பவருக்கு இடமளித்துள்ளது. அதன்படி, இந்தத் தொகை கொள்வனவு செய்பவர் அல்லது பொறுப்பான தரப்பினரிடம் இருந்து அறவிடப்படல் வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.

(iii) பணம் செலுத்தாமல் வெற்று கொள்கலன்களை வைத்தியசாலையிலிருந்து அகற்றுவதற்கு கொள்வனவு செய்பவரினால் நடவடிக்கை எடுப்பதாக ஒரு தனியார் நிறுவனத்தினால் 2022 ஜனவரி 27 ஆம் திகதி வைத்தியசாலை நிர்வாகத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் நாயகத்தினால் 2022 மார்ச் 28 ஆம் திகதியிட்ட கடிதத்தில் வைத்தியசாலையிலிருந்து அகற்றப்படும் வெற்று கொள்கலன்களை சேகரிப்பதில் குறைபாடு இருப்பதால், உரிய பொருட்களை சேகரித்தல் முறையாக மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட வாட்டுகள், பிரிவுகள் மற்றும் கிளைகளுக்கு அறிவிக்குமாறு வைத்தியசாலையின் பிரதான தாதி உத்தியோகத்தருக்கு தெரிவிக்கப்பட்ட போதிலும், கணக்காய்வு தினம் வரை அந்த செயற்பாடுகள் சரி செய்யாமல் தொடர்ந்தும் இவ்வாறு பணம் செலுத்தாமல் வெற்று கொள்கலன்களை வைத்தியசாலையிலிருந்து அகற்றுவதற்கு கொள்வனவு செய்பவருக்கு இடமளித்துள்ளது.

(v) வைத்தியசாலையின் சுத்திகரிப்பு சேவைகள் வழங்கும் நிறுவனத்தினால் வழங்கப்படும் சுத்திகரிப்பு பொருட்கள் அடங்கிய கொள்கலன்களின் வெற்று கொள்கலன்களை விலையை அறவிடாமல் சுத்திகரிப்பு சேவைகள் வழங்குனர்களுக்கு மிண்டும் வழங்கியுள்ளதால் அதன்மூலம் பெறக்கூடிய வெற்று கொள்கலன் வருமானத்தை வைத்தியசாலை இழந்தது. மேலும், இந்த வெற்று கொள்கலன்களை சேவை வழங்குனர்களுக்கு வழங்குவதால், வெற்று கொள்கலன்களில் தரமற்ற சுத்திகரிப்பு இரசாயனப் பொருட்கள் நிரப்பப்பட்டு மீண்டும் வைத்தியசாலைக்கு வழங்கப்படும் அபாயத்தை கணக்காய்வில் நிராகரிக்க முடியாது.

(vi) இலங்கையில் அதிக எண்ணிக்கையிலான நோயாளர்களுக்கு நோயாளர் பராமரிப்பு சேவைகளை வழங்கும் நிறுவனம் என்ற வகையில், கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மருத்துவ விநியோகப் பிரிவினாலும் மற்றும் பல்வேறு வழிகள் மூலம் மருந்துகள், சத்திர சிகிச்சை நுகர்வுப்

பொருட்கள், ஏனைய உபகரணங்கள் மற்றும் பொருட்கள் அடங்கிய கார்ட்போர்ட் கொள்கலன்கள் அதிகளவில் கிடைக்கின்றன. ஆனாலும், 2021 ஆம் ஆண்டு மற்றும் 2022 நவம்பர் 30 ஆம் திகதி வரை கார்ட்போர்ட் விற்பனை மூலம் எவ்வித வருமானங்களையும் ஈட்டுவதற்கு வைத்தியசாலை தவறியது. இதன்படி, வைத்தியசாலைக்கு பல்வேறு வழிகளில் கிடைத்த கார்ட்போர்ட் கொள்கலன்களில் 06 வகையான சேலைன் போத்தல்கள் மற்றும் 2 வகையான குருதி வடிகட்டல் திரவங்களுக்கான கேன்கள் பொதியிடப்படும் கார்ட்போர்ட் கொள்கலன் மாதிரி ஆய்வு செய்ததில், 2021 ஆம் ஆண்டு மற்றும் 2022 நவம்பர் 30 ஆம் திகதி வரை மேற்குறிப்பிட்ட சேலைன் போத்தல்கள் மற்றும் குருதி வடிகட்டல் திரவ கேன்களுடன் தொடர்பான சுமார் 66,922 கார்ட்போர்ட் கொள்கலன்கள் வைத்தியசாலையினால் பெறப்பட்டுள்ளதுடன், அவற்றின் கார்ட்போர்ட் எடை 38,739 கிலோ ஆகும். இதன் விளைவாக, மேற்கூறிய இரண்டு நுகர்வுப் பொருட்களில் மட்டும் வைத்தியசாலை இழந்த கார்ட்போர்ட் விற்பனை வருவாய் சுமார் 1,367,399 ரூபா ஆகும்.

(vii) வைத்தியசாலையின் மருத்துவக் கழிவுகளை அகற்றும் தளத்தில் சுமார் 1000 கிலோ எடையை அளக்கும் திறன் கொண்ட டிஜிட்டல் தராசு 2020 ஆம் ஆண்டில் 155,000 ரூபாவிற்கு கொள்வனவு செய்துள்ள போதிலும், அது இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக செயற்படாமல் இருந்தது. அவ்வாறு எடையை அளவிடக்கூடிய டிஜிட்டல் தராசு வைத்தியசாலையில் இருந்த போதிலும் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு எடையை அளவிடாமல் வைத்தியசாலையிலிருந்து அகற்றுவதற்கு வாங்குபவருக்கு இடமளிக்கப்பட்டுள்ளதுடன் பின்னர் வாங்குபவர் சமர்ப்பித்த எடையின் அடிப்படையில் வெற்று கொள்கலன்களுக்கான வருமானம் தீர்மானிக்கப்பட்டு அறவிடப்பட்டுள்ளது.

(viii) வைத்தியசாலையின் வெற்று கொள்கலன்களுக்கான வருமானத்தை சரியாக அரச வருவாயில் வைப்புச் செய்வதற்கான முறையான அமைப்பு ஏற்படுத்தப்படாததாலும், இது தொடர்பாக வைத்தியசாலையின் உள்ளக நிர்வாகம் பலவீனமான நிலையில் உள்ளதாலும், 2021 ஆம் ஆண்டு மற்றும் 2022 நவம்பர் 30 ஆம் திகதி வரை 04 வகையான வெற்றுக் கொள்கலன்கள் (வெற்று சேலைன் போத்தல்கள், 5L கேன்கள், 10 L கேன்கள் மற்றும் அகற்றப்படும் கார்ட்போர்ட் பெட்டிகளின் ஒரு பகுதி) மூலம் அரசாங்கத்திற்கு சுமார் ரூபா. 8,421,934 வருமான இழப்பு ஏற்பட்டுள்ளதை அவதானிக்கப்பட்டதுடன், வைத்தியசாலையில் உள்ள மற்ற வகை வெற்று கொள்கலன் பொருட்கள் குறித்து முறையான ஆய்வு நடத்தப்பட்டு, சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து உரிய இழப்புகள் அறவிடப்பட வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.

(ix) மேலும் ஏனைய வைத்தியசாலைகளினாலும் தமது வைத்தியசாலையில் வெற்று கொள்கலன்களை அரசாங்கத்திற்கு அதிகூடிய வருமானம் கிடைக்கும் வகையில் வெளியேற்றுவதற்கான முறையான முறைமையை ஏற்படுத்தாத காரணத்தால், ஈட்டக்கூடிய வெற்று கொள்கலன் வருமானத்தை விட குறைவான வருமானத்தை ஈட்டியுள்ளமை அவதானிக்கப்பட்டது. உதாரணமாக, சொய்சா பெண்கள் வைத்தியசாலை, ரிஷ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலை மற்றும் மஹரகம அபேக்ஷா வைத்தியசாலை ஆகிய வைத்தியசாலைகள் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் 500 மில்லி லீட்டர் வெற்று சேலயின் போத்தகளை விற்பனை செய்வதனூடாக ஈட்டக்கூடிய வருமானத்தை விடவும் குறைந்த வருமானம் அதாவது ஈட்டக்கூடிய வருமானத்தில் 2 சதவீதம் தொடக்கம் 52 சதவீதம் வரை குறைந்த வருமானத்தை ஈட்டியுள்ளதுடன், 2022 ஆம்

ஆண்டில் டி சொய்சா பெண்கள் வைத்தியசாலையினால் பாவனையின் பின்னர் வெளியேற்றப்பட்ட வெற்று சேலைன் போத்தகளின் அளவு 39,719 ஆக இருந்தபோதிலும் அந்த ஆண்டில் வைத்தியசாலையினால் வெற்று சேலைன் விற்பனை செய்வததன் மூலம் எந்த வருமானத்தையும் ஈட்டவில்லை.

(x) வைத்தியசாலையினால் அகற்றப்படும் வெற்று கொள்கலன்களுக்கான விலையைப் பெறுவதற்கு டெண்டர் கோரலில் வெற்று கொள்கலன்களுக்காக பெறவேண்டிய குறைந்தபட்ச விலை தீர்மானிக்கப்படவில்லை என்பதுடன், ஒரே பகுதியில் அமைந்துள்ள வைத்தியசாலைகளுக்கு வெற்று கொள்கலன்களுக்காக டெண்டர்தாரர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட விலைகளில் அசாதாரண நிலைமை அவதானிக்கப்பட்டது. உதாரணமாக, கொழும்பு தேசிய வைத்தியசாலை, ரிஷ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலை, காசல் வீதி பெண்கள் வைத்தியசாலை மற்றும் டி சொய்சா பெண்கள் வைத்தியசாலை ஆகிய 04 வைத்தியசாலைகளும் ஒரே பகுதியில் அமைந்துள்ள போதிலும் ஒரு கிலோ வெற்று சேலைன் போத்தல்களுக்கு டெண்டர்தாரர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட விலைகள் முறையே 172.60 ரூபா, 35.00 ரூபா, 44.00 ரூபா மற்றும் 40.00 ரூபா என்பதுடன், ஒரு கிலோ கார்ட்போர்ட் இற்காக முறையே 51.60 ரூபா, 8.00 ரூபா, 28.00 ரூபாவும் டி சொய்சா பெண்கள் வைத்தியசாலை எந்த விலைமனு கோரலும் மேற்கொள்ளவில்லை.

(xi) அதன்படி, அமைச்சின் கீழுள்ள வைத்தியசாலைகளில் வெற்று கொள்கலன்கள் மூலம் வருவாய் ஈட்டுவது குறித்து முறையான ஆய்வு நடாத்தப்பட்டு சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் இருந்து உரிய இழப்புகளை அறவிடப்பட வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டதுடன், வைத்தியசாலைகளில் சேகரிக்கப்படும் வெற்று கொள்கலன்களை அப்புறப்படுத்துவதன் மூலம் அரசாங்கத்திற்கு அதிகபட்ச வருமானம் கிடைக்கும் வகையில் வைத்தியசாலைகள் பின்பற்ற வேண்டிய குறைந்தபட்ச வழிகாட்டல்களை தயாரிப்பது அவசியம் என்பதையும் சுட்டிக்காட்டுகிறேன்.

(ஆ) 2023 மார்ச் 02 தொடக்கம் 08 ஆம் திகதி வரையான ஒரு வார காலப்பகுதியில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் சமையலறை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக ஆய்வின் போது, வைத்தியசாலையின் சிற்றூழியர்களுக்காக 5212 உணவு வேளைகள் ஆர்டர் செய்யப்பட்டதாகவும், அதில் 4602 உணவு வேளைகள் சிற்றூழியர்களால் பெறப்பட்டதாகவும் அதன்படி 610 உணவு வேளைகள் வீண்விரயமாக்கப்பட்டதாகவும், அதன் பெறுமதி சுமார் 73,172 ரூபா எனவும் இவ்வாறு உணவு வீணாகுவது ஆண்டு முழுவதும் நீடித்தால் வீணாகும் உணவின் பெறுமதி சுமார் 3.8 மில்லியன் ரூபா என்பதும் அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், இவ்வாறு உணவு வீண் விரயமாதல் தொடர்பாக வைத்தியசாலை அதிகாரிகளின் கண்காணிப்பு பலவீனமான மட்டத்தில் இருந்ததுடன், சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் 2015 மே 28 ஆம் திகதிய 01-21/2015 எனும் இலக்க பொது சுற்றறிக்கையின் 6.6 வது பந்தியின்படி, உணவுப் பொருட்களைப் பெற விருப்பம் தெரிவித்து, ஆனால் உணவைப் பெறாத ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து உரிய உணவின் விலையை அறவிடுவதற்கு அல்லது சுற்றறிக்கையின் 6.6 வது பந்தியின்படி, அத்தகைய உணவு வீண் விரயமாதலை குறைப்பதற்கான முறைகள் எவையும் வைத்தியசாலையினால் பின்பற்றப்படவில்லை.

(இ) அரச கொள்ளல் வழிகாட்டலகளின் பிரிவு 3.5 இற்கு முரணாக 2019 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் நோயாளர் பராமரிப்பு சேவைகளுக்காக பயன்படுத்தப்படும் துணிகள் மற்றும் படுக்கை விரிப்புகளை சலவை செய்வதற்கு தேவையான ஐந்து வகையான சுத்திகரிப்பு இரசாயனப் பொருட்கள் நேரடி ஒப்பந்த முறையின் கீழ் கொள்வனவு செய்து அதற்காக 18,578,739 ரூபா பணம் செலுத்தப்பட்டுள்ளது. இதன் விளைவாக, இந்த கொள்முதலில் பங்குபெற தகுதியுடைய தரப்பினருக்கு நியயமான, சமமான மற்றும் அதிகபட்ச வாய்ப்பையும், சுத்திகரிப்பிற்கான இரசாயனப் பொருட்களுக்கான போட்டியுடன் கூடிய குறைந்த விலை பெறுவதற்கான சந்தர்ப்பத்தையும் இழந்துள்ளனர். இந்த வைத்தியசாலையின் மத்திய தொற்று நீக்கி வழங்கல் பிரிவில் (CSSD) 4 சலவை இயந்திரங்களும் மற்றும் இரண்டு உலர்த்திகளும் இருந்த போதிலும் அந்த பிரிவின் செயல்பாடுகளுக்காக ஆறு தாதி உத்தியோகத்தர்களும், பதினொரு சுகாதார பணியாளர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளதுடன், 2022 ஆம் ஆண்டில் அவர்களுக்கு மேலதிக நேர கொடுப்பனவாக முறையே ரூ. 3,875,072 உம், ரூ. 1,931,223 உம் செலுத்தப்பட்டுள்ளமையும் அவதானிக்கப்பட்டது. இவ்வாறு மத்திய தொற்று நீக்கி வழங்கல் பிரிவிற்கு ஆறு தாதி உத்தியோகத்தர்களை பணியமர்த்துவதற்கான தேவை மற்றும் அந்த உத்தியோகத்தர்களுக்காக 2022 ஆம் ஆண்டில் 3,875,072 ரூபா மேலதிக நேர கொடுப்பனவு வழங்குவதற்கான தேவை கணக்காய்வில் உறுதி செய்யப்படவில்லை.

(ஈ) கண்டி தேசிய வைத்தியசாலையின் மருத்துவ உத்தியோகத்தர்களின் விடுதியின் தரை தளத்தில் அந்த உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கான பகல்நேர பராமரிப்பு நிலையமொன்றும் மற்றும் முன்பள்ளியொன்றும் நடத்துவதற்கு தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது. 2021 ஒக்டோபர் 12 ஆம் திகதிய KD/RG/3954 எனும் இலக்க மதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீட்டு அறிக்கை மூலம் மாத வாடகை ரூபா 78,500 என மதிப்பிடப்பட்டுள்ள போதிலும், 2022 டிசம்பர் 31 ஆம் திகதியிலும் உரிய தனியார் நிறுவனத்திடமிருந்து மாத வாடகையை அறவிடுவதற்கு எந்த ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை. இதன் காரணமாக 2021 நவம்பர் முதல் மற்றும் 2022 டிசம்பர் வரையிலான 14 மாத காலத்திற்காக மட்டும் அரசாங்கம் 1,099,000 ரூபா வருமானத்தை இழங்துள்ளது.

(உ) பேராதனை போதனா வைத்தியசாலையின் மருத்துவ அலுவலர்கள் தங்கும் விடுதியின் தரைத்தளத்தில் அந்த உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்காக 2475 சதுர அடி நிலப்பரப்பில் முன்பள்ளியொன்றும் மற்றும் பகல்நேர பராமரிப்பு நிலையமொன்றும் நடத்துவதற்கு தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது. இது 2007 ஆம் ஆண்டு முதல் இயங்கிவந்த போதிலும், அதற்கான முறையான அனுமதி எவையும் பெறப்படவில்லை. 2022 பெப்ரவரி 10 ஆம் திகதிய KD/RG/3969 எனும் இலக்க மதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீட்டு அறிக்கை மூலம் மாத வாடகை ரூபா 50,000 என மதிப்பிடப்பட்டுள்ள போதிலும், இது ஆரம்பிக்கப்பட்ட 2007 ஆம் ஆண்டு முதல் 2023 ஜனவரி 31 ஆம் திகதி வரை எந்த வாடகையும் அறவிடப்படவில்லை.

(ஊ) சீனக் கடன் உதவித் திட்டத்தின் கீழ் ரூபா. 12,737,715 மதிப்புள்ள GH Health Care/ Optima XR 200 AMX வகை Mobile X ray இயந்திரமொன்றை 2020 ஆம் ஆண்டு ஜூன் 25 ஆம் திகதி சிறிமாவோ பண்டாரநாயக்க விஷேட சிறுவர் வைத்தியசாலையின் கதிரியக்க பிரிவிற்கு வழங்கப்பட்டது. இந்த இயந்திரத்தின் பேட்டரி சார்ஜிங் காலம் போதுமானதாக இல்லாத காரணத்தால் தேவையான பரிசோதனைகளை முறையாக மேற்கொள்ள முடியவில்லை என்பதுடன் உரிய இயந்திரம் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட 2020 ஆம் ஆண்டு ஜூன் 25 ஆம் திகதி முதல் 2022 ஒக்டோபர் 28 ஆம் திகதி வரை 04 நோயாளி

பரிசோதனைகள் போன்ற மிகக்குறைந்த எண்ணிக்கையிலான பரிசோதனைகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(எ) பேராதனை விஷேட சிறுவர் வைத்தியசாலையில் 2005 ஆம் ஆண்டு டிசம்பர் 05 ஆம் திகதி நிறுவப்பட்ட MRI இயந்திரம் மூலம், 07 மாகாணங்கள் 12 மாவட்டங்களை உள்ளடக்கி சிறுவர் வைத்தியசாலை பிள்ளைகளுக்கும் ஏனைய வைத்தியசாலைகளின் பிள்ளைகளுக்கும் நோயாளர் பராமரிப்பு சேவைகளை வழங்கியது. 2018 மார்ச் 12 ஆம் திகதி ஒக்சிஜன் சிலிண்டர் மற்றும் அதன் துணை பாகங்கள் அதிலிருந்து விலகி இயந்திரத்தின் உள்ளே சிக்கியதால் இயந்திரம் செயலிழந்து காணப்பட்டதுடன், 17.6 மில்லியன் ரூபா செலுத்தி பழுபார்க்கப்பட்டு 2018 மார்ச் 15 ஆம் திகதி வைத்தியசாலைக்கு ஒப்படைக்கப்பட்ட போதிலும் 2018 மார்ச் 16 அன்று அது மீண்டும் செயலிழந்தது. அன்று முதல் இந்த இயந்திரம் பயன்படுத்தப்படாமல் உள்ளது. அதன்படி, பழுதுபார்ப்பதற்காக செலுத்தப்பட்ட தொகை பயனற்றதுடன், 04 வருடங்கள் கடந்த போதிலும் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியிலும் இந்த இயந்திரத்தை புதுப்பிப்பதற்கோ அல்லது புதிதாக MRI இயந்திரம் வழங்குவதற்கோ நடவடிக்கை எடுக்காத காரணத்தால் நோயாளர்கள் கடும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஏ) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவையின் vii அத்தியாயத்தின் பிரிவு 2.1 இன்படி மேலதிக நேர கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு மேலதிக நேர வேலை சரியாகவும் நியாயமாகவும் இருந்ததா என்பதை திணைக்களத் தலைவர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பொறுப்புள்ள உத்தியோகத்தர் ஒருவரினால் கண்டறிந்து தான் திருப்தியடைய வேண்டும் எனினும், அதற்கு மாறாக அதாவது தாதியர் கல்லூரியில் உள்ள மூன்று வாகனங்களில் ஒரு வாகனமாவது இயங்காத 55 நாட்களுக்காக மூன்று சாரதிகளுக்கும் மொத்த மணித்தியாலங்கள் 580 இற்காக ரூபா 79,212 இனை மேலதிக நேர கொடுப்பனவாக வழங்கப்பட்டுள்ளமை 2022 மே, ஜூன் மற்றும் ஜூலை மாத பணம் செலுத்தல் வவுச்சர்களை ஆராய்ந்த போது அவதானிக்கப்பட்டது.

3.10 நிர்வாகத்தின் பலவீனங்கள்

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 ஏப்ரல் 19 ஆம் திகதிய 03/2017 எனும் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின்படி, அனைத்து அரச நிறுவனங்களிலும் விரல் அடையாளம் பதிவு இயந்திரங்களை பயன்படுத்தி உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் புறப்பாடு பற்றிய பதிவுகளை வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என 2017 மே 12 ஆம் திகதியன்று DMS/0016 எனும் இலக்க திறைசேரி செயலாளரினால் சுகாதார செயலாளருக்கு அனுப்பிய கடிதத்தில், சுகாதார ஊழியர்களின் வருகை மற்றும் வெளியேறுதலை உறுதிப்படுத்துவதற்காக விரல் அடையாளப் பதிவு இயந்திரங்கள் 2017 ஜூலை 01 ஆம் திகதி முதல் செயற்படுத்தப்படாவிட்டால், தற்போதைய சம்பளத்தின்படி மேலதி நேர கொடுப்பனவுகள் வழங்காதிருப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என அறிவித்துள்ளது. எனினும் அமைச்சினால், அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு 31.08 மில்லியன் ரூபா செலவில் நிறுவப்பட்ட 213 விரல் அடையாளப் பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படாமல் செயலிழந்த நிலையில் காணப்பட்டதுடன் தற்போதைய சம்பளத்தின் அடிப்படையில் மதிப்பாய்வு ஆண்டில் சம்பளத்திற்காக 43,356.02 மில்லியன் ரூபாவும், மேலதிக நேர மற்றும் விடுமுறை தின கொடுப்பனவாக 36,191.77 மில்லியன் ரூபாவுமாக மொத்தம் 79,547.79 மில்லியன்

ரூபா செலுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு மேலதிக நேர மற்றும் விடுமுறை தின கொடுப்பனவிற்காக செலவிடப்பட்ட மொத்த தொகை சம்பளத்தில் 72 சதவீதமாகும்.

(ஆ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட சுய விபரக்கணகோவையின் பிரகாரம், 1994 ஆம் ஆண்டு செப்டெம்பர் 15 ஆம் திகதி உள்ளக பயிற்சி மருத்துவராக நியமிக்கப்பட்ட ஒரு மருத்துவர் 2003 ஜனவரி 08 ஆம் திகதியன்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி, ஐக்கிய இராஜியத்தின் எம்எஸ் சபை சான்றிதழுக்காக எலும்பு முறிவு சத்திர சிகிச்சை மருத்துவ கல்விக்காக 2003 ஜனவரி 29 ஆம் திகதி முதல் 2005 ஜனவரி 28 ஆம் திகதி வரையிலான 02 வருட கால தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் 2005 பெப்ரவரி 28 ஆம் திகதி மீண்டும் சேவைக்கு அறிக்கையிட்டுள்ளார். 10 நாட்கள் அனுமதிக்கப்பட்ட ஓய்வு விடுமுறையின் பின்னர், அம்பாறை பொது வைத்தியசாலையின் எலும்பு முறிவு சத்திர சிகிச்சை நிபுணராக கடமையாற்றுவதற்கு நியமிக்கப்பட்ட இந்த மருத்துவர் 2005 மே 30 ஆம் திகதி முதல் 2005 ஜுலை 21 ஆம் திகதி வரை 52 நாட்கள் சம்பளத்துடன் கூடிய விடுமுறை பெற்று தனிப்பட்ட விஜயமாக வெளிநாடு சென்றிருந்தார். விஷேட மருத்துவ நிபுணர்களுக்கு நாட்டுக்கு வெளியே சென்று வெளிநாட்டு வேலையில் ஈடுபடுவதற்கு 2006 மே 08 ஆம் திகதி முதல் 2007 மே 07 ஆம் திகதி வரை ஒரு வருட சம்பளமற்ற விடுமுறைக்கு அமைச்சினால் அங்கீகாரம் வழங்கும் போது 2003 ஜனவரி 29 ஆம் திகதி முதல் 2005 ஜனவரி 28 ஆம் திகதி வரையிலான 02 வருட காலத்திற்கான சம்பளமற்ற விடுமுறைக்காக கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தின் 13 (ஆ) வது பந்தியின்படி கற்கைநெறியை நிறைவு செய்தபின்னர் நாட்டுக்கு திரும்பி மீண்டும் கடமையை பொறுப்பேற்ற பின்னர் குறைந்தபட்சம் 08 வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்தல் வேண்டும் எனவும் அவ்வாறு செய்யத் தவறினால் கற்கை நெறிக்காக செலவிடப்பட்ட மொத்த செலவினங்களையும் பயிலுனர் செலுத்த வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அது குறித்து அவதானம் செலுத்தாமல் சம்பளமற்ற விடுமுறை அங்கீகரிக்கப்பட்டது. அவர் 2007 ஆம் ஆண்டின் பின்னர் பணிபுரிந்த தகவல்கள் சுய விபரக் கோவையில் சேர்க்கப்படவில்லை என்றாலும், 2022 நவம்பர் கணக்காய்வில் சுமார் 15 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் அந்த உத்தியோகத்தரின் சேவையை வெறிதாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுடன் கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தின் பிரகாரமும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆராய்ச்சி பெண் உத்தியோகத்தர் ஒருவருக்கு பிஎச்டி படிப்பிற்காக 2016 ஏப்ரல் 27 ஆம் திகதி முதல் 2019 ஏப்ரல் 27 ஆம் திகதி வரை சம்பளமற்ற விடுமுறை அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், பின்னர் இந்த விடுமுறை காலத்தை 2020 செப்டம்பர் 26 ஆம் திகதி வரை நீடிப்பு செய்யப்பட்டது. 2016 மார்ச் 24 ஆம் திகதி கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தின் பிரிவு (iii) இன்படி, படிப்பு முடிந்த உடனேயே அதாவது 2020 செப்டம்பர் 27 ஆம் திகதி மீண்டும் சேவைக்கு திரும்ப வேண்டும் என்றபோதிலும், கணக்காய்வுத் தினமான 2022 ஜுன் 20 ஆம் திகதியிலும் உத்தியோகத்தர் சேவைக்குத் திரும்பவில்லை. அரச சேவைகள் ஆணைக்குழுவின் புதிய நடைமுறை விதிகள் முதலாவது பிரிவின் 214 வது விதியின்படி பதவியை விட்டு வெளியேறியதாகக் கருதப்படும் ஒரு உத்தியோகத்தருக்கு அது குறித்து உடனடியாக பதிவுத் தபால் மூலம் அறிவிப்பது நிறுவனத் தலைவரின் பொறுப்பு என்ற போதிலும், மேற்படி உத்தியோகத்தர் சேவையை வெறிதாக்கிய 15 மாதங்களின் பின்னர் 2021 டிசம்பர் 22 ஆம் திகதி சேவை வெறிதாக்கல் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சேவை வெறிதாக்கல் கடிதத்தின்படி அறவிடப்பட வேண்டிய ரூ.1,138,409.31 பிணை மீறல் தொகை மற்றும் உத்தியோகத்தருக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவாக மேலதிகமாக

வழங்கப்பட்ட ரூ. 7,186.04 இனை 2022 ஜூன் 30 ஆம் திகதியிலும் உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்படவில்லை.

(ஈ) சுகாதார அமைச்சின் விசாரணை பிரிவின் செயற்பாடுகள் மற்றும் முன்னேற்றம் தொடர்பாக நடத்தப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, 2021 ஆம் ஆண்டில் சுகாதார அமைச்சின் திடீர் முற்றுகைப் பிரிவினால் விசாரணைப் பிரிவிற்கு விசாரணைக்காக ஆரம்ப விசாரணை அறிக்கைகள் 364 அனுப்பியுள்ளதுடன் 2021 ஜனவரி 01 நிலவரப்படி 659 முடிக்கப்படாத விசாரணைகள் காணப்பட்டதுடன் 2021 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அது 900 ஆக அதிகரித்துள்ளது.

(ii) விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி மற்றும் நிறைவு செய்த திகதி குறித்து பரிசீலிக்கும் போது, விசாரணையை நிறைவு செய்வதற்கு 12 மாதங்கள் முதல் 132 மாதங்கள் எடுத்த 87 விசாரணைகள் இருந்தன.

(iii) விசாரணை ஆரம்பிக்கப்பட்டு 12 மாதங்கள் முதல் 180 மாதங்கள் வரை நீண்ட காலம் கடந்தும், 2022 ஜூலை 18 இற்குள் நிறைவு செய்யப்படாத விசாரணைகளின் எண்ணிக்கை 182 ஆகும்.

(iv) அடிப்படை தகைமைகள் இன்றி மற்றும் போலிச் சான்றிதழ்களை சமர்ப்பித்து அதனூடு 16 பேர் தாதியர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதுடன், அவர்கள் தொடர்பாக மனிதாமான ரீதியில் கருதி அவர்களின் சேவையை நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், அவர்களின் ஆட்சேர்ப்பின் போது ஏற்பட்ட பொறுப்பாக தரப்பினரின் நிர்வாகப் பிழைகள் மற்றும் அலட்சியங்களை அதிகாரிகள் கவனத்தில் கொள்ளவில்லை என்பதுடன், அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(v) கணக்காய்வின் போது தோராயமகத் தேர்ந்தெடுக்கப்பட்ட விசாரணை கோவைகள் பலவற்றை ஆராய்ந்த போது, 02 விசாரணைகளுக்கு அறவிடப்பட வேண்டிய 873,433 ரூபா 2023 மே 15 ஆம் திகதி கணக்காய்வின் போது கூட சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து அறவிடப்படவில்லை.

(vi) போலிச் சான்றிதழ்களை சமர்ப்பித்து 1994 ஆம் ஆண்டில் தாதியர் சேவையில் இணைந்த தாதி உத்தியோகத்தர் ஒருவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு 27 வருட தாமதித்த பின்னர் 2021 ஜூன் 25 ஆம் திகதி விசாரணை பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் அந்த விசாரணை 2023 ஜனவரி 30 ஆம் திகதியிலும் நிறைவு செய்யப்படவில்லை. இந்த தாதி உத்தியோகத்தர் 2012 ஜூலை 04 ஆம் திகதி தாதியர் சேவையின் III ஆம் தரத்திற்கு உள்வாங்கப்பட்டுள்ளதுடன், 2016 ஒக்டோபர் 10 ஆம் திகதிய அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் PSC/EST/3/5/13/1/2013 எனும் இலக்க கடிதத்தின் மூலம் அடிப்படை தகைமைகள் இன்றி ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அவரின் சேவையை நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு அவர் 2011 ஒக்டோபர் 26 ஆம் திகதி முதல் சுமார் 06 வருட காலம் முறையான அனுமதியின்றி சேவைக்கு சமூகமளிக்காத போதிலும், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரச சேவைகள்

ஆணைக்குழுவின் புதிய நடைமுறை விதிகள் முதலாவது அத்தியாயத்தின் பிரிவு XV இன் 214 ஆம் விதியின் 14 வது இணைப்பின்படி பதிவுத் தபாலில் சேவையை வெறிதாக்கல் அறிவிக்கப்படவில்லை என்பதுடன், அவர் தாதியர் சேவைக்கு உள்ளீர்ப்பு செய்தல் மற்றும் சேவையை நிரந்தரமாக்குதல் ஆகிய இரண்டும் தாதியர் சேவையை விட்டு வெளியேறிய காலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளமை கணக்காய்வில் சிக்கலாக இருந்தது. மேலும், பொறுப்பு வாய்ந்த தரப்பினரின் பொறுப்பற்ற தன்மை மற்றும் கவனக் குறைவு காரணமாக சேவையை விட்டு வெளியேறிய இவர் 06 வருடங்களின் பின்னர் மீண்டும் சேவையில் அமர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

(vii) 2020 பெப்ரவரி 24 ஆம் திகதிய ஆரம்ப விசாரணை அறிக்கை இல MH/FS/P1/24/2019/A-167/353 இன்படி, வாய்வழி புற்றுநோய் பிரிவிற்காக வழங்கப்பட்ட மடிக்கணினி காணாமல் போனமை தொடர்பாக பல் அறுவை சிகிச்சை நிபுணரினால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பு நிதி ஒழுங்குவிதிகளின் பிரகாரம் அறவிடுவதற்கு ஆரம்பகட்ட விசாரணை அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள போதிலும், 2023 பெப்ரவரி 17 ஆம் திகதி கணக்காய்வுத் தினம் வரையிலும் அதன் பெறுமதியை மதிப்பீடு செய்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(viii) 2021 ஆம் ஆண்டில், ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்காக விசாரணைப் பிரிவிற்கு பெறப்பட்ட 20 விசாரணைகளுக்கான குற்ற வரைவுகள் மற்றும் 02 விசாரணைகளுக்கான பதில் கடிதங்கள் 2021 டிசம்பர் 31 நிலவரப்படி அரச சேவைகள் ஆணைக் குழுவின் சுகாதார சேவைகள் குழுவிற்கு அனுப்பட்டுள்ளது. எனினும், 2022 ஜூலை 18 ஆம் திகதியிலும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி காட்டப்பட்டுள்ளது.

(ix) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 364 விசாரணைகளில் 84 விசாரணைகள் நிறைவடையவில்லை என்பதுடன், 268 விசாரணைகள் நிறைவடைந்ததா இல்லையா என்பது தெளிவாக குறிப்பிடப்படவில்லை.

(உ) சுகாதார அமைச்சின் சட்ட பிரிவின் செயற்பாடுகள் மற்றும் முன்னேற்றம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, 2021 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் முழுமையாக முடிக்காத 106 வழங்குகள் இருந்ததுடன், 2021 ஆம் ஆண்டில் புதிதாக 39 வழங்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் 2021 ஆம் ஆண்டு 27 வழங்குகள் முடிக்கப்பட்ட போதிலும் ஆண்டு இறுதியில் முடிக்கப்படாத வழக்குகள் 118 உள்ளன. இதில் 106 வழக்குகள் அதாவது மொத்த வழக்குகளில் 90 சதவீதமானவை அமைச்சுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வழக்குகளாகும்.

(ii) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 நிலவரப்படி, சுகாதார அமைச்சின் கீழுள்ள வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களினால் வெளி தரப்பினருக்கு எதிராக 09 வீதி விபத்துகள் தொடர்பாக மொத்தம் ரூபா 5,888,124.03 பெறுமதியான இழப்பீடு/நட்டம் கோரி வழங்கு தாக்கல் செய்துள்ளதுடன், அமைச்சுக்கு எதிராக தனிநபர்/மக்கள் குழுவினால் 10 வீதி

விபத்துகளுக்கான மொத்தம் ரூபா 31,212,746.08 பெறுமதியான இழப்பீடு/நட்டம் கோரி வழங்கு தாக்கல் செய்துள்ளது.

(iii) சுகாதார அமைச்சு தொடர்பான வழக்குகள் பற்றிய தகவல்களை ஆராய்ந்த போது, 10 ஆண்டுகளுக்கும் மேலாக முடிக்கப்படாத சுகாதார அமைச்சின் கீழுள்ள வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களினால் வெளி தரப்பினருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள ரூபா 415,588.00 பெறுமதியான 02 வழக்குகளும், அமைச்சுக்கு எதிராக தொடரப்பட்ட 32,750,000.00 பெறுமதியான 06 வழக்குகளுமாக 08 வழக்குகள் இருந்தன.

(iv) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, அமைச்சினால் செய்யப்பட்ட கொள்வனவுகள் தொடர்பான தீர்மானங்களுக்கு எதிராக பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. இவ்வாறு தாக்கல் செய்துள்ள பெரும்பாலான வழக்குகள் அப்போது உரிய பணிகளை செய்து கொண்டிருந்த ஒப்பந்ததாரர்களினால் செய்யப்பட்டதை அவதானிக்க முடிந்தது. அமைச்சின் சட்ட பிரிவு சட்டமா அதிபர் திணைக்களத்துடன் கலந்தாலோசித்து இந்த வழக்குகளை விரைவில் முடிக்க வேண்டிய தேவை அவதானிக்கப்பட்டதுடன், இல்லையெனின் கொள்ளல் செயல்முறைகளில் எதிர்பார்த்த நோக்கங்களில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பது அவதானிக்கப்பட்டது. 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் இவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட பல வழக்குகள் 2021 டிசம்பர் 31 நிலவரப்படி முடிக்கப்படாமல் இருப்பதால் கொள்ளல் தீர்மானங்களை செயற்படுத்துவது தொடர்ந்து தாமதமானது.

(v) ஒப்பந்தங்களை மீறிய அதிகாரிகளிடமிருந்து அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு உரிய தகவல்கள் சட்ட பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளமை தொடர்பாக பலமுறை கணக்காய்விற்கு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், அமைச்சின் கணக்காய்வு மற்றும் நிர்வாகக்குழு கூட்டத்திலும் இந்த விடயங்கள் கலந்துரையாடப்பட்ட போது உரிய அறவீடுகளுக்கான தகவல்கள் சட்ட பிரிவிற்கு அனுப்பப்பட்டதாக கூறப்பட்டது. ஆனால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி இவ்வாறு ஒப்பந்தங்களை மீறிய உத்தியோகத்தர்களிடமிருந்து பணத்தை அறவிடுவதற்காக தொடரப்பட்ட வழக்குகள் உள்வாங்கப்படவில்லை.

(ஊ) பயிற்சி கல்லூரிகளில் பயிற்சிக்காக இணைக்கப்படும் மாணவர்கள் சம்பந்தப்பட்ட பயிற்சி நெறிக் காலத்தில் அல்லது பயிற்சியின் பின்னர் கட்டாய சேவைக் காலம் முடிவதற்குள் சேவையிலிருந்து விலகுதல், பயிற்சியை கைவிடல், பதவி நீக்கம் செய்தல், சேவையை இரத்துச் செய்தல் போன்ற எந்த வகையிலும் தமது நியமனத்தை இழந்தால் உரிய கற்கை நெறிக்காக அரசாங்கம் செலவு செய்த அதாவது பயிற்சிக் காலத்தில் செலுத்தப்பட்ட சம்பளம், கட்டணம், முற்பணம் மற்றும் கொடுப்பனவுகள் உட்பட அனைத்து செலவுகளும் மற்றும் பிணை தொகையையும் பயிலுனர் மற்றும்/அல்லது பிணையாளர்களிடம் அல்லது அவரது பதிலாளர்களிடமிருந்து அரசாங்கத்திற்கு திருப்பிச் செலுத்த வேண்டும் என்று பயிலுனர் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கும் இடையே கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் ஊடாக உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. இவ்வாறு பயிற்சி கல்லூரிகளில் பயிற்சிக்காக இணைக்கப்பட்ட மாணவர்கள் முறைசாரா

முறையில் பயிற்சியை கைவிட்டதால், பயிற்சி பெறுவதற்கான எதிர்பார்த்து காத்திருக்கும் மற்றுமொரு பிரிவினரின் வாய்ப்பை இழக்கச் செய்து அரசாங்கத்திற்கு பெறவிருந்த சேவையையும் இழக்க செய்துள்ளது. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, 2018 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2022 ஆகஸ்ட் 15 ஆம் திகதி வரையான காலத்தினுள் 23 பயிற்சி கல்லூரிக்கு இணைக்கப்பட்ட 432 பயிலுனர்கள், பயிற்சியை உரிய காலத்தில் நிறைவு செய்யாது பயிற்சியை கைவிட்டுள்ளனர் என்பதுடன், அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பிணைகளின் பெறுமதி சுமார் ரூபா 115,850,000 ஆக இருந்தது.

(எ) "பயிற்சியை கைவிடும் தாதி மாணவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பெறுமதியை அறவிடாமை 2019" எனும் தலைப்பில் எனது இலக்கம் HSM/E/MH/03/2019-12 மற்றும் 2019 ஒக்டோபர் 22 ஆம் திகதிய கணக்காய்வு வினவல் தொடர்பான பதில் அனுப்பப்பட்ட உமது இலக்கம் CA/AQ/01/2019/61 எனும் 2021 ஆகஸ்ட் 12 ஆம் திகதிய கடிதத்தைச் சரிபார்த்த பிறகு தங்களுக்கு அனுப்பப்பட்ட எனது சம இலக்கம் கொண்ட 2022 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய கணக்காய்வு வினவல் தொடர்பான பதில் 2023 ஜனவரி 18 ஆம் திகதியிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை. உமது பதில் கடிதத்தின் 03 வது பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒப்பந்த பிணையை மீறிய எழுநூற்று இரண்டு (702) தாதி மாணவர்களிடமிருந்து அறவிட வேண்டிய மதிப்பு ரூபா. 225,383,835 என்றும் 2021 ஜூன் 30 நிலவரப்படி ரூபா. 25,920,344 அறவிடப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த கட்டணங்களை உறுதிப்படுத்தும் எழுத்து மூலமான சான்றுகளும் மற்றும் அறவிடப்பட வேண்டிய தொகை என குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 199,463,491 அறவிடல் தொடர்பான தற்போதைய முன்னேற்றம் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை. மேலும், கணக்காய்வு வினவலில் குறிப்பிடப்பட்டுள்ள பயிற்சியை கைவிட்ட 861 தாதி மாணவர்களில் 702 பேரிடம் அறவிட வேண்டிய பணம் பற்றி மட்டும் பதிலில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், மீதமுள்ள 159 மாணவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை குறித்த தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஏ) மருத்துவ அலுவலர்களுக்கான தனிப்பட்ட கோவைகள் பராமரிக்கப்படும் அமைச்சின் மூன்றாம் நிலை பராமரிப்பு சேவை பிரிவினால் 2015 ஒக்டோபர் முதல் 2022 டிசம்பர் வரை சேவை வெறிதாக்கிய 71 மருத்துவர்களுக்கு வழங்கப்பட்ட சேவை வெறிதாக்கல் கடிதங்களின் பிரதிகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், இந்த கடிதங்கள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஐ) மருத்துவ விற்பனை ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்காக அரச சுகாதாரத் துறை நிறுவனங்களுக்கு மருத்துவம்/ வணிகம் விற்பனைப் பிரதிநிதிகள் வர்த்தகத்திற்காக வருகை தருவதை தடுத்து 2012 மார்ச் 11 ஆம் திகதி வெளியிடப்பட்ட 02-158/2007-02 எனும் இலக்க பொது சுற்றறிக்கை திருத்தப்பட்டு, சுகாதார அமைச்சினால் 2012 ஜூன் 13 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட 02-158/2007-03 எனும் இலக்க பொது சுற்றறிக்கையின் 1 மற்றும் 2 வது சரத்துகள் மூலம் அனுமதிக்கப்பட்ட திகதி மற்றும் நேரங்களுக்கு மாறாக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மருத்துவம்/ வணிகம் விற்பனைப் பிரதிநிதிகளின வருதல் மற்றும் விற்பனை ஊக்குவிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும், வைத்தியசாலையில் அதிகளவு தூய்மை பராமரிக்கப்பட வேண்டிய சத்திர சிகிச்சைக்கூடம் மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவிற்கும் அருகிலும், சில வேளைகளில் சத்திர சிகிச்சைக் கூடத்திலும் விற்பனை ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்காக மருத்துவம்/ வணிகம் விற்பனைப் பிரதிநிதிகள்

தங்கியிருப்பதாகவும், சுற்றிக்கையின் 3 வது சரத்தின்படி பராமரிக்கப்பட வேண்டிய வைத்தியசாலைக்கு வருகை தரும் மருத்துவம்/ வணிகம் விற்பனைப் பிரதிநிதிகள் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கும் பதிவேடு வைத்தியசாலை பணிப்பாளர் அலுவலகத்தினால் பராமரிக்கப்படவில்லை எனவும், சுற்றிக்கையின் 5 வது சரத்தின்படி இலங்கை மருந்து கைத்தொழில் சபையினால் (SLCPI) வழங்கப்பட்ட அடையாள அட்டையுடைய மருத்துவம்/ வணிகம் விற்பனைப் பிரதிநிதிகள் மட்டும் வைத்தியசாலைக்குள் பிரவேசிப்பதை உறுதிப்படுத்தும் முறைமையை வைத்தியசாலை பாதுகாப்பு சேவை பிரிவினால் செயற்படுத்தவில்லை என்பதுடன், அது தொடர்பாக வைத்தியசாலையின் நிர்வாகத்தின் அவதானத்திற்கு கொண்டு செல்லவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. அதன்படி வைத்தியசாலையினுள் மருத்துவம்/வணிகம் விற்பனைப் பிரதிநிதிகளினால் மேற்கொள்ளப்படும் ஊக்குவிப்பு செயற்பாடுகள் மேற்படி சுற்றறிக்கைக்கு மாறாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக வைத்தியசாலை உயர்மட்ட நிர்வாகத்தின் கண்காணிப்பு பலவீனமான மட்டத்தில் உள்ளதாகவும், இதன் காரணத்தால் மருத்துவம்/வணிகம் விற்பனைப் பிரதிநிதிகளினால் மேற்கொள்ளப்படும் விளம்பரச் செயற்பாடுகள் வைத்தியசாலையின் பாதுகாப்பிற்கும் நோயாளர் பராமரிப்பு சேவைகளுக்கும் பாதகமான தாக்கத்தின் அபாயத்தை கணக்காய்வில் நிராகரிக்க முடியாது என்பதும் அவதானிக்கப்பட்டது. எனவே, வைத்தியசாலையினுள் மருத்துவம்/வணிகம் விற்பனைப் பிரதிநிதிகளினால் மேற்கொள்ளப்படும் ஊக்குவிப்பு செயற்பாடுகள் மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளும் வகையில் குறைந்தபட்ச வேலைத் திட்டத்தை வைத்தியசாலையினால் தயாரித்து துரிதமாக நடைமுறைப்படுத்துவதன் அவசியத்தை சுட்டிக்காட்டுகிறேன்.

(ஒ) 2015, 2016, 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட இடமாற்ற கட்டளையின் பிரகாரம் இடமாற்றம் பெற்று, ஆனால் ரிஷ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையில் (போதனா) நீண்ட காலமாக பணியாற்றிய 11 மருத்துவ அலுவலர்கள் 2022 ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் ரிஷ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டனர். இது தொடர்பாக நடத்தப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 09 மருத்துவ அலுவலர்கள் 2015, 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான இடமாற்றக் கட்டளையின்படி, கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கும் மற்றும் டி சொய்சா பெண்கள் வைத்தியசாலைக்கும் (போதனா) இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், மீண்டும் அந்த மருத்துவ அலுவலர்கள் 09 பேரும் ரிஷ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலைக்கு பணியமர்த்தப்பட்டனர். அந்த மருத்துவ அலுவலர்கள் 09 பேரும் 2022 ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் ரிஷ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் சேவையிலிருந்து விடுவிக்கப்பட்ட போதிலும், அந்த மருத்துவ அலுவலர்கள் 09 பேரும் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கும் மற்றும் டி சொய்சா பெண்கள் வைத்தியசாலைக்கும் (போதனா) சேவைக்கு சமூகமளிக்கவில்லை என்பதுடன், மேற்படி 09 மருத்துவ அலுவலர்களில் 03 மருத்துவர்களுக்கு சேவைக்கு சமூகமளிக்குமாறு மின்னணு செய்திகள் (Tele mail) மூலம் அறிவித்ததைத் தவிர இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரச சேவைகள் ஆணைக் குழுவின் நடைமுறை விதி 217 இன்படி சேவை நிலையத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, ஆனால் புதிய சேவை நிலையத்தில் சேவைக்கு சமூகமளிக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக கொழும்பு தேசிய வைத்தியசாலை மற்றும் டி சொய்சா பெண்கள் வைத்தியசாலை என்பவற்றினால் தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ii) ரிஷ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையில் பணியாற்றிய மற்றுமொரு மருத்துவ அலுவலர் 2019 ஆம் ஆண்டிற்கான இடமாற்ற உத்தரவின் பிரகாரம் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட போதிலும் மீண்டும் ரிஷ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலைக்கு பணியமர்த்தப்படாமல் தொடர்ந்தும் ரிஷ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையில் பணியாற்றிய பின்னர் 2022 ஜனவரி 23 ஆம் திகதி அந்த மருத்துவ அலுவலர் சிறுவர் வைத்தியசாலையின் சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டார். எவ்வாறாயினும், இந்த உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்ட பின்னரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கடமைக்கு சமூகமளிக்கவில்லை என்பதுடன், கொழும்பு தேசிய வைத்தியசாலையினால் தமது முந்தைய கடமை நிலையத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, ஆனால் திட்டமிட்டபடி புதிய சேவை நிலையத்திற்கு கடமைக்கு சமூகமளிக்காத உத்தியோகத்தர் தொடர்பில் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரச சேவைகள் ஆணைக் குழுவின் நடைமுறை விதி 217 இன்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(iii) மீண்டும் பணிக்கு நியமிக்கப்பட்ட மருத்துவ அலுவலர்களுக்கான சம்பளம் வழங்குவது தொடர்பாக சுகாதார அமைச்சின் இலக்கம் MA/MS/B/03/2019/A மற்றும் 2022 ஏப்ரல் 05 ஆம் திகதிய கடிதத்தை தவறாகப் பயன்படுத்தி கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கும் மற்றும் டி சொய்சா பெண்கள் வைத்தியசாலைக்கும் சேவைக்கு சமூகமளிக்காத 09 மருத்துவ அலுவலர்களுக்கும் அவர்கள் சேவையிலிருந்து விடுவிக்கப்பட்ட நாளில் இருந்து 2022 ஆகஸ்ட் மாதம் வரை அந்த உத்தியோகத்தர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவாக (மேலதிக நேர கொடுப்பனவு தவிர்த்து) அவ்விரு வைத்தியசாலைகளினாலும் ரூ. 7,952,059.02 மற்றும் ரூ. 938,437.00 செலுத்தப்பட்டுள்ளது.

(iv) மேலும், மேற்படி இலக்கம் MA/MS/B/03/2019/A மற்றும் 2022 ஏப்ரல் 05 ஆம் திகதிய சுகாதார அமைச்சின் கடிதத்தின் மூலம் ''மீள பணிக்கு நியமிக்கப்பட்ட மருத்துவ அலுவலர்களின் சம்பளம் வழங்குதல்'' தொடர்பாக 2022 ஜனவரி 01 ஆம் திகதியன்று வழங்கப்பட்ட MA/MS/B/01/2020 எனும் இலக்க கடிதம் பற்றிய குறிப்பு கொடுக்கப்பட்ட போதிலும் கணக்காய்விற்கு அந்த கடிதம் சமர்ப்பிக்கப்படவில்லை.

(v) ரிஷ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையில் பணியாற்றிய மற்றுமொரு மருத்துவ அலுவலர் 2019 ஆம் ஆண்டிற்கான இடமாற்ற உத்தரவின் மூலம் கொழும்பு வடக்கு (ராகம) போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டதோடு, அந்த உத்தியோகத்தர் மீண்டும் ரிஷ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையில் பணிக்கு நியமிக்கப்பட்டு 2022 ஜனவரி 13 ஆம் திகதி அந்த மருத்துவ அலுவலர் மேற்படி வைத்தியசாலையின் சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டார். எவ்வாறாயினும், இந்த உத்தியோகத்தர் கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலைக்கு கடமைக்கு 2023 மார்ச் 23 ஆம் திகதி வரை சுமார் ஒரு மாதத்திற்கும் மேலாக தாமதித்து சமூகமளித்துள்ளார். அவ்வாறு சேவைக்கு சமூகமளிக்காத காலத்திற்காக கொழும்பு வடக்கு (ராகம) போதனா வைத்தியசாலையினால் அவருக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவாக ரூபா. 153,463.38 செலவிடப்பட்டிருந்தது.

(vi) மேற்படி அவதானிப்புகள் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள, ரிஷ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் சேவையில் இருந்து விடுவிக்கப்பட்ட 11 மருத்துவ அலுவலர்களுக்கு ரிஷ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின்

அதிகாரிகள் கடமைகளை வழங்காவிட்டாலும், வைத்தியசாலையின் ஒவ்வொரு பிரிவுகளினாலும் தயாரிக்கப்பட்ட மாதாந்த கடமைப் பட்டியலில் (Monthly Duty Roster) அந்த உத்தியோகத்தர்களின் பெயர்கள் உள்வாங்கப்பட்டு சேவையிலிருந்து விடுவிக்கப்பட்ட தினத்திலிருந்து 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை ரூ. 5,722,501.00 இனை மேலதிக நேர கொடுப்பனவு மற்றும் விடுமுறை தின கொடுப்பனவாக செலுத்தியுள்ளது.

(vii) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரச சேவைகள் ஆணைக் குழுவின் நடைமுறை விதி 214 இன்படி, வருடாந்த இடமாற்ற கட்டளை பெறப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் உரியவாறு, குறித்த திகதியில் புதிய பணியிடத்தில் கடமைக்காக சமூகமளித்தல் இடமாற்றக் கட்டளை பெற்ற உத்தியோகத்தரின் பொறுப்பு என்றபோதிலும் மேலே குறிப்பிட்ட 11 மருத்துவ அலுவலர்களும் அதற்கேற்ப செயற்படவில்லை.

(viii) 2015, 2016, 2017,2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான வழங்கப்பட்ட இடமாற்றக் கட்டளை நடைமுறைப்படுத்தப்படாமல், நீண்ட காலமாக ரிஷ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையில் பணியாற்றும் 11 மருத்துவ அலுவலர்களில் 09 உத்தியோகத்தர்கள் மீண்டும் 2022 ஆம் ஆண்டிற்கான இடமாற்றப் பட்டியல் (Interim List) மூலம் ரிஷ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதை அவதானிக்கப்பட்டது. மேலும், கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டு ரிஷ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் சேவையில் இருந்து 2022 ஜனவரி 23 ஆம் திகதி விடுவிக்கப்பட்ட வைத்திய அதிகாரி ஒருவர் தொடர்பில், 2022 வருடாந்த இடமாற்ற பட்டியலில் அவர் தற்போதைய பணியிடம் ‘‘ரிஷ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலை (LRH) ’’ என பதிவு செய்யப்பட்டமை கணக்காய்வின் போது சிக்கலாக இருந்தது. இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்ட ஆனால் அதனை செயற்படுத்தப்படாத நிலையில் பணியாற்றுகின்ற அதே வைத்தியசாலைக்கு மீண்டும் பணியமர்த்தல் தொடர்பில் பணியிடமாற்றத்தின் சேவைக் காலத்தை பொருட்படுத்தாமல் பணியாற்றும் அதே வைத்தியசாலைக்கு இடமாற்றம் வழங்கப்பட்டதன் மூலம் நீண்ட காலமாக ஒரே பணியிடத்தில் பணியாற்ற இடமளித்துள்ளதுடன், அதன் மூலம் வைத்தியர்களின் இடமாற்றக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடைய சுகாதார அமைச்சு தவறியுள்ளது.

(ஓ) கேகாலை பொது வைத்தியசாலை வளாகத்தில் இலங்கை வங்கியின் கிளையொன்றுக்கு 2006 ஆம் ஆண்டு முதல் ஒப்பந்தம் இன்றி வைத்தியசாலையின் நிர்வாகக் கட்டிடத்தின் ஒரு பகுதி வழங்கப்பட்டுள்ளதுடன், 2020 ஆம் ஆண்டு ஜனவரி முதல் அதற்கான மதிப்பீட்டு வாடகை அறவிடப்பட்ட போதிலும், 2007 முதல் 2019 வரையான 13 ஆண்டுகளுக்கு வசூலிக்க வேண்டிய வரி வாடகைத் தொகை நிர்ணயிக்கப்பட்டு நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஔ) கம்பளை ஆதார வைத்தியசாலையின் பல் கதிரியக்க பரிசோதனைகளுக்கு X – Ray இயந்திர பயன்பாட்டுக்குத் தேவையான இரசாயனப் பொருள் (Developer. fixer) மருத்துவ விநியோகப் பிரிவினால் வைத்தியசாலைக்கு வழங்கப்படாத காரணத்தால் 2020 ஒக்டோபர் 31 ஆம் திகதியின் பின்னர் அந்த இயந்திரத்தைப் பயன்படுத்த முடியவில்லை. இதன் காரணமாக ஒரு வருடத்திற்கு கிட்டத்தட்ட 250 நோயாளர்களின் இந்த பரிசோதனை அறிக்கைகளைப் பெற முடியவில்லை.

(க) பேராதனை போதனா வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைப் பிரிவுகள், அதிதீவிர சிகிச்சைப் பிரிவுகள், குறைமாத சிசுக்களுக்கான பிரிவுகள், பிரசவ கூடங்களுக்குத் தேவையான மருத்துவ வாயுவை வழங்கும் compressed Air இயந்திரங்கள் இரண்டு மற்றும் Vacuum இயந்திரங்கள் மூன்று என்பன செயலிழந்து காணப்பட்டன. இந்த இயந்திரங்கள் மற்றும் குழாய் அமைப்புகளின் சேவைப் பணிகளுக்காக ஒரு தனியார் நிறுவனத்துடன் 2022 ஆகஸ்ட் 18 ஆம் திகதி முதல் 2023 ஆகஸ்ட் 17 ஆம் திகதிவரை அமுலில் உள்ளவாறு ரூ 1,118,964 இற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த இயந்திரங்கள் 2023 ஜனவரி 31 ஆம் திகதி நிலவரப்படி பழுதுபார்க்கப்படவில்லை.

(ங) 2021 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் சிலாபம் மாவட்ட பொது வைத்தியசாலையில் கட்டப்பட்ட எரியூட்டி (Incinerator) இன் மூலம் வைத்தியசாலைக் கழிவுகள் முழுவதும் எரிக்கப்படுவதால் சுகாதார அமைச்சின் ஊடாக 2017 ஜூன் 16 ஆம் திகதி சிலாபம் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட 701,335.83 அமெரிக்க டொலர் மதிப்புள்ள மெடாமைசர் இயந்திரம் பாவிக்காமல் இருந்தது. மேலும், மெடாமைசர் இயந்திரத்திற்கான 05 வருட சேவை உடன்படிக்கையின் பிரகாரம் சுகாதார அமைச்சு அதற்கான செலவை ஏற்றுள்ளதுடன் இயந்திரம் பாவிக்காமல் காணப்பட்டதால் அது சிதைவடைய/ செயலிழக்க நேரிடும் என்பது அவதானிக்கப்பட்டது.

(ச) துணை மருத்துவ சேவையில் பல் தொழில்நுட்பவியலாளர் II (ஆ) தரத்திற்கு 1989 ஜூன் 01 ஆம் திகதி தொடக்கம் நியமனம் பெற்ற இருவர் ஓய்வு பெறும் போது துணை மருத்துவ சேவையில் பல் தொழில்நுட்பவியலாளர் விஷேட தரத்திற்கு பதவியுயர்வு பெற்று ஒருவர் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையிலிருந்தும் மற்றவர் மஹரகம தேசிய பல் மருத்துவ போதனா வைத்தியசாலையிலிருந்தும் ஓய்வு பெற்றனர். அந்த இரு உத்தியோகத்தர்களின் முதல் நியமனத் தினம், வினைத்திறன் தடைகாண் தேர்ச்சி மற்றும் பதவியுயர்வுகள் ஒரே தினமாக இருந்த போதிலும் ஓய்வு பெறும் போது இரு உத்தியோகத்தர்களின் பதவியுயர்வு மற்றும் சுற்றறிக்கைகளின் பிரகாரம் சம்பள உயர்வுகளில் திருத்தப்பட்ட சம்பளத்தில் 1,440 ரூபா வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. 2015 ஜனவரி 23 நிலவரப்படி சுமார் 11 வருட காலமாக மேற்கொள்ளப்பட்ட சம்பள பரிவர்தனைகளில் வேறுபாடுகள் இருப்பதனால் ஒவ்வொரு உத்தியோகத்தர்களுக்கும் கூடுதலாக சம்பளம் வழங்கப்பட்டுள்ளமையும், இந்த கூடுதலாக வழங்கப்பட்ட கொடுப்பனவுகளை கண்டறிந்து அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

4. நிலையான அபிவிருத்தி

4.1 நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான முன்னேற்றம்

சுகாதார அமைச்சைப் பொறுத்தமட்டில் 31 நிலையான அபிவிருத்தி குறிகாட்டிகள் இனங்காணப்பட்டுள்ளதுடன், அவற்றில் 13 குறிகாட்டிகள் மதிப்பாய்வில் உள்ள ஆண்டுக்கான முன்னேற்றத்தை அறிக்கையிடவில்லை. முன்னேற்றம் பதிவாகிய பின்வரும் குறிகாட்டிகள் தேவையான செயல்திறன் அளவை எட்டவில்லை.

(அ) குறியீட்டு எண் 3.1.1 இன்படி, தாய் இறப்பு விகிதம் 2030 ஆம் ஆண்டுக்குள் 100,000 நேரடி பிறப்புகளுக்கு 16 என்ற மதிப்பில் பராமரிப்பதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், 2021 டிசம்பர் 31

நிலவரப்படி 29.2 ஆக இருந்த அந்த மதிப்பு 2022 டிசம்பர் 31 அன்று 29.5 வரை பாதகமாக அதிகரித்துள்ளது.

(ஆ) குறியீட்டு எண் 3.2.1 இன்படி, 05 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் இறப்பு எண்ணிக்கை 2030 ஆம் ஆண்டுக்குள் 1000 நேரடி பிறப்புகளுக்கு 7 என்ற மதிப்பில் பராமரிப்பதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், 2021 டிசம்பர் 31 நிலவரப்படி 10.5 ஆக இருந்த அந்த மதிப்பு 2022 டிசம்பர் 31 அன்று 12.3 ஆக பாதகமாக அதிகரித்துள்ளது.

(இ) குறியீட்டு எண் 3.2.2 இன்படி, புதிதாக பிறக்கும் குழந்தைகளின் இறப்பு எண்ணிக்கை 2030 ஆம் ஆண்டுக்குள் 1000 நேரடி பிறப்புகளுக்கு 4 என்ற மதிப்பில் பராமரிப்பதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், 2021 டிசம்பர் 31 நிலவரப்படி 6.5 ஆக இருந்த அந்த மதிப்பு 2022 டிசம்பர் 31 அன்று 6.8 ஆக பாதகமாக அதிகரித்துள்ளது.

(ஈ) குறியீட்டு எண் 3.3.2 இன்படி, காச நோய் பரவல் விகிதம் 2030 ஆம் ஆண்டுக்குள் 100,000 இற்கு 13 என்ற மதிப்பில் பராமரிப்பதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், 2021 டிசம்பர் 31 நிலவரப்படி 29.7 ஆக இருந்த அந்த மதிப்பு 2022 டிசம்பர் 31 அன்று 36.6 ஆக பாதகமாக அதிகரித்துள்ளது.

(உ) குறியீட்டு எண் 3.3.5.1 இன்படி, டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 2030 ஆம் ஆண்டளவில் 21,000 ஆக இருக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், 2021 டிசம்பர் 31 நிலவரப்படி 35,924 ஆக இருந்த அந்த மதிப்பு 2022 டிசம்பர் 31 அன்று 76,689 ஆக பாதகமாக அதிகரித்துள்ளது.

(ஊ) குறியீட்டு எண் 3.3.5.2 இன்படி, மனித ரேபிஸ் இறப்புகளின் எண்ணிக்கை 2030 ஆம் ஆண்டளவில் பூச்சியமாக இருக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், 2021 இல் 25 ஆக இருந்த மரண எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டில் அது 27 ஆக அதிகரித்துள்ளது.

(எ) குறியீட்டு எண் 3.3.5.3 இன்படி, 2030 ஆம் ஆண்டளவில் யானைக் கால் நோய் தொடர்பான புதிய நிணநீர் அழற்சி சந்தர்ப்பங்கள் பூச்சியமாக இருக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், 2021 இல் 322 ஆக இருந்த எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டில் அது 553 ஆக அதிகரித்துள்ளது.

(ஐ) குறியீட்டு எண் 3.3.5.4 இன்படி, சிகிச்சைக்காக தொழுநோயாளிகளின் வருகை 2030 ஆம் ஆண்டளவில் 1,000 என்ற மதிப்பை பேணுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், 2021 ஆம் ஆண்டில் 993 எனும் சிறந்த மதிப்பாக இருந்த இலக்கு 2022 ஆம் ஆண்டில் 1,327 ஆக பாதகமாக அதிகரித்துள்ளது.

(ஒ) குறியீட்டு எண் 3.8.1.6 இன்படி, Antiretroviral Therapy (ART) Coverage இன் மதிப்பு 2030 ஆம் ஆண்டளவில் 90.0 சதவீதத்திற்கும் அதிகமான மதிப்பில் பராமரிப்பதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், மதிப்பாய்வு ஆண்டின் இறுதியில் அது 68 சதவீதமாக இருந்தது.

(ஓ) குறியீட்டு எண் 3.8.1.9 இன்படி,இ Age ——Standardized Prevalence of Non-raised blood pressure இன் மதிப்பு 2030 ஆம் ஆண்டளவில் 80 போன்ற மதிப்பில் பராமரிப்பதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், மதிப்பாய்வு ஆண்டின் இறுதியில் அது 65.2 சதவீதமாக இருந்தது.

(ஔ) குறியீட்டு எண் 3.8.1.10 இன்படி, 18 - 69 வயதுக்கு உட்பட்ட பெரியவர்களின் Age Standardized mean fastiring plusma glucose(mg/dl) இன் மதிப்பு 2030 ஆம் ஆண்டளவில் 80 mg/d1 மதிப்பில் பராமரிப்பதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், மதிப்பாய்வு ஆண்டின் இறுதியில் அது 104 mg/d1 சதவீதமாக இருந்தது.

(க) குறியீட்டு எண் 3.a.1 இன்படி, Age Standardized Prevalence of Current Tobuccd use anong persons aged 18 – 69 இன் மதிப்பு 2030 ஆம் ஆண்டளவில் 10 சதவீத மதிப்பில் பராமரிப்பதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், மதிப்பாய்வு ஆண்டின் இறுதியில் அது 26.2 சதவீதமாக இருந்தது.

5. சிறந்த நிர்வாகம்

5.1 பொது மக்களுக்கு சேவைகளை வழங்குதல்

2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் குடிமக்கள் கோரும் தகவல்களைக் கையாளுவதற்காக அமைச்சிற்குரிய வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்கள் உட்பட அமைச்சின் ஒவ்வொரு பிரிவையும் பிரதிநிதித்துவப்படுத்தும் 71 தகவல் உத்தியோகத்தர்கள் மற்றும் மேன்முறையீடு தொடர்பாக கையாளுவதற்கு ஒரு உத்தியோகத்தர் என்ற வகையில் 72 உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டள்ளனர். இந்த 72 உத்தியோகத்தர்களும் கணக்காய்விற்காக சமர்ப்பித்த தகவல்களின்படி, 2021 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு செயற்படுத்துவதற்காக தொடர்ந்தும் மீதமுள்ள கோரிக்கைகளின் எண்ணிக்கை 17 என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், மதிப்பாய்வு ஆண்டில் பொது மக்களால் சமர்ப்பிக்கப்பட்ட மொத்த கோரிக்கை விண்ணப்பங்களின் எண்ணிக்கை 314 என்பதுடன், 15 விண்ணப்பங்களுக்கு பதிலளிக்கப்படவில்லை.

6. மனித வள முகாமைத்துவம்

6.1 இணைக்கப்பட்ட பணியாளர்கள், பேச்சு பணியாளர்கள் மற்றும் தனிநபர் சம்பளத்திற்கான செலவு

இது தொடர்பாக பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) சிரேஷ்ட நிறைவேற்று பதவிகள் 39 இற்கான வெற்றிடங்கள் 1,586 உம், பதவிகள் 03 இற்கு மேலதிகமாக 11 உம், மூன்றாம் நிலை மட்ட பதவிகள் 61 இற்கான வெற்றிடங்கள் 405 உம் மற்றும் ஒரு பதவிக்கு மேலதிகமாக 01 உம், இரண்டாம் நிலை மட்டத்திற்குரிய பதவிகள் 83 இற்கு வெற்றிடங்கள் 5,565 உம் மற்றும் பதவிகள் 37 இற்கு மேலதிகமாக 597 உம் ஆரம்ப மட்டத்தின் பதவிகள் 46 இற்கு வெற்றிடங்கள் 8,626 உம் மற்றும் பதவிகள் 20 இற்கு 2,370 மேலதிகமாகவும் காணப்பட்டன. அந்த வெற்றிடங்களில் சுகாதார துறைக்கு தனித்துவமான பதவிகளான மருத்துவ உத்தியோகத்தர்கள் 1,331 உம், பல் சத்திர சிகிச்சை மருத்துவ உத்தியோகத்தர்கள் 77 உம், தாதி உத்தியோகத்தர்கள் 1,759 உம், தாதி சகோதரர்/ சகோதரி 275 உம், மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் 136 உம், தொழில்சார் சிகிச்சையாளர்கள்

68 உம், மருந்தாளர்கள் 126 உம், கதிரியலாளர்கள் 270 உம், பொது சுகாதார பரிசோதகர்கள் 37 உம், குடும்பநல உத்தியோகத்தர்கள் 451 உம் மற்றும் பரிசாளர்கள் 2,268 உம் வெற்றிடங்களாக உள்ளன.

(ஆ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, 2022 டிசம்பர் 31 நிலவரப்படி, 02 வைத்தியசாலைகளில் 03 விஷேட சத்திர சிகிச்சை நிபுணர்கள் மேலதிகமாக இருக்கும் போது 12 வைத்தியசாலைகளில் 15 விஷேட சத்திர சிகிச்சை நிபுணர்கள் பற்றாக்குறையாகவும், 13 வைத்தியசாலைகளில் 20 விஷேட பல் சத்திர சிகிச்சை நிபுணர்கள் மேலதிகமாக இருக்கும் போது 24 வைத்தியசாலைகளில் 97 விஷேட பல் சத்திர சிகிச்சை நிபுணர்கள் பற்றாக்குறையாகவும், 05 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் 5 மருத்துவ நிர்வாகிகள் (சிரேஷ்ட தரம்) மேலதிகமாக இருக்கும் போது 40 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் 43 மருத்துவ நிர்வாகிகள் (சிரேஷ்ட தரம்) பற்றாக்குறையாகவும், 23 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் 146 விஷேட மருத்துவ நிபுணர்கள் மேலதிகமாக இருக்கும் போது 38 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் 156 விஷேட மருத்துவ நிபுணர்கள் பற்றாக்குறையாகவும், 21 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் 282 மருத்துவ அலுவலர்கள் மேலதிகமாக இருக்கும் போது 89 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் 1613 மருத்துவ அலுவலர்கள் பற்றாக்குறையாகவும் காணப்பட்டன. இங்கு விஷேட மருத்துவ நிபுணர்கள், ரிஷ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையில் 20 உம், கண்டி தேசிய வைத்தியசாலையில் 15 உம், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் 14 உம், குருணாகல் போதனா வைத்தியசாலையில் 16 உம் மேலதிகமாக சேவையில் அமர்த்தப்பட்டுள்ளதுடன், சுகாதார அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ அலுவலர்களின் எண்ணிக்கையை விட அதிகமாக 61 மருத்துவ அலுவலர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

(இ) நாடளாவிய ரீதியில் சுகாதார சேவையின் தரத்தை பராமரிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட சிரேஷ்ட மட்ட பதவிகளில் 03 சிரேஷ்ட உயிரியில் மருத்துவ பொறியியலாளர் பதவிகளும், 02 மூலக்கூறு உயிரியலாளர்களும், 04 கொள்முதல் நிபுணர் பதவிகளும் வெற்றிடமாக இருந்ததுடன், உயிரியில் மருத்துவ பொறியியலாளர் பதவிக்கான அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 28 என்பதுடன், அதில் 13 உம், இயற்பியல் நிபணர் பதவிகள் 59 இல் 21 உம், ஆராய்ச்சி அலுவலர்கள் பதவிகள் 29 இல் 20 உம் வெற்றிடமாக உள்ளன.

(ஈ) சுகாதார சேவைகளுக்கான சில நிறுவனங்கள் விஷேட மருத்துவ நிலைமைகளுக்காக நிறுவப்பட்டுள்ளதுடன், அந்த நிறுவனங்களினால் தரமான சேவைகளை வழங்குவதற்கு சில பதவிகள் அங்கீகரிக்கப்பட்ட போதிலும், அந்த பதவிகளில் வெற்றிடங்கள் இருப்பது அவதானிக்கப்பட்டது. உதாரணமாக, உளவியல் நிபுணர் பதவிகள் 07 அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அவை வெற்றிடங்களாக இருந்ததுடன், இதில் அங்கொட தேசிய மனநல நிறுவனத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட 04 பதவிகளும் வெற்றிடமாக இருந்தமையும் விஷேட அம்சமாகும். மேலும், 15 எலும்பியல் தொழில்நுட்பவியலாளர் பதவிகளில் 13 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், அதில் ராகம புனர்வாழ்வு வைத்தியசாலையில் 09 வெற்றிடங்கள் உள்ளன.

(உ) முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் 2017 நவம்பர் 07 ஆம் திகதி அமைச்சிற்கு பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்) என்ற பெயரில் இலங்கை திட்டமிடல் சேவையின் விஷேட தரத்திற்கான ஒரு பதவிக்கு அனுமதி வழங்கியிருந்தது. எனினும் அந்த பதவி 2023 மார்ச் 25 திகதியிலும் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஊ) 2021 டிசம்பர் 31 ஆம் திகதியின் படி, அமைச்சின் கீழுள்ள வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய சுகாதார நிறுவனங்களில் சேவையாற்றும் விஷேட மருத்துவ

நிபுணர்கள், ஏனைய மருத்துவர்கள் மற்றும் பிற சேவைகளில் உள்ள உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றக் கட்டளையை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக கோரப்பட்ட தகவல்களின்படி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட 53 நிறுவனங்களில் 28 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் பணியாற்றும் மருத்துவர்களுக்கு 2015 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட 564 இடமாற்ற கட்டளைகள் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியிலும் செயற்படுத்தப்படவில்லை. மேலும் 06 வைத்தியசாலைகளில் பணிபுரியும் தாதி உத்தியோகத்தர்கள், மருந்தாளர்கள் மற்றும் மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் பதவிகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு 2017 முதல் 2020 வரையான காலப் பகுதியில் வழங்கப்பட்ட 57 வருடாந்த இடமாற்றக் கட்டளைகள் 2021 ஜனவரி 01 ஆம் திகதியிலும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. பேராதனை போதனா வைத்தியசாலையின் தாதி உத்தியோகத்தர்களுக்கு 2017 மற்றும் 2018 ஆகிய இரண்டு வருடங்களில் 53 இடமாற்றக் கட்டளைகள் வழங்கப்பட்டுள்ளதுடன் 2021 ஜனவரி 01 நிலவரப்படி அந்த 53 இடமாற்றக் கட்டளைகளும் நடைமுறைப்படுத்தப்பட்டதாக கூறப்பட்ட போதிலும், அன்றைய தினத்தில் அமுல்படுத்தப்படாத இடமாற்றக் கட்டளைகளின் எண்ணிக்கை 19 என குறிப்பிடப்பட்டுள்ளது.

(எ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, சுகாதார அமைச்சின் பல்வேறு பிரிவுகளில் நீண்ட காலமாக பணியாற்றும் நாடளாவிய சேவைகளுக்குரிய உத்தியோகத்தர் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

